எம். பி. பால்

கே. எம். தரக்கன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

எம். பி. பால்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்கு கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை ஓர் எழுத்தர் எழுதுகிறார். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

எம். பி. பால்

ஆங்கில மூலம்

கே. எம். தரக்கன்

தமிழாக்கம்

ந. பாஸ்கரன்

சாகித்திய அக்கதெமி

M.P. Paul.- Tamil translation by N. Baskaran of K.M.Tharakan's English monograph on M. P. Paul,. sahitya Akademi. New Delhi, 1998. Rs.25

ISBN - 81 - 260 - 0557 - 2

முதல் வெளியீடு 1998

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:

ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,

புது தில்லி 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் 560 002.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,

தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,

டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,

தாதர், பம்பாய் 400 014.

விலை ரூ. 25

ஒளிக்கோப்பு: ஸ்ரீ சக்தி பிரண்ட்ஸ், பெங்களூர்.

அச்சிட்டோர்: விஸ்வாலயா, பெங்களூர் - 560038

உள்ளடக்கம்

1. முது பெரும் படைப்பாளி

எம்.பி. பால், குட்டிகிருஷ்ண மாரார், ஜோசப் முண்டசேரி ஆகிய மூவரும் மலையாள இலக்கியத்தின் திறனாய்வு மும்மூர்த்திகள் என்றே அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு முன்னோடியாகத் திறனாய்வுத் துறையில் ஓர் அறிஞர் குழாம் இருந்தது. அவர்களுள் சாகித்திய பஞ்சானனன் என்று சிறப்பிக்கப் பெற்ற பி.கே. நாராயணப்பிள்ளையும் 'கேசரி' என்று சிறப்புப் பட்டம் பெற்ற எ. பாலகிருஷ்ண பிள்ளையும் மிக முக்கியமானவர்கள். மலையாள இலக்கியத்திறனாய்வுக் கூறுகள் முதன்முதலில் சி.பி. அச்சுதமேனன், ஏ . ஆர். ராஜராஜவர்மா, கேரளவர்மா, வலிய கோயில் தம்புரான், அந்தப்பாயி வேங்கயில் குஞ்சுராமன் நாயனார் ஆகியோரின் எழுத்துக்களில் காணப்படினும் சாகித்திய பஞ்சானனன் பி.கே. நாராயண பிள்ளையின் இலக்கியத் திறனாய்வு தான் கவிதைக்கு இணையாகச் கருதப் பட்டது. மேத்யு அர்னால்ட், ஹட்சன் போன்ற ஆங்கிலத் திறனாய்வாளர்களின் படைப்புகளில் பி.கே. நாராயண பிள்ளை நல்ல புலமை பெற்றிருந்தார். ஆனால், சமஸ்கிருத விற்பன்னர்களின் அடிப்படைக் கொள்கைகளிலும், குறிப்பாக ரசத்துவனி (Rasathwani) கொள்கைகளிலுமே அவர் மனம் லயித்திருந்தது. அவர் செருச்சேரி, துஞ்சத்து எழுத்தச்சன், குஞ்சன் நம்பியார் போன்ற பண்டைய மலையாள எழுத்தாளர்கள் மற்றும் குமரன் ஆசான், வள்ளத்தோள், உள்ளூர் ஆகிய முக் கவிகளைப் பற்றிய புத்தகங்களைப் பதிப்பித்தார். அப்புத்தகங் களின் முன்னுரைக் கட்டுரைகளில், அக்கவிகளின் இலக்கிய மதிப் பையும், திறனையும் தம் பதிப்பாற்றலின் திறமையைக் கொண்டு நிலைநிறுத்தினார். திறனாய்வு, திறனாய்வு மதிப்பீடு, ஆகியவற்றில் சிறந்து விளங்கிய அவர் மேல்நாட்டு திறனாய்வு உத்திகளை மலையாள இலக்கியங்களில் புகுத்தத் தவறினார். மேலும் அக்காலத்தில் வளர்ந்து வரும் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு ஏற்ப மலையாள உரைநடையின் வளர்ச்சியில் தம் கவனத்தை செலுத் தவும் தவறிவிட்டார். இப்பெருமை கேசரி பாலகிருஷ்ண பிள்ளையையே சாரும். அவர் ஆங்கில-அமெரிக்க மலையாள இலக்கியங்களுடன் ஒரு நெருக்க மான இணைப்பை ஏற்படுத்தினார். அக்கால முற்போக்குச் சிறுகதை, நாவல் எழுத்தாளர்கள், மேலும் புரட்சிகரமான எழுத்தாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார்;

சிறந்த கல்விமான். அவர் தெளிவான மறுமலர்ச்சியை கொணரவோ, மேற்கத்திய, கிழக் கத்திய இலக்கிய கொள்கைகளில் ஒரு இனைப் பை ஏற்படுத்தி அதன் மூலம் ஒரு இலக்கியத் திறனாய்வு அளவுகோலை உண்டாக்க முயற்ச்சி செய்யவில்லை; அக்கால மேற்கத்திய இலக்கிய எண்ணங்களிலும் உத்திகளிலும் மூழ்கித் திளைத்த இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளை மதிப்பீடு செய்வதற்கும் முயலவில்லை. மற்றமொழி இலக்கியங்களிலுள்ள நல்ல கருத்துக்களைக் கேரள எழுத்தாளர்களுக்கு வழங்கி அவர்களின் கற்பனை வளத்தைப் பெருக்குவதற்கே பெரும் முயற்சி செய்தார். அம்முயற்சியைப் பூர்த்தி செய்வதற்கான பெரும் பொறுப்பை எம்.பி. பால், குட்டி கிருஷ்ணமாரார், மற்றும் ஜோசப் முண்டச்சேரி ஆகிய திறனாய்வு மும்மூர்த்திகளுக்கு விட்டு வைத்தார் எனலாம்.

இம்மும்மூர்த்திகளுக்கு நட்சத்திர கூட்டங்கள் போலச் சமகாலத் திறனாய்வாளர்கள் இருந்தனர். அவர்களுள் குட்டிப்புழா கிருஷ்ண பிள்ளை, சஞ்சயன், பி. தாமோதரபிள்ளை, உள்ளத்தில் கோவிந்த நாயர் மற்றும் பலர் ஆவார்கள். ஆனால் இம்மும் மூர்த்திகள் இந்நட்சத்திரக் கூட்டங்களுக்கு மத்தியில் ஒரு கருவாக இருந்து, ஒளியும், புத்துணர்ச்சியும், ஊட்டி வந்தனர். இக்கால கட்டத்தில்தான், எம்.பி. பால் தம் முதல் படைப்பான, 'நாவல் இலக்கியம்' என்ற நூலை வெளியிட்டுத் திறனாய்வாளராக அறிமுகமானார். சிறிதுகால இடைவெளிக்குப் பிறகு ஜோசப் முண்டச்சேரியும், குட்டி கிருஷ்ணமாராரும், திறனாய்வு உலகத்தில் அடியெடுத்து வைத்தனர். எம்.பி. பால் மேற்கத்திய இலக்கியப் பண்பாட்டை அடிப் படையாகக் கொண்டிருந்தார். குட்டி கிருஷ்ணமாரார் சமஸ்கிருத கவிதைகளிலும், இலக்கியத்திலும் மூழ்கித் திளைத்தார். இவர் வள்ளத்தோளின் கவிதைக்கு வியாக் கியானம் எழுதி புகழ்பெற்ற உரைநடை ஆசிரியராக விளங்கினார். ஜோசப் முண்டசேரி இவ்விருவரின் சிறப்பியல்பு களையும் கற்று மேற்கத்திய இலக்கியக் கொள்கைக்கும், சமஸ்கிருத கவிதை களுக்கும், இணைப்பு ஏற்படுத்த முயன்று, அதில் பெருமளவு வெற்றியும் கண்டார். இதற்கு முக்கிய காரணம் அவர் எம். பி. பாலின் முழுமையான ஆதரவு பெற்றிருந்ததே ஆகும். எம்.பி. பாலின் படைப்புகளில் உள்ள சில முக்கிய விதைக் கருத்துகள் ஜோசப் முண்டச்சேரியின் படைப்புகளில் மலர்ந்துள்ளதை நாம் நன்றாக உணரலாம்.

சந்துமேனன், மற்றும், சி.வி. ராமன்பிள்ளை, ஆகியவர்களின் நாவல்களினாலும், வேங்கையில் குஞ்சுராமன் நாயனார் போன்ற எழுத்தாளர்களின் நூல்களினாலும், ஒரு புதிய சகாப்தம் தோன்றி இருப்பதை மற்ற திறனாய்வாளர்களைக் காட்டிலும் எம்.பி. பால், நன்கு உணர்ந்திருந்தார். மத்தியதர வகுப்பினர் எல்லா நிலைகளிலும் தொடர்ந்து முன்னேறி வந்தனர். அதன் காரணமாக அவரவர்களின் வாழ்க்கை நெறிகளையும், சமூகப் பழக்க வழக்கங்களையும், தங்கள் உரிமைகளைப் பெறப்படும் துன்பங்களையும் பிரதிபலிக்கும் வகையில் கட்டுரைகளும், சிறுகதைகளும், நாவல்களும் வெளி வருவது மிக அவசியமல்லாமல், தேவையாகவும் இருந்தது. கேரளகவிகள், புராணங்களை மையமாக வைத்து, கவிதைகளைப் புனைவதில் தான் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் மாறுபட்ட ஒரு புதிய சூழ்நிலையிலுள்ள சமூகப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அப்புராண கருத்துகளுக்கு ஒரு புதிய அர்த்தம், ஒரு புதிய அணுகுமுறை, ஒரு புதிய கோணம் தேவைப்பட்டது. முப்பெரும் கவிகள் என்று அழைக்கப்படும் குமரன் ஆசான், வள்ளத்தோள், பரமேஸ்வர ஐயர், ஆகிய மூவரும் சாதி, சமயப் பூசல்களையும், அரசியல் விடுதலை, வறுமை, போன்ற பிரச்சனைகளையும் தம் படைப்புகளில் எடுத்தாண்டனர். ஆனால் மிக முக்கியமான மனித அடிப்படைப் பிரச்சினைகளை எவராலும் எடுத்தாளப்படாமல் இருந்தன. மனித வர்க்கம், வாழ்க்கை நிலைகளில் உயர்ந்து வரும்போது, ஒடுக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்டவர்கள், வாழ்க்கையின் அடி மட்டத்தில் உள்ளவர்களும், தங்கள் கஷ்டங்களிலிருந்து விடுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. புதிய படைப்புகள் அவசியம், புதிய தோற்றங் களில் காணப்பட வேண்டும். அப்படைப்புகளை உருவாக்க அடித்தளத்தை அமைத்துக் கொடுக்க, புதிய தலை முறையை உருவாக்க உயர்ந்த இலக்கியத் தன்மை கொண்ட படைப்புகளை உருவாக்கச் சிறந்த திறனாய்வினால் தான் முடியும் என்பதை எம்.பி. பால் உணர்ந்தார். இளம் எழுத்தாளர்களுக்கு நடைமுறை வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து, அதன் மூலம் பெரும் அனுபவங் களின் மூலமாக ஆத்ம உணர்வு பெற்றுப் புதிய கோணங்களில் தங்கள் கற்பனைகளைப் படர விடுவதற்கு எம்.பி. பால் ஒரு தூண்டு கோலாய் இருந்தார்.

ஷேக்ஸ்பியரின் மகா இரசிகரான எம்.பி. பால், ஆங்கில, மலையாளக் கவிதை நுணுக்கங்களில் ஆழ்ந்த ஞானம் பெற்றிருந்தார்.

இருந்தும் 'அவர் கதை, கட்டுரைகளில் மட்டுமே தம் முழு கவனத்தைச் செலுத்துவதுடன் நிறுத்திக் கொண்டார். அதற்கு முக்கிய காரணம், அக்கால மலையாள இலக்கியத்தில் கவிதை களைப்பற்றி ஆராய்வதற்குப் பல திறானய்வாளர்கள் இருந்ததையும், கட்டுரைகளை ஆராய்வதற்குக் 'கேசரி' மட்டும் தம்மை அர்ப் பணித்துக் கொண்டு இருந்ததையும் உணர்ந்தார். மேலும் கவிதை களை விடக் கதைகளுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதை எம்.பி. பால் அறிந்திருந்தார். அப்போதைய மலையாளக் கதை, கட்டுரைகளுக்கு ஓர் உந்துதல் தேவைப் பட்டது. அது எம்.பி. பால் மூலமாகக் கிட்டியது. நாவல், சிறுகதை எழுதும் முறையைப் பற்றிப் புத்தகங்கள் அல்லாமல், அழகைப் புதிய கோணங்களில் ரசிக்கும் தன்மையைப் பற்றிக் கட்டுரைகளும், எம்.பி. பால் படைத்தார். இரு சிறிய கட்டுரைக் கொத்துக்கள், அவர் மரணத்திற்குப் பின் வெளி யிடப்பட்டன. எம். பி. பாலின் படைப்புகள் சிறிய அளவினதாக இருந்தாலும், அவர் மலையாள இலக்கியத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுள்ளார்.

பலவகையான நாவல்கள், சிறுகதைகள் பற்றிய கட்டுரை கள் உயர்ந்த படைப்பாக, மற்ற இலக்கிய வகைகளுக்கு இணை யானவையாகக் கருதப்படுகின்றன. இலக்கிய அமைப்பில் நாவல் ஓர் உன்னதமான, கவிதைக்குச் சமமான, ஓர் இடத்தைப் பெற்றி ருக்கிறது. சிறு கதையின் முக்கியத்துவம், அதன் விவரிக்கும் முறையிலும், அம்முறையில் புதிய புதிய வழிகளைப் புகுத்து வதிலும்தான் இருக்கின்றன. நாவலின் அமைப்பும், அதில் அடங்கியுள்ள கருத்தும், அக்கருத்தைப் புரிய வைக்க எடுத்தாளும் முறைகளும் மிகமிகப் புதியவையாக கருதப்பட்டன. எம்.பி. பால், தம் முதல் நாவல் இலக்கியத்தின் மூலமாக, நகைச்சுவையை புதிய கோணங்களில் ஆராய்ந்துள்ளார். அது மலையாள இலக்கியத்தில் அதுவரை காணாத ஒரு புதிய முயற்சியாகும். அவரது, 'அழகியல்' (Aesthetic) கட்டுரைதான் மலையாள இலக்கியத்தில் முதன் முதலில் எழுதப்பட்டது. அவரது ஆணித்தரமான அழகியல் கட்டுரைகள், ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு முக்கிய பாடம் போல் விளங்குகிறது. மேலும் எம்.பி. பால்தான், முதன்முதலில் இலக்கியத்திற்கும், சமூக அடிப்படைக் கொள்கைகளுக்கும், ஒரு பிரிக்க முடியாத உறவை ஏற்படுத்தினார். இலக்கிய படைப்பு களுக்கு அடிப்படையானது, எழுதும் திறந்தான். ஆனால் அத்திறன் எந்த ஒரு நிலையிலும், மனிதப் பண்புகளில் இருந்து தனித்து

இயங்க முடியாது. கலை நுணுக்க வேலைப் பாடுகள், கலைக் காகவே, உருவாக்கப் பட்டிருந்தாலும், அதில் உயிர்த்துடிப்பு இல்லை என்றால் அது கலை என்று சொல்வதற்கு தகுதியற்றது.

எம்.பி. பால், மிக சிறந்த மலையாள உரைநடை எழுத்தாள ராக இருந்தாலும், அவருக்கு இணையாகச் சில எழுத்தாளர் களும் இருந்தனர். பெரும்பான்மையான மொழிகளில் நாட்டுப் புற பாடல்கள் (folk songs) முதலில் தோன்றிக் கவிதையாக மருவி, காலப்போக்கில் கவிதை நாடகங்களாக உச்ச நிலை அடைந்தன என்று சொல்லப்படுகிறது. உரைநடை மற்றும், உரைநடை கதை களும், மேற்கூறிய உச்சநிலைக்குப் பின் ஏற்பட்ட மாறுதலாக இருக்கலாம். அதனால்தான் சில திறனாய்வாளர்கள், "நாவல்கள் நாடகங்களின் உச்சநிலை" என்று சொல்லுமளவிற்கு துணிந்தனர். அக்கருத்துகளை மேலும் உபயோகமான கலந்துரையாடலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஒரு மொழி தரமான வளர்ச் சியை, உச்சநிலையை அடைந்திருக்கிறது, என்று சுட்டிக் காட்டுவதற்கு அம்மொழியிலுள்ள நல்ல வளர்ச்சி அடைந்த உரைநடை இலக்கியங்கள்தாம் பயன்படுகின்றன, என்பதை யாவரும் ஒப்புக் கொள்ள வேண்டியதாகும். சாதி, சமய அமைப்புகள் மூலம் பிரபுத்துவ முறையில் ஆண்டு வந்த திருவிதாங்கூர் அரசரின் ஆட்சிக் காலத்தில் கோவில் பூசாரிகளான நம்பூதிரிமார்களும், அவர்கள் வழிவந்தவர்களின் பிடியில் மலையாள இலக்கியம் கட்டுண்டு இருந்தது. கொச்சியும் இம் முறையிலிருந்து மாறுபட்டிருக்க வில்லை. ஆங்கில ஆதிக்கத்திற்கு உட்பட்ட மலபாரும் அடிப் படையில் சமயச் சார்புள்ளதாகத்தான் இருந்தது. கிறிஸ்துவப் பாதிரிமார்கள், பொது மக்களுக்குக் கல்வி அளிப்பதன் மூலம், அவர்களை மூடநம்பிக்கைகளிலிருந்து, விடுவிக்க முயன்றது மல்லாமல், தேசிய மொழிகள் வளர்ச்சி அடைவதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தனர். மொழிகளை மாபெரும் ஒரு சக்தியாக, பெரும்பான்மையான மக்களை இணைக்கும் சாதனமாக உபயோ கிப்பதில் மாபெரும் வெற்றி கண்டனர். கேரளப் பாதிரிமார்கள் மலையாள அகராதிகளைத் தொகுத்தனர். இலக்கணங்களை வகுத்தனர். பத்திரிகைகளை ஆரம்பித்தனர். இவ்வாறு மலையாள உரைநடை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தனர். மேலும் உரைநடை வளர்ந்ததன் காரணமாக மத்திய தர மக்கள் உயர்ந்த மலையாள மொழியை கற்கவும், இலக்கிய இன்பங்களைப் பருகவும் ஆரம்பித்தனர். இம்மாற்றம் மக்களின் விழிப்புணர்ச்சியையும்,

விடுதலை வேட்கையையும் தூண்டியது; மக்களுக்கு எதையும் ஆராயும் மனப்பக்குவத்தையும் அளித்தது. இச்சூழ்நிலை எழுத் தாளர்கள் தங்கள் திறனாய்வுத் திறமையை வளர்த்து கொள்வதற்கு ஏற்றதாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பிக் கப்பட்ட சமூக மறுமலர்ச்சி மெதுவாக ஊர்ந்து இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் விடுதலைப் போராட்டத்தினால் ஓர் வேகத்தைப் பெற்றது. அதுமட்டுமல்லாமல் சமூக பண்பாடுகளில், மார்க்ஸிஸ்ட் தத்துவங்கள் மெதுவாக இடம் பெறலாயிற்று. மலையாள உரைநடை முதன் முதலில் மேற் கூறிய மும்மூர்த்தி களின் படைப்புகளில் மலர்ந்தது. சிறுகதை, மற்றும் நாவல் இலக்கியங்கள் தகழி, தேவ், பஷீர், உருபு, மற்றும் பொற்றேகாட் போன்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களில் பிறந்தன.

நேர்த்தியான உரைநடை, நல்ல தெளிவான எண்ணங் களிலிருந்துதான் பிறக்கும் என்ற ஒரு சித்தாந்தத்தைக் கொண்டு இருந்தார், எம்.பி. பால். எந்த ஒரு இலக்கியப் படைப்பும், இயற்கையான, உணர்ச்சிமயமான தன்மையைப் பெற்றிருக்கும். உரைநடை எழுத்தாளர்கள், அத்தன்மையுடன் நல்ல தெளிவையும் பெற்றிருந்தார்கள் என்பதை அவர்களின் படைப்புகளிலிருந்து நன்கு அறியலாம். ஒரு சிறந்த எழுத்தாளன் மிக நுண்ணிய எண்ணங்களை எளிதாகப் புரியக் கூடிய வண்ணம் வெளியிட வேண்டும். எம்.பி. பாலின் உரைநடைகள் உயர்ந்தவையாக இருப்பதற்குக் காரணம், அவை நல்ல தெளிந்த நடையும், இனிய ஓசைநயமும், உற்சாக மூட்டுகிற உயிரோவியங்களாகப் படைக்கப்பட்டிருப்பதேயாகும். எம்.பி. பாலின் உரைநடை மொழியின் வளர்ச்சியுடன் சேர்ந்து படிப்படியாக வளர்ச்சியுற்றாலும், தன் தனித்தன்மையிலிருந்து சிறிதும் விலகாமலிருந்தது. தம் சுதந்திரமான எண்ணங் களையும், சிறந்த கருத்துக்களையும், இனம் பிரித்து வெளியிடுவதற்கு தம் சீரான உரைநடையை ஒரு கருவியாகக் கொண்டிருந்தார்.

தம் சுயமான மனப்போக்காலும், சுறுசுறுப்பான மனத் திண்மையாலும், தம் காலத்து எழுத்தாளர்களிடையே ஒரு மாபெரும் செல்வாக்குடன் திகழ்ந்தார். அவரை நாடி வரும் எழுத்தாளர்கள் அவர் உதவியை இயற்கையாக எதிர்பார்த்தனர். அவரை எதிர்ப்பதற்கு முயன்றவர்கள், அவரது நேர்மையைக் கண்டு வியந்தனர். அவருடைய மிகக் கடுமையான எதிரிகள் கூட அவர்தம் மொழிப்பற்றையும், மக்களின் முன்னேற்றத்தில்

அவருக்கிருந்த நேர்மையையும், புத்திசாலித்தனத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டனர். குட்டி கிருஷ்ணமாரார், ஜோசப் முண்டச் சேரி, போன்ற எழுத்தாளர்கள், எம்.பி. பாலுக்கு திறனாய்வு இலக்கியத்தில் ஓர் உயர்ந்த இடத்தை அளித்து கௌரவித்தனர். வைக்கம் முகமது பஷீர் மேற்கண்ட திறனாய்வு மும்மூர்த்திகளைப் பாராட்டும்போது எம்.பி. பாலை ஒரு வழிகாட்டியாக, ஒரு தத்துவ ஞானியாக வர்ணிக்கிறார். ஜோசப் முண்டச்சேரி எம்.பி. பாலை ஒரு முதிர்ந்த எழுத்தாளராகவும், வழிகாட்டியாகவும் பாவிக்கிறார். தம் சுயசரிதையில் எம்.பி. பாலிடம் தமக்குள்ள நெருங்கிய உறவை வர்ணித்துள்ளார். திருவனந்தபுரத்தில் ஏற்பட்ட இறுதி சந்திப்பில், எம்.பி. பாலின் மீது தமக்கு ஏற்பட்ட நெருக்கத்தைக் கீழ்கண்டவாறு வர்ணிக்கிறார்: ''எம்.பி. பாலின் எதிர்பாராத மரணம், அவர் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், கேரள மறுமலர்ச்சி இயக்கத்திற்கு ஏற்பட்ட ஒரு பேரிடியாகும். என்னை வழி நடத்தி செல்லும் ஒரு ஒளி விளக்கை இழந்ததின் மூலம், எனது முதல் முன்னேற்ற வழியை இழந்து தவிக்கின்றேன்.'' எம்.பி. பால், ஓர் அறிவாளியாகத் திகழ்ந்தார். எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினார். மனிதன் சுகமாக, சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமையுள்ளவன் என்று திடமான நம்பிக்கை கொண்டிருந்தார். தம் இறுதிகாலம்வரை ஒரு சுதந்திரப் பறவை போல் வாழ்ந்தார். இறுதியில் சந்தோஷம், சோகமாக மாறி இறக்கும் வரை சுகமின்றி தவித்தார். அவர் மனம் எரிமலைபோல் குமுறிக் கொண்டிருந்தாலும், பார்ப்பதற்கு மிக அமைதியாகத் தென்பட்டார். உருவத்தில் குள்ளமாக இருந்தாலும் மனத்தளவில் மிக உயர்ந்திருந்தார். கேரள முன்னேற்ற எழுத்தாளர்கள் கழகத்தை நிறுவி, அதன் தலைவராக விளங்கினார். அக்கழகம் 'வாழ்க்கைக்காகவே கலை', என்னும் கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, 'கலை கலைக்காகவே', என்னும் கொள்கையை வெறுத்து ஒதுக்கியது. நல்ல இலக்கியம் என்று முத்திரையைப் பெறுவதற்கு அழகுத் தத்துவத்துடன் ஒத்துப்போவது மட்டுமின்றி அது மனித வாழ்க்கையின் அடித்தளத்தைப் பிரதிபலிப்பனவாகவும், உள்ளுணர்வை எடுத்தியம்புவனவாகவும் இருக்க வேண்டும். குட்டி கிருஷ்ணமாரார் அரசியல், சமூகப் பிரச்சனைகளை எடுத்தாளும் போது அழகு தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து விலகிப் போவதை ஒரு போதும் சகித்துக் கொள்ளமாட்டார். அதனால் முற்போக்கு எழுத்தாளர்களின் குறிக்கோளில் அவருக்கு சந்தேகங்கள் இருந்தது. தம் கட்டுரையில் எம்.பி. பாலைப் பற்றிக் குறித்து வைத்துள்ள சில

மறக்க முடியாத வரிகளை கீழ்க்காணவும்.

'' கோட்டயம் இலக்கிய வட்டத்தில், இலக்கியத்தின் அழியாத் தன்மையைப் பற்றி ஒரு வாக்கு வாதம் ஏற்பட்டதைப் பற்றிப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். எம்.பி. பால் இலக்கியத்தின் அழியாத் தன்மை வாதத்தை ஆட்சேபித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். எம்.பி. பாலின் கருத்தை கயினிகார குமரன் பிள்ளையும், பி. தாமோதர பிள்ளையும் மிக உறுதியாக எதிர்த்தனர். நானும் அவர்களுடன் சேர்ந்து பாலை மிக வன்மையாக எதிர்த்தேன். எங்கள் வாதங்களுக்கு பதிலளிக்கும் வகையில் தம் கருத்தை வலியுறுத்துவதை விடுத்து, வருத்தம் தோய்ந்த தொனிமேலோங்க ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதுவரையில் எம்.பி.பாலின் நாவல் இலக்கியத்தைப் படிக்கா திருந்த நான் அதைப் படித்து முடித்தேன். அவருக்கு இலக்கியக் கொள்கையின் பால் இருந்த பிடிப்பை அறிந்து நான் மிகவும் வியப்புற்றேன். அந்நாவல் இலக்கியத்தில் எம்.பி.பால் பல கட்டங்களில், இலக்கிய வடிவங்களிலிருந்து மாறி விலகிப் போயிருந்தாலும், சிலவற்றைக் கட்டாயம் நம் கவனத்தில் கொள்ள வேண்டி... இலக்கியத்தின் அழியாத் தன்மையைப் பற்றி எம்.பி. பாலின் வாதத்திலிருந்து, நான் மாறுபட்டிருந்தாலும், கோட்டயம் முன்னேற்ற எழுத்தாளர்களின் பொதுக்கூட்ட வரவேற்புரையில், எம்.பி. பால் நிகழ்த்திய உரையைச் செவியுற்ற நான், என் கருத்தும், எம்.பி. பாலின் கருத்தும் ஒத்துப் போவதை உணர்ந்தேன். எம்.பி. பாலின் சௌந்தர்ய நிரீக்ஷணத்தைப் படிக்கும்போது அவர்பால் ஒரு வியப்பும், திருச்சூர் முன்னேற்ற எழுத்தாளர் ஆலோசனைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரையைக் கேட்டு அவர்பால் ஒரு பெருமை ஏற்படுவதையும் உணர்ந்தேன். அந்த ஆலோ சனைக் கூட்டத்தில் இடதுசாரி இலக்கிய அறிக்கையை நிறைவேற்ற, சில எழுத்தாளர்கள் முயன்றபோது, அவர் தலைவராக இருந்தும் அதை எதிர்த்தார். வேறு ஒரு குறுகிய மனப்பான்மை உள்ள மனிதராக இருந்திருந்தால், தலைமைப் பதவியின் மீதுள்ள ஆசையினால் தம் சுதந்திர மனப் பான்மையை அடகு வைத்து வாய் மூடியிருந்திருப்பார். இவ்வாறு எம்.பி. பால் கேரளத்து எழுத்தாளர்களை வெளிப்படையாக எதிர்த்ததால் அவர்களின் கண்டனத்திற்கும், அவமரியாதைக்கும் ஆளாக்கப்பட்டார். அவர் 'வாடிகனின்' (போப் ஆண்டவரின்) அடிமை, என்று

வர்ணிக்கப்பட்டார். ஆனால், எம்.பி. பால், தம் நிலையிலிருந்து சற்றும் அசைந்து கொடுக்காமலிருந்தார். 1948 ஆம் ஆண்டு ***கேரளாபஹாரத்தில்*** (Keralapaharam) கலை பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில், ***கலையின் உபயோகம் சந்தோஷத்திற்காக அல்ல***, என்ற அவர் கூற்றைப் பல எழுத்தாளர்கள் எதிர்த்தபொழுது நான் அவர் கூற்றை ஆதரித்தேன். இதன் மூலம், முதலில் எம்.பி. பாலை எதிர்க்க ஆரம்பித்த நான், அவரது மதிப்பிற்குரிய அபிமானியாக மாற்றப்பட்டேன்.''

குட்டி கிருஷ்ணமாரார் தம் பேட்டியில், எம்.பி. பாலின் சிறந்த திறமையைப் பற்றி மிகவும் புகழ்ந்துள்ளார். வைக்கம் முகமது பஷீர் தம் நினைவுக்குறிப்பில் எம்.பி. பாலின் கடமையுணர்ச்சியை நினைவு கூர்கிறார். மேலும் பணிவுள்ள சுயகட்டுப்பாடுள்ள ஓர் உயர்ந்த அறிவாளி, புரட்சிகரமான எண்ணங்களுள்ளவர், எல்லாவற்றுக்கும் மேல் மனித வர்க்கத்தை நேசிப்பவர்'', என்று புகழாரம் அணிவிக்கிறார்.

எம்.பி. பாலைப் பற்றிச் சில கட்டுரைகள் வெளி வந்துள்ளன. ஆனால் அவரைப்பற்றிய வரலாறோ, அவர் படைப்பு களைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளோ, மலையாளத்தில் இதுவரை வெளிவரவில்லை. இலக்கியச்சுவை காலத்திற்கேற்றவாறு புதுப்பிக் கப்பட வேண்டுமென்று ஆணித்தரமாக எடுத்தியம்பிய மலை யாளத் திறானய்வாளர்களுள், எம்.பி. பால் முதன்மையாவனர். உண்மையிலேயே 1940 ஆம் ஆண்டில் நவீன மலையாள இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பு, புதுயுகம் பற்றித் தம், ***கலையும், காலமும்*** (Art and Age) என்னும் கட்டுரையில் தர்க்கவாதம் புரிகிறார். அவர் எழுதுகிறார், ''எழுத்தாளர்களின் உள்ளுணர்வுக்கும், சமூகப் பிரச்சனைகளுக்கும், உள்ள தொடர்பு அறுபடும்போது எழுத்தாளன் வெளியுலகத்திலிருந்து அக உலகத் திற்குப்பின் வாங்குவது மட்டு மல்ல தனிமையான சோதனைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டு, அதிலேயே உழன்று கொண்டு இருக்கிறான். எந்த ஒரு மலையாள எழுத்தாளனும், புதுமை யுகத்திற்கு எதிராக ஒரு வாக்குவாதத்திற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முன் வரவில்லை. அவ்வாறு ஓர் ஆராய்ச்சி செய்து மகத்தான ஒரு சாதனையான பழமையானவற்றில் உள்ள மிக நல்லவைகளையும் புது யுகத்திலுள்ள நல்ல கருத்துக்களையும்

ஒன்றிணைத்து ஒரு புதிய இரசனையை உருவாக்கும் ஒரு முயற்சியை - செய்திருந்தால் அது மாபெரும் சாதனையாகக் கருதப்பட்டிருக்கும் என்று எம். பி. பால், ஒருங்கிணைந்த அணுகுமுறையில் இலக்கியத்தை நாடினார். சமய வழிபாடுகளில் அவருக்கு நாட்டமில்லாமல் இருந்தாலும் அவர் அர்னால்டின் (Arnoldean Sense) தத்துவப்படி மனித இனத்தின் மீதும் நல்லொழுக்கத்தின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். மனிதவர்க்கத்தின் சாதனைகள் நிலையில்லா தவை ஆனால், மனித இனம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வ தோடு புதுப்பித்துக் கொள்ள முயன்று அதில் வெற்றியும் கொள்ளும். சமூக விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் எம். பி. பால். ஆனால், அவர் கம்யூனிஸ்ட் அல்ல. அவர் முன்னேற்றத்திற்காக போராடினார். அம்முன்னேற்றம் எல்லோரும் முன்னேறுவதற்காக, எல்லா மக்களின் முயற்சியினால், யாரை மிக நல்லவர், சிறந்த அறிவாளி என்று அவர் மனதில் நினைத்தாரோ, அவர்களின் மூலம் அந்த முன்னேற்றத்தை அடைவதற்காகப் போராடினார். முன்னேற்றம் தனி மனிதனின் சுதந்திரத்தைப் பறிப்பதன்மூலம் அடைவதாக இருக்கக்கூடாது. அழகின் பக்தனாக இருந்தார் எம்.பி. பால். அவ்வழகு எட்டாத உயரத்தில் உள்ள உயர்ந்த கோபுரத்திலுள்ள, எழுத்தாளர்கள் தேடி வரும் அழகாக அது இல்லை. அவர் எண்ணங்கள் விஞ்ஞான ரீதியாக இருந்தன. ஆனால் அவர் ஒரு செயற்கைவாதியாகவும், இயற்கைவாதியாகவும் திகழவில்லை. மனிதவர்க்கத்தின் புரை யோடிப்போன மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களிலிருந்து மக்களை விடுவிப்பதே எம்.பி. பாலின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. ஆனால் அவர் உயிரற்ற புதியக் கருத்துக்களைவிட நல்ல பரம்பரையான பழக்கங்களை சிறந்தவையாகக் கருதினார். சோவியத்து எழுத்தாளர்களையும், கேரள முன்னனி எழுத்தாளர் களையும், ஒப்பிடுகையில், கேரள எழுத்தாளர்கள், தங்கள் முன்னோர்களின் வழியைத் தவறாமல் கடைப்பிடிப்பதால் அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்று சுட்டிக்காட்டுகிறார். மனித இனத்தின் உயர்ந்த குறிக்கோள் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதல்லாமல், தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இலக்கியத்தில் சுயநலத்திற்காக காம இச்சையை உபயோகிப்பதை அவர் எதிர்த்தார். அவர் மனோ தத்துவத்தை நன்கு அறிந்திருந்தும் அதை கண்மூடித்தனமாக இலக்கியங்களில்

பயன்படுத்துவதை விரும்பவில்லை. மிகச்சிறந்த மேற்கத்திய எழுத்தாளர்களின் மீது மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்த அவர், கேரள எழுத்தாளர்கள் மேற்கத்திய எழுத்தாளர்களை சார்ந்து உள்ளனர், என்று ஒரு போதும் நினைக்கவில்லை. முகமது பஷீர் போன்றவர்கள், உலகச்சிறுகதை எழுத்தாளர்களின் வரிசையில் முன்னிலையில் வைக்கப்பட வேண்டியவர்கள் என்பது அவர் கணிப்பு. மலையாளம் உலகம் தழுவிய மொழியாக இருந் திருந்தால் கேரள முன்னணி எழுத்தாளர்கள் உலகப் பாராட்டைப் பெற்றிருப்பார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். எம்.பி. பால், உரை நடைகளில் சிறந்து விளங்கினார். கற்பனைக் கதைகளில் ஆழ்ந்த ஞானம் பெற்றிருந்தார். அவர் உரை நடைகளையும், கற்பனைக் கதைகளையும், மிக ஆணித்தரமாக எழுதியுள்ளார். இருந்தும், மிதவாதியாக இருந்தார். தம்மைப் பற்றிய ஒரு எழுத்தோவியம் வரைந்த திரு. எஸ்.கே. நாயர் அவர்களுக்கு அனுப்பிய குறிப்பில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''நான் இந்நாளில் என் படிப்பைத் தொடங்கியிருந்தால் மலையாள மொழியில் முதல்தரமான இலக்கிய வாதியாக இருப் பதற்கு முயன்றிருப்பேன். மற்ற எழுத்தாளர்களுடன் சேர்ந்து, மலையாள இலக்கியத்திற்கு உலக இலக்கியங்களுக்கிடையே, ஒரு சமமான தகுதியைப் பெறுவதற்கு முயற்சி செய்திருப்பேன். நான் ஆங்கில ஆசிரியனாகப் பொறுப்பேற்ற பிறகே மலையாள மொழியைக் கற்க ஆரம்பித்தேன். ஆங்கிலம் கற்பிப்பதே என் முழுநேர வேலையாக இருந்தது. எனக்கு மலையாள மொழி பாலுள்ள மோகத்தையும், நான் தேர்ந்தெடுத்த ஆங்கிலம் கற்பிக்கும் தொழிலையும் ஒருங்கிணைக்க முடியாமல் போயிற்று.''

ஆனால் அவர் ஒரு சிறந்த திறனாய்வாளராகப் பிரகாசிப்பதற்கு அவர் ஒரு சிறந்த அறிவாளி மட்டுமல்ல, அவர் பெற்றிருந்த உயர்ந்த ஆங்கில ஞானமும் ஒரு காரணமாகும். ஆக, ஒரு சாதாரண பேராசிரியராக இருந்த எம்.பி. பால் மிக சிறந்த இலக்கியவாதியாக விளங்கியதைக் கண்ணுற்றோம். இருபதாம் நூற்றாண்டு மலையாள இலக்கியங்களை உருவாக்கியதில் அவரை ஒரு சிற்பியாகக் காண்கிறோம். குட்டி கிருஷ்ண மாராருடனும், ஜோசப் முண்டச் சேரியுடனும், இலக்கியத் திறனாய்வு உலகத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக வெற்றி நடைபோட்ட மாபெரும் திறனாய்வாளராகக் காண்கிறோம். எம். பி. பால் மறைவிற்குப் பின்

அவர் நண்பர், திரு. எல்.ஏ. ஷெப்பர்டு (L.A.Sheppard) கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்:

> ***"எம்.பி.பால் ஒரு பெரிய நூலகம் வைத்திருந்தார் - ஆனால் அவரோ, அதைவிட மிகப்பெரிய நூலகமாகவேத் திகழ்ந்தார்".***

2. இளமைப் பருவமும் கல்வியும்

எம்.பி.பால் திருச்சூர் ஜில்லாவில் உள்ள முக்கட்டுகரா என்னும் கிராமத்தில் மின்னாச்சேரி (Menacherry) என்னும் பழம்பெறும் சிரியன் கத்தோலிக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நானூறு வருடங்களுக்கு முன்பு எம்.பி. பாலின் முன்னோர்களில் ஒருவர் பாரிஷ் (Parish) கத்தோலிக்க சர்ச்சை உருவாக்கினார். இதற்கு நன்றிக்கடனாக சர்ச்சின் அதிகாரிகள் இருநூறு வருட காலம் தொழுகையின் போது அவர்களுடைய பெயரை நினைவு கூறும் வகையில் ஏற்பாடு செய்தனர். காலப்போக்கில் எம்.பி.பாலின் குடும்பத்தினரின் ஒரு பிரிவினர் அச்சடங்கிற்கு மறுப்பு தெரிவித்தனர். எம்.பி. பாலின் பாட்டனார் தங்களுடைய செல்வ செழிப்புற்று விளங்கும் உற்றார், உறவினர்களின் மத்தியில் தம்முடைய ஏழ்மை நிலையுடன் வாழவிரும்பாமல் முக்கட்டுக்கரா கிராமத்திலிருந்து வெளியேறிட முடிவு செய்தார் - அவர் தம்முடைய இளமைக் காலத்தில் கிருஸ்துவ மதகல்வி ஸ்தாபனத்தில் பாதிரியாக (மதகுரு) பயிற்சி பெறுவதற்கு பதிவு செய்து கொண்டிருந்தார். சிறிது காலத்திற்குள்ளாக அப்பயிற்சியிலிருந்து வெளியேறினார். அப் புண்ணிய சேவைக்குச் சென்ற சுதந்திரமான மனப்போக்குடைய அவர் அக்கல்வி ஸ்தாபனத்தில் கடைபிடிக்கப்பட்டு வரும் கட்டு பாட்டை எதிர்த்து வெளியேறினாரா? வெளியேறியது நன்மையாக இருந்தாலும், எதற்காக வெளியேறினார் என்பது இதுவரை புரியாத ஒரு புதிராக இருந்து வருகிறது. பரம்பரை பழக்கத்தில் ஊறிய, மற்ற குடும்ப உறுப்பினர்கள் அதிர்ச்சிக்கும், கடவுளின் கோபத்திற்கும் ஆளாகுவோமோ என்று அச்சத்திற்குள்ளாயினர். ஆனால் எவ்வித அசம்பாவிதத்திற்கும் உட்படாமல் அவர் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு, ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அம்மகனுடன் ஆப்ரகாம், அர்ஸ்ஸை (Urs) விட்டு வெளியேறியதைப் போல், முக்கட்டுகரா கிராமத்தை விட்டு அமைதியாக வாழ்க்கை நடத்துவதற்குரிய ஒரு நல்ல இடத்தைத்தேடி வெளியேறினார். அவர் புத்தன் பள்ளியிலுள்ள வரபுழா என்னும் இடத்தில் சொந்தமாக ஒரு சிறிய நிலத்தை விலைக்கு வாங்கி, சிறிய வீட்டைக்கட்டி அவ்விடத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டார்.

அவருடைய மகன் பவுலோசு ஒரு சிறந்த உழைப்பாளி. மர வியாபாரத்தில் ஈடுபட்டு போதுமான செல்வத்தை ஈட்டி தன்

தகப்பனார் உருவாக்கிய வீட்டை மேலும் செம்மைப்படுத்தினார். புத்தன் பள்ளி மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்று, செல்வ செழிப்புடன், நேர்மையுள்ளடவராகத் திகழந்தார். அவருடைய மனைவி அழகான, பயபக்தியுள்ள ரோசம்மா நான்கு பெண் பிள்ளைகளையும், மூன்று ஆண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். அவர்களில் ஐந்தாவதாக தங்கநிறமான நல்ல அழகான குழந்தையாக எம்.பி. பால் 1904 ஆம் ஆண்டு மே முதல் தேதியில் பிறந்தார். அக்குழந்தையின் அழகில் அளவு கடந்த அன்பும், பாசமும் கொண்டிருந்தார் அவருடைய தந்தை. மற்ற குழந்தைகளுக்கு இல்லாத தனிச் சலுகையை சிறுவன் எம்.பி. பாலுக்கு வழங்கி வந்தார். தவறாமல் எண்ணெய்க்குளியல், சுவையான உணவுகள் வழங்கப்பட்டன. எப்படியாவது, எம்.பி. பாலின் அழகையும், பொலிவையும் நீடித்திருக்கச் செய்வது இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

எம்.பி. பால் பிறந்த சிறிது காலத்திற்குள்ளாகவே, துரதிருஷ்ட வசமாக, அவருடைய தாயார் நோய்வாய்ப் பட்டதினால், அவர் குழந்தை பருவத்தில் இன்றியமையானவையான தாய் அன்பையும், பரிவையும், கவனிப்பையும் இழந்தார் - ஆண்பிள்ளைகள் தாயின்மேல் இயல்பாக அதிக அன்பு கொண்டிருப்பர் என்ற இயற்கை நீதிக்கு எதிர்மாறாக தந்தையின் மீது அதிக அளவு பாசப்பிணைப்புடன் இருந்ததற்கு இது ஒரு முக்கிய காரணமாக இருந்தது. சில மாதங்களுக்குள்ளாக குணமடைந் தாலும், ரோசம்மா தன்னுடைய குழந்தைகளின் மீது அதிக செல்வாக்கை செலுத்த முடியாமல் போயிற்று. தேக ஆரோக்கியத்தை இழந்த நிலையி லுள்ள ரோசம்மா, தன்னுடைய குழந்தைகளின் குறும்புத் தனங்களுக்கு ஈடு கொடுக்க மிகவும் சிரமப்பட்டார். அதனால் சிறுவன் எம்.பி. பாலையும், சிறிய சகோதரன் ஆன்டோனியையும் வளர்க்கும் பொறுப்பு கொச்சுப் பெண்கள் (சிறிய சகோதரி) என்று அன்புடன் அழைக்கப்படும் மூத்த சகோதரி மீது விழுந்தது. எம்.பி. பாலின் மூத்த சகோதரன் பாப்பு (Pappu) இளமை பிராயத்தி லிருந்தே விளையாட்டில் நாட்டமில்லாமல் ஆழ்ந்த சிந்தனையுள்ள இயல்பினனாக இருந்தான். தன் பாட்டனாரின் மத மறுப்பு இயல்புக்கு பிராயச்சித்தம் செய்வது போல் கிருஸ்துவமத ஆலய பணிகளுக்கு தன்னை முழுவதும் அர்பணித்துக் கொள்ள சபதம் எடுத்துக் கொண்டிருந்தான். எம்.பி. பால், தன் சிறுவயதில் நடந்த நிகழ்ச்சிகளில் முக்கியமான நிகழ்ச்சியாக - ஓர் அறையில் கள்ளத்

தனமாக உள்ளே நுழைந்து இனிப்பு தின்பண்டத்தை திருடும்போது தன் தாய் தெரியாத்தனமாக அவ்வறையை தாளிட்டு பூட்டியதை நினைவுக் கூறுகிறார். சிறுவனாக இருந்தபோதும் சரி, நன்கு வளர்ச்சி அடைந்த நிலையிலும் சரி, உடல் நலம் மிக மோசமான விளைவுகளுக்கு உள்ளாகும் என்பதை அறிந்திருந்தும் இனிப்பு பண்டங்களின் மீது அவருக்குள்ள மோகம் குறையாமல் இருந்தது.

தன் மகன் எம்.பி. பால், சிறந்த அறிவுள்ள குழந்தையாக இருப்பதை வெகு விரைவில் உணர்ந்தார் பௌலஸ் (Paulose). விதி வசத்தால் தான் கல்வி ஞானம் பெறாவிட்டாலும் தன் மகனான எம்.பி. பாலுக்கு கல்வி புகட்டுவதில் உறுதியாக இருந்தார். உயர் கல்வி புகட்டுவதன் மூலம், பண்பும், பொருளும் பெற்று சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடையலாமென்று திடமாக நம்பினார். எம். பி. பால் மூன்று வயது இருக்கும்போதே ஒரு கிராம ஆசிரியரிடம் கல்வி பயிலுவதற்கு அனுப்பப்பட்டார். முதலில் கற்பதற்கு தயங்கினாலும், கொச்சு பெண்கள், ஒரு எழுத்திற்கு ஒரு வறுத்த முந்திரி பருப்பு கொடுத்து எம்.பி. பாலை எழுதுவதற்கு தூண்டினாகள். எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து வார்த்தைகளாக, நிலையான ஒரு அர்த்தத்தை கொடுத்தபோது அவர் தன்னை அறியாமலேயே இன்பமயமான உலகத்தில் அடிஎடுத்து வைத்திருப்பதுபோல் உணர்ந்தார். உணர்ந்தது மல்லாமல் அதிலிருந்து என்றும் விலகிப் போகாமல் இருந்தார். மிக விரைவில் எம். பி. பால் சிறுவர்களுக்கான ஆரம்பக்கல்வி புகட்டும் ஒரு தனியார் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் எல்லா மாணவர்களிடையே மிக சிறந்தவனாக இருப்பது தெளிவாயிற்று. அளவு கடந்த பெருமிதத்துடன் பவுலேஸ் மிகுந்த நம்பிக்கையுடன் தன் 'வெகுமதி மகனை' எர்னாகுளத்திலுள்ள இத்தாலிய பாதிரியார்கள் நடத்தும் செயின்ட் ஆல்பர்ட் பள்ளியில் சேர்ப்பித்தார்.

ஆரம்ப கல்வியின் மேல்நிலை வகுப்பிற்கே தகுதியான, எட்டு வயதான எம்.பி. பால் முக்கியமாக வயது காரணமாக நான்காம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அந்நாட்களில் நான்காம் வகுப்புகளுக்கு, வருட கடைசியில் கொச்சி அரசாங்கத்தாரால் கல்வி இலாகா மூலமாக நடத்தப்பெறும் பொதுத்தேர்வில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றதின் விளைவாக எம்.பி. பாலுக்கு கட்டண சலுகை வழங்கப்பட்டது. அதன்பிறகு ஒவ்வொரு பொது

தேர்விலும், அவர் உயர்ந்த மதிப்பினைப் பெற்று கட்டண சலுகையைப் பெற்று வந்தார். இவ்வாறு மறுபடியும் கட்டண சலுகையைப் பெற்ற சேதியைக் கேட்டு பௌலோஸுக்கு (Paulose) மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. அவர் உடனே எம்.பி. பால் மிக விரும்பி சாப்பிடும், ஒரு கூடை மாம்பழத்தையும் வகுப் பாசிரியர்க்கு, அன்பளிப்பாக வழங்குவதற்கு, ஒரு சவரனையும் எடுத்துக் கொண்டு நேரடியாக விடுதிக்கு விரைந்தார்.

பௌலோஸ் பாசமுள்ள ஒரு தந்தையாக இருந்தாலும், அப் பாசத்தை தனக்குள்ளே மறைத்து வைத்து இருந்தார். சிறுவர்கள் அளவுகடந்த செல்வத்தினால் கெட்டுப்போவார்கள் என்பது அவருடைய எண்ணம். அவர் தனக்கே உரிய முறையில் ஒரு கட்டுப்பாடுடன் இருந்தார். சிறுவர்கள் யாவரும் தலைமுடி சிரைத்துக் கொண்டு, கனமான துணியினால் மூடி இருக்க வேண்டுமென்று விரும்பினார். எம்.பி. பால் இவ்விரண்டையும் வெறுத்தார். சிறுவர்கள் அதிகமாக சாப்பிடுவதால் உடல்நலம் கெடும் என்பதற்காக சிறுவர்களுக்கு, தம் தாய் அளவு சாப்பாடு போடுவதை எம்.பி. பாலினால் நியாயப்படுத்த முடியவில்லை. அதனால்தான் வளர்ந்து தகப்பன் ஸ்தானத்தை அடைந்தபோது, எம்.பி.பால் தனக்கு மறுக்கப்பட்ட எல்லா சலுகைகளையும் தம் குழந்தைகளுக்கு தாரளமாக வழங்கினார். பௌலோஸ் எம்.பி. பாலை கிராமத்திலுள்ள மற்ற சிறுவர்களிடம் சேர்ந்து பழகுவதை தடுத்து வந்தார். தன் மீது தனது தந்தையார் விதித்த இக்கட்டுப் பாட்டிற்காக அவர் தந்தைக்கு மிகவும் நன்றியுடையவராக இருக்க வேண்டும். தம் சிறுவர்கள் விளையாடுவதற்கு தேவையான இடவசதி தம் வீட்டிலும், வீட்டை சுற்றியுள்ள மைதானமும் போதுமானது என்று எண்ணினார், அவருடைய தந்தை. இதன் விளைவாகவே, எம்.பி. பால் படிக்கும் பழக்கத்தை முதலில் பொழுது போக்காக வளர்த்துக் கொண்டாலும் பிற்காலத்தில், அது அவருடைய சந்தோஷத்திற்கும் அறிவு பெருக்கத்திற்கும் மூலக் காரணமாக இருந்தது. அவர் விடுதியிலிருந்தபோது மிக அதிக அளவில் புத்தகங்களை வாசிப்பார். ஆனால் ஒரு புத்தகப் புழுவாகவோ, நண்பர்களுடன் பழகுவதற்கு வெட்கப்படுபவரோ அல்லது விளையாட்டை வெறுத்து ஒதுக்குபவராகவோ இல்லை. மாணவர்களிடையே மிக பிரபலமானவராக விளங்கினார். கால் பந்தாட்டத்தில் சிறந்தவராக இருந்தார். பிரஞ்சு, ஜெர்மன், மலையாளம், மற்றும் ஆங்கிலத்தில் மிகவும் தேர்ச்சி பெற்று சிறந்த

மாணவராக திகழ்ந்தார். பன்னிரெண்டு வயது இருக்கும்போதே, தன் தாயை இழந்ததின் விளைவாக அவரும், மற்ற சிறுவர்களும், சிறிது காலம் தனிமைக்கு உட்பட்டிருந்தாலும், அவருடைய தந்தை பாசத்தையும், பரிவையும் பொழிந்து பாதுகாத்து வந்தார். ஒரு சில வருடங்களுக்குப் பிறகு தனக்கு இரண்டாம் திருமணத்திற்கான பேச்சு எழுந்தபோது அந்த யோசனையை, தம் பிள்ளைகளின் முடிவிற்கு விட்டுவிட்டார். எம்.பி.பால் அந்த யோசனையை உடனே களைந்தெறியுமாறு கூறியதன் விளைவாக தம் எண்ணத்தை கைவிட்டுவிட்டார் அவர் தந்தை. இவ்வாறு குழந்தை பருவத்திலிருந்தே சுயமாக முடிவு எடுப்பதில் தம் திறமையை வெளிப்படுத்தி வந்தார். தனக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டிருந்தாலும் அவர் ஒருபொழுதும் பிடிவாதக்காரராக இருந்ததில்லை.

ஆங்கில பள்ளியின் கடைநிலை தேர்வு எழுதுவதற்கான வயது வரம்பு நிரம்ப பெறாததால் அவர் ஒரு வருட காலம் காத்திருந்த அக்கால கட்டத்தில் உலக காப்பியங்களை கற்பதில் ஈடுபட்டார். இக்கால கட்டத்தில்தான் பௌலோசின் தேக ஆரோக்கியம் சீர்குலைய ஆரம்பித்தது. அவ்வாறு இருந்தும் மற்ற பெற்றோர் களைப்போல் தன் மகனை தன் குலத் தொழிலுக்கு ஈடுபடுத்த முயலவில்லை. பதினைந்தாம் வயதில் ஆங்கில பள்ளியின் கடைநிலை தேர்வில் சிறப்பான மதிப்பெண் பெற்று கட்டண சலுகையை வென்றார். இம்மகிழ்ச்சிகரமான செய்தியை செவியுற்ற-தேகநிலை குன்றிய பௌலோஸ் நிம்மதி பெருமூச்சு விட்டு 'இனிமேல் என் மகனுக்கு நல்ல வாழ்க்கை கிட்டும்' என்று குறிப்பிட்டார். தன் மகன் சிறப்பான கல்வி பெற்றிருப்பதை கண்ணுற்ற பௌலோஸ் தன் கனவு ஓரளவு பலித்திருப்பதை அறிந்த அவர் அவ்வருடத்திலேயே இயற்கை எய்தினார். எம்.பி. பாலின் சகோதர, சகோதரிகளை வளர்க்கும் பொறுப்பு அவர்களின் சிற்றப்பாவின் பொறுப்பில் விடப்பட்டது. கபடமற்ற அவர்தன் காலம்சென்ற சகோதரனின் சொத்துக்களை, அதிகமில்லா விட்டாலும், சிதறவிடாமல், ஒருங்கிணைத்தார். அப்பிள்ளைகள் அதன் மூலம் எம்.பி. பாலின் மூத்த சகோதரன் கண்டி செமினரிக்கும், இளைய சகோதரன் ஆண்டோனி பள்ளிக்கும், எம்.பி. பால் மேற் படிப்பிற்காக திருச்சூரில் உள்ள செயின்ட் தாமஸ் கல்லூரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். திருச்சூரிலுள்ள சிரியன் கத்தோலிக்க மத குருமார்களின் ஆட்சிக்குட்பட்ட

விஞ்ஞானம், கலைக்குப் புகழ்பெற்று விளங்கிய செயின்ட் தாமஸ் கல்லூரியில் பயின்றார். எம்.பி. பாலின் மாணவ பருவத்தைப் பற்றிய செய்திகள் மிக குறைவாகவே தெரிய வருகிறது. பேராசிரியர்களிடையே கல்வியில் சிறந்த மாணவனாகவும், கத்தோலிக்க பாதிரிமார்களிடையே ஒரு நல்ல பிரசங்கம் செய்யும் கத்தோலிக்க மாணவனாகவும் விளங்கினார். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற முக்கிய நாட்களிலும் மதகுருமார்களிடம் பாவமன்னிப்பு கோரும் புனித பிரார்த்தனை கூட்டங்களிலும், உண்மையான கத்தோலிக்கனாக தவறாமல், எவ்வித நிர்பந்தமும் இல்லாமல் கலந்து கொண்டார். விடுமுறை நாட்களில், தம் கிராமத்திலுள்ள பாரிஷ் சர்ச்சினால் (Parish Church) நடத்தப் பெறும், எல்லா நிகழ்ச்சிகளிலும் இளைஞர்களுடன் சேர்ந்து, ஊக்கமுடன், சுறுசுறுப்பாக பணியாற்றுவதில் ஈடுபட்டார். அவர் சர்ச்சின் சுற்று வட்டாரத்தில் வசிப்பவர்கள் பாடுவதற்காக மத பாடல்களை இயற்றினார் என்பதையும் அனுமானிக்கலாம். அப்பாடல்கள் கவித்துவம் இல்லாதிருந்தாலும், அவை பாடுவதற்கு ஏற்ற இசையுடன் நயமாக ஒலித்தன. அவர் இன்டர் மீடியட் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றபின் 1922ஆம் ஆண்டு திருச்சியிலுள்ள **செயிண்ட் ஜோசப் கல்லூரியில்** சரித்திரத்தை முக்கிய பாடமாக கொண்டு இளங்கலை பயிலுவதற்கு சேர்ந்தார். திருச்சூரிலுள்ள **செயின்ட் தாமஸ்** கல்லூரியைப் போலவே திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியும் கத்தோலிக்க பாதிரிமார்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. கத்தோலிக்க கல்வி நிறுவனங்களில் சீரான கல்வியைப் பயின்ற எம்.பி. பால் கீழ்ப்படியாமல் இருந்தார் என்றோ நல்லொழுக்கம் தவறி நடந்தார் என்றோ ஒருமுறை கூட அவர் மீது குற்றம் சாட்டப்படாமல் இருந்தார், என்பது உண்மையிலேயே குறிப்பிட தகுந்ததாகும். அவருடைய நல்லொழுக்கமும், அறிவுத் திறமையும் கண்ணுற்ற ஆசிரியர்கள் அவரின்பால் சீரான அன்பையும் நண்பர்கள் அவர்பால் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தனர். ஆனால் எம்.பி. பால் எவ்வித ஆதிக்கமுமில்லாத சுதந்திர தன்மையை விரும்பினார். திருச்சிராப்பள்ளியில் இருக்கும்போது, குழந்தைகளற்ற ஒரு ஆங்கில மாது வீட்டின் முதல் மாடியில் சில கல்லூரி நண்பர்களுடன் தங்கி இருந்தார். அப்பொழுது அவர் தனக்கு யார் எப்படி பணம் அனுப்புகிறார்கள் என்ற ஒருவித கவலையுமின்றி ஊதாரித்தனமாக நல்ல ஆங்கில சினிமா

பார்ப்பதிலும், உயர்ந்த சிகரெட்டுகளை குடிப்பதிலும், புத்தகங்களை வாங்குவதிலும் செலவழித்தார். இக்காலங்களில் அவர் மலையாள மொழியில் இலக்கியத்தன்மை பொருந்திய எந்த ஒரு படைப்பையும் செய்வதற்கு முயலவில்லை என்றாலும் தன் தாய்மொழி இலக்கியங்களின் மீதான பற்று மட்டும் அவருக்கு மாறாமல் அப்படியே நிலைத்திருந்தது. ஒரு சமயம் கொடிய தொற்று நோய் திருச்சிராப்பள்ளியில் பரவியபோது அவருடைய கல்லூரி சில நாட்களுக்கு மூடப்பட்டு இருந்தது. அவ்வமயம், அவர்தம் நண்பர்களுடன் தம் கிராமத்திற்கு திரும்பினார். எர்னாகுளத்தில் படகில் சென்று கொண்டிருக்கும்போது, அந்த அமைதியான இருட்டில், படகு மெதுவாக அலைகளைக் கிழித்து கொண்டு செல்கையில், தான் முன்பு சர்ச்சில் பாடுவதற்காக இயற்றிய கன்னிமேரி பாடலை அப்படகோட்டி பாடுவதை கேட்டு அளவு கடந்த மகிழ்ச்சிக்குள்ளானார். இளமைப் பருவத்தில் இயற்றிய ஒரு பாட்டிற்கு ஒரு சாதாரண படகோட்டி செலுத்திய மரியாதையை கண்ணுற்ற அந்நிகழ்ச்சியை அவர் உயிர் உள்ளவரை எண்ணி, எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைந்தார். அவர் இளங்கலைப் பட்டம் பெற்றவுடன் 1925ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் போதகராக (tutor) நியமிக்கப்பட்டார். இவ்வாறு ஆசிரியர் பணியில் நியமனம் பெற்றது பிற்காலத்தில் கேரளாவில் உருவான ஆசிரியர்களில் புகழ்பெற்ற ஒரு ஆங்கில ஆசிரியரை உருவாக்குவதற்கு ஒரு ஆரம்ப கட்டமாக அமைந்தது.

3. துணிவின் சாயல்

இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் கதாநாயகர்கள் மனித இனத்தின்பால் கௌரவம், சுதந்திரம் ஆகிய இரண்டிற்கும் ஓர் உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத்து வந்தனர். கேரளாவில் இந்திய பாரம்பரியத்திலும், தேசபக்தியினாலும் உந்தப்பெற்ற முக்கவிகள் உணர்ச்சி மிக்க சுதந்திர பாடல்களை இயற்றலானார்கள். சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை, சுதந்திரமே உயிர், அதை மறுப்பது மரணத்திற்கே சமம். சுதந்திரம் இனிமையானது போன்ற கருத்துக்களில் பாடல்கள் வெளி வரலாயின. தேசிய விடுதலை பாடல்கள் முதன்முதல் வள்ளத்தோள் நாராயண மேனன் மூலமாகவும், சமூக பொருளாதார விடுதலை பற்றிய பாடல்கள், குமரன் ஆசான் மூலமாகவும் இயற்றப்படலாயின. தேசிய சமூக பொருளாதார விடுதலையை எம்.பி. பால் மிக முக்கியமானதாக கருதுகிறார். ஆனால் மனிதகுலத்தின் ஆணிவேரான, தனித்தன்மை பொருந்திய சுதந்திரத்திற்கு ஓர் உத்தரவாதம் இல்லாத நிலையில் மேற்கண்ட சமூக-பொருளாதார விடுதலை இயக்கத்திற்கு முக்கியத்துவம் இல்லாமல் போயிற்று. மனித உணர்ச்சிகள் சுயமானது. அதன் பல மடங்காக பொங்கி வழியும், கட்டுக் கடங்காத எண்ணங்களுக்கு ஒரு தடையாக சமூகத்தில் பல்கி பெருகியுள்ள மூடப்பழக்க வழக்கங்கள் ஒருபுறமும், உளுத்துப் போன பொருளாதார அரசியல் அமைப்புகள் மறுபுறமும் சேர்ந்து மனித உணர்ச்சிகளை தன்னிச்சையாக பொங்கி வரவிடாமல் அவனுடைய மென்னியை நெருக்கிக் கொண்டிருந்தன. மனித இனத்தின் சுதந்திரத்தைப் பற்றிய தம் எண்ணங்களை மற்றவர் களைப்போல் வாய்கிழிய பேசுவதோடல்லாமல், எம்.பி.பால் அதையே தன் வாழ்க்கை நடை முறையாக்கிக் கொண்டதிலிருந்து அவருடைய தனித்தன்மை நன்கு விளங்கும்.

தம் வாழ்க்கைத் துணைவியை தேர்ந்தெடுப்பதில் இளைஞர் களின் எண்ணங்களுக்கு வாய்ப்பளிக்காமல் பெரியவர்களே முடி வெடுக்கும் பழக்கமிருந்தது. இந்திய சமுதாயத்தில் அறிவிலும், வாழ்க்கைத்தரத்திலும் உயர்ந்த நிலையிலுள்ள குடும்பங்களிலும் இது ஒரு மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இவ் விஷயத்தில் தானே தன்னிச்சையாக தான் காதலித்த பெண்ணையே மணமுடிக்க தன்னை வளர்த்த மாமனின் விருப்பத்திற்கு விரோதமாக

முடிவெடுத்ததிலிருந்து அவருடைய சுயத்தன்மையை நன்கு உணரலாம். பின்னொரு காலத்தில், திருமதி. பால் தங்களின் இளமைக்கால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கையில், எம்.பி. பால், தன் குடும்பத்தாரின் எதிர்ப்புகளை மீறி தான் சுயமாக எடுத்த முடிவிற்கு ஏற்ப தன்னை மணம் செய்து கொண்ட நிகழ்ச்சிகளை நினைவு கூர்கிறார். எம்.பி. பாலும், மேரியும் தூரத்து உறவினர்கள். அவ் விருவரும் உரிய வயது அடைந்தபோது, ஒருவரை ஒருவர் பார்க்க நேர்ந்ததின் விளைவாக காதல் வயப்பட்டனர். எம்.பி. பாலின் மாமாவின் கூற்றுப்படி, எம்.பி. பால், உயர்ந்த தகுதி வாய்ந்த புத்தன் பள்ளியைச் சேர்ந்த ஒரு சிரியன் கத்தோலிக்க வகுப்பைச் சேர்ந்தவர். அவரை மேரியின் குடும்பத்ினர் தந்திரமாக வளைத்து, போதுமான வசதியற்ற, சற்றே அழகுள்ள மேரிக்கு மணம் முடித்து விட்டனர் என்பதாகும். ஆனால் மேரியோ குள்ள மான, தங்க நிறமேனியனான எம்.பி. பாலின் மீது தன் மனதை பறிகொடுத்திருந்தாள். அவருடைய காதல் விளையாட்டுகளினால், மேரி பல சங்கடங்களையும், பழிச் சொல்லையும் ஏற்க வேண்டியிருந்தது. எம்.பி. பால் தன் மனத் திரையில் எண்ணங்களை தாராளமாக ஓடவிட்டு தன் எதிர்கால மனைவியுடன் நடத்தப் போகும் இனிமையான வாழ் நாளைக் குறித்து இன்ப கனவுகளில் மூழ்கித் திளைத்திருந்தார். தான் கல்வி பயிலுமிடத்திலிருந்து அவருடைய காதல் மடல்கள் உடனுக்குடன் காலந்தாழ்த்தாது மேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஒருமுறை அவர் திருச்சிராப்பள்ளிக்கு கிளம்புவதற்குமுன் சாகுந்தலத்திலிருந்து, ஒரு மேற் கோளுடன் மேரிக்கு எழுதி வைத்த குறிப்பாவது - ''முன்னோக்கி விரையும் தேரின் உச்சியில் உள்ள கொடியின் தலை பின்னோக்கி பறப்பதுபோல், உயிரற்ற இவ்வுடல் முன்னோக்கி சென்றாலும், துடிக்கும் உயிர் பின்னோக்கி உன்னை நோக்கியே இருக்கிறது''- என்பதாகும். இவர்களுடைய திருமணம் புத்தன் பள்ளியிலுள்ள கிருஸ்துவ தேவாலயத்தில் கொண்டாடப்பட்டது. எம்.பி. பாலின் தந்தையைச் சார்ந்தவர்களும், சகோதர சகோதரிகளும் இத்திருமண நிகழ்ச்சியில் ஒட்டுமொத்தமாக கலந்து கொள்ள வில்லை. எம்.பி. பால், தன் குடும்பத்தாரின் மீதும், உடன் பிறந்தவர்களின் மீதும் பாசப்பிடிப்புடன் ஒன்றி இருந்தார். மேலும் தன் சகோதரியான கொச்சுபெண்கள் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தார். ஆனால் தன் வாழ்க்கை துனைவியைத் தேர்ந் தெடுத்துக் கொள்வதில் தனக்குள்ள உரிமையில், சுதந்திரத்தில் யார் குறுக்கிடுவதையும் விரும்பவில்லை.

எம். பி. பாலுக்கு மூன்றாம் குழந்தை பிறந்தபோதுதான் மாமன், தன் குடும்பத்தாருடன் இணையும் சந்தர்ப்பம் கிட்டியது. பிறகு தன் வாழ்நாள் முழுவதும் அவர் தன் தகப்பனாரின் உற்றார் உறவினர்களுடன் விசுவாசத்துடன் இருந்து வந்தார். எம்.பி. பாலின் காதல் விவகாரம் ஏதோ இளமைத்துடிப்பில் அழகிய பெண்களின் மீது உள்ள தீவிர காம உணர்ச்சியால் உந்தப்பெற்று அவசர திருமண பந்தத்தில் ஈடுபட்ட ஒரு உணர்ச்சிமயமான சாதாரண காதல் கதையல்ல. சுய கௌரவம், உயர்ந்த கொள்கையான மனித சுதந்திரத்தின் மீது அவருக்குள்ள அளவிட முடியாத கொள்கைப் பிடிப்பையும் எடுத்துக் காட்டுகிறது. குமரன் ஆசானின் 'இளநெஞ்சங்கள் சுதந்திரமானவை. அவை மண வாழ்க்கையில் சுதந்திரமாக முடிவெடுப்பவை' என்ற கூற்றை தெளிவாக நிலை நிறுத்துவதாக அமைந்தது.

அக்கால படித்த அறிவாளிகள் எண்ணத்திற்கு ஏற்ப, எம்.பி. பாலும், அவர் தம் நண்பர்களாலும், ரசிகர்களாலும், சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுவதற்கு தூண்டப்பட்டார். திருச்சிராப்பள்ளியில் உள்ள, செயின்ட் ஜோசப் கல்லூரியில் போதகராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது 1927ஆம் ஆண்டு, அலஹாபாத்தில் நடைபெற்ற சிவில் சர்வீஸ் தேர்வில் பங்கு கொண்டார். அதில் அவர் ஒன்பதாவது இடத்தைப் பெற்றாலும், முதல் ஆறுபேர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுதியான சுதந்திர வேட்கையும், உயர்ந்த தேசிய கொள்கையும் உடைய எம்.பி. பால், சிவில் சர்வீஸில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததால், அவர் எம்மாதிரியான ஒரு அதிகாரியாக இருந்திருப்பார் என்பதை நாம் உணரலாம். செயின்ட் ஆல்பர்ட் பள்ளியில் பயிலும்போது, யார் உயர்ந்த மனிதர் என்ற, ஆசிரியரின் கேள்விக்கு, மகாத்மா காந்தியின் பெயரை சொன்னதின் விளைவாக பிரம்படி வாங்கினார். பிறகு திருவாங்கூர் அரசரின் பிறந்தநாள் விழாவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மக்கள் அரசர் மீது பொழியும் விசுவாசம் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் விசுவாசத்தையும், நாட்டுப்பற்றையும் அடிப்படையாக கொண்டிருந்தால் தான் நல்ல அர்த்தமுள்ளதாக அமையும் என்று சுட்டிக் காட்டி பொதுக் கூட்டத்தில் ஒரு பரபரப்பை ஏறபடுத்தினார். அவர் மகாத்மா காந்தி அடிகளால் முன்னின்று நடத்தப் பெற்ற மாபெரும் மக்கள் இயக்கமான சுதந்திர போராட்டத்தை 1927 ஆம் ஆண்டுவரை உணராமல் இருந்தார். 1927ஆம் ஆண்டு அவர் மேற்கொண்ட வடஇந்திய சுற்று பயணத்தின் விளைவாக அவர் மாபெரும்

மாற்றத்திற்குள்ளானார். அலஹாபாத்தில் ஆனந்தபவனில் மோதிலால் நேருவிற்கு தன் வணக்கத்தைக் கூறச் சென்றார். ஆங்கில ஆசிரியரான எம்.பி. பால், கதர் உடையிலுள்ள மோதிலாலின் எளிமையான தோற்றத்தை கண்டார். ஆங்கிலேயர்களின் மேற் கத்திய, நடை, உடை பாவனைகளை அபத்தமாக, கண்மூடித் தனமாகத் தான் பின்பற்றியதை உணர்ந்து வெட்கினார். இந்திய மக்கள் முதன்மையானவர்கள். மூத்த இந்திய பெருங்குடிகள் போற்றிப் பாதுகாத்து வந்த பழக்க வழக்கங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்தார். அலஹாபாத்திலிருந்து திரும்பியதி லிருந்து கதர் ஆடைகளை உடுக்க ஆரம்பித்து தன் இறுதிகாலம்வரை உறுதியாக கடைபிடித்து வந்தார். இவ்வாறு தன் வாழ்க்கையில் நடைபெற்ற மாற்றங்களில் ஒரு அரசியல் வாதியாக இல்லாமல், தன்னுடைய பெரும்பாலான நடவடிக்கைகளை கலாச்சார நிகழ்ச்சிகளில் கல்ந்து கொள்வதோடு நிறுத்திக் கொண்டார். புதிய முன்னேற்ற வழிகளை கண்டறியக் கூடிய திறமையானவர்கள் கலாச்சார துறைக்கு மிகமிக அவசியமாகத் தேவைப்பட்டனர். மக்கள் நலத்தில் உண்மையான அக்கறை உள்ளவர்களுக்கு, அரசு நிறுவனங்களில் இடம் கிடைப்பது அரிதாக இருந்தமையால், எம்.பி. பால் தன்னை ஆங்கில அரசாங்கம் வேலையில் எடுத்துக் கொள்ள தவறியதை நினைத்து, அவர் ஒருபோதும் கவலை கொண்டதில்லை.

1928ஆம் ஆண்டு எம்.பி. பால், ஒப்பந்த அடிப்படையில் திருச்சூரிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் ஆங்கில போதகராக சேர்ந்தார். 1929 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட முதுநிலை ஆங்கில இலக்கிய வரலாறு தேர்வில் உயர்ந்த மதிப்பெண் பெற்று தேறினார். செயின்ட் தாமஸ் கல்லூரி எம்.பி. பாலை வளர்த்ததாய் என்று சொல்லலாம். அவருடன் பணியாற்றும் பெரும்பாலான பேராசிரியர்கள் அக்கல்லூரி நிர்வாகத்திலுள்ளவர்கள். அவர்களில், ரெவரண்ட்டு பலோக்காரன் பாதிரியார், எம்.பி. பால், ஆங்கிலத் துறையில் சேரும்போது, அக்கல்லூரியின் முதல்வராக இருந்தார்.

பெரும்பான்மையான நாட்களில், அவர் செயின்ட் தாமஸ் கல்லூரியில் பணியில் இல்லாதிருந்தாலும், அவருக்கு சிதம்பரத் திலுள்ள, சிதம்பர கல்லூரியிலிருந்து வந்த அழைப்பை, அவர் தன்னை வளர்த்த கல்லூரியின்பாலுள்ள அன்பாலும், தன் சுற்றத்தார்

மேலுள்ள விசுவாசத்தாலும் ஏற்க மறுத்துவிட்டார். அவர் கல்லூரியில் சேர்ந்த தொடக்க காலத்தில், அவருக்கும், கல்லூரி முதல்வர்க்கும், நல்ல உறவு நீடித்திருந்தது. அதற்குக் காரணம், கல்லூரி நிர்வாகம், திறமையான விசுவாசமுள்ள ஒரு சிரியன் கத்தோலிக்க போதகரான எம்.பி. பால் ஆங்கில துறைக்கு கிட்டயதை ஒரு மாபெரும் வரப்பிரசாதமாக கருதியது. எம்.பி. பால் தன் திறமைகள் அனைத்தையும் உபயோகித்து, தான் ஒரு தைரியமுள்ள, உறுதியான சிறந்த ஆங்கில போதகர் என்று நிரூப்பிப்பதற்கு அக்கல்லூரி நிர்வாகம் போதிய வாய்ப்புகள் கொடுத்தது. இச்சூழ்நிலைதான் எம்.பி. பால் புலமை வாய்ந்த (on the necessity of Theism) 'ஆஸ்தீக கொள்கையின் அவசியம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை, ஷெல்லியின் (Shelly's on the necessity of Atheism) 'நாஸ்தீக கொள்கையின் அவசியம்' என்ற கட்டுரைக்கு எதிரிடையாக எழுதினார். இச்சர்ச்சைக்குரிய சிறிய கட்டுரையும், அதன் சுருக்கமான ஆழ்ந்த (இருபதாம் நூற்றாண்டின், கத்தோலிக்க சர்ச் பற்றிய) விளக்க உரையும், அக்கால கேரள பாதிரிமார்களால் மிகவும் பாராட்டப்பட்டன. மேலும் அப்புத்தகம் கிருஸ்துவ கலாசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகமாக வைக்கப்பட்டது. எம்.பி. பால், சேர்ந்த சிறிது காலத்திற்குள், ஜோசப் முண்டசேரியும், அக்கல்லூரியில் மலையாளத்துறையில் சேர்ந்தார். இவ்விரு விமர்சகர்களின் சேர்க்கையினால் கேரள பண்பாட்டு முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏற்பட்டன. அதற்கு முன்னோடியாக, ஜோசப் முண்டசேரி கிருஸ்தவ ஆலயங்களின்பால் எம்.பி. பாலைப் போலவே விசுவாசமுடன் இருந்தார். இவ்விருவரும் சேர்ந்து, தாமஸ், எ. கெம்பலினின், 'The limitation of Church' என்ற நூலை மலையாளத்தில் மொழி பெயர்த்தனர்.

கேரள கலையின் மீதும், மலையாள மொழியின் மீதும் ஒரு வெறுப்புணர்ச்சிக் கொண்டிருந்தனர் அக்கால கிருஸ்துவ பாதிரி மார்கள். அவர்களைப் போலல்லாமல், பாலூக்காரன் பாதிரியார் (Palookkaran), கேரள கலையின் மீது விருப்பமும், மலையாள மொழியின்பால் பற்றும் கொண்டிருந்தார். தன் மதத்தின் மீது நம்பிக்கையும், சமூக விழிப்புணர்ச்சியும் ஒரு சேரப்பெற்ற அவர் இலக்கியத்தில் சிறந்து விளங்கிய எம்.பி. பாலுக்கும், ஜோசப் முண்டசேரிக்கும் ஒரு மாபெரும் தூண்டுகோலாக விளங்கினார். மிக குறுகிய காலத்தில் எம்.பி. பால், ஒரு சிறந்த ஆங்கில போதகராகப்

போற்றப்பட்டார். அவர் மாணவர்களின் முன்னிலையில் மிகவும் கூச்சமுள்ளவராகத் திகழ்ந்தார். அவர் தன் முகத்தை அடிக்கடித் துடைத்துக் கொள்வார். முடிகளை பின்னுக்குத் தள்ளிய பின் தன் சொற் பொழிவைத் தொடங்குவார். தொடங்கியபின், சொற் பொழிவு, சரளமாக எவ்வித தடங்கலுமின்றி, வெளிப்பட, தான் ஒரு போதகர், மாணவர் என்ற பாகுபாடுகள் மறந்து மாணவர்களிடமே ஐக்கியமாகி விடுவார்.

திரு. அச்சுதமேனன், திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாடு, எ.எம். தாமஸ் மற்றும் பி. டி. புன்னோஸ் போன்றவர்கள் எம்.பி. பாலின் தொடக்ககால சீடர்களில் உயர்ந்த ஸ்தானத்தை வகித்தவர்கள். சி. அச்சுதமேனன் தன்னுடைய Pages of Reminiscence என்னும் புத்தகத்தில் எம்.பி. பாலைப்பற்றி ஒரு முழு அத்தியாயத்தை ஒதுக்கியுள்ளார். எம்.பி. பாலைப்பற்றியும் அவர் ஆசிரியராக இருந்த காலத்தைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு போதுமான தகவல்களை இப்புத்தகத்தில் காணலாம்.

''குள்ளமாக, திடகாத்திரமாக உள்ள எம்.பி. பால் எப்பொழுதும், கலைந்து காணப்படும் தன்னுடைய முடியை அடிக்கடித் தன் கையால் பின்னுக்கு தள்ளிக் கொண்டிருப்பார். அவர் சொற்பொழிவாற்றும்பொழுது, நாற்காலி அல்லது மேசையின் விளிம்பைப் பிடித்தக் கொண்டு முன்னுக்கும், பின்னுக்கும் அடிக்கடித் தள்ளிக் கொண்டே சொற்பொழிவு ஆற்றுவார். மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரக போராட்டத்தைத் தொடங்கிய பொழுது, கதர் ஆடையை அணியத் தொடங்கினார். வேட்டி, மேல் சட்டை, கதர் துண்டு உடுப்பது வழக்கம். பிறகு மேல் சட்டையை விடுத்து, கதர் ஜிப்பா அணியத் தொடங்கினார். செயின்ட் தாமஸ் கல்லூரியில் ஆங்கிலத் துறையில், அக்காலத்தில் மூன்று ஆசிரியர்களிருந்தனர். அவர்கள் பி. இராமநாதன், கல்லூரி முதல்வரான பிரான்ஸிஸ் பலுக்காரன், மற்றும் எம்.பி.பால் ஆவார்கள். இம்மூவரும் தங்களுக்கே உரிய முறையில் மிகச் சிறந்து விளங்கினார்கள். பேராசிரியர் இராமநாதனின் குறிப்புரைகள் எல்லாம் தேர்வு எழுதுவதற்கான முறையில் மிக உபயோகமாக அமையும். அவர் மாணவர்களை தேர்விற்காக மட்டுமே தயார் படுத்துவதுடன் நிறுத்திக் கொண்டு இலக்கிய இன்பங்களை பருகுவதிலிருந்து விலகிச் சென்றார். அதற்கு மாறாக பலூக்காரன் தேர்விற்கு தேவையான பெரும்பாலான பாடங்களை கற்பிக்காமல்

இலக்கிய இன்பங்களை துய்ப்பதிலேயே தம் முழு நேரத்தையும் செலவிடுவார். மேலும் பெரும்பாலான ஆங்கிலப் பாடங்களை மலையாள மொழியிலேயே நடத்துவார். இவ்விருவர்க்கும் நேர் மாறாக எம். பி. பால் விளங்கினார். அவருடைய சொற் பொழிவுகளில் மாணவர்கள் தங்கள் தேர்வில் தேர்ச்சிப் பெறு வதற்குரிய போதுமான குறிப்புரைகள் மட்டுமல்லாமல், இலக்கிய இன்பங்களை துய்ப்பதற்குத் தேவையான குறிப்புரைகளும் நன்கு எடுத்தாளப்பட்டன. அவருடைய சொற்பொழிவை செவியுறும் மாணவர்களுக்கு ஏதோ ஓர் கற்பனையில் சஞ்சரிப்பது போன்ற உணர்வு ஏற்படுவதோடு, கவிதை மற்றும் மொழியை நுண்மையாக ஆராய்வது போன்றதொரு உணர்வும் ஏற்படும்.

ஆங்கில கவி ராபர்ட் பர்ன் (Robert Burn) பற்றி (Carlyle) கார்லைல் எழுதிய கட்டுரையை மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ராபர்ட் பர்னுடைய பல கவிதைகளை எம்.பி. பால் பாடுவதை அச்சுதமேனன் நினைவு கூறுகிறார். இன்ட்டர் மீடியட் வகுப்பில் சேக்ஷ்பியரின் (Twelth Night) டுவல்த் நைட் கற்பிக்கும்போது அதிலுள்ள நகைச்சுவை மற்றும் ரொமான்டிக் (Romantic) பாகங்களை சரிசமமாக விளக்குவார். மதத்தை ஒழுங்குப்படுத்தும் நோக்கத்துடன் கொண்டு வரும் பல வகையான, போலியான புதிய நெறிமுறைகளை, தொடர்ந்து எதிர்ப்பதே தன் முதல் நோக்கமாக கொண்டிருந்த எம்.பி. பால் சேக்ஷ்பியரின் அகந்தையுள்ள மால்வோலியோவின் (Malovolio) முகத்திரையை கிழிக்கும் அழகை சிறப்பாக உற்சாத்துடன் எடுத்தியம்புவார். ஜேன் ஆஸ்டின் (Pride and Prejudice) பிரைடு அண்ட் பிரிஜுடிக்ஸ் என்ற நாவலை அவர் மிகவும் விருப்பத்துடன் கற்பிப்பார். அதிலுள்ள பென்னட் பார்சன் கோலின்ஸ் என்ற நகைச்சுவை கதா பாத்திரங்கள் (Mr. & Mrs. Bennet Parson Collins) எம்.பி. பாலின் மனோபா வத்திற்கு ஏற்றதாக அமைந்து இருக்கிறது. எம்.பி. பால் ஆங்கிலப் பாடங்களை விளக்குவதற்கு மலையாள மொழியை கையாண்ட தில்லை. ஆனால் ஆங்கிலத்தில் விளக்கங்கள் கொடுக்கும்போது, அவ்விளக்கங்களுக்கு ஒப்பான உதாரணங்களை மலையாள மொழியில் கையாளுவதிலிருந்து தவற மாட்டார். தொடர்பில்லாத கற்பனைகளுக்கும் (far fetched conceits) தன்னிச்சையாக பிறக்கும் உவமைகளுக்கும் உள்ள நுட்பமான வேறுபாட்டை, வள்ளத்தோலின் பிரபாதா கீதம் (Prabhatha Geetham) என்னும் பாடலில், ஜி. சங்கரகுருப்பினால் பாராட்டப்பட்ட கற்பனைக்கும்

(conceits) ராதையுடெ கிரிதார்தா (Radhayuda Krithartha) என்னும் கவித்துவம் ததும்பும் படைப்பில் காணப்படும் கற்பனை காட்சிக்கும் உள்ள வேறுபாட்டை கொண்டு விளக்குவதை திரு. அச்சுதமேனன் நினைவு கூர்கிறார். இவ்வாறு அவர் மலையாளப் படைப்புகளில் இருந்து மேற்கோள் எடுத்தாள்வது ஜி.சங்கரகுருப் பின் ரசிகரான ஒரு மாணவருக்கும், எம்.பி. பாலுக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதம் எம்.பி. பாலின் ஆழ்ந்த அறிவை வெட்ட வெளிச்சமாக்கியது. அவர் மாணவர்களிடம் எப்பொழுதும் பொறுமையுடன் இருந்தார். கருத்துக்களை சுதந்திரமாக எடுத்துரைப் பதற்கு போதுமான அவகாசம் கொடுத்தபின் தானே அவர்களுக்கு புரியுமாறு விளக்குவார். அக்கால பேராசிரியர்களிடம் காணப்படும் ஏதேச்சாதிகாரம் பிடிவாத குணம் எம்.பி. பாலிடம் ஒரு இம்மி அளவும் இருந்ததில்லை. அவர் மாணவர்களை வழி நடத்தி செல்லும் ஒரு சிறந்த ஆசிரியராக இருந்தாரேயன்றி எதேச்சாதி காரியாக மாணவர்களிடம் நடந்ததில்லை. திருவாங்கூர்-கொச்சின் பகுதியிலுள்ள புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியர்களில் எம்.பி. பாலுக்கு இணையாக போற்றத்தக்கவராக எம்.பி. பாலைவிட வயதில் மூத்தவரான, ஆங்கில மலையாள மொழி விற்பன்னரான திரு. பி. சங்கரன் நம்பியார் ஒருவர் மட்டுமே இருந்தார். அவர் மலையாள கவிதைகளை இயற்றுவதில் சிறந்து விளங்கினார். எம்.பி. பால் தற்கால மற்றும் பழம் படைப்புகளில் உள்ள இலக்கிய தன்மைகளின் வேறுபாடுகளை திறமையாக பகுப்பாய்வதில் நம்பியாரின் புகழையும் விஞ்சி நின்றார். இவ்வாறு செயின்ட் தாமஸ் கல்லூரியில் சிறிது காலம் இனிமையாக காலங்கழித்தார் எம்.பி.பால். அக்கல்லூரி முதல்வர், நண்பர்கள் ஆகியோரிடம் எம்.பி. பாலுக்கு சுமுகமான உறவு நிலவிருந்தது. மாணவர் களிடையே அளவில்லா அன்பும், பாராட்டும் பெற்றிருந்தார்.

சர்வாதிகார போக்குடைய கல்லூரி நிர்வாகத்திற்கும், சுதந்திர மனப்போக்குடைய எம்.பி. பாலுக்குமிடையே தவிர்க்க இயலாத காரணங்களால் மோதல்கள் ஏற்படலாயிற்று. அதிகார வர்க்கத்தை எதிர்த்து நியாயத்திற்காக சளைக்காமல் போராடுவதில் அக்கால கல்லூரி ஆசிரியர்களிடையே முன்னுதாரணமாக விளங்கினார். அக்காலத்தில் மிகச் சிறிய எண்ணிக்கையிலுள்ள தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் அறிவாளிகளுக்கு, சுதந்திரம் என்பது நினைத்துப் பார்க்க கூட முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்தனர். நிர்வாகத்திற்கு பணிந்து போகாதவர்கள் உடனே வேலையிலிருந்து

நீக்கப்பட்டனர். செயின்ட் தாமஸ் கல்லூரியிலுள்ள பணியாளர்களின் பணி நிலைமை மிக மோசமாக இருந்ததை ஜோசப் முண்டசேரி போன்றவர்கள் தரும் சில குறிப்புகளில் இருந்து நன்கு உணரலாம். 1930 ஆம் ஆண்டு கொச்சி அரசாங்கம் பணியாளர்களுக்கு பொது சம்பள குறைப்பு ஆணை பிறப்பித்தது. கொச்சி அரசாங்கம் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள செயின்ட் தாமஸ் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களுக்கும் சம்பள குறைப்பு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் பாலூக்காரன் எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காமல், ஆசிரியர்களுக்கும் இச்சம்பள குறைப்பை முன்னதாகவே அமல் செய்து விட்டார். ஜோசப் முண்டசேரி தன் சுயசரிதையில் இப்பிரபலமான சம்பள குறைப்பு பற்றியும், பணியாளர்களின் எதிர்ப்பினால் ஏற்பட்ட விளைவை பற்றியும் மிக விரிவாக கீழ்கண்டவாறு எழுதியுள்ளார்.

''திருச்சூரிலுள்ள செயின்ட் தாமஸ் கல்லூரியில் உள்ள பணி யாளர்களுக்கு மிக குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு வந்தது. எம்.பி. பாலுக்கு நூற்றுக்குக் குறைவாகவே கொடுக்கப்பட்டது. பெரும்பாலான ஆசிரியர்களுக்கு நிரந்தர பணிக்கான ஆணை தரப்படவில்லை. மிகச் சிலரே வருடாந்திர ஊதிய உயர்வு பெற்று வந்தனர். மாதாந்திர ஊதியம் பல தவணைகளாக, தலைமை குமாஸ்தாவால் பட்டுவாடா செய்யப்பட்டது. ஆனால் தன் மனப்போக்கிற்கு தக்கவாறு வேண்டியவர்களுக்கும் வேண்டாத வர்களுக்கும் தலைமை குமாஸ்தாவால் முன் பணம் வழங்கப்பட்டு வந்தது. எம்.பி. பாலும், மற்றும் சிலரும் இதை கடுமையாக எதிர்த்து, கல்லூரி முதல்வரிடம் ஊதியத்தை ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் மொத்தமாக பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடு செய்யும்படி வேண்டிக் கொண்டனர். கல்லூரி முதல்வர் இதற்கு ஒப்புக் கொண்ட போதிலும், அவருக்கும், எம்.பி. பாலுக்குமிடையே உறவு முறியத் தொடங்கியது. இவ்வாறு ஊதியக் குறைப்பினால் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் விளைவாக, அவர் இவ்விவ காரத்தில் தாம் நேரடியாக தலையிடுவது தலையாய கடமை என்று கருதினார்.

''கல்லூரி முதல்வர் ஊதிய குறைப்பைப் பற்றி ஒரு சுற்றறிக்கையை அனுப்பிய உடன் பதினொரு ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து பணியாளர்களின் கூட்டத்தை கூட்டி அதில் ஊதியக் குறைப் புப்பற்றி விளக்கிக் கூறுவதற்கு முன் ஊதிய குறைப்பு அமுலாக்க

வேண்டாம் என்று முதல்வரிடத்தில் முறையிட்டுக் கொண்டனர். துணை முதல்வர், ஜோசப் பெட்டா (Joseph Pettah) வும் இவ் விஷயத்தில் தான் எதுவும் செய்வதற்கில்லை என்று கைவிரித்து விட்டார். மற்ற ஆசிரியர்களும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தயங்கிய நிலையில் எம்.பி. பால் தன்னிச்சையாக செயல்பட முடிவு செய்து ஊதியக் குறைப்பின் வரலாறு (The story of a cut) என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி வெளியிட்டார். அவர் கூற்றுப்படி ஊழியர்களின் ஊதியத்தை அனுமதியின்றி குறைப்பது அக்கிரமம் , கொடுமையான நம்பிக்கை துரோகச் செயல் என்பதாகும். இதை எதிர்த்து, தன் நிலையை எடுத்துரைத்தும் எம்.பி. பாலை கண்டித்தும், முதல்வர் பாலுக்காரன் ஒரு துண்டு பிரசுரத்தை வெளியிட்டார். இதற்கு பதிலடிக் கொடுக்கும் வகையில் ''துண்டு பிரசுரம் வெளியிடுபவராக மாறிய முதல்வர்'' (Principal turns pamphleteer) என்னும் தலைப்பில் இரண்டாம் கட்டுரையை எழுதி வெளியிட்டார். பாலுக்காரன் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாமையை கண்ணுற்ற பால், கல்லூரி மேலாளரான (Dr. Vazhappilly) டாக்டர். பிஷப் வாழப்பிள்ளிக்கு, தன் வழக்கறிஞர் புதஷாத்துராமன் மேனோன் மூலமாக ஒரு தாக்கீது அனுப்பினார். எம்.பி. பால் தன் சம்பளத்தில் இருந்து எவ்வளவு பணம் குறைக்கப்பட்டதோ அதைவிட அதிகமான பணத்தை கல்லூரி நிர்வாகத்திற்கு வழங்கி இருக்க முடியும். ஆனால் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது, வேலைக்கு வைத்துக் கொள்பவர், வேலையாளி ஆகிய இருவர்க்கும் உள்ள உடன்படிக்கையை மீறி, வேலையாளின் சம்பளத்தை குறைப்பதற்கு நிர்வாகத்தினருக்கு உரிமை இருக்கிறதா? என்பதே ஆகும். பிஷப்புடன் ஒரு சாதாரண கத்தோலிக்க பாமரன் மோதுவது துணிகர செயலாக கொள்ள முடியாது. நம்பிக்கையுள்ள ஒரு கத்தோலிக்கனின் கணிப்பின்படி இது ஒரு தூஷிக்கிற அவமானப் படுத்துகிற செயலாக கருதப்பட்டது. நல்லொழுக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்ட கத்தோலிக்க சமூகத்தின் அஸ்திவார கொள்கை யையே உடைத்தெரிகிறதொரு செயலாக கருதப்பட்டது. ஆனால் கையில் ஆயுதத்துடன் அநீதியை எதிர்த்து போரிடும் வீரன்போல் தயாராக இருந்தார் எம்.பி. பால்.

தொழிலாளர்களிடையே ஏற்பட்டு இருக்கும் மனக்கசப்பு, நீதி மன்றத்திற்கு செல்வதால் ஏற்படும் அவதூற்றை தடுப்பதற்கு திருச்சூரில் உள்ள நற்பண்பு மிக்க பிஷப் இப்பிரச்சனைக்கு தீர்வு

கண்டார். கல்லூரி முதல்வர் சம்பளகுறைப்பு ஆணையை அமுல்படுத்திய தன் செய்கை தவறு என்று ஒப்புக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதே சமயம் எம்.பி. பாலுக்கு தகுந்த நஷ்ட ஈட்டுடன், பதவியை ராஜினாமா செய்யும்படியும் அறிவுறுத்தப் பட்டார். இவ்வாறு கல்லூரி முதல்வரின் அதிகாரத்திற்கு அடிபணிய மறுத்ததின் மூலம் தன் பதவியை இழந்தாலும் அதிகார துஷ்பிர யோகத்திற்கு எதிராக கடுமையான எதிர்ப்பை காட்டியதன் மூலம் ஒரு நல்ல விழிப்புணர்ச்சியுள்ள மனித சமுதாயம் நிகழ்கால தலை முறையில் வளர்வதற்கு வித்திட்டார் என்று சொல்லலாம். எம்.பி. பால், செயின்ட் தாமஸ் கல்லூரியிலிருந்து ராஜினாமா செய்த நிகழ்ச் சிகளுக்குப் பிறகு முப்பது ஆண்டு பிறகு கேரளக் கல்லூரி ஆசிரியர்கள் தங்களுக்குள் தைரியத்தை வளர்த்துக் கொண்டு ஒன்றாக இணைந்து தங்கள் நியாயமான உரிமைகளுக்காக நிர்வாகத்தினருக்கு எதிராக போராட துணிந்தனர்.

கல்லூரியிலிருந்து ராஜினாமா செய்தவுடனே பிஷப் மாளிகையின் நேர் எதிரே ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து அதில் டியுடோரியல் கல்லூரியை ஆரம்பித்தார். அதில் பல் கலைகழக தேர்வில் தவறும் மாணவர்களுக்கு கல்வி போதிக்க ஆரம்பித்தார். தேர்வு முடிவு வெளியானவுடன், இப்புதிய டியுடோரியல் கல்லூரியில் சேர்வதற்கு கூட்டம் கூட்டமாக மாணவர்கள் வந்தனர். இளம் புரட்சிக்காரரான எம்.பி. பால் முற்போக்கு எண்ணங்கள் பொருந்தியவராக இருந்ததால் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றார். அறிவாளிகள் எம்.பி. பாலின் டியுடோரியல் கல்லூரியில் ஒரு சங்கத்தை நிறுவி, மாலை வேளைகளில் அடிக்கடி ஒன்று கூடி தங்களுக்கு அக்கறையுள்ள சமூக கலாச்சார விஷயங்களை அலசுவார்கள். விரைவில் அவர் நவ கேரளம் என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார். தன்னுடைய சங்கத்தில் வெளிப்பட்ட சுதந்திரமான கருத்துக்களை அப்பத்திரி கையில் பிரசுரித்தார். மேலும் அக்கால நடைமுறை பிரச்சினை களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் தக்கவாறு தன்னுடைய கருத்துக்களை அதில் வெளியிட்டார். கத்தோலிக்க பாதிரிமார்களால் நடத்தப்படும் ஸ்தாபனங்களில் கையாளப்படும் ஆரோக்கியமற்ற பழக்கங்களை மிக வன்மையாக கண்டித்து அப்பத்திரிகையில் எழுதுவது மிக முக்கிய அம்சமாகும். அவ்வாறு எழுதிய பரிகாச கட்டுரைகளில் மிக வன்மையாக கண்டித்து எழுதியது, ''படிக்கட்டின் முதல்படியில் நிற்கும் பிஷப்'', என்னும் கட்டுரையாகும். இதில் கிறிஸ்துவ

ஆலயங்களில் பொது மக்களின் உரிமைகளை பறிப்பதற்காக கையாளபட்டுவரும் உளுத்துப்போன சம்பிரதாயங்களையும், பழக்கவழக்கங்களையும் தெள்ளத்தெளிவாக இரக்கமின்றி படம்பிடித்து காட்டப்பட்டது. அப்பொழுதிருந்த செயின்ட் தாமஸ் கல்லூரி நிர்வாகத்தினர் தெளிவற்ற குழப்பவாதிகளாக இருந்தனர். ஒரு சிலர் எம்.பி. பால் கிருஸ்துவ தேவாலயங்களின் சட்டதிட்ட அமைப்பு முறையை சிறிதும் யோசிக்காமல் ஏன் எதிர்க்கிறார் என்று அதிசயப்பட்டனர். இவ்வித நிகழ்ச்சிகளால் எம்.பி. பாலுக்கும் உள்ளூர் கிருஸ்துவ ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையே தொடர்பு குறைந்து காலப்போக்கில், முற்றும் அற்று போயிற்று. அதேசமயம் கிருஸ்துவ உறுப்பினர்களில் ஒருவராக இருப்பதற்கு தன்னால் இயன்ற அளவு முயன்றார். இரிஞ்சலக்குடா (Irinjalakkuda) என்னும் கிராமத்திலிருந்து வெளிவரும், 'சிறுபுஷ்பம்' என்னும் பத்திரிகையின் பதிப்பாசிரியர் பொறுப் பேற்று அதை சிலகாலம் திறம்பட நடத்தி வந்தார். அதில் அவர் 'கத்தோலிக்க சடங்கு' (Catholic) என்னும் புத்தகத்தை மலை யாளத்தில் மொழிபெயர்த்து பிரசுரித்தார். அதன்மூலம் மலையாள மொழியில் சீர்திருத்தம் கொணர்ந்து ஒரு முன்னோடியாக விளங்கினார். இதை அக்கால கிருஸ்துவ குருமார்கள் பாராட்ட முன் வரவில்லை என்றாலும் 1960 ஆம் ஆண்டிற்கு பிறகு இரண்டாம் வாடிகனுக்கு பிறகு வந்த குருமார்கள் இப்படைப்பை மிக உற்சாகமாக ஏற்றுக் கொண்டார்.

அவர் ஆரம்பித்த டுடோரியல் கல்லூரி ஓராண்டிற்கு பிறகு ஜனரஞ்சகமான மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டது. முன் போலவே முற்போக்கு சங்க இளைஞர்கள் அங்கு கூடினார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் ஜி. சங்கரகுருப்பு, ஜோசப் முண்டச்சேரி, ஆகியோர்களாகும். அச்சங்கத்தில் தொடர்ந்து பங்கு கொண்டதன் காரணமாக எம்.பி. பாலின் இலக்கிய சிந்தனை தூண்டப்பட்டது. விளைவு **நாவல் சாஹித்தியம்** என்னும் நாவல் இலக்கியத்தையும், கண்டகதா என்னும் சிறுகதை தொகுதியையும் திருச்சூரில் இருக்கும்போது படைத்தார். டுடோரியல் கல்லூரியின் மூலமாக பொருளும், புகழும் கிடைத்த போதிலும் அவர் திருப்தி அடைந்ததாக காணப்படவில்லை. 1933ஆம் ஆண்டு திடீரென்று டுடோரியல் கல்லூரியை மூடிவிட்டு சென்னைக்கு சட்டம் பயில பயணமானார். தன் மனைவி, மூன்று மகள்கள் ஆகியோரை பராமரிக்கும் பொறுப்பு அவருக்கிருந்தது. மூத்த பெண், பள்ளி

விடுதியில் தங்க வேண்டியிருந்தது. மற்ற இரு மகள்களுடன் திருமதி. எம்.பி. பால் ஆல்வேயில் உள்ள அவர்களுடைய சொந்த வீட்டில் தங்கியிருந்தார். சொந்தமான மூன்றரை ஏக்கர் தென்னந் தோப்பு மூலமாக வரும் வருமானம் குடும்ப பராமரிப்புக்கு போதுமானதாக இல்லை. இப்பணத் தேவையை சமாளிக்க எம்.பி. பால் சென்னையிலுள்ள ராஜாஜி டுடோரியல் கல்லூரியில் பகுதிநேர பணிமேற் கொண்டார். இக்காலங்களில் எம்.பி. பாலின் குடும்பம் மிக கடினமான, இக்கட்டான நிலையிலிருந்தது. இதனால் ஏற்பட்ட கடன் தொல்லையில் இருந்து மீளுவதற்கு, ஆல்வேயிலுள்ள சொந்த வீட்டை எண்ணூறு ரூபாய்க்கு விற்க வேண்டியதாயிற்று.

இறுதி தேர்வில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று தேறிய எம்.பி. பால், பட்டம் பெறுவதற்கு மேலும் ஓராண்டு பயில வேண்டியிருந்தது. அவ்வருடம் கோடைக்கால விடுமுறையை தம் சொந்த ஊரான புத்தன் பள்ளியில் தன் குடும்பத்தாருடன் கழித்துக் கொண்டிருந்தார். விடுமுறைக்குப்பின் கல்லூரி திறப்பதற்கு முன் சென்னை பயணத்திற்கு தயாராக இருந்தார். அப்போது செங்கனாச் சேரியிலுள்ள பெர்ச்மேன் கல்லூரியின் ஆங்கில துறைக்கு தலைமை ஏற்கும்படி அழைப்பு வந்தது. அவர் சந்தோஷத்துடனும் பெருமை யுடனும் அப்பதவியை ஏற்க முன்வந்து தன் சட்டப்படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்தார். தன்னுடைய குடும்பத்தாருடன் ஒரு பிரத்யேகமான படகில் செங்கனாசேரி நோக்கிப் பயணமானார்.

சில காலங்களாக செயின்ட் பெர்ச்மேன் கல்லூரி திறமை வாய்ந்த பேராசிரியர்கள் இன்றி அதன் புகழ் மங்கிய நிலையில் இருந்தது. மந்த நிலையில் உள்ள தன் கல்லூரியின் புகழை உயர்த் துவதற்கு கல்லூரி நிர்வாகத்தினர் எம்.பி. பால் போன்றவர்களையும் திறமை வாய்ந்த திரு. ஜான் போன்றவர்களை பணிக்கு அமர்த்தினர். ஐந்து ஆண்டு காலமாக எம்.பி. பால் பணியாற்றிய பின் கல்லூரி முதல்வர் மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோருக்குக்கும் அவருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டது. கடைசியாக கல்லூரி முதல்வர் ரோமிலோ தாமஸ் பாதிரியார் எம். பி.பாலை பணியில் இருந்து நீக்குமாறு அறிவித்தார். வேலை நீக்க உத்தரவை எவ்வித கலக்கமும் இன்றி பெற்றுக் கொண்டார். ஆனால் இதை அறிந்த மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு முயற்சித்த போது, எம்.பி.பால் குறுக்கிட்டு அவர்களை அமைதிப்படுத்தினார். இவ் விஷயமாக சில நல்லெண்ணம் கொண்ட பெரியோர்கள் பாலுக்கும்,

நிர்வாகத்தினருக்குமிடையே மத்தியஸ்தம் செய்து பழைய சகஜ நிலைமையை கொண்டு வர முயற்சித்தனர். பிஷப் அப்பிரச்சனையை ஆராய்வதில் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டு அப் பிரச்சனைக்கு தற்காலிகமாக ஒரு முற்றுப் புள்ளி வைத்தார். ஆனால் காலப்போக்கில் தாமஸ் ரோமியோ பாதிரியார் பழிவாங்கும் உணர்ச்சியுடன் செயல்பட்டு எம்.பி.பாலை கல்லூரியில் செயல் படா வண்ணம் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தினார். அதனால் எம்.பி. பால் தன் பதவியை ராஜினாமா செய்ததுடன், நிர்வாகத்தினர் உடன்படிக்கையை மீறியதாக வழக்காடி அதில் வெற்றியும் பெற்றார். அவ்வருட விடுமுறையை தன் சொந்த ஊரான புத்தன் பள்ளியில் தன் மனைவியுடன், ஐந்து பிள்ளைகளுடன் எந்த வேலையும் இன்றி கழித்தார்.

1938 ஆம் ஆண்டு செங்கனாச் சேரியில் டுடோரியில் கல்லூரியை பள்ளிவிடுமுறை கழித்து திறக்கும் தறுவாயில் ஆரம்பித் தார். 1940 ஆம் ஆண்டிலிருந்து அக்கல்லூரி எம்.பி.பால் கல்லூரி என்றழைக்கப்பட்டது. பல்கலைகழக தேர்வு முடிவுகள் அறிவிக்கப் பட்டவுடன் எம்.பி. பால் கல்லூரிக்கு எதிர்பார்த்த அளவிற்குமேல் அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்ந்தனர். திருவாங் கூரிலுள்ள தனியார் கல்லூரிக்கு இணையாக தரத்தில் மிகச்சிறந்து விளங்கி பிரபலமடைந்தது. கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லோரும் திறமையானவர்களாக இருந்தனர். வகுப்பறைகளில் ஒவ்வொரு மாணவனுக்கும் தனி மேஜை, உட்கார நாற்காலி அளிக்கப்பட்டது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக விடுதிகள் அமைக் கப்பட்டன. திருமதி. எம்.பி.பால் தங்களுடைய வாழ்க்கை செங்க ணாச் சேரியில் இருக்கும்போது மகிழ்ச்சியுடனும், ஆரோக்கிய மாகவும் பணரீதியாகவும் மிக சிறந்து விளங்கியது, என்று நினைவு கூர்கிறார். எம். பி. பால் பணம் சம்பாதிப்பது மட்டு மல்லாமல், அதை செலவு செய்வதிலும் மிக தாராளமாக நடந்து கொண்டார். 1940ஆம் ஆண்டு தம் கல்லூரியை எர்ணாகுளத்திற்கு மாற்றினார். ஜப்பானியர் தாக்குதலுக்கு பயந்து மக்கள் அந்நகரை காலி செய்தபோது அவர்தன் கல்லூரியை 1942ஆம் ஆண்டு கோட்டயத் திற்கு மாற்றினார். இவ் விடங்களில் எல்லாம் இக்கல்லூரி நன்றாக பணம் ஈட்டியது. கோட்டயத்தில் எம்.பி. பாலின் கல்லூரி மிகச் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கையில், செயின்ட் பெர்ச்மேன் கல்லூரி நிர்வாகத்தினர், தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக எம்.பி. பாலை மறுபடியும் தங்கள் கல்லூரி ஆங்கில துறைக்கு தலைமை ஏற்கும்படி அழைத்தனர்.

திருவிதாங்கூரில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தை நிறுவுவதற்கு காங்கிரஸ் கட்சியினால் நடத்தப்படும் போராட்டம் வலுவடைந்து கொண்டிருந்தது. ஈழவர் மற்றும் கிருஸ்துவ சமூகத்தின் தலைவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசு நிறுவனங்களிலும், அரசு பள்ளியிலும் சேர்வதற்கு தங்களுக்குள்ள உரிமைகளை பெறுவதற்கும் தேசவிடுதலை கோரியும் போராட்டம் நடத்தினார்கள். நாயர் தலைவர்களும் அவர்களுடன் சேர அப்போராட்டம் ஒரு பேரியக்கமாக மாறியது. திருவிதாங்கூரில் திவான் சர்.சி.பி. இராமசுவாமி ஐயர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு பிரிவுகளின் மனஉறுதியையும், பணபலத்தையும் ஒவ்வொன்றாக முடக்கத் தீர்மானித்தார். முதலில் அவருடைய கோபம் மிகச் செல்வ செழிப்புடன் விளங்கும் சிரியன் கிருஸ்துவ வகுப்பின் மீது விழுந்தது. அவர்களுடைய உறுதியை உடைத்து அழிக்க முதலில் தேசிய கொல்லம் வங்கி மூடப்பட்டது. மலையாள மனோரமா பத்திரிகை முடக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. மேலும் செயின்ட் பெர்ச்மேன் கல்லூரியில் சிறந்த ஆசிரியர்களை அங்கிருந்து தந்திரமாக அப்புறப் படுத்தப்பட்டனர். இதற்கு சவாலாக சர். சி. பி. இராமசுவாமி ஐயருக்கு ஒரு பதிலடி கொடுக்கும் முறையில் செயின்ட் பெர்ச்மேன் கல்லூரி நிர்வாகத்தினர் தங்கள் பழைய பகைமையை மறந்து எம்.பி. பாலை தங்கள் ஆங்கில துறைக்கு தலைமை ஏற்கும்படி வேண்டிக் கொண்டனர். அவ்வேண்டுகோளை அங்கு நீண்ட காலம் பணியாற்றுவது மிக கடினம் என்று நன்கு அறிந்திருந்தும் ஏற்று இரண்டாண்டு காலம் பணியாற்றினார். அவருக்கு கணிசமாக அக்கால பேராசிரியர்களுக்கு அளிக்கும் சம்பளம் அதாவது நானூறு ரூபாய் அளிக்கப்பட்டது. ஆனால் அவர் தன்மானத்தையும், சுதந்திரத்தையும் தான் சம்பளத்தைவிட எதிர்பார்த்தார். ஆனால் அக்கல்லூரி அதிக சம்பளத்தைத்தான் அளிக்க முடிந்தது. 1946 ஆம் ஆண்டு அக்கல்லூரியை விட்டு விலகி தன் சொந்த கல்லூரியில் இணைந்து மீண்டும் மகிழ்ச்சியுடன் சுதந்திரமாக பணியாற்றினார்.

1950 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் ஆர்ச்பிஷப் மேன்மை தாங்கிய மார்ஐவேனியோஸ் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட தன் கல்லூரியில் ஆங்கில துறையை உருவாக்குவதற்கு எம்.பி. பாலை அழைத்தார். அக்காலத்தில் கல்லூரி ஆசிரியர்கள் டுடோரியல் கல்லூரியில் பணியாற்றுவதை தடை செய்ய பல்கலைக்கழக விதிமுறைகள் எதுவும் தடுக்கவில்லை. எம்.பி.பால் ஆர்ச் பிஷப்பின்

அழைப்பை ஏற்று தன்னுடைய வீட்டையும், டுடோரியல் கல்லூரியையும் திருவனந்தபுரத்திற்கு மாற்றிக் கொண்டார். தம் பிள்ளைகளின் கல்வி வசதிக்கும் டுடோரியல் கல்லூரியின் வளர்ச்சிக்கும் திருவனந்தபுரம் வசதியாக அமைந்தது. அங்கு இரண்டாண்டு காலம் தன் குடும்பத்தாருடன் கழித்த அவரை திடீரென்று மரணம் ஆட்கொண்டது. அவர் இறக்கும் தருவாயில் தன் மனைவியையும் ஒன்பது பிள்ளைகளையும் விட்டுச் சென்றார். மூத்த பிள்ளைக்கு மட்டுமே திருமணம் முடிந்திருந்தது. இறக்கும்வரை அவர் ஒரு சுதந்திர மனிதராக விளங்கினார். அதிகாரவர்க்கத்திற்கும், தனிமனிதனுக்கும் இடையே ஏற்படும் மோதலில், தனிமனிதன் ஊக்கத்தின் உதவியால் உறுதியாக எதிர்ப்பதன் மூலம் அதிகார வர்க்கத்தை பணிய வைக்க முடியும். அவ்வாறு பணியவைத்து அதிகாரவர்க்க அமைப்பில் ஒரு மாறுதலை உண்டாக்கி, தன் வாழ்க்கையை நிலைநிறுத்துவதற்கு புதிய அமைப்புகளை உருவாக்குவதற்கு வெறுப்பு, பயமறியாமல் சுதந்திரமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டி மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார் எம்.பி. பால்.

மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்காக பிறக்கிறான். அதனால் அவன் தன் உள்ளக் கிளர்ச்சிகளுக்கு எவ்வித தடையையும் அனுமதிக்க கூடாது என்று எம். பி. பால் உறுதியாக அறிவுறுத்து கிறார்.

4. பேராசிரியர் - முதல்வர்

தனிப்பயிற்சிக் கல்லூரியை (டுடோரியல்) திறம்பட நடத்துவதற்கு பெரும் மூலதனம், ஆசிரியர் - மற்றும் ஆசிரியரல்லா பணிகளுக்கு தகுந்தவர்களை நியமிப்பது, மாணவர்களை திறமையாக வழி நடத்தி செல்வது இதற்கெல்லாவற்றிற்கும் மேலாக நிர்வாகத் திறமை ஆகியவை மிக இன்றியமையாதன வாகும். எம்.பி.பால் கல்லூரி நிர்வாகத்தை திரு. கோபால மேனன் போன்ற பொறுப்பானவர்களிடம் ஒப்படைத்தார். தன்னுடைய நேர்மையான குணத்தையும், புகழ்மிக்க பேச்சாற்றலையும் மூலதனமாக கொண்டார். திருமதி. பால் மகளிர் விடுதிக்கு தலைவியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு எம்.பி. பால், திறமை வாய்ந்த கோர்பால மேனன், அச்சுத மேனன், கொச்சு கோவிந்தன் நாயர், மாதன் தரகன், நாராயண தேவ், போன்ற, ஒவ்வொருவரும் தன் திறமைகளில் சிறந்து விளங்கிய ஒரு குழுவைப் பெற்றிருந்தார். இக்கல்லூரியில் ஆண், பெண் மாணவர்களும், நன்கு தேர்ச்சி பெற்று பொறுப்புள்ள கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள் என்று சொல்லலாம். மற்ற கல்லூரிகளில் வழக்கமாக உள்ள கட்டு திட்டங்களின்றி மாணவர்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் நல்லொழுக்கத்துடன் பழகுவதற்கு முழு சுதந்திரம் பெற்றிருந்தனர். வெறும் பாடங்களை திணிக்காமல் எவ்வித கஷ்டமுமின்றி திறமையான போதனா முறையினால் மாணவர்கள் கற்பிக் கப்பட்டனர்.

அவ்வாறு கற்பிக்கப்பட்டதனால், எல்லா மாணவர்களும் தேர்வில் வெற்றி பெற்றனர். அவர்கள் கேளிக்கை களியாட் டங்களிலும், வருடாந்திர விழாக்களிலும் மகிழ்ச்சியாகப் பங்கு கொண்டனர். எம்.பி.பாலும் அவர்களின் நண்பர்களாக, வழி காட்டியாக, இணைந்து இருந்தார். இந்தியா முழுமையும் பரவியுள்ள அவருடைய மாணவர்கள் அவருடைய குணத்தை, பேச்சாற்றலை எப்போதும் நினைவு கூரத்தவறமாட்டார்கள். நேர்மைக்கும், பண்பிற்கும், சுதந்திரதன்மைக்கும் நாயகமாக விளங்கியதற்காக அவருக்கு தங்களுடைய வணக்கத்தை செலுத்தி வருகிறார்கள். வகுப்புகளில் அவர் வழங்கும் குறிப்புரைகள் இலக்கிய தன்மை வாய்ந்ததாகும். சார்லஸ் லாம்பின் ஆங்கில நாவல் ட்ரீம் சில்ரன் பற்றிய எம்.பி.பாலின் கீழ்க்காணும்

குறிப்புரையை இன்றும் அவருடைய பழைய மாணவர்கள் நினைவு கூர்வார்கள். ''சார்லஸ் ஆழ்ந்த யோசனையில் இருக்கும்போது தன் மனத்திரையில் தோன்றும் சரித்திர நாயகர்களை வர்ணிப்பதன் மூலம் தன் ட்ரீம் சில்ரன் நாவலுக்கு ஒரு அழியாத் தன்மையை உருவாக்கினார். அந்நூலாசிரியர் தன் வாழ்க்கையில் நிகழ்ந்த துன்ப கரமான நிகழ்ச்சிகளை உருக்கமான வசனங்களால் விவரிப்பதன் மூலம் அவ்விலக்கியத்தின் சோகத்தன்மையை ஓர் உச்ச நிலைக்கு கொண்டு செல்கிறார். இதிலிருந்து எம்.பி. பாலின் கற்பிக்கும் ஆற்றலின் சிறப்பு விளங்குகிறது. மாணவர்களின் கூற்றுப்படி எம்.பி.பால் முதல் இருபது முப்பது நிமிடங்கள் வரை சொற் பொழிவு ஆற்றுவது. பிறகு வகுப்பு முடியும் வரை ஆயத்தமின்றி குறிப்புரை வழங்குவது என்பதை வழக்கமாக கொண்டிருந்தார் என்று தெரிகிறது, அவர் அதிகமாக புகை பிடிப்பவராக இருந்தார். சொற்பொழிவு ஆற்றும்போது மட்டும் தற்காலிகமாக புகைப் பிடிப்பதை நிறுத்தி வைப்பார், என்றும் தெரிகிறது. பேராசிரியராக, கல்லூரி முதல்வராக பணியாற்றும் போது, தன்னுடைய ஆழ்ந்த படிப்பாற்றலாலும், தனித் தன்மையாலும் ஒவ்வொரு மாணவர் உள்ளத்திலும் ஒரு அழியாத முத்திரையை உருவாக்குவதில் அவர் மிகப் பெரிய வெற்றி பெற்று வந்தார்.

கல்லூரியில் உள்ள மற்ற பணியாளர்களை தன் குடும்ப உறுப்பினர்களாகவே கருதி வந்தார். ஊதியத்தில் சிக்கனம் காட்டாமலும், அவர்களுடைய முன்னேற்றப் பாதையில் குறுக்கே நில்லாமலும் இருந்து வந்தார். பாளையங்கோட்டையில் உள்ள செயின்ட் ஜான் கல்லூரியில் சேருவதற்காக மாதன் தரகன் விலகிய காலி இடத்தில் எஸ்.கே. நாயர் நியமிக்கப்பட்டார். அவர் 'ஞான் கண்ட சாகித்திய காரன்மார்' என்ற புத்தகத்தில் தனக்கும் எம்.பி. பாலுக்குமிடையே ஏற்பட்ட முதல் சந்திப்பை விவரிக்கிறார். ''எம்.பி. பாலின் வரவேற்பு அறை நன்கு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. புத்தகங்கள் அலமாரியில் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தனக்கு விருப்பமான சாய்வு நாற்காலியில் அமர்ந்துள்ள எம்.பி.பாலை கவருவதற்காக தன் கல்வித் தகுதிகளைபற்றிய விவரத்தை ஆங்கிலத்தில் உரைத்தார். அதற்கு மறுமொழி மலையாளத்தில் கூறியதை கண்டு எஸ்.கே. நாயர் திகைப்புற்றார். ''திரு. நாயர் அவர்களே நீங்கள் இந்த கல்லூரியில் சேரலாம். இக்கல்லூரி மாணவர்கள் பணிந்து போகும் ஒரு சாதாரண கூட்டமல்ல' என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும்,

அவர்கள் மீது மற்ற கல்லூரிகளில் எடுப்பதுபோல் ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது. நீங்கள் அவர்களை எப்படி நல்லமுறையில் வழிநடத்தி செல்வீர்கள் என்பது நீங்கள்தான் கூற வேண்டும்'' என்று மலையாளத்தில் மறுமொழி கூறினார். எம்.பி.பாலின் இவ்வார்த்தைகள் அக்கால தனியார் டுடோரியல் கல்லூரிகளின் சுயத்தன்மையை நன்கு விளக்கும். எம்.பி.பாலுடன் சேர்ந்து பணியாற்றுவதையே ஒரு பாக்கியமாக கருதிய எஸ்.கே. நாயர் அக்கல்லூரியில் சேர்வது என்று முடிவெடுத்தார். தீர்த்து வைக்கமுடியாத கல்லூரி விவகாரங்கள் என்று எம்.பி.பாலுக்கு எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை. தன் கல்லூரியின் தரத்திற்கு தங்களை உயர்த்திக் கொள்ள முடியாத மாணவர் கல்லூரியில் இருந்து உடனடியாக வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். குறும்புத்தனம் செய்வதற்காக சேர்ந்த விஷமக்கார மாணவர்கள் சந்தர்ப்பத்தை வேண்டி காத்திருந்தனர். ஆனால் தீயவர்கள் தங்கள் திறமையை காட்டுவதற்கு பொருந்தாத இடமாக இருப்பதைக் கண்டு அக்கல்லூரியை விட்டு யாருக்கும் தெரியாமல் வெளி யேறினார்கள். பொது மக்கள் எம்.பி.பாலின் கல்லூரியில் படிப்பது பெருமையாக எண்ணினார்கள். இக்கௌரவமே மாணவர்களின் கடந்தகால தோல்விக்கறைகளை களைவதற்கு மூலக் காரணமாகியது.

தன் கண்களில் படும் எந்த ஒரு நல்ல புத்தகமாயினும், அது நாடகம், நாவல் விமர்சனம் கவிதை எது ஆகட்டும் அதை மிக வேகமாக படிப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவராக இருந்தார். சேக்ஸ்பியர், கீட்ஸ் போன்ற இலக்கிய கர்த்தாக்களை மிகவும் மானசீகமாக விரும்பினார். ஆனால் பெல்லக் (Belloc) செஸ்டர்டன் (Chesterton) ஜெரோம் (Jerome) வுட்ஹவுஸ் (Wodhouse) போன்ற கதாசிரியர்கள், நகைச்சுவை எழுத்தாளர் களின் படைப்புகளையும் விரும்பினார். கானன்டாயில், செஸ்டர்டன் ஆகியோர்களுடைய துப்பறியும் நாவல்கள் அவரை மகிழ்வித்தன. தான் பெற்ற இலக்கிய இன்பங்களை தன் நண்பர்கள், சிறந்த மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வார். அவர் செயின்ட் பெர்ச்மேன் கல்லூரியில் சேக்ஸ்பியரின் நாடகங்களை அரங்கேற்று வதில் முதன் முயற்சியை எடுத்துக் கொண்டார். மேக்பெத் நாடகத்தில் அவர் மெக்டெப் (Macduff) ஆக நடித்தார். வீட்டில் தன் குழந்தைகளுடன் சேர்ந்து சேக்ஸ்பியர் நாடககாட்சிகளில் சிலவற்றை நடிப்பதில் அவர் பெரும் மகிழ்ச்சி அடைவார். அவருக்கு

மிகவும் பிடித்தமான பாத்திரம் ஒத்தல்லோ (Othello) ஆகும். சேக்ஸ்பியர் மற்றும் இதர ஆங்கில எழுத்தாளர்களைப் பற்றிய அவருடைய சொற்பொழிவுகள், அக்கர்த்தாக்களுக்கு படைப்புகளின் மூலமாக ஒரு முழுமையான சிறப்புத் தன்மையை ஏற்படுத்துவார். அவர் சொற்பொழிவாற்றுகையில் மாணவர்கள் தங்களை மறந்து அவர் பேச்சில் லயித்து போவார்கள். அவருடைய ஆங்கிலம் அப்பழுக்கற்ற தூய்மையானது. அவர் சொல்லக் கருதிய ஆழ்ந்த கருத்தும், பொருத்தமான முகபாவனையும், கணீரென்ற குரலும் பெற்றிருந்தார். அவரிடம் மனதை பறிகொடுத்தவர்களுக்கு அவர் ஒரு வரலாற்று நாயகராக (Legend) விளங்கினார். நாஸ்திகர்களுக்கு நெருங்க முடியாத புனித மலையாக விளங்கினார். ஆனால் சூரியனைப் போல் எல்லோருக்கும் தொடர்ந்து தன் அருளைப் பொழிந்து கொண்டிருந்தார். மாணவர்களின் பால் அவர் எப்பொழுதும், எந்நிலையிலும் அக்கரையுள்ளவராக இருந்தார்.

தன்னுடைய ஆசிரியர் குழுவில் தொடர்ந்து மிகச் சிறப்பானவர்களையே பெற்றிருந்ததால் எம்.பி.பால் ஒருவகையில் அதிர்ஷ்டம் வாய்ந்தவர் என்று சொல்லலாம். திரு. சி. ஜே. தாமஸ் ஒரு திறமை வாய்ந்த இளம் ஆசிரியர் அவர் குழுவில் இருந்தார். இவ்விளம் ஆசிரியரை பணியில் நியமிக்கும்போது இவர் தன் மூத்த மகளின் அன்புக்குப் பாத்திரமாவார் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை எம்.பி. பால். தாமஸ் ஒரு திறமை வாய்ந்த கலைஞர், சிறந்த நாடக ஆசிரியர், சுறுசுறுப்பான வாலிபர். எம்.பி.பாலைப் போன்று அவரும் சுதந்தரமனப்பான்மை உள்ளவர். ஜாகோபின் சிரியன் கிருஸ்து சமுகத்தை சேர்ந்த ஒரு பாதிரியின் மகனாக பிறந்தார். ரோமன் கத்தோலிக்க சர்ச்சில் இருந்து மாறுபட்டு விளங்கிய (Pan-orthadox) கிருஸ்துவ சமூகத்தை சேர்ந்த அவர் தந்தை தன் மகன் தாமஸை ஒரு பாதிரியாக்குவதற்கு தகுந்தவாறு வளர்த்து வந்தார். ஆனால் காலப்போக்கில் தாமஸ் பாதிரியாவதற்கு மறுத்ததுமல்லாமல் அவர் தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என பிரகடனப்படுத்திக் கொண்டார். சில வருடங் களுக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியின் தொடர்பை அறுத்துக் கொண்டு ஜனநாயகத்தில் நம்பிக்கை வைக்கத் தொடங்கினார். எம்.பி. பால் திறமை வாய்ந்த சிறந்த வாலிபர்களின் தனித் தன்மையை பாராட்டுவதில் ஒருபோதும் சளைத்தவரல்ல. ஆனால் எம்.பி. பால் தன் மூத்த மகளின் கரம் பிடிப்பதற்கு தாமஸ் தகுந்தவர் என்று கருதவில்லை. தன் மகளை விட பனிரெண்டு வயது

மூத்தவரான தாமஸ் தன் மகளின் மனதைக் கெடுத்துவிட்டார் என்றே கருதினார்.

இளமையில் துணையை தேர்தெடுப்பதில் தான் சுதந்திரமாக செயல்பட்ட உரிமையை தாம் தாமஸுக்கு தர மறுப்பது எம்.பி.பாலின் மனச்சாட்சியை உறுத்தியது. எப்படி யோசித்தாலும் தன் மகளின் தேர்வு பொறுப்பான பெண்ணின் முதிர்ந்த அறிவுள்ள தேர்வாக அவரால் நினைத்து பார்க்க முடியவில்லை. அவ்விரு வரும் காம வெறியில் மூழ்கி இருப்பதாக கருதினார். அத்தீய செய்கையில் இருந்து தன் மகளை காப்பாற்றுவது பெற்றோர்களின் கடமையல்லவா? என்று கருதினார். ஆனால் ஒரு விஷயத்தில் அவர் உறுதியாக இருந்தார். இவ்விருவரும் திருமணம் செய்து கொள்வதாக இருந்தால் அவர்கள் தன் ஆசியுடன் தான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று கருதினார். அவ்வாறே அவர்களுக்கு திருமணம் நடந்தேறியது. திரு. சி. ஜே. தாமஸ் தொடர்ந்து எம்.பி.பாலின் ஆசிரியர் குழுவில் பணியாற்றி வந்தார்.

எம்.பி. பால் இளம் தலைமுறையினருக்கு தனிக் கல்வி புகட்டுவதில் முதன்மையானவராக விளங்கினார். சாந்தி நிகேதனை உருவாக்கிய ரவீந்திரநாத் தாகூரின் கொள்கையையும் அவருடைய சுய கல்வி முறையையும், அடிப்படையாக கொண்டு தனக்கென்று ஒரு கல்வி முறையை வகுத்துக் கொண்டார். ஒவ்வொரு மாணவனும் தனக்கு உரித்தான திறமையை வளர்த்துக் கொள்ளத் தகுந்த கல்வியை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இசை ஞானம் உள்ளவர்கள் இசைக் கல்லூரியில் சேர வேண்டும். கலைஞர்கள் நுட்பகலைக் கல்லூரியில் (Fine Arts College) சேர வேண்டும். கல்வி அறிவு எல்லோருக்கும் சேரும்படி இருக்க வேண்டும். எவ்வித பாகுபாடுமின்றி, இளம் மாணவர்கள் வாலிபர்கள் போன்றவர்கள் ஒன்றாகக் கூடி தங்கள் உள்ளங்களில் கிளர்ந்தெழும் எண்ணங்களை பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று கருதினார். எம்.பி. பால் குழந்தைகளுக்கு முழு சுதந்திரம் அளித்து வந்தார். மூட நம்பிக்கைகள் இக்காலத்திற்கு ஒவ்வாத, தொன்று தொட்டு நிலவி வரும் சில பழக்க வழக்கங்களில் இருந்து சிறுவர்களை விடுவிப்பதில் அவர் மிக உறுதியாக இருந்தார். சுய கல்விமுறை (Liberal Education) என்பது மனித தன்மையின் முக்கியத்துவத்தை போதிப்பது மட்டுமின்றி, மூட நம்பிக்கைகள், பரம்பரை பழக்க வழக்கங்களின் கட்டு திட்டங்களில் இருந்து

விடுதலை பெறுவதும் ஆகும். கத்தோலிக்க சர்ச்சில் உள்ள பக்தர்கள், பலர் பிஷப்பின் மீது சுமத்திய வழக்குகளுக்காக எம்.பி.பால் தண்டிக்கப்படுவார் என்று உறுதியாக நம்பினார்கள். திருமதி எம்.பி. பால் உதாரணமாக ஒரு நிகழ்ச்சியை அதாவது எம்.பி. பாலின் செங்கணாசேரியில் உள்ள எஸ்.பி. கல்லூரியில் இருந்து விலகிய போது அவர் துன்பத்திற்கு ஆளாவார் என்று ஆவலோடு காத்திருந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

ஒரு சிலரைப் பற்றி கூறுகிறார்:-

அவ்வருடத்தில் திருமதி எம்.பி.பால் ஒரு எழுத்தரையும், பணியாளரையும் ஒரு படகில் செப்டம்பர் தேர்விற்கு எழுதும் மாணவர்களின் தேர்வு கட்டணத் தொகையுடன் ஆலப்புழைக்கு அனுப்பினார். நடுவழியில் படகு கவிழ்ந்து பலர் மூழ்கினர். சிலர் தப்பினார்கள். தப்பினவர்களில் எழுத்தரும் பியூனும் இருந்தனர். தேர்விற்கு குறிப்பிட்ட நேரத்தில் பணம் செலுத்தி ரசீது பெறப் பட்டது. இதைப் பற்றி திருமதி பால் தன் கணவரிடம் தெரிவித்த போது அவர் கூறினார், ''இது பிஷப்பிற்கு எதிராக நான் செய்த கிளர்ச்சிக்கு கடவுள் அளித்த தண்டனை என்று கூறியிருப்பார்கள். ஆனால் பார்த்தாயா? இந்நிகழ்ச்சி கடவுள் என் பக்கம் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது'' என்றார். எம்.பி.பால் உண்மையை நம்பினார். உண்மையே கடவுளாகும். தன் குழந்தைகளும், மாணவர்களும் உண்மையின் வழி நடக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் புரட்சிகரமான எண்ணங்களை உடையவராக இருந்தாலும் நாட்டு விடுதலைக்கு பிறகு நடைபெற்ற மாணவ வேலை நிறுத்தங்களை அவர் ஆதரிக்கவில்லை. அரசியல் வாதிகளின் பொம்மைகளாக மாணவர்கள் இருக்கக்கூடாது. அக்கால கல்வி முறைகள் ஆங்கில ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டன. நன்மையாக இருந்தாலும், அது தனக்கே உரித்தான சில குறைபாடுகளையும் கொண்டிருந்தது. புதிய இந்தியாவிற்கு தேவையான கல்வி முறையை மாற்றியமைக்க, முன்னேற்பாடான தேவையான திட்டங்கள் தீட்டுவதற்கு முயற்சிகள், சுதந்தர இந்தியாவில் செய்யப்பட்டன. ஆனால் குறிக்கோளற்ற காலமறியா மாணவ வேலை நிறுத்தங்கள் மாணவர்களின் ஏமாற்றங்களை அதிகரிக்க செய்வதுமல்லாமல் தேசத்திற்கு பெரும் நன்மை எதையும் ஏற்படுத்தியதில்லை.

எம்.பி. பால் பொது தன்மை பொருந்திய உயர்கல்வியை தன்

குறிக்கோளாக கொண்டிருந்தார். அக்கொள்கை 'நியுமென்' எண்ணத்துடன் ஒத்துப்போவதாயிருந்தாலும் கடவுள் தன்மைக்கு பதிலாக மனிதத்தன்மையை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார் எம்.பி.பால்.

5. மனித நேயம்

மக்கள் எம்.பி. பாலை மதிப்புடனும் மரியாதையுடனும் நினைவு கூர்ந்தனர். கூச்சு சுபாவமுள்ள அவர் அறிமுகமில்லாதவர்களிடம் பழகுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டார். மிகவும் குறைவாக பேசுவார். செய்திகள் நிறைந்து இருக்கும். விருந்தோம்புதலில் பண்புடன் நடந்து கொள்வார். விருந்தினர்களை தங்கள் சொந்த வீட்டில் இருக்கிறோம் என்று நினைக்கும்படி நடந்துக்கொள்வார். பெண்களிடம் மரியாதையுடன் பழகுவார். சிறிது நேரம் பேசிவிட்டு அவர்களை உபசரிக்கும் பொறுப்பினைத் தன் மனைவியிடம் விட்டு விடுவார். அவருக்கு இலக்கிய நண்பர்கள் ஏராளமாக இருந்தனர். அவர்கள் எம்.பி. பாலின் வீட்டிற்கு எந்நேரத்திலும் அச்சமின்றி வருகை புரிவதற்கு சுதந்திரம் பெற்றிருந்தனர்.

அவர் இரவு பத்து மணிக்கு உறங்கச் சென்று காலை 4.30 மணிக்கு விழித்தெழுவார். அருகில் உள்ள பிளாஸ்கில் இருந்து காப்பியை அருந்திவிட்டு படிக்கத் தொடங்குவார். தன் மனைவியை வேண்டும் என்றே எழுப்பி வேடிக்கையாக பேசுவதில் சிறிது நேரம் கழிப்பார். மாலையில் குளிப்பதற்கு முன்பு தன் மனைவி மேரியின் கையினால் தலை, உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பார். சுவையுள்ள உணவுகளை விரும்பி உண்பார். உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்ததா இல்லையா என்று சிறிதும் யோசிக்காமல் எல்லா வகையான ருசியுள்ள உணவு வகைகளை விரும்பி உண்பார். எவ்வளவுதான் சோர்ந்து இருந்தாலும் தனக்குரிய வேலைகளை காலந்தாழ்த்தாமல் முடிப்பதில் தவறியதில்லை. எந்தக் கவலையும், அவர் தூக்கத்தை தடுத்து நிறுத்தியதில்லை. உண்மையான, அன்புமிக்க கணவனாக, பாசமுள்ள தந்தையாக விளங்கினார். சிறுவர்களை வளர்ப்பதற்கு சத்துள்ள உணவும், அன்பும் முக்கியமே தவிர பணம் அவசியமில்லை என்று கருதினார். தன் குழந்தைகள் சுய முயற்ச்சியில் அவர்களுக்கேற்ற சொந்த வழியில் வளர்ந்து முதிர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்று விரும்பினார். இசையில் நன்கு திறமை பெற்று இருந்த தன் மகளை இசைக் கல்லூரியில் சேர்க்க விரும்பினார். கல்வி

வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குரிய வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவினாலும், அதைவிட முக்கியமாக ஒருவருடைய திறமையும் அறிவையும் வளர்க்க கல்வி மிக மிக அவசியமாகும்.

அவர் ஆசிரியராகப் பணிபுரியும் காலத்திலிருந்தே தன்னுடைய விடுமுறைக் காலத்தையும், வேலை நாட்களையும் எவ்வாறு, எங்கு கழிக்க வேண்டும் என்று ஒரு வறைமுறையைப் பின் பற்றி வந்தார். வேலை நாட்களில் திருச்சூர் செங்கணாச் சேரி, எர்ணாக்குளம் போன்ற ஊர்களில் தம் நேரத்தை செலவழிப்பது வழக்கம். விடுமுறைக் காலங்களில் ஆலுவே (Alway) அல்லது புத்தன் பள்ளியில் கழிப்பார். ஒரு சமயம் ஆல்வேயில் உள்ள பெரியார் நதியில் பெரிய படகு வீட்டில் தன் குடும்பத்துடன் தங்கி இருந்தார். அவ்வாறு திறந்த வெளியில் ஒரு சில நாட்கள் எவ்வித பொறுப்பும், கவலையும் இன்றி காலம் கழிப்பது உணர்ச்சி மிக்க அனுபவ மாகும். கோடைகாலத்தில் பெரியார் நதி நீர் உடலுக்கு ஒரு குளிர்ச்சியையும், மேற்கிலிருந்து வீசும் தென்றல் காற்று மனத்திற்கு ஒரு அமைதியையும் ஏற்படுத்தும். பெரியார் நதி பாய்வதால் ஆல்வே கோடைகாலச் சுற்றுலா மையமாகத் திகழ்ந்தது. மற்ற செல்வந்தர்களைப்போல் எம்.பி. பாலும், கோடை காலத்தில் ஆல்வேயில் தங்குவது வழக்கம். எம்.பி. பாலும் குட்டிப்புழ கிருஷ்ணப் பிள்ளையும் சம வயதினர். திருமதி. பால் தன் குழந்தைகளுடன் ஒரு கோடைக்காலத்தில் ஆல்வேயில் உள்ள குட்டி கிருஷ்ண பிள்ளை வீட்டின் பக்கத்து வீட்டில் தங்கி இருந்த அனுபவங்களை நினைவு கூறுவார். எம்.பி. பால் இல்லாத சமயங்களில் அவர் குழந்தைகளுக்கு குட்டிப்புழ கிருஷ்ண பிள்ளை உண்மையான மாமாவாகத் திகழ்ந்தார்.

புத்தன்பள்ளியில் இருக்கும்போது எம்.பி.பால் குடியானவராக மாறிவிடுவார். வீட்டை சுத்தம் செய்வதில் அழகு படுத்துவதில் மற்றவர்ளுடன் சேர்ந்து சுறுசுறுப்புடன் ஈடுபடுவார். இந்நாட்களில் அலுவலக வேலைகளில் ஈடுபட மாட்டார். தனக்கு வரும் அலுவலக கடிதங்களுக்கு கூடப் பதில் எழுத முற்பட மாட்டார். ஸ்டீபன் லீகாக் அல்லது உட் ஹவுஸ் (Stephen Leacock or Wodhouse) போன்ற சிறு நாவல்களைப் படிப்பார். பண்ணை வேலைகளை விட தோட்ட வேலைகளில் சிறப்பாக ஈடுபடுவார். திருவனந்தபுரத்தில் ஒரு வாடகை வீட்டில் இருக்கும்போது வீட்டின் முற்றத்தில் ஒரு சிறு

தோட்டத்தை உருவாக்கி அதை நன்கு பராமரித்து வந்ததை இன்றும் மேரி நினைவு கூறுகிறார்.

எம்.பி.பால் வீட்டு அறைகளைச் சுத்தமாக அழகாக வைத்திருக்க வேண்டும் என்பதில் முனைப்புடன் இருந்தார். புத்தகங்களை அதிகமாகப் பயன் படுத்தினாலும் மேஜையின் மீதோ, அறைகளிலோ சிதறிக் கிடக்கும் படி விடுவதில்லை. தான் விரும்பும் ஆடும் நாற்காலியில் அமர்ந்து புகை பிடித்துக் கொண்டு, சாம்பலை ஆஷ் டிரேயில் தட்டிக் கொண்டு படிப்பார். மதுவகைகளை விரும்பி அருந்துவார். தன் நண்பர்களுடன் சேர்ந்து அதிகமாக குடித்து குடிபோதையில் உச்ச நிலையில் இருப்பார். அவர் 1950 ஆம் ஆண்டு வீட்டை மதுவிலக்கு சட்டம் அமுலில் இருந்த திருவனந்தபுரத்திற்கு மாற்றிக் கொண்டபோது அச்சட்டத்தை மீறாமல் மது அருந்துவதை நிறுத்திக் கொண்டார்.

எம்.பி. பால் நகைசுவை ததும்ப பேசுவார். சாதுரியமாகப் பேசாவிட்டாலும், பேச்சு எப்பொழுதும் கருத்தோடு கூடியதாக விளங்கும். விரும்பினால் சுடுசொல் சேர்த்து பரிகசித்துப் பேசுவார். அவருடைய பேச்சு அவர் எழுத்தைப் போன்று சக்தி வாய்ந்ததாக உறுதியாக இருக்கும். பால்ய நண்பர்கள் பலருடன் சேர்ந்து பொழுது போக்குவதை பெரிதும் விரும்பினார். நண்பர் குஞ்சைப்பு குடிபோதையில் தள்ளாடிக் கொண்டு விளையாட்டாக பேசிக் கொண்டும், நடித்துக் கொண்டும், இன்பமாக பொழுது போக்கியதை திருமதி எம்.பி.பால் இன்றும் நினைவு கூறுகிறார். குஞ்சைப்பு பல்வேறு பொதுக் கூட்டப் பேச்சாளர்களைப் போல் பேசி நடிப்பார். அவருடைய தலைமை உரை இவ்வாறு ஆரம்பிக்கும். 'பெரியோர்களே, தாய்மார்களே' என்று ஆரம்பித்ததுமே குடும்பமே கொல்லென்று சிரிப்பில் மூழ்கும். கர்நாடக சங்கீதத்தை விரும்பிக் கேட்பார். விலை உயர்ந்த இசைத் தட்டுகளை திரட்டி நூலகமாக வைத்திருந்தார். இரவு நேர உணவிற்குப்பின் மணிக்கணக்காக கர்நாடக இசையை கேட்பது வழக்கம். அவர் சென்னையில் கேரளாவைச் சேர்ந்த மாமன் பாகவதர் என்ற புகழ் பெற்ற இசை மேதையைச் சந்திக்க நேர்ந்தது. சிரியன் கிருஸ்துவ மதத்தைச் சார்ந்த அவர் சிறு வயதிலேயே இசையின் மேல் உள்ள மோகத்தால் சொந்த கிராமத்தைவிட்டு தஞ்சாவூர் அடைந்து, புகழ்பெற்ற இசைமேதைகளிடம் சேவை செய்து கர்நாடக இசையைப் பயின்றார். இசையில் தேர்ச்சி பெற்ற பின் இந்தியா முழுவதும் பிரயாணம் செய்து தன் திறமையை காட்டி பல அரசர்,

அரசிகளிடம் தங்க பதக்கங்களைப் பெற்றார். தன் சொந்த மாநிலமான கேரளாவில் அவரைச் சார்ந்தவர்கள் அவரை ஆதரிப்பது மிக குறைவாகவே இருந்தது. எம்.பி. பால் வீட்டிற்கு சென்று சில நாட்கள் தங்குவது வழக்கம். எம்.பி. பால் சிறந்த ராகங்களை அவரைப் பாடச் சொல்லி ரசிப்பது உண்டு. ''மாமன் பாகவதர் ஒரு சிறந்த இசை மேதை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவருடைய துரதிருஷ்டம் அவர் இசை ஞானத்தை மதிக்கத் தவறிய சமுகத்தில் பிறந்ததே ஆகும்.'' என்று எம்.பி.பால் குறிப்பிடுவார்.

அக்காலத்தில் கேரளாவில் உள்ள சிரியன் கிருஸ்துவ மதத்தினர் கல்வியிலும் மற்றும் பல துறைகளிலும் மிகவும் முன்னேறி இருந்தனர். ஆனால் வருடக் கணக்கில் அவர்கள் இந்தியக்கலை, இசை, இலக்கியம் போன்ற துறைகளில் ஈடுபாடின்றி விலகி இருந்தனர். எங்கே இந்துமத செல்வாக்கினால் தாங்கள் கிருஸ்துவ மதத்தின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கை தகர்ந்து விடுமோ என்ற அச்சமே அதற்கு முக்கியகாரணமாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் கிருஸ்துவ மத போதகர்கள் நவீன மலையாள உரை நடை வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தனர். அவர்கள் மலையாள அகராதி, இலக்கணம் ஆகிய இரண்டில் மட்டுமே தங்கள் கவனத்தை செலுத்துவதுடன் நிறுத்திக் கொண்டனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இருந்து நிலைமை முன்னேற்றம் அடைய ஆரம்பித்தது. கிருஸ்துவ இலக்கிய வாதிகள் பலவித இலக்கியங்களை உருவாக்குவதில் வெற்றிகரமாக ஈடுபட ஆரம்பித்தனர். இக்காலகட்டத்தில்தான் ஒரு சில கிருஸ்துவர்கள் கர்நாடக இசையையும், கோயில் பண்பாட்டையும், பாராட்டுவதற்கு முன் வந்தனர். மற்ற கிருஸ்துவர்களைவிட எம்.பி. பால் எதிர்கால இந்தியாவைப் பற்றி நன்கு புரிந்து வைத்திருந்தார். கிருஸ்துவர்கள் இந்திய பண்பாட்டில் மூழ்கித் திளைத்த மக்களிடம் இருந்து எப்பொழுதும் விலகி இருக்க முடியாது என்று தெள்ளத் தெளிவாக உணர்ந்திருந்தார். உயர்ந்த பண்பாட்டிலும், பாரம்பரியத்திலும் சிறந்திருந்த பழம் பெரும் பாரதநாடு தங்களுடையது என்று உரிமை கொண்டாடுவதற்கும், அதன் பழமை - புதுமை இரண்டும் கலந்த ஒரு நவீன பண்பாட்டு வளர்ச்சிக்குத் தங்கள் பங்கை செலுத்து வதற்கும் முன் வர வேண்டும் என்று விரும்பினார்.

தான் உறுப்பினராக உள்ள சிரியன் கத்தோலிக்க இயக்கத்தின் பிரச்சார முழக்கத்திற்கு அவர் ஒத்துப் போக மறுத்தது உண்மை.

ஆனால் தன் இளமைக்காலத்தில் உண்மையான கிருஸ்துவனாக இருந்து, காலப்போக்கில் கிருஸ்துவ ஆலயங்களில் நடை பெறும் மதச் சடங்குகளில் நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தார். ஆனால் பரம்பரையாக சிரியன் கிருஸ்துவ மதத்தின் பண்பாட்டில் இருந்து தனக்குள்ள உரிமையை அவர் மறுக்கவில்லை.

தன்னுடைய கல்லூரியின் மூலமாக போதுமான அளவு பணம் ஈட்டினாலும் தான் ஆங்கில பேராசிரியராக பொறுப் பேற்ற பிறகும், போதிய தகுதிகள் தேவையில்லா விட்டாலும், தன்னைச் சார்ந்த சமூகத்தின் முக்கியமான கத்தோலிக்க அலுவலகத்தில் பணிபுரிவதற் காக வந்த அழைப்பை அவர் ஏற்றார். இரண்டாம் முறை செங்கணா சேரியில் உள்ள எ.பி. கல்லூரியில் இருந்து அழைப்பு வந்தபோது அவர் மனைவியிடம் கூறியதாவது ''மறுபடியும் கிருஸ்துவ மத இயக்கத்தில் சேர்வதற்கு ஒரு இனிமையான பழிவாங்குவதற்கோ அல்லது கிருஸ்துவ மதத்தில் தனக்கு உள்ள புனிதமான இலட்சியத் திற்காகவோ என்று என்னால் கூற முடியவில்லை''. அவர் மறுபடியும் கிருஸ்துவ இயக்கத்தில் பணிபுரிய இணங்கினாலும் தன் சுயத் தன்மையில் இருந்து விலகிபோகத் தயாராக இல்லை. 1947 ஆம் ஆண்டு அவர் எ.பி. கல்லூரியில் இருந்து இரண்டாம் முறை விலகியபோது மறுபடியும் கத்தோலிக்க ஸ்தாபணத்தில் பணி புரிவோம் என்று கனவிலும் கருதவில்லை. ஆனால் 1950ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் உள்ள ஆர்ச்பிஷப்பிடம் இருந்து தந்தி மூலமாக வந்த அழைப்பை சுட்டிக் காட்டித் தன் மனைவியிடம் கூறியதாவது, ''இது உண்மையிலேயே முதல் தரமான தந்திரமாகும். உடல்நிலை அனுமதித்திருந்திருந்தால் ஆர்ச்பிஷப்பே நேரிடையாக வந்திருந்து என்னை அழைத்திருப்பார் போலிருக்கிறதே!'' என்று குறிப்பிடு கிறார். ஆனால் உடனடியாக தன் விருப்பத்தை தெரிவித்தது பழிவாங்குவதற்கோ அல்லது இலட்சியத்திற்காகவோ அல்ல. தான் சார்ந்த சமுகத்திற்காக பணிபுரிய வேண்டும் என்ற ஒரு பொறுப் புணர்ச்சியே காரணமாகும்.

எம்.பி.பாலின் சொந்த சகோதரன் ஒரு கத்தோலிக்க பாதிரி ஆவார். மேலும் ஈபன், வில்லியம் பெனிடிக்ட் போன்ற பாதிரியார் களை நண்பர்களாகப் பெற்றிருந்தார். கிருஸ்துவ வழிபாடுகளில் எல்லாம் கலந்து கொண்டார். ஏசு கிருஸ்துவுக்கு ஓர் உயர்ந்த ஸ்தானத்தை அளித்து பூஜித்து வந்தார். ஆனால் குருமார்களிடம் ஒருவர் தான் செய்த பாவங்களை சொல்வதால் பாவ மன்னிப்பு

பெறுவர் என்ற நம்பிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்தார். குருமார் களிடம் பாவமன்னிப்பு பெறாத கிருஸ்துவர்கள் தெய்வ சன்னிதானத்தில் படைக்கப்படும் விருந்தில் பங்கு கொள்ள முடியாது. அவ்வாறு பாவ மன்னிப்பு பெற தவறியவர்களுக்கு கிஸ்துவ மத உறுப்பினர்களுக்கு உண்டான எல்லாவித உரிமைகளும் மறுக்கப்பட்டன. இதனால்தான் எம்.பி. பால் மரணத்திற்குப் பிறகு அவருடைய பூத உடலை கிருஸ்துவ தேவாலயத்திற்குள் மத சடங்குகளுடன் புதைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என தெரிகிறது.

ஆஸ்திகத்தின் அவசியம் (Necessity of Theismi) என்ற நூலை உருவாக்கிய எம்.பி. பால் ஒரு நாஸ்திகரா? அவர் ஏசு கிருஸ்துவின் உயிர் தியாகத்தை மறுத்தாரா? தேவாலயங்களில் நடைபெறும் சடங்குகளின் மீது நம்பிக்கையின்மை காரணமா? அல்லது மற்றவர்களை விட எந்த விதத்திலும் உயர்ந்தவர்கள் என்று கருதப்படாத குருமார்களிடம் நம்பிக்கை வைக்க தவறியதாலா? எதனால் அவருடைய உடல் கிருஸ்துவ தேவலாயத்தில் மதச் சடங்குகளுடன் புதைப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று எண்ணும்போது புரியாத புதிராக இருக்கிறது. மத குருமார்களிடம் சிறிது வளைந்து கொடுத்திருந்தால் முண்டச் சேரியைப் போல் எம்.பி. பாலும் தன் சமூக பழக்க வழக்கங்களை சில தேவையற்ற நடைமுறைகளைத் தவிர கடைப்பிடிப்பதற்கு கட்டாயமாக ஒத்துப் போயிருப்பார் என்பது சில ஞானம் பெற்ற கிருஸ்துவ அறிவாளிகளால் கருதப்பட்டது.

எம்.பி. பாலின் மனம் முழுவதும் தேவாலயத்தில் உள்ள கடவுளின் மீது செல்லாதிருந்ததால் அவர் மதப்பற்றற்ற மாமன் (Mamman) கூற்றை ஏன் முழு மூச்சுடன் எதிர்க்க வேண்டும். அவர் கூறுகிறார் ''பணத்தின் ஆதிக்கத்தில் உட்படும் போதெல்லாம் அது மனிதனிடம் இருந்து மனிதத்தன்மையை விரட்டுகிறது. பணம் வரும் போகும், ஆனால் மனிதன் மனிதனாக இருக்க வேண்டும்.'' எம்.பி.பால் ஊதாரித்தனமாக செலவழித்தார். ஒரு சில ஏக்கர் பரப்பளவுள்ள தென்னந் தோப்பை விலைக்கு வாங்குவதற்கு போதிய பணத்தை சேர்த்தார். தன்னுடைய பெரிய குடும்பத்திற்கு, ஒரு சிறு தொகையான எழுநூறு ரூபாய்க்கு தன்னை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் காப்பீடு செய்து கொண்டார். பணம் பயன் படுத்துவதற்கே அல்லாமல் அதை ஒரு போதும் பூஜிக்கத்தக்க

பொருளாக கருதக் கூடாது. ஒரு தியேட்டரில் கடைசி காட்சியை காணச் செல்லும்போது அவருடைய பர்சு களவாடப் பட்டது. அப்போது அவர் பணம் போய்விட்டதே என்று வருந்தாமல் ஒரு நல்ல சினிமாவை காணத் தவறவிட்டோமோ என்று வருந்தினர்.

மேரி சிறந்த இல்லத்தரசியாக விளங்கினார். வீட்டுக் காரியங்களை மிகத்திறமையாக நிர்வகித்து வந்தார். விருந் தோம்புவதும், பிள்ளைகளை பேணுவதும் மேரியின் கடமையாகும். எப்பொழுதோ ஒரு சில முறைதான் தன் கணவரின் கோபத்திற்கு ஆளாகி இருக்கிறார். ஆல்வேயில் (Alwaye) பெரியார் நதியில் படகு வீட்டில் இருந்தபோது விருந்தினராக வந்த சைவ உணவு உண்பவரான கொச்சு கோவிந்த நாயருக்கு மீன் உணவு தயாரித்த போது எம்.பி.பால் மிகவும் வருத்தம் அடைந்தார் என்று மேரி இன்றும் நினைவு கூர்கிறார். மேரி மற்றவர்களிடம் எச்சூழ்நிலையிலும் சத்தம் போட்டு பேசுவதையோ, வசைமாரி பொழிவதையோ எம்.பி.பால் விரும்ப மாட்டார். எப்பொழுதும் வீட்டில் அமைதி நிலவ வேண்டும். சிறுவர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்ற அவருடைய கொள்கைக்கு ஒரு பெரிய சோதனையாக அமைந்தது. அவருடைய மகள் ரோசி தன் வாழ்க்கை துணையாக சி.ஜே. தாமஸை தேர்ந்தெடுத்த நிகழ்ச்சி - வெகுநாள் தாமதத்திற்கு, தயக்கத்திற்கு பின் தன் மகளின் ஆசைக்கு இசைவு தெரிவித்தார்.

திருமதி. பால் எழுதுகிறார், ''எம்.பி. பாலின் கண்களில் இரண்டே இரண்டு முறைதான் நீர் தளும்பியது. தன்னுடைய மூத்த சகோதரனும், மூன்றாம் மகளும் ஒரே நேரத்தில் விஷ ஜுரத்தால் மிக மோசமாக பீடிக்கப்பட்டபோது ஒரு முறையும் மகாத்மா காந்தி இறந்த செய்தியை கேள்வியுற்ற போது இரண்டாம் முறையும் அவர் கண்களில் நீர் தளும்பியது. எம்.பி.பாலின் தேக ஆரோக்கியம் குறைந்து கொண்டு வந்தாலும் அவர் உறுதியுடனும் மனத் திடத்துடனும் இருந்தார். அவர் தன் நேர்மை குணத்தையே பலமாக கருதினார். அவர் எண்ணத்திலும் பேச்சிலும் செய்கையிலும் உண்மையாக நடந்து கொண்டார்.

6. புதிய தோற்றங்கள்

ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் மலையாள இலக்கியத்தை திசை திருப்பி ஒரு நல்ல பாதையில் வழி நடத்தி சென்றதும் இல்லாமல் அதன் பரிணாம வளர்ச்சில் ஒரு முக்கியமான பங்கும் வகிக்கிறார் எம். பி.பால். இளம் எழுத்தாளர்களை வழக்கமாக எழுதுவதிலிருந்து விடுபட்டு, சமூக உண்மைகளைப் பற்றி எழுதுவதற்கு ஊக்கம் அளித்தார். இலக்கியத்தின் மேன்மையான குறிக்கோள் மனிதனும், தற்கால சமூக பண்பாட்டில் அவனுடைய இக்கட்டான நிலை பற்றியதே ஆகும்.

எம்.பி.பால் 1930 ஆம் ஆண்டு **நாவல் சாகித்தியம்** என்னும் நூலை பதிப்பித்து தன்னுடைய இருபத்தாறாம் வயதிலேயே இலக்கிய புகழ் பெற்றார். ''அப்பன் தம்புரான் மற்றும் பலரைப் பற்றி கடுமையாக விமர்சித்து தன் நாவல் சாகித்தியத்தில் எழுதியதின் மூலம் விக்கிரகங்களை உடைத்தெறிபவர்களுக்கு கிட்டும் பெரும் புகழைப் போல் புகழ் பெற்றிருப்பார்'', என்று குட்டி கிருஷ்ணமாரர் சரியாக குறிப்பிட்டுள்ளார்.

திருசூரில் 'சம்பளக் குறைப்பின் கதை' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு செயின்ட் தாமஸ் கல்லூரியில் கத்தோலிக்க நிர்வாகத்தினரின் துரோகத்தை வெளிக் கொணர்ந்ததின் மூலம் ஒரு சரித்திரத்தை படைத்தார். அக்கல்லூரியில் இருந்து விலகி சொந்தமாக தனிப்பயிற்சி கல்லூரி ஆரம்பித்ததின் மூலம் முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட மக்களுக்கு ஒரு புரட்சி யாளராக விளங்கினார். ஜி. சங்கர குரூப், ஜோசப் முண்டச்சேரி ஆகிய இருவருடனும் தோழமையுடன் இருக்க விரும்பினார். ஜோசப் முண்டசேரி தன் சுய சரிதையில் எம்.பி. பால் பரிந்துரைக்கும் புத்தகங்களை தான் எவ்வாறு படிப்பது வழக்கம் என்று குறிப் பிட்டுள்ளார். புகழ் பெற்ற இலக்கியக் கர்த்தாவான அப்பன் தம்புரான் தன்னை கடுமையாக விமர்ச்சித்த எம்.பி.பாலை சந்திக்க விரும்பினார். அவ்வாறு சந்தித்தபோது மலையாள மொழியில் தன் புதிய இலக்கியப் படைப்பைப் பற்றி கடுமையாக விமர்ச்சித்து எழுதுவது எந்தவிதத்தில் தகுதியானது என்று கேட்டார். விமர்சகரான எம்.பி.பால் ''எவ்வளவுதான் உயர்ந்த இலக்கியவாதியாக இருந்தாலும் அவருடைய இலக்கிய படைப்பில் உள்ள

உண்மைகளை எந்நேரத்திலும் எடுத்தியம்புவது அவசியம்'' என்று கருத்து தெரிவித்தார்.

சாதாரணமாக அக்கால இளம் எழுத்தாளர்கள் எம்.பி.பாலின் தோழமையை விரும்பினார். அவர் தங்களுக்கு தலைமை பொறுப்பை ஏற்க வேண்டும் என்று எதிர்பார்த்தனர். தேசிய விடுதலை மற்றும் சமூக மறுமலர்ச்சி எண்ணங்களால் தூண்டப் பட்டு, மக்கள் அக்கால சாதி சமய அமைப்பு முறையில் உள்ள பிரபுத்துவ கேரள சமுதாயத்தை பண்பாட்டில் சிறந்த நவீன சமுதாயமாக மாறுவதன் அவசியத்தை உணர ஆரம்பித்தனர். அதன் காரணமாக கேரள சமுதாயம் மெள்ள எழுந்து நடைபோட ஆரம்பித்தது. புதிய படைப்புகள் புதிய எண்ணங்கள் கொண்ட முற்போக்கு இலக்கியங்களை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். கேரளாவில் முற்போக்கு இலக்கிய இயக்கமாக வளர்ந்த ஜீவ சாகித்திய இயக்கத்தின் (Jeevat Sahitya Movement) எழுச்சியை எம்.பி.பால் செங்கனசேரியில் இருக்கும் போதே நன்கு உணர்ந்திருந்தார். மலையாளத்தின் முக்கிய தத்துவவாதியாக படைப்பாளராக திகழ்ந்த அவர் இவ்வியக்கத்தின் பால் ஈர்க்கப் பட்டார். அவருக்கும் அக்காலத்தில் பல பரிசுகளைப்பெற்ற சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள், புலவர்கள் விமர்சகர்கள் போன்ற இலக்கியவாதிகளுடன் ஊக்கமுடன் பழகுவதற்கு பணியாற்றுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. செம்மீன் புத்தகத்தை எழுதிய நாவலாசிரியர் தகழி சிவசங்கரப் பிள்ளை 'ஓடையில் நின்னு' என்ற நாவலை எழுதிய பி. கேசவதேவ், கமனன் என்னும் நூலை இயற்றிய செங்கம்புழ கிருஷ்ண பிள்ளை பால்ய கால சகியின் ஆசிரியரான முகமதுபஷீர், கீடமங்களம் பாப்புகுட்டி, விமர்சகர்களான எஸ். குப்தன் நாயர், ஜோசப் முண்டசேரி, நாவலாசிரியர் ஆர். எஸ். குரூப், போன்றவர்களுடனும் எம்.எஸ். நம்பூதிரிபாட், கி. அச்சுதமேனேன், எம்.எஸ்.தேவதாஸ் போன்ற இடதுசாரி அறிஞர்களுடனும் அவ் வியக்கத்தின் மூலமாக அவருக்கு பரிச்சயம் ஏற்பட்டது. முற்போக்கு இலக்கிய இயக்கம் மிக சுறுசுறுப்பாக இயங்கிய அக்காலங்களில் அவருடைய வீட்டிற்கு பல இலக்கியவாதிகள் வந்த வண்ணம் இருந்தனர். சிலர் அவருடைய ஆறுதலான பேச்சிற்கும், உற்சாகமூட்டுகிற வார்த்தைகளுக்காகவும் வந்தனர். வேறுசிலர் அவருடைய அப்பாவித்தனத்தை அறிய வந்தனர். சிலர் அவருடன் சேர்ந்து இப்புதிய இலக்கிய சங்கத்தின் முக்கிய செயல் திட்டங்களை வகுப்பதற்கு மகாகவி உள்ளூர் வள்ளத்தோள் மற்றும் இக்கவிகளை

பின்பற்றுவோர்களால் உருவாக்கப்பட்டு வியாபித்திருக்கும் இலக்கிய நடைக்கு, எண்ணங்களுக்கு எதிராக ஒரு புரட்சியை நடத்துகின்ற இளம் எழுத்தாளர்களின் செயல் திட்டங்களை வகுப்பதற்காக சிலர் வந்தனர். திருமதி பால் தன் சிறிய வாழ்க்கை சரித்திரத்தில் இக்காலகட்டதில் நடைபெற்ற சிறு நிகழ்ச்சிகளாகிய தம் கணவரின் ஹாஸ்சிய குணத்தையும், நண்பர்களை உபசரிக்கும் முறைகளையும், இளம் எழுத்தாளர்களை தலைமைதாங்கி வழி நடத்தி செல்லும் பாங்கையும் குறிப்பிட்டுள்ளார். ஒரு முறை எம்.பி.பால் ஒரு நீண்ட கதையை அதன் கதாசிரியரை படிக்கச் சொல்லி தன் மனைவியை வலுக்கட்டாயமாக கேட்கச் செய்தார். இதைப்பற்றி வேறொரு சமயத்தில் தன் ஆட்சேபத்தை தெரிவிக்கையில் எம்.பி. பால் ஒருவித குறும்புடன், ''அது உன்னை எழுத்தாளராக பயிற்றுவிப்பதற்காகவே'' என்று சொன்னதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் நம்பூதிரியாரும், தகழியும் அவர் வீட்டில் வழங்கும் புலால் உணவிற்காகவும், மதுபானத்திற்காகவும் சில நேரங்களில் அவசர அவசரமாக வந்தது பற்றியும் குறிப் பிட்டுள்ளார். முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் நூற்றாண்டு விழா முன்னிட்டு கோட்டயத்தில் நடைபெற்ற விழாவின்போது பல இலக்கியவாதிகள் தம் வீட்டிற்கு வருகை தந்ததையும் அவர்களைதன் கணவர் உபசரித்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

எம்.பி.பால் சுயமாக சிந்திப்பவர்களையும், இலக்கிய வாதிகளையும் கவர்ந்து இழுக்கும் காந்த சக்தியை பெற்றிருந்தனர். மாதன் தரகன் போன்ற குறைந்த நேரமே அவருடன் பணியாற்றி யவர்களும், வாழ்நாள் முழுவதும் அவருடன் நண்பர்களாக இருந்தனர். எர்ணாகுளத்தில் இருக்கும்போதுதான் மாதன் தரகன், வைகம் முகமது பஷீரை எம்.பி. பாலுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவருடன் பணியாற்றிய எஸ்.கே. நாயர் எம்.பி. பால் மெச்சுகின்ற நெருங்கிய நண்பராக உருவானார்.

எம்.பி. பால் தொடக்க காலத்தில் **நவகேரளம், சிறுபுஷ்பம்** போன்ற சஞ்சிகைகளுடன் தொடர்பு வைத்திருந்தார். செங்கனாச் சேரியில் இருக்கும்போது வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களின் சிறுகதைகள் உள்ளடக்கிய **கதா வாரிக்க** என்னும் வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். பிரபல நாவலாசிரியரான முத்தாத்து வர்கி அதன் உப பதிப்பாசிரியராக இருந்தார். எர்ணாகுளத்தில் இருக்கும்போது எம்.பி.பால் 'உதயம்' என்னும் மற்றொரு

பத்திரிகையை ஆரம்பித்தார். அதில் ஹாசியம், பரிகாசம் கடுமையான விமர்சனம், நிறைந்த செய்திகள் சிறந்த கட்டுரைகள் போன்ற புதிய அம்சங்களை புகுத்தினார். இப்பத்திரிகைகளுக்கு தலைமை பதிப்பாசிரியராக விளங்கிய எம்.பி.பால் பல இலக்கிய வாதிகளின் நல்லெண்ணத்தையும் நட்பையும் பெற்றார். இலக்கியப் படைப்புகளை உருவாக்குவதிலும், பண்பாட்டு மறு மலர்ச்சியை கேரளாவில் ஏற்படுத்துவதிலும் பெரும் பங்கு வகித்தன இப்பத்திரிகைகள். புதிய கருத்தும், அமைப்பும் கொண்ட எந்த ஒரு புதிய இலக்கியப் படைப்பும் இப்பத்திரிகையில் இடம் பெறுவதில்லை.

கோட்டயத்தில் இருக்கும்போது ***சாஹித்திய சக்கியம்*** என்னும் இலக்கிய சங்கத்தை நிறுவி அதற்கு தலைமை பொறுப் பேற்றிருந்தார். எம்.பி.பால் அதன் ஸ்தாபகராகவும் (Founder President) எஸ்.கே. நாயர் அதன் செயலாளராகவும் இருந்தனர். காரூர் நீலகண்டபிள்ளை, வைக்கம் முகமது பஷீர் போன்றவர்கள் அதில் உறுப்பினர்களாக இருந்தனர். ஒவ்வொரு ஞாயிற்று கிழமை மாலையில் எம்.பி. பால் தனிப்பயிற்சி கல்லூரியில் கூடி, பலவித இலக்கிய தலைப்புகளில் சுவாரஸ்யமான விவாதங்கள் நடத்துவார். உறுப்பினர்கள் தங்கள் படைப்புகளை இக்கூட்டங்களில் சமர்ப் பித்தனர். மற்ற உறுப்பினர்கள் அதை அலசி ஆராய்ந்து மதிப்பீடு செய்தனர். பஷீர் தன்னுடைய ''பால்யகால சகி'' (Balyakala Sakhi) என்னும் படைப்பை வெளியிடுவதற்கு முன்பு இக் கூட்டத் தில் சமர்ப்பித்தார். அது ஒரு கடுமையான விவாதத்திற்கு அடி கோலியது. பெரும்பாலான உறுப்பினர்கள் அந்நூலின் சில பகுதிகள் தங்கள் உணர்ச்சிகளை புண்படுத்துவதாகவும் மேலும் சிலர் அதில் உள்ள முஸ்லீம் சமுதாய அமைப்பு விவரம் சம்மந்தமில்லாமல், பொருந்தாதவையாக இருப்பதாகவும் கூறினர். ஆனால் சீதாராமன், காரூர் போன்ற உறுப்பினர்கள் அப்புத்தகத்திலுள்ள நல்ல அம்சங் களை எடுத்துரைத்தனர். எம்.பி. பால் தன்னுடைய இறுதி உரையில் அந்நூலுக்கு புகழ்மாலை சூட்டினார். அப்புத்தகத்தை இந்துலேகா நாவலுக்கு அடுத்தபடியாக மலையாளத்தில் வெளிவந்த நாவல்களில் அது ஒன்றே சிறந்த சமூக நாவல் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சி சந்தேகமில்லாமல் எம்.பி. பாலின் நடுநிலையாக பகுப்பாய்வு செய்து விமர்சிக்கும் பண்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பஷீர் ஒரு சிறந்த முன்னணி மலையாள நாவலா சிரியர் என்று அன்று நிலைநாட்டப்பட்டது. உயர்சாதியை சார்ந்த

நாவலாசிரியர்களை மட்டந்தட்டுவதற்காக வேண்டும் என்றே ஒரு இளம் மூஸ்லீம் எழுத்தாளரான பஷீரின் புகழை மிகைப்படுத்துகிறார் என்றே மக்கள் முதலில் நினைத்தனர். ஆனால் தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாக பஷீரின் புகழ் படிப்படியாக உயர்ந்து வந்ததிலிருந்து, பஷீரைப்பற்றிய எம்.பி.பாலின் விமர்சனம் சரியானதே என்று தெள்ளத்தெளிவாக அறிந்தனர். (மலையாள எழுத்தாளர்களில் பஷீர் ஒருவரே சாகித்திய அக்காதெமியின் அறிஞர் குழுவிற்கும் (Fellowship) தேர்ந்தெடுக்கப்பட்டார்)

மற்றொரு முறை நடைபெற்ற இலக்கிய கூட்டத்தில் காரூர் நீலகண்டபிள்ளை தன்னுடைய 'உத்தப்பனின் கிணறு' என்னும் சிறுகதையை சமர்ப்பித்தபோது எம்.பி.பால் அக்கதையில் பளிச்சிடும் அறிவுத்திண்மையை தன் பகுத்தாய்வின் மூலம் உணர்ந்து அது ஒரு உயர்ந்த படைப்பாகும் என்று குறிப்பிட்டார். இது காரூர் நீலகண்ட பிள்ளைக்கு சுய நம்பிக்கையையும் ஊக்கத்தையும் கொடுத்தது. பிற்காலத்தில் அவர் மலையாள எழுத்தாளர்களில் ஒரு முன்னனி சிறுகதை எழுத்தாளராக உயர்ந்தார்.

கேரளாவில் உள்ள இலக்கிய வாதிகளின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டார் எம்.பி.பால். தன் இலக்கிய நண்பர்களுடைய படைப்புகளை அச்சிட்டு விற்பதற்கு ஏற்ப தங்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கம் இருப்பது அவசியம் என்பதை உணர்ந்தார். அவருடைய யோசனைக்கு முதலில் ஒரு சிலரே ஆதரவு தெரிவித்தனர். ஆனால், எம்.பி.பாலின் முதன் முயற்ச்சியாலும், காரூர் நீலகண்டபிள்ளையின் அயராத உழைப்பாலும் 1947ஆம் ஆண்டு எழுத்தாளர்களின் கூட்டுறவு சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டது. அச்சங்கத்தின் முதல் தலைவராக எம்.பி. பாலும், செயலாளராக காரூர் நீல கண்ட பிள்ளையும் நியமிக்கப்பட்டனர். தலைவர் பதவியை 1949ஆம் ஆண்டில் சிறிதுகால இடைவெளிக்கு பிறகு தான் இறக்கும்வரை 1952ஆம் ஆண்டு வரை வகித்து வந்தார். ***சாகித்திய விசாரம்*** என்னும் எம்.பி.பாலின் கட்டுரை தொகுதியை 1953ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அந்நூலின் முகவுரையில் ''எம்.பி. பால் இந்நூற்படியை (manuscript) சமர்ப்பித்து மூன்று வருடங்களாகிறது. இம்மூன்று வருடங்களாக நூற்று ஐம்பதுக்கும் மேலான புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். அவற்றில் தலைவரின் மேற்கண்ட புத்தகத்தை காண முடியாது'' என்று குறிப்பிட்டுள்ளார். எம்.பி.பால் விளம்பர பிரியர் அல்லர். பணத்தாசை கொண்டவரும் அல்லர்.

எம்.பி.பால் இரக்கமுள்ள மனித சுபாவமுள்ளவர். அவரைத் தேடி வருபவர்களின் குறைகளை போக்குவதே அவருடைய முதல் வேலை. அவர் ஒரு பேராசிரியர் என்றும், கடினமான பாடங்களை ஆழ்ந்து படிப்பதில் ஆர்வமுள்ளவர் என்று நினைத்து பார்க்கவும் முடியாது. அவர் நண்பர்களுடன் வேடிக்கையாக பேசி காலங்கழிப்பதை அதிகமாக விரும்புவார். மாலையில் தன் வகுப்பு முடிந்தவுடன் நண்பர்களுடன் உல்லாசமாக நடந்து செல்வார். அவ்வாறு நடந்து சென்று அருகாமையில் உள்ள மதுபான வசதிக் கொண்ட சிற்றுண்டிச் சாலைக்கு சென்று தன் நண்பர்கஞ் விரும்பும் உணவு வகைகளை உண்பதிலும் மதுபானங்களை அருந்துவதிலும் மாலை பொழுதை கழிப்பார்.

மதிக்க வேண்டியவர்களுக்கு மதிப்பு கொடுப்பதிலும் உண்மையான திறமை உள்ளவர்களை பாராட்டி ஊக்கமளிப்பதிலும், தன்னை நாடி வந்தவர்களுக்கு தேவையான ஆதரவும், உதவிகளை வழங்குவதிலும் எம். பி. பால் என்றும் சளைத்தவரல்லர். கேசரி பாலகிருஷ்ண பிள்ளையின் 60 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவில், கூட்டுறவு எழுத்தாளர் இயக்கத்தின் சார்பாக எம்.பி.பாலும் காரூர் நீலகண்டபிள்ளையும் பங்கு கொண்டனர். மதிப்பும் மரியாதைக்கும் உரிய தன் பேராசிரியரான எடமராத்து சபாஸ்டினுக்கு (Edamarathu Sebastian) தன் நாவல் சாகித்தியம் என்னும் நூலுக்கு முன்னுரை எழுதுவதற்குரிய சிறப்புரிமையை அளித்தார். உரூபு(பி.சி.குட்டி கிருஷ்ணன் - நாவலாசிரியர் சிறிதுகாலம் கேரள சாகித்திய அக்காதெமியில் தலைவராக இருந்தவர்) எம்.பி.பால் தனக்கு ஜேம்ஸ் ஜாய்ஸ் (James Joyce) யின் யுலிஸஸ் (Ulysses) என்னும் நாவலை போதித்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கிறார். ''இந்த நாவல் படிப்பதற்கு அவ்வளவு எளிதல்ல. இது ஒரு உயர்ந்த நாவல் இலக்கியத்தின் கோட்பாடுகளுடன் மறுமலர்ச்சிக்கு ஒரு வித்தாக அமையப்போகிறது'' என்று குறிப்பிட்டுள்ளார். ஜோசப் முண்டச்சேரியை போலல்லாமல் குட்டிகிருஷ்ணமாரருக்கு எம்.பி.பாலுடன் நெருங்கி பழக வாய்ப்பு கிட்டவில்லை. இருப்பினும் எம்.பி.பாலின் திறனாய்விலும், இலக்கிய அறிவிலும் அதிகமாக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். முகமது பஷீரை சாதாரண நிலையில் இருந்தபோதிலும் ஒரு சிறந்த எழுத்தாளராக கருதப்பட்டபோதும் அவரை மிகவும் நேசித்து பாராட்டி வந்தார். பஷீரின் வாழ்க்கைப் பாதை சாகசம் நிறைந்தது. அவர் சலியாத விடுதலை போராட்ட வீரர். புரட்சிகரமாக விளங்கிய அவர்

பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். அவருடைய ***பிரேம லக்கணம்*** (Love Letter) என்னும் புத்தகம் திருவிதாங்கூரில் தடை செய்யப்பட்டது. விடுதலை அடைந்தபிறகு அவர் இந்தியா முழுவதும் சுற்றியப்பிறகு கடைசியில் எர்ணாகுளம் வந்தடைந்தார். தன் வாழ்க்கையை தொடர்ந்து நடத்துவதற்கு அவரிடம் ஒன்றும் இல்லை; அவர் மும்முரமாக எழுதினார். அவருடைய மிகச் சிறந்த கதைகள் ஒரு சிறு தொகைக்கே விலைப் போயின. எம்.பி. பால் பல வழிகளிலும், பஷீரின் சுய மரியாதைக்கு எவ்வித இழுக்கும் நேராத வண்ணம் உதவி செய்ய முயற்சித்தார். தம் குடும்பத்தில் ஒருவராகவே கருதி எம்.பி. பால் பழகினார். அவருடைய குழந்தைகளுடன் விளையாடுவதும் வேடிக்கையாக சப்பாத்தி செய்வதும் ஆக எம்.பி.பாலின் குடும்பத்தில் ஒருவராகவே இருந்தார். இலக்கிய வாழ்க்கையில் ஆரம்பகாலத்தில் தன்னுடைய படைப்புகள் சிலவற்றை எம்.பி. பாலிடம் காட்டி வந்தார். காம இச்சை நிறைந்த அசிங்கமான சகிக்க முடியாத 'ஸ்ரீ' என்னும் கதையின் கைப்படியை (Draft) வீசி எறிந்த நிகழ்ச்சியை இன்றும் எம்.பி. பால் நினைத்துப் பார்க்கிறார். அவர் கூற்றுப்படி அக்கதை அசிங்கமான சகிக்க முடியாத கற்பனை என்பதாகும். பிறகு பால் கோட்டயத்திற்கு சென்றபோது பஷீரும் உடன் சென்றார். முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்திற்கு தலைமை பொறுப்பேற்றிருந்தாலும் அவ்வியக்கத்தில் கம்யூனிசம் நுழைய முடியாதவாறு உறுதியாக எதிர்த்து நின்றார். அதனால் எம்.பி.பால் பல விமர்சகர்களின் கடுமையான கண்டனத்திற்குள்ளானார். தன் எதிர்ப்பாளர்களுக்கு எவ்வித சந்தர்ப்பமும் கொடுக்காமல் திருப்பி தாக்கி இருக்க முடியும். சி.வி. ராமன் பிள்ளையின் சமூக நாவலையும் அப்பன் தம்பூரானின் படைப்பு களையும் கடுமையாக விமர்ச்சித்து தன் மனோ தைரியத்தை நிலை நாட்டினார். வள்ளத்தோளின் சௌந்தர்ய ரசிகத் தன்மையையும், உள்ளூரின் Neoclassicism தையும் வண்மையாக சாடினார். மலையாள இலக்கியத்தை புதுப் பிப்பதே தன் முதல் வேலையாக கருதினார். அதில் பெரும்பாலும் வெற்றியும் பெற்றார். 1930-40 ஆம் ஆண்டுகளில் மலையாள இலக்கியத்திற்கு ஒரு புதிய பாதையை வகுத்து கொடுத்து தன் தலைமுறை எழுத்தாளர்களை புதிய நோக்குடன் கூடிய நவீன இலக்கியங்களை படைப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார்கள் கேசரி பாலகிருஷ்ண பிள்ளையும் எம்.பி. பாலும். 1930 ஆம் ஆண்டுகளில் சேர்ந்து ஒரு தேசிய இலக்கிய எண்ணத்தையும், உணர்ச்சியையும் கொண்ட புதிய எழுத்தாளர் கூட்டங்களை வழி

நடத்தி சென்று மலையாள இலக்கிய உலகத்திற்கு ஒரு புதிய பரிணாமத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகுக்கிறார் எம்.பி.பால்.

7. மறைவு

தன் கணவர் இறந்த நிகழ்ச்சியை மனதை உருக்கும் வண்ணம் திருமதி பால் நமக்கு விவரிக்கின்றார். திருவனந்தபுரத்திற்கு தன் குடும்பத்தை மாற்றியதிலிருந்து எம்.பி. பால் மிகவும் இளைத்து சோர்வடைந்து காணப்பட்டார். அதற்கு வருந்தத்தக்க மூலக்காரணம் அவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்ததே. அவ்வாறு இருந்தும் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மகிழ்ச்சியாக இருந்தார். வைத்தியரிடம் முறையாக சோதித்துக் கொள்வதிலும், உணவு பழக்க வழக்கத்தில் கட்டுப் பாடுடன் இருப்பதிலும் அவர் போதிய கவனம் செலுத்தவில்லை. தொடர்ந்து தனிப்பயிற்சி கல்லூரியை நடத்துவதிலும், திருவனந்த புரத்தில் உள்ள மார் ஐவோனியஸ் (Mar Ivanios) கல்லூரியில் பணியாற்றுவதிலும் இருந்து தவறியதில்லை. அவர் தொடர்ந்து எவ்வித தொய்வுமின்றி பணியாற்றிக் கொண்டே இருந்தார். அவரே ''மெழுகுவர்த்தி இரண்டுபுறமும் எரிகிறது '' என்று சொல்லி இருக்கிறார். ஒரு நாள் காலையில் பத்திரிகையில் பிரபலமானவரின் இறப்பு செய்தியை படிக்கும் போது தன் மனைவியிடம் ''எப்பொழுதாவது ஒரு நாள் இப்பத்திரிக்கை என்னுடைய இறப்பு செய்தியையும் தாங்கி வரும்''. என்னைப்பற்றிய செய்திகள் சில நாட்கள் வரை தொடரும். பிறகு இவ்வுலகம் என்னை மறந்துவிடும். இதுதான் ஒரு மனிதனின் 'தலைவிதி' என்று கூறினார். பின்வரும் நிகழ்ச்சியை அறிந்து முன்பே உணர்ந்திருந்தாரா? தன் மோசமான தேக ஆரோக்கியத்தின் விளைவாக தாம் நெடுநாள் வாழ மாட்டோம் என்று உணர்ந்திருந்தார் போலும்.

எம்.பி.பாலின் பிற்கால வாழ்க்கை மிக மோசமாக பாதிக்கப் பட்டிருந்தது என்று தன் சுய சரிதையில் குறிப்பிட்டுள்ளார். ஜோசப் முண்டச்சேரி எந்த கஷ்ட நிலையிலும் அவருடைய ஊக்கத்தில் மட்டும் எவ்வித குறையும் ஏற்படவில்லை. பதற்றமில்லாமல் பயமின்றி இருந்தார். 1952 ஆம் ஆண்டில் அவருடைய வருமானம் பெருகியது. மூத்த மகளுக்கு திருமணம் நடத்தப்பட்டது. கடைக் குட்டியை தவிர மற்ற பிள்ளைகள் பள்ளியிலும், கல்லூரியிலும் படித்துக் கொண்டிருந்தனர். அவர் மட்டும் தேக ஆரோக்கியமாக இருந்திருந்தால் தன் குடும்பத்தை பற்றி கவலையின்றி இருந்திருப்பார். தன் தேக ஆரோக்கியத்தில் அக்கறையில்லாமல்

இருந்த எம்.பி. பால் நிரந்தர வேலையின்றி இருக்கும் தன் மருமகனால் சிறிது துன்பத்திற்குள்ளாகி இருந்திருப்பார். ஆனால் அவர் கவலையையும் உணர்ச்சிகளையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் தைரியமாக தொடர்ந்து சுறுசுறுப்பாக பணியாற்றிக் கொண்டிருந்தார். எதிர்கால வாழ்க்கையின் திறவுகோல் மனிதனின் கைக்கு அப்பாற்பட்டது என்பதை தாழ்மையுடன் ஒப்புக் கொள்ளும் எம்.பி. பால் ''குறையாத ஆர்வம், ஊக்கம் உள்ளவரை மனிதன் யாருக்கும் எந்த சந்தர்ப்பத்திலும் அடிபணியாமல் தலை வணங்காமல் இருக்கலாம்'' - என்று அடக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

ஜூன், ஜூலை மாதங்களில் கேரளாவில் அடை மழை பொழியும். 1952 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எம்.பி.பால் மோசமான ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்டார். தொண்டையும் பாதிக்கப் பட்டது போல உணர்ந்தார். அவர் **குண்டாலத** (Kundalatha) என்ற மலையாளத்தின் முதன் நூல் என்று கருதப்பட்ட நூலைப்பற்றி பேசும்போது அவருடைய குரலே மாறி இருந்தது. தொடர்ந்து ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்டதனால் டாக்டரின் ஆலோசனைப் படி திருவணந்தபுரம் பொது மருத்துவமனையில் ஏழாம் அறையில் சேர்க்கப்பட்டார். அவர் மருத்துவ மனைக்கு புறப்படுவதற்கு முன்பு, ஆடும் குதிரையில் விளையாடிக் கொண்டிருக்கும் தன் கடைசி மகளையும், முற்றத்தில் தான் பேணி வளர்த்த தோட்டத்தையும் சிறிது நேரம் பார்த்தார். அச்சமயத்தில் அவர் கண்களில் நீர் தளும்பியதா? மருத்துவ மனையில் அவர் சிறிது சோர்வுடனும் காணப்பட்டார். தன் தேக நிலை மிக வேகமாக தேறி வருகிறது என்று தன் மனைவியும் பிள்ளைகளும் கருதும்படி நடக்க முயற்சித்தார்.

1952 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் ஆண்டு காலை 11 மணி இருக்கும், அப்போது பேராசிரியர் (A. Sheppard) செப்போர்ட் எழுதிய ஆங்கில இலக்கிய புத்தக பிரிதி ஒன்றை தபால்காரரிடம் இருந்து எம்.பி.பால் வாங்கும் சமயத்தில் (ஜே.தாமஸும், திருமதி பாலும் பக்கத்தில் இருந்தனர்) திடீரென்று அவருடைய உடல் நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. சில நொடிகளில் அவருடைய உயிர் பிரிந்தது. அவருடைய மறைவு கேரளாவில் உள்ள அவருடைய ரசிகர்களுக்கெல்லாம் அதிர்ச்சியாக இருந்தது. தொலை தூரத்தில் இருந்தும், சுற்றுமுற்றத்திலிருந்தும் அவருடைய நெருங்கிய நண்பர்கள், உடன் பணியாற்றியவர்கள், அவ்விடத்திற்கு விரைந்தனர். எம்.பி. பாலின் பூத உடல் திருவனந்தபுரத்தில்

பாளயத்தில் உள்ள தேவாலயத்தில் கிருஸ்துவ மத சடங்களுடன் புதைக்கப்படுவதற்கு மறுக்கப்படலாம் என்று தேவாலய அதிகாரிகளின் மூலமாக உறுதியாக அறிந்து அவருடைய குடும்பத்தினரும், உற்றார் உறவினர்களும் சோகத்திற்குள்ளாயினர். இது பொது மக்களிடையே ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. பிறகு எம்.பி. பாலின் மீது அக்கரை உள்ளவர்களும், சகோதரர்களும் மதகுருமார்களும் தேவாலய அதிகாரிகளுக்கும் இடையே வெகுநேர பேச்சு வார்த்தைக்குப் பிறகு தேவாலயத்திற்கு பக்கத்தில் புதைப்பதற்கு ஒரு சிறிய நிலம் ஒதுக்கப்பட்டது. அவருடைய சவ அடக்கத்தை மௌளீயரின் (Moliere) சவ அடக்கத்துடன் ஒப்பிடுவது மிக பொருத்தமாக இருக்கும். மௌளியரின் லாவேரே (Lavare) என்னும் நாடகத்தை லப்டன் (Lubdon) என்ற புத்தகமாக மொழி பெயர்த்த எம்.பி.பால் அதன் முகவுரையில் ''மௌளியர் இறக்கும் தருவாயில் அவருடைய நண்பர்கள், இறுதி சடங்கை செய்வதற்கு இரண்டு மத குருமார்களை அழைத்து வர ஆள் அனுப்பினர். ஆனால் குருமார்கள் அதற்கு இணங்கவில்லை. தேவாலய அதிகாரிகள் தேவாலயத்திற்குள் அவருடைய பூத உடலை புதைப்பதற்கு அனுமதிக்கவில்லை. பிறகு அரசரின் கட்டளைப்படி எவ்வித மதச் சடங்கும் இன்றி நடு காட்டில் மிக அமைதியாக சவ அடக்கம் நடை பெற்றது. நூற்றுக்கணக்கான நண்பர்கள் கையில் தீப்பந்தங்களுடன் சவபெட்டியை தொடர்ந்து வந்தனர்.

தாங்கொன்னா மனச்சுமையுடன் எம்.பி. பாலின் நண்பர்கள் அவருடைய சவப் பெட்டியை பாளையத்தில் உள்ள கதீட்ரல் தேவாலயத்தின் மைதானத்திற்கு கொண்டு சென்றனர். எல்லாவித மதச் சடங்குகளுடன் அவரை புதைகுழியில் வைத்தனர். மாணவர்களும் ரசிகர்களும், நண்பர்களும் திரண்டு வந்து மரியாதை செலுத்திய காட்சியை நோக்குங்கால் அவர்கள் எம்.பி. பாலின் மீது எவ்வளவு பாசப்பினைப்புடன் இருந்தனர் என்பது விளங்கும்.

மரணத்திற்கு பிறகு தன்னை மதச் சடங்குகளுடன் புதைப் பதைப்பற்றியோ அல்லது மரணத்திற்கு பிறகு நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றியோ எம்.பி.பால் சிறிதும் கவலைப் படவில்லை. ஆனால் அவர் சிரியன் கத்தோலிக்க சமூகத்தை சேர்ந்தவர். கிருஸ்துவ மத கோட்பாடுகளை பிரசாரம் செய்பவர்களை விட மிக நேர்மைமாக கடைபிடித்தவர். அவருடைய பூத உடலை கிருஸ்துவ மத தேவாலயத்தில் புதைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட

நிகழ்ச்சியை கேள்வியுற்ற கணக்கற்ற கிருஸ்துவர்கள் மனம் நொந்தனர்..

கிருஸ்துவ மத தேவாலயத்தின் அதிகாரவர்க்கத்திற்கு அடிபணிய மறுத்த எம்.பி.பால் ஒரு சிறந்த மனிதர். அவருடைய பரிசுத்தமான எண்ணங்கள் கௌரவமுள்ள கிருஸ்துவ மத மக்களின் மனப்போக்கிற்கு ஒரு நங்கூரமாக விளங்கியது. கிருஸ்துவ தேவாலயம் எம்.பி.பாலை புறக்கணித்தாலும், மற்ற எல்லா கிருஸ்துவ மக்களும் சிறந்த மதகுருமார்களும் எம்.பி. பாலை சிறந்த கிருஸ்துவ மகன் என்பதை ஒப்புக் கொண்டனர். அவர் ஏதோ ஒரு சமூகத்தை சார்ந்தவர் என்பதை விட நாட்டிற்கு சொந்தமானவர் என்பதே பொருத்தம். கணக்கிலடங்கா மக்கள் அவருடைய சமாதியை காண வருகின்றனர். மனிதனின் சுய சிந்தனைக்கும் நேர்மைக்கும் ஓர் அழியாத சின்னமாக விளங்குகிறது அவருடைய கல்லரை. தாம் பிறந்த கிருஸ்துவ மத மக்களை விழித்தெழச் செய்து மற்ற முன்னேறிவரும் சமூக மக்களுடன் சேர்ந்து முன்னேறுவது மிக அவசியம் என்பதை உணர்த்தினார். பன்னெடுங்காலமாக அடக்கி வைக்கப்பட்ட சுய சிந்தனைக்கும் புதுமையான எண்ணங்களுக்கும் இருந்து வந்த தடையை அணையின் மதகுகளை உடைத் தெரிவதுபோல உடைத்தெரிந்து அவை பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த பழக்க வழக்கங்களுடன் ஒன்றுடன் ஒன்று கலந்து காலத்திற்கு ஏற்றவாறு மாறி புதுபித்துக் கொள்ளச் செய்தார். கிருஸ்துவ தேவாலயம் மிகவும் சக்தி வாய்ந்தது என்று அறிந்திருந்தார். ஆனால் அதைவிட சிறந்ததான உணர்ச்சி பூர்வமான சுதந்திரத் தாகம் மிகமிக மேன்மையானது; புனிதமானது. எவ்வித உயர்ந்த சக்திக்கும் அடிபணிந்து போகாதது, என்று மிக துள்ளியமாக அறிந்திருந்தார். தன் அபிப்பிராயத்தை தெரிவிக்க எந்த மனிதனுக்கும் உரிமை உண்டு. அவ்வுரிமையை எம்.பி. பால் நல்ல வழியில் தனக்கே உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டார்.

8. நாவல்

சேக்ஸ்பியரின் நாடகப் படைப்புகள், ரொமான்டிக் புலவர்களின் கவிதைகள் போன்ற பலவகையான ஆங்கில இலக்கியங்களை எம்.பி.பால் மிகவும் விரும்பி படித்தார். வளர்ந்து வரும் சமுதாயத்தில் பன்னெடுங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்துள்ள மக்களை விழிப்புறச் செய்து முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கும் அவர்களுடைய ஆசை அபிலாசைகளை அச்சமின்றி எடுத்துரைப்பதற்கும், இலக்கியங்களில் ஓர் உன்னத இலக்கிய வகையாக உரைநடை இலக்கியமே சிறந்து விளங்கும் என்று எம்.பி.பால் நன்கு உணர்ந்திருந்தார்.

ஒவ்வொரு தலைமுறையிலும் வாழ்ந்த மக்களைப் பற்றியும், அவர்களுடைய சமுதாய அமைப்பின் நெளிவு சுளிவுகளை விவரிப்பதிலும் 19ஆம் நூற்றாண்டில் நாவல்கள் சக்தி வாய்ந்த ஒரு இலக்கிய சாதனமாக விளங்கின. நாவல் மனிதனின் வாழ்க்கையையும், பரந்த சமுதாயத்தை மேலோட்டமாக அணுகும் தகுதியற்ற, நிலையற்ற ஒரு சாதணம் என்று சில நேரங்களில் விவாதிப்பதுண்டு. ஆனால் டால்ஸ்டாய், டோஸ்டோவஸ்கி போன்ற எழுத்தாளர்கள் வாழ்க்கையை விளக்கிக் கூறுவதை எடுத்துக் காட்டி, நாவல், கவிதை-நாடக இலக்கியங்களுக்கு இணையானது என்று கூறி மேற்கூறிய சந்தேகத்தை போக்கியதுமல்லாமல் நாவலின் முக்கியத்துவத்தை நிலை நிறுத்துகிறார் எம்.பி. பால்.

சிறந்த கதை, நாவல் இலக்கியங்களின் வளர்ச்சியை பற்றி மிக நுணுக்கமாக ஆராய்வதில் மேற்கத்திய விமர்சன எழுத்தாளர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தலைப்பட்டனர். அமைப்பில் நாவல் என்று கருதப்பட கூடிய படைப்புகள் முதன் முதலில் 1878 ஆண்டு மலையாளத்தில் **'கதக்வதம்'** (Khathak Vadham) என்ற புத்தகம் மூலமாக வெளிவர ஆரம்பித்தாலும் விமர்சகர்கள் 1887ஆம் ஆண்டு வெளி வந்த **குன்தலத** (Kundalatha) என்னும் புதினத்தைதான் முதல் நாவல் என்று கருதுகின்றனர். அக்காலத்தில் சமுதாய புரட்சியின் விளைவாக இந்தியாவில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அது மலையாள இலக்கியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை முழுவதையும் புதிப்பித்து ஓர் ஸ்திரமான அடித்தளத்தை அமைத்து கொடுத்தது ; என்றும் காணாத உயர்ந்த அழகிய படைப்புகள்

தோன்றுவதற்கு தூண்டுகோலாக விளங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி யுகத்தில், மலையாள உலகில் சந்துமேனன் சி.வி. இராமன் பிள்ளை என்ற இரண்டு முக்கிய எழுத்தாளர்கள் தோன்றினார்கள். அவர்கள் தங்கள் சிறந்த அறிவுத் திறமையால் மலையாள இலக்கிய உலகிற்குப் பல கற்பனை கட்டுரைகளை வழங்கினர். அதுமட்டுமல்லாமல் பலவகை இலக்கிய படைப்பு களில் புதிய கற்பனை உரைநடையின் சக்தியையும் அது சமூகத்தில் உள்ள பல்வேறு மக்களின் உள்ளக்கிளர்ச்சிகளை சிறப்பாக எடுத்தியம்புவதற்கு சிறந்த சாதனமாகும் என்பதையும் தெளிவு படுத்தினார்கள். இப்பணியில் முக்கவிகள் என்று அழைக்கப்படும் குமரன் ஆசான், வள்ளத்தோள், மகாகவி உள்ளூர் ஆகியோர்களும் முக்கிய பங்கு வகித்தனர். ஆனால் கேரளாவில் உள்ள பெரும்பான்மையான இலக்கிய வாசகர்கள் சந்துமேனோன், சி.வி. இராமன் பிள்ளை ஆகியோர் தங்கள் கற்பனை உரைநடைகளின் மூலமாக மதிமயங்கச் செய்தனர். இவர்களுடைய படைப்புகளில் நாவல்கள் தோன்றியது மல்லாமல் அவை நன்கு முழு வளர்ச்சி பெற்றன. 1930-40 ஆம் ஆண்டுகளில் நாவல்கள் பல வடிவங்களில் உருவாக்கப்படாமல் இருந்தாலும் அது எண்ணிக்கையில் பல்கிப் பெருகியது. நாவல் இலக்கியத்தின் பல வகை உத்திகள் பற்றி மேற்கத்திய இலக்கியங்களில் இருந்து தகுந்த மேற்கோள்களை கொண்டு விளக்கி ஒரு புத்தகத்தை மலையாளத்தில் எழுதுவதற்கு இக்கால கட்டமே சிறந்த தருணம் என கருதினார்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலக்கிய வகைகளில் நாவல் வகை மிக பெரிய வளர்ச்சி அடைந்தது. அன்றைய எழுத்தாளர்களினால் புதிய வடிவங்களில், புதுவகையான நாவல்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு எண்ணற்ற வடிவங்களினாலும் அமைப்பினாலும் பல்கிப் பெருகியுள்ள நாவல் வகைக்கு இலக்கிய கொள்கையை உருவாக்குவதில் ஈடுபட்டவர்கள் பெரும் தடுமாற்றத் திற்குள்ளானார்கள். ஐரிஸ் முர்டோச் (Iris Murdoch) பிலிப்ரோத் (Philip Roth) டேவிட் லாட்ஜ் (David Lodge) மால்கம் பிராட்புரி (MolcolmBradbury) போன்ற எழுத்தாளர்களால் உருவாக்கப் பட்ட அன்மைக்கால நாவல் இலக்கியத்தில் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றத்தையும், புதுமையையும் நோக்கும்போது, பெர்சி லப்பக் (Percy Lubbuch)எழுதிய **கதை எழுதும் கலை** (The craft of Fiction) எட்வின் முயூர் (Edwin Muir) எழுதிய **நாவலின் அமைப்பு** (The Structure of the Novel)மற்றும் ஈ.எம். பாஸ்டர் (E.M For-

ester) எழுதிய **நாவலின் கூறுகள்** (Aspects of Novel) போன்ற நாவல் இலக்கணத்தைப் பற்றிய படைப்புகள் கூட காலத்திற்கு ஏற்றவையாக தோன்றுகின்றன. பழங்கர்த்தாக்களினால் உருவாக்கப்பட்ட அடிப்படைக் கொள்கையின் சாரம்சம், முக்கியத்துவம் ஆகியவற்றை இன்றை நாட்களில் படைக்கப் பட்ட பொரும்பாண்மையான கதைப்புத்தகங்களிலும் காணலாம். கலாச்சார துறைகளில் பெரும்படைப்புகள் உருவானதற்கு முழுப் பெருமை மேற்சொன்ன இலக்கிய கர்த்தாக்களையே சாரும். எம்.பி.பாலின் புத்தகமான **நாவல் சாகித்தியம்** (Noval Sahityam) தகுந்த சந்தர்ப்பத்தில் கதைகளுக் குரிய உயர்ந்த ரசிகத் தன்மை, சமூக மதிப்புகள் போன்றவைகளை உயர்த்திக் கூறி வருங்கால கதை உலகத்தில் தன் செல்வாக்கை நிலைநிறுத்தக் கூடிய திறமையான எழுத்தாளர்களுக்கு கலங்கரை விளக்கமாக விளங்கியது.

மற்ற இலக்கிய வகைகளை விட நாவல் மட்டுமே சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை நன்கு அறிந்திருந்தார் எம்.பி.பால். ஒரு குறிப்பிட்ட கால சூழ்நிலையில் ஒரு குறிபிட்ட சமூக மக்களின் செயற்பாடுகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் நாவல் நன்கு பிரதிபலிக்கும். இதனால் எம்.பி.பால் அரிஸ்டாடில் போன்று இலக்கியத்தில் மனித இனத்தின் செயற்பாடுகளை விவரிப்பதில் முக்கிய கவனம் செலுத்தினார். சமூகத்தின் கௌரவம், மதிப்பு உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் ஆராயப்பட்டன. அவ்வாறு ஆராய்வதன் மூலமே மனித இனத்தின் மதிப்பு நிலை நிறுத்தப் பட முடியும் என்று வலியுறுத்தப்பட்டது. எம்.பி. பாலின் கூற்றுப்படி நாவல் இலக்கியம் நீண்ட ஆய்விற்கு பின் மனிதத் தன்மை பொருந்தியது என்றும், இதன் அமைப்பு எந்தவிதமான சோதனைக்கு உட்படுத்தப் படுவது என்பது மனிதக் கொள்கைக்கும், நாவல் இலக்கியத்திற்கும் விபரீதமாக முடியும் என்றும் கருதப்பட்டது. எம்.பி.பால் நாவலை முறையாக ஒவ்வொரு பகுதியையும் ஆணித்தரமாக, அறிவுக் கூர்மையுடன் பகுப்பாய்வு செய்கிறார். இப்புத்தகம் பதினான்கு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.முதல் ஒன்பது அத்தியாயங்களில் நாவலை ஓர் இலக்கியமாக விளக்கப்படுகிறது.

மற்ற அத்தியாயங்களில் மலையாள கதை உலகின் வளர்ச்சியில் மாபெரும் பங்கு வகிக்கும் ''சந்துமேனேன், சி.வி.இராமன் பிள்ளை, கேரளவர்மா, அப்பன்தம்புரான் மற்றும் நாராயண குருக்கள்

போன்றவர்களின் படைப்புகளைப் பற்றி தீப்பொறி பறக்கும் விமர்சனங்களை கொண்டுப் படைக்கிறார்.

அப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலேயே இலக்கியமும் இலக்கிய வகைகளும் எவ்வித வரையறுப்புக்கும் (Definition) முழுமையாக அடங்காமல் சவால்விடுபவையாகும் என்று தெள்ளத்தெளிவாக குறிப்பிடுகிறார். ஏனென்றால் கலைமகளான சரஸ்வதி எப்பொழுதுமே சுதந்திரமானவள். நாவலாசிரியர் என்பவன் தன் அனுபவத்தையும் சக்திவாய்ந்த கலைப் படைப்பாக மாற்றக்கூடியவன்'' மனிதனின் எண்ணங்களையும் உணர்வுகளையும் நம்பக்கூடிய விதத்தில் கவித்துவம் ததும்ப உரைநடை அமைப்பில் வெளிப்படுத்துதே நாவல்'' என்று எம்.பி.பால் நாவலைப் பற்றி விவரிக்க முற்படுகிறார். நாவல் என்பது குறிப்பிட்ட கால கட்டத்தில், தொடர் நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய ஒரு 'கதையை' கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டும். அக்கதை வாசகர்களின் ஆவலை தூண்டி அவர்களின் திருப்திக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை பின்னப்பினைத்து வாசகர்களின் ஆர்வத்தை நிலைநிறுத்துக் கூடிய கதையம்சம் கொண்டிருக்க வேண்டும். வேறு சில விமர்சகர்களின் கூற்றுப்படி கதைப்பின்னலின் (plot) முக்கிய பணி வாசகர்களின் மனத்தில் வியப்பை உண்டாக்கி உளவியல் ரீதியில் மக்களிடையே நாவலின் பால் ஓர் ஆர்வத்தை உண்டாக்குவதே ஆகும். ஆனால் இக்கருத்துடன் எம்.பி.பால் ஒத்துப் போக விரும்பவில்லை. எதிர்ப்புகளை முன்னெச்சரிக்கையாக எம்.பி.பால் கீழ் கண்டவாறு கூறி முறியடிக்கிறார், ''ஒரு நல்ல நாவல் வாசகர்களின் அவலை மட்டும் தூண்டுவதோடு நில்லாமல் அது விவேகத்துடனும் பொது அறிவிற்கு உகந்ததாகவும், மனித வாழ்க்கையுடன் ஒத்துப் போவதாகவும் அமைய வேண்டும். நாவல் என்று ஊர்ஜிதம் செய்வதற்கு முக்கிய சோதனை (acid test) அது மனித வாழ்க்கையுடன் ஒத்துபோவதாக அமைய வேண்டும். வாழ்க்கையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சேகரித்த செய்திகளை அர்த்த மின்றி வரிசைப் படுத்தி ஒரு கதைப் பின்னலை (plot) உருவாக்கு வதனால் வாசகர்களின் மனத்தில் எவ்வித விளைவுகளையும் ஏற்படுத்த முடியாது. தன் அறிவால் அனுபவத்தினால் அந்நிகழ்ச்சி களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தி முழுமையான வடிவம் பெற்று இருக்கிறது என்ற உணர்வை ஏற்படுத்துமாறு செய்ய வேண்டும். கதையை விவரித்துக் கொண்டு செல்லும்போது அக்கதை தன் அவ நம்பிக்கையை போக்கியதா இல்லையா என்று ஒவ்வொரு

நிலையிலும் தன்னை சரி பார்த்துக் கொள்வான். எல்லா வாசகனும், கதை நிகழ்ச்சி பல பின்னல்களை (plot) கொண்டு உருவானது. அந் நிகழ்ச்சிகள் தலையாயது மட்டுமின்றி நியாயப்படி வரிசைப் படுத்தப்பட வேண்டியதாகும். ஒன்றுடன் ஒன்று பிணைந்து தன்னுள் ஒரே அமைப்பாக முழுமை பெற்று விளங்க வேண்டும்.

நான்காம் அத்தியாயத்தில் கதையை மேற்கத்திய கொள்கைப்படி மட்டுமின்றி சமஸ்கிருத கவிதையியல் கண்ணோட்டத்தின் படியும் அலசி ஆராய்வதற்கு முற்படுகிறார். மேற்கத்திய இலக்கியக் கொள்கைப்படி ஒரு கதைப் பின்னல் (plot) வெளிப்பாடு (exposition) சிக்கல் (complication) முடிவு (denouncement) என்ற வரிசைப்படி அழைக்கப்படும் பகுதிகளை கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். கதையில் சிக்கல் (complication) பகுதியில் ஒரு சிக்கலை ஏற்படுத்தி அதுவே கதையின் திருப்பு முனையாக அமைந்து, பிறகு சிக்கல்கள் தீர்ந்து கதை முடிவுக்கு வரும். முதல் பகுதி ஆமுகம் அல்லது முகவுரை என்று அழைக்கப்படும் பகுதியில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தி கதையின் ஓட்டத்தை ஆரம்பித்து வைக்கப்படுகிறது. கதையின் இரண்டாம் பகுதியான பிரிதிமுக (Pratimukha) என்றழைக்கப்படும் பகுதியில் எல்லா பாத்திரங் களும் பல எதிர்ப்புகளைச் சந்திக்க ஆர்வமுள்ளவர்களாகவும், உணர்ச்சிகரமான பாத்திரங்களாக மாறுவதையும் காணலாம். மூன்றாம் பகுதயில் மனப் போராட்டங்களின் உச்ச நிலையை அடையும். இங்கு தீர்வுகள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அடங்கி இருக்கும். இப்பகுதி **கர்ப சந்தி** (Garbhasandhi) என்று அழைக் கப்படும். மோதல்கள், தகராறுகள் ஏற்பட்டு அது சிக்கலின் உச்ச நிலையை அடையும். கதையின் நான்காம் பகுதி நெருங்க நெருங்க மோதல்கள் தீர்ந்து சமாதானம் அல்லது அமைதி ஏற்பட ஆரம்பிக்கும். இப்பகுதி **விமோசன சந்தி** (Vimochana Sandhi) என்று அழைக்கப்படும். இப்பகுதியில் வாசகர்களால் கதை சோகமாக முடியுமா? அல்லது இன்பமாக முடியுமா அல்லது இன்ப - துன்பம் கலந்த முடிவு ஏற்படுமா என்று நிச்சயமாக கூற முடியாமல் போகும். கடைசிப் பகுதியை **நிர்வாஹான சந்தி** (Nirvahana Sandhi) அல்லது விடுவித்தல் (Resolution) என்று அழைக்கப்படும். எம்.பி. பால் மலையாள நாவலில் இருந்து பல வகையான கதைகளையும், கதை அமைப்புகளையும் தன் கருத்து களுக்கு உதாரணங்களாக கையாண்டு தெளிவாக விவரிக்கிறார். பிரபலமான நாவல்களிலும், துப்பறியும் கதைகளிலும் வாசகர்களின்

ஆர்வத்தை தூண்டுவதற்குக் கையாளப் படும் நுணுக்கமானது எதாவதொரு சிக்கல்கள் பிரச்சினைகளை, குழப்பத்தை உருவாக்குவது. அக்குழப்பத்தை கதையின் கடைசி வரை கொண்டு சென்று வாசகர்களின் ஆர்வத்தை இறுதிவரை நிலைநிறுத்தி கடைசியில் அக்குழப்பத்திற்கு தீர்வு காண்பது ஒன்றே ஆகும். இந்த உத்தியின் முக்கிய குறைபாடு என்னவென்றால், இது கதையை ஒரு சாதாரண விடுகதை அளவிற்கு தரம் தாழ்த்தி செயற்கையான கதை அமைப்புடன் உயிரோட்டமின்றி காணப்படு வதற்கு காரணமாக அமைந்துவிடும். Parallelism, Contrast, disguise, mystry மற்றும் தற்செயல் நிகழ்ச்சிகள் போன்ற பல நுட்பங்களை முழுவதும் கையாண்டு அமைக்கப்பட்ட எந்த ஒரு நாவலானாலும் சரி அந்நாவல், அந்நுட்பங்களின் விளைவாக வாழ்க்கைக்கு பொருந்தாதவையாக தோன்றும். அது மட்டுமின்றி, அந்நாவல் மகா காப்பியங்களின் வரிசையில் இடம் பெறுவதற்கு தகுதி இழந்து விடுகிறது. சி.வி. இராமன் பிள்ளையின் சரித்திர நாவல்கள் சக்தி வாய்ந்தவையாக இருந்தாலும் மேற்கண்ட நுட்பங்கள் அவற்றில் மிக தாராளமாக கையாளப்பட்டுள்ளன.

ஆறாம் அத்தியாத்தில் கேரள வாசகர்களுக்கு அறிமுகமான பல தரப்பட்ட நாவல் வகைகளை வருணிக்கிறார். 1930 ஆம் ஆண்டு வாக்கில் மேற்கத்திய இலக்கியங்களில் சரித்திர நாவல், சமூக நாவல், சமூகவிரோத நாவல் (Picaresque Novel) மனோதத்துவ நாவல் முதலியனவும், உணர்ச்சி நாவல் வரிசையில் தொடர் நாவல் (Existential) அறிவியல் நாவல், அதிர்ச்சியூட்டும் நாவல் (த்ரில்லர்) குற்றநாவல், மற்றும் வேதாந்த நாவல் போன்ற பலவகைப்பட்ட நாவல்கள் தோன்றின. எட்வின் முயூர் (Edwin Muir) சரித்திர நாவல் (Chronicle Novel) நாடக நாவல் மற்றும் சஞ்சிகை நாவல் (Periodic Novel) என்று நாவல்களை மூன்று வகையாக பிரிக்கிறார். இ.எம். பாஸ்டர் (E.M. Forster) நாவல்களின் பல மாதிரி வடிவங்களையும், ஒழுங்கான அமைப்பு முறைகளையும் வருமுன் கூறுதல் முதலியவற்றை பற்றி கூறுகிறார். மேற்கண்ட எல்லா நாவல்களைப் பற்றியும் விரிவாக விளக்குவதற்கு தகுந்த தருணம் உருவாகவில்லை என்று எம்.பி. பால் நினைத்ததன் விளைவாக அவர் (1) சரித்திர (2) சமூக (3) மனோதத்துவ (4) துப்பரியும் (5) உருவக நாவல் (6) அறிவியல் நாவல் ஆகிய ஆறுவகை நாவல்களைப் பற்றி விளக்குவதுடன் நிறுத்திக் கொண்டார். சி.வி. இராமன்பிள்ளை, சந்துமேனோன் முதலியவர்களால் படைக்கப்பட்ட சரித்திர, சமூக

நாவல்கள் அவ்வகைக்கு உதாரணங்களாக கையாளப்பட்டன. அப்பன் தம்புரானின் பாஸ்கர மேனன் என்னும் நாவல் துப்பறியும் நாவலுக்கு உதாரணமாக கொண்டாலும் ஆர்தர் கொனன் டோயலின் (Arthur Conan Doyle) படைப்புகளை துப்பறியும் நாவலுக்கு தலை சிறந்த உதாரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அறிவியல் கதைகளுக்கு நல்ல உதாரணமாக வெல்லின் (Wells) நாவல்கள் உபயோகப் படுத்தப்பட்டது. வெல்லிற்கு முன் ஜூலியஸ் வெர்னே (Jules Verne) என்பவர் உயர்ந்த அறிவியல் கதைகள் படைத்துள்ளார். மனோதத்துவ நாவல்கள் மலையாளத்தில் இல்லையாதலால் எம்.பி.பால் ஹென்றி ஜேம்ஸின் படைப்புகளை இவ்வகையின் நல்ல உதாரணமாக கொள்கிறார். நாராயண குருக்களின் மலையாள நாவல்கள் உருவகக் கதைகளுக்கு நல்லுதாரணமாக அமைகிறது. கதை உலகம் என்பது பரந்து விரிந்தது. உலக காப்பிய கதைகளில் எல்லாவற்றிலும் ஆழ்ந்த அறிவு பெறுவதென்பது ஊக்கமுள்ள அறிவாளியின் முயற்ச்சிக்கு சவால் விடுவதாகும். எம்.பி. பால் நாவல் இலக்கிய (Novel Sahitya) புத்தகத்தை எழுதும்போது அவர் ஐரோப்பிய, ரஷ்ய, அமெரிக்க கதையாசியர்களின் படைப்புகளில் நன்று பரிச்சியம் பெற்றிருந்தார் என்பது சந்தேகத்திற்குள்ளானேதே ஆகும். மேல்வேல்லி (Melvelle) காப்ஃகா (Kafka) பிளாபர்ட் (Flaubert) பிரௌஸ்ட் (Proust) டால்ஸ்டாய் டோஸ்டோ வெஸ்கி மற்றும் ஜோசப் காண்ராட் போன்றவர்களின் பெயர்கள் இலக்கியங்களில் சிறந்ததாக எழுதப் பட்டாலும் அவர்களுடைய படைப்புகளைப் பற்றி எழுதிய நாவல்களின் பல திறம்பட்ட சிறப்புகளை வெளி கொணர முயல வில்லை. அம்முயற்சி அவசியமில்லாதது என்று அவர் கருதினார். அக்கால கலாச்சார வளர்ச்சியினால் ஏற்பட்ட மாறுதலுக்கு உட்பட்ட கேரள மக்கள் உலக காப்பிய கதைகளை எல்லாவற்றையும் மேலெழுந்தவாரியாக அறிவதை விட, ஒரு சில நாவல் வகைகளை ஆழமாக கற்பதே சிறந்தது என்று நம்பினர். அவர் இரண்டு அடிப் படைக் கொள்கைகளை வைத்து நாவல்களை பல பாகங்களாக பிரிக்கிறார். நாவல்கள் வெளிப்படுத்தும் முக்கிய உணர்ச்சிகளை பொறுத்து அவைகளை வகைப்படுத்தலாம். உதாரணமாக சில நாவல்கள் ஹாஸ்சியம் (Comic) நிறைந்ததாக இருக்கும். சில சோகம் நிறைந்ததாக இருக்கும். வேறு சில பரிகாசம் நிறைந்து காணப்படும். கதையை விவரிக்கும் முறையை வைத்தும் பிரிக்கலாம்.

அவர் கிழக்கித்திய இலக்கிய கொள்கையான ரசனை (Rasa) யின் பால் முழு அறிவையும், மேற்கத்திய இலக்கிய கொள்கையை பற்றி நன்கு தேர்ச்சி பெற்றிருந்தாலும் முறையே நாவல்களில் வெளிப்படுத்தும் உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை யாவரும் நன்கு உணரலாம். நாவல் என்பது பாதி வசன நடையிலும் பாதி உரைநடையிலும் உள்ள ஒரு காப்பிய இலக்கிய வகையாகும். உரைநடை பல வடிவங்களை கொண்டிருக்கும். ஜேன் ஆஸ்டின், வால்டர் ஸ்காட், சந்து மேனேன் மற்றும் சி.வி. ராமன் பிள்ளை போன்றவர்களின் நாவல்களில் எல்லா வல்ல கதா சிரியர்களே கதையில் எங்கும் எந்நேரமும் நிறைந்திருப்பர். இதற்கு காரணம் அவர்களே முழு கதையையும் உரைநடை வசனத்தில் வெளிப்படுத்துவதாகும். டிபோ (Defoe) டிக்கன்ஸ் (Dicken) போன்ற நாவலாசிரியர்கள் கதாபாத்திரிங்களில் ஒரு பாத்திரத்தின் மூலமாக முழு கதையையும் விவரிப்பார்கள். ரிட்சர்ட்சன் (Richardson) பமிலாவில் செய்ததுபோல் Epistalary முறையை பயன் படுத்துவர். வேறு சிலர் திருமடல் (கடிதம்) மூலம் விவரிப்பர். மேற்கூறிய முறைகளில்லாமல் மேலும் நாவல்களை கற்பனை நாவல்கள் (Imagination Novel) ஆராய்ச்சி நாவல் (Objection Novel) என்றும் வகைப் படுத்துகிறார் எம். பி.பால்.

உண்மையிலேயே எல்லா வகையான நவாவல்களுக்கும் உன்னிப்பான ஆராய்ந்தறியும் பண்பும் கற்பனை திறனும் தேவை யாக இருந்தாலும், எழுத்தாளன் தன் திறமையினால் கதையம் சங்களில் எதாவதொன்றை தேர்ந்தெடுத்து அக் கதையம்சத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து மேற் கூறிய கற்பனை மற்றும் ஆராய்ச்சி நாவல்கள் உருவாவதற்கு வழிகோலுகிறான். கற்பனை நாவல்களை அடிப்படையில் ரொமாண்டிக் என்றும் ஆராய்ச்சி நாவல்கள் முக்கியமாக தத்ரூபமாக இருப்பவை என்று விவரித் தாலும், அவ்வடிப் படையில் நாவல்களை வகைப் படுத்துவதில் இருந்து எம்.பி. பால் மிக கவனமாக ஒதுங்கி போகிறார். அவர் கற்பனை நாவல் என்று குறிப்பிடுவது எது என்றால் கடந்துபோன காலங்களில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளை தன் கற்பனை வளத்தால் மிக ஆழமாக மறுபடியும் விவரிக்கும் சரித்திர நாவல்களே ஆகும். சந்து மேனனின் சமூக நாவல்கள் ஆராய்ச்சி நாவலுக்கு மிக உயர்ந்த உதாரணங்களாகும்.

ஒரு நாவலின் கதா பாத்திரங்களை உருவாக்குவதிலுள்ள

முக்கியத்துவம், கதையமைப்பை உருவாக்குவதிலிருந்து எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல. செயற்பாடுகள் ஒருங்கிணைந்து ஒரு கதை பின்னல் உருவாகிறது. காரணகர்த்தாவாக விளங்கும் கதாபாத்திரங்களின் மூலமாக நடைபெறும் செயல்கள் ஒருங் கிணைக்கப்பட்டு ஒரு கதையமைப்பு உருவாகிறது. நாடகத்தில் உள்ளதுபோல் நாவலிலும் செய்கைகள் கதாபாத்திரங்களின் மூலம் வெளிப்படுகிறது. கதாபாத்திரங்கள் அச் செய்கைகளில் ஊன்றிபோய் கதாபாத்திரங்களும், செய்கைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்வதாகும். ஒரு சமுதாயத்தை ஒட்டி உருவாகும் ஒரு தனி மனிதன் அச்சமுதாய அமைப்பை எதிர்த்து போராடுவதுபோல் மனித கதாபாத்திரம் தனக்குள் போராடுவதுடன் மற்ற கதாபாத்திரங் களுடன் மோதுகின்ற நிகழ்ச்சிகளை தத்ரூபமாக எடுத்தியம்புகிறது நாவல். தன்னுடைய நாவலில் ஒவ்வொரு பாத்திரங்களையும் தேர்ந் தெடுத்து தனக்கே உரிய முறையில் அதற்குரிய செயற்பாடுகளை நிர்ணயித்து கதாபாத்திரங்களை உருவாக்குவதில் ஒவ்வொரு நாவலாசிரியருக்கும் முழு உரிமை உண்டு. செய்யும் தொழிலாளும், சூழ்நிலையாலும், இயற்கையாகவும் கதாபாத்திரங்கள் உருவா கின்றன. அவைகள் தங்களுக்குள் ஏற்படும் மனப் போராட்டங் களினால் மற்ற கதாபாத்திரங்களுடன் ஏற்படுகின்ற மோதல் களினாலும் தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்கின்றன. சில நேரங்களில் சில பாத்திர படைப்புகள் தனக்கு வரையறுக்கப்பட்ட எல்லையை மீறி பெரிதாக உருவெடுத்து நிஜ வாழ்க்கையில் காணும் உண்மை மனிதர்களைப் போல் வாசகர்களின் மனத்திரையில் நிலைத்து நிற்கும். எம்.பி. பால், சி.வி. ராமன் பிள்ளையின் சன்கு ஆசான் (Sanku Asan) பாத்திரத்தை மேற்கூறிய பாத்திரத்திற்கு உதாரணமாக குறிப்பிடுகிறார். திறமையான உத்திகளை கையாள் வதன் மூலம் செயற்கையாக உருவாக்கப்பட்ட கதாபாத்திரங்கள் எவ்வித மனத்திருப்தியையும் அளிக்காது. அவ்வாறு உருவாக் கப்பட்ட பாத்திரங்கள் தீமையையோ அல்லது நன்மையையோ நன்கு பிரதிபலிக்க முடியாது. தன் இனம், மதம், மாநில, தேசீய சிறப்பியல்புகளையும் தன் மனம், உடற்குணங்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட உலகலாவிய கதாபாத்திரம் அதன் சிறப்பியல்பிற் கேற்றவாறு ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைக்குட்படுத்தப்பட வேண்டும். பழக்கங்கள், பாவனைகள் நடைமுறை சம்பாஷனைகள், கண்ணியம், உடைகள், விருப்பங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஒரு நாவலாசிரியர் சக்தி வாய்ந்த கதாபாத்திரத்தை உருவாக்குவதற்கு

பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இ.எம். பாஸ்டரை போல் எம்.பி. பாலும் பாத்திரங்களை ஒரே நிலையில் அமையும் பாத்திரம் (flat characters) முழுமையான பாத்திரம் (Round characters) என்று இரண்டு வகையாக பிரிக்கிறார். சாரதாவில் வரும் வைத்தி பட்டர் முதல் வகையும், மார்த்தாண்ட வர்மாவில் வரும் சன்கு ஆசான் இரண்டாம் வகையும் சார்ந்தது என்று குறிப்பிடுகிறார். நாவலாசிரியர் பாத்திரங்களின் உள் மனநிலையையும் வெளித்தோற்றத்தையும் நன்கு அறிந்திருத்தல் மிக அவசியமாகும். அப்பொழுதுதான் அப் பாத்திரத்தின் அடிமனத்தில் உருவாகும் எண்ணங்களை விவரிக்கவும், பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப அப்பாத்திரம் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதை திருப்திகரமாக எடுத்தியம்பவும் ஏதுவாகும்.

எட்டாவது அத்தியாத்தில் நாவலின் கருவைப்பற்றி விவரிக்கிறார் எம்.பி.பால். நாவலாசிரியர் தன் மனத்திற் பட்ட எந்தவிதமான விஷயத்தையும் கருவாக தேர்ந்தெடுத்து கொள்ளலாம். அவ்வாறு தேர்ந்தெடுத்துக்கொண்ட கருவை ஒட்டி கதையை அமைத்து அக்கருத்துக்கு சுய விளக்கத்தை அளிக்கலாம். எது மிகமிக முக்கியமானது என்றால், நாவலாசிரியர் தன் கருத்தை நாவலின் மூலமாக பலவந்தமாக திணிக்கிறார் என்ற உணர்ச்சி வாசகர்களுக்கு ஏற்படா வண்ணம் அவ்விளக்கத்தை அமைப்பது மிகமிக அவசியமாகும். சிறந்த நாவல்கள் நாம் மகிழ்ச்சியுடன் ரசித்து படிக்கும்போதே, நமக்கு சில அறிவுரைகளை கூறிவிடும். இருந்தும் நாம் ரசிப்புத் தன்மையை தூண்டும் அம்சங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பொது அறிவை அடிப் படையாகக் கொண்டு, சமுதாயத்தை வேடிக்கையாக விமர்சனம் செய்யக்கூடியது நாவல் என்று நாம் கருதலாம். அதனால் சோக அம்சத்தை விட நாவல் வகைக்கு உகந்த அம்சம் 'ஹாஸ்சிய அம்சமே' சிறந்த சாதனமாக கருதப்படுகிறது. மூட பழக்க வழக்கங்களையும் குற்றங்குறைகளையும் வெளிபடையாக எள்ளி நகையாடுவதன் மூலம் உருவாகும் மகிழ்ச்சியின் விளைவாக மக்களுக்கு ஓர் ஊக்கம் பிறந்து, சமுதாயத்தை சீர்படுத்துவதற்கு சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்கு, ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக விளங்குகிறது ஹாஸ்யம் (comedy) நாவலின் கருத்தை பற்றி விவாதிக்கும்பொழுது, எம்.பி.பால் ஹாஸ்யத்தை பற்றி மிக உயர்வாக பகுப்பாய்வு செய்கிறார். ஹாஸ்சியம் தன்னுடைய உபயோகத்தின் முடிவைப் பொறுத்து சமுதாய ஹாஸ்சியமாகவோ

(Social Humour) யதோச்சாதிகார ஹாஸ்யமாகவோ (Absolute Humour) இருக்கலாம் என்கிறார். யதோச்சாதிகார ஹாஸ்சியம் என்பது மனிதனின் அகந்தைக்கும் நடைமுறை உண்மை நிலைக்கும் உள்ள வித்தியாசத்தை பற்றி ஆழ்ந்து சிந்திப்பவனின் வேதாந்தம் ஹாஸ்சியத்திற்கு ஒப்பாகும். ''என்ன நிலையற்ற முட்டாள்கள்!'' என்று வியக்கும் சேக்ஸ்ப்பியரின் பக் (Puck) பாத்திரம் யதோச்சாதிகார ஹாஸ்சியத்திற்கான உதாரணமாக காட்டி விளக்கப்படுகிறது. சமுதாய ஹாஸ்சியம் என்பது, சமுதாயத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட நல்ல நல்லொழுக்கத்திற்கும் தனி மனிதனின் செயற்பாடுகளுக்கும் இடையே காணும் வேற்றுமை களால் ஆனது. சமுதாய ஹாஸ்சியத்தை பல்வேறு முறைகளில் உண்டாக்கலாம். உச்சரிப்பை மாற்றிக் கூறல் சிலேடையில் பேசுதல், தவறாக அடையாளம் காட்டுதல், தலைவர்களைப் போல் பேசி நடித்தல் போன்ற முறைகளில் சமுதாயத்தில் நிலவும் குற்றங் குறைகளை எடுத்தாளுவதன் மூலம் சமுதாய ஹாஸ்சியத்தை உருவாக்கலாம். ஹாஸ்சியம் இரக்கத்தில் (தயை) இருந்து பிறக்கிறதேயல்லாமல் வெறுப்பு, விரோதம், குத்திக் காட்டுதல் போன்றவற்றில் அல்ல. ஆடம்பர பழக்க வழக்கங்கள், சாஸ்தி ரங்கள், உணர்ச்சிகள் போன்றவற்றை ஹாஸ்சியத்திற்கு பயன் படுத்தலாம். அதிகான ஹாஸ்சியம் தனக்குதானே முரணாக பேசுவதன் மூலமாகவும் (Sell Contradiction) சிரிப்பை வரவழைக் கலாம். நடைமுறை வழக்கங்களை மீறுவதால் ஏற்படும் தவறுகளின் மூலமாகவும், அதிகமான உணர்ச்சிகளை காட்டுவதன் மூலமாக உண்டாகும் ஹாஸ்சியம் மற்றவகை ஹாஸ்சியத்தைவிட சகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்துலேகாவில் எல்லா வகையான ஹாஸ்சியத் திற்கும் உதாரணங்களை காண்கிறார் எம்.பி. பால்.

இவ்வாறு நாவலுக்கு ஒரு விளக்கம் தந்து அதன் அமைப்பின் அடிப்படை கொள்கைகளை விவரித்து தனக்கு பரிச்சியமான மலையாள கதைப் படைப்புகளை மதிப்பீடு செய்ய முனைகிறார் எம்.பி.பால். மலையாளத்தில் வெளிவந்துள்ள முதல் நாவல் என்று கருதப்படும் குந்தாலதா (Kunda Latha) வின் விவரிக்கும் அழகும், கதையமைப்பின் நேர்த்தியாலும் குறிப்பிட தகுந்தது. ஆனால் இக்கதை ஷேக்ஸ்பியரின் சிம்பலின் (Cymbalin) கதையை போன்று மாற்றியமைக்கப்பட்ட ஒரு வலுவிழந்த கதையாகும். நாவல் என்னும் கண்ணோட்டத்தில் இது மிக கடுமையான தோல்வி ஆகும். கேரள வர்ம வலிய கோயி தம்புரானின் 'அக்பர்', புரோவர்

என்பவரால் டச்சு மொழியில் எழுதிய நாவலின் மொழியாக்கமாகும். அதன் சமஸ்கிருதம் கலந்த மணிபிரவாள நடை கண்டனத்திற்குரியது என்கிறார்.

இந்துலேகாவை மிகச் சிறந்ததாக மதிப்பீடு செய்கிறார் எம்.பி.பால். மாதவனின் மனோபாவத்தை ஆதரிக்கும் அவர் அம்மனோ நிலையை இந்துலேகாவின் பொது அறிவினால் ஈடு செய்வதை சுட்டிக் காட்டுகிறார். சந்து மேனேன் கீழ்நாட்டுக் கல்வி முறைகளை விட ஆங்கில கல்விமுறை உயர்ந்ததல்ல என்று கருதுகிறார். உண்மையான கல்வி என்பது மூட பழக்க வழக்கங்கள், தீண்டாமை போன்றவற்றில் இருந்து மக்களை விடுவிப்பதே ஆகும். இந்துலேகாவின் கதை சிறப்பாக பின்னப்பட்டுள்ளது. எல்லா நிகழ்ச்சிகளும், இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது. பாத்திரப் படைப்பு அற்புதம், சிறிய பாத்திரங்களும் நம் மனதில் நிலைத்து நிற்பவை. ஆங்கில கல்வியின் அவசியத்தை பற்றி பதினெட்டு அத்தியாயங்களில் விவாதிப்பது மிதமிஞ்சியது. எம்.பி.பால் சந்துமேனனின் ஹாஸ்சியத்தையும், வேடிக்கை அம்சத்தையும் எவ்வித தயக்கமுமின்றி புகழ்கிறார். இந்நாவலில் வரும் சூரி- நம்பூதிரிபாடு என்னும் பாத்திரம் மலையாள இலக்கியங்களில் உள்ள வேடிக்கை பாத்திரங்களுக்கெல்லாம் சிறந்த படைப்பாக திகழ்கிறது. இந்துலேகாவைப் போன்றே, சாரதாவும். ஒரு நல்ல நாவலாகவும், சிரத்தையுடன் எழுதப்பட்டாலும், அது முழுமை பெறாத ஒரு படைப்பாகும். இது ஹாஸ்சியம் கலந்த, சுவையான நிகழ்ச்சிகள் நிறைந்தது. சில பாத்திரங்கள் வாசகர்களின் மனங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. சமூக நாவலாசிரியராக சந்து மேனேன் சந்தேகமில்லாமல் பாராட்டுக்குரியவர்.

சி.வி. ராமன் பிள்ளையின் நாவல்களைப் பற்றி எம்.பி.பால் மதிப்பீட்டில் இருந்து அவருடைய விமர்சனத்திறனும் வெளிப்படுகிறது. ஐவன்ஹோவை(Ivanhoe) தொடர்ந்து வெளி வந்த சி.வி. ராமன் பிள்ளையின் மார்த்தாண்ட வர்மா, திருவிதாங்கூர் ராஜாவின் வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டது. இலக்கிய கண்ணோட்டத்தில் நோக்கினால் இது எல்லா வகையிலும் 'ஐவன்ஹோவிற்கு (Ivanhoe) நிகரானது. நம்ப முடியாத வீர சாகச செயல்களை திடீரென்று விவரிப்பதும், அதை சட்டென்று முடித்து வைப்பது போன்ற நிகழ்ச்சிகளை வர்ணிப்பதை தவிர்த்திருந்தால் இந்நாவல் உலகத்தின் சிறந்த நாவல்களின் வரிசையில் வைக்கப்பட

வேண்டிய நாவலாகும். சி.வி. இராமன் பிள்ளை படைப்பின் மீது தனக்கு உள்ள வியப்பின் விளைவாக எம்.பி.பால் சி.வி. இராமன் பிள்ளையை மனித எண்ண ஓட்டங்களை நன்கு புரிந்து கொள்வதைக் கண்டு அவரை டால்ஸ்டாய்க்கு ஒப்பிடப்படுகிறார். எழுதுவதில் அவருடைய திறமை, ஆற்றல் பன்மடங்காக வளர்ந்து தர்மராஜா, ராமராஜா, பகதூர் போன்ற நாவல்களைப் படைக்கும்போது அவருடைய திறமை மேன்மை பெற்று முதிர்ச்சி அடைகிறது. ஆயினும் அவர் மார்த்தாண்ட வர்மாவில் படைத்த தத்ரூபமான உயிருள்ள பாத்திரங்கள் பிற்காலத்தில் படைக்கப்பட்ட நாவல்களின் பாத்திரங்கள் பிரமாண்டமாக, மஹாயான காலத்தில் சிற்பிகளால் செதுக்கப்பட்ட புத்த் சிலையைப் போல் மிகப் பெரிய அளவில் உருமாறின. சி.வி. ராமன் பிள்ளையின் பாத்திரப் படைப்புகளை புகழ்கிறார். அவருடைய பாணியையும் வசன நடையையும் போற்றுகிறார். ஆனால் கதை அமைப்பு செயற்கையாக தோன்றுகிறது என்றும், அதிகமான சமஸ்கிருதம் கலந்த வசணங்கள் நிகழ்ச்சிகளை நன்கு பிரதிபலிப்பதற்கு உகந்ததாக தென்படவில்லை என்றும் கூறுகிறார். சி.வி. இராமன் பிள்ளை நாவலாசிரியர் என்ற வரம்புக்குள் மட்டும் இருக்கிறார் என்பது மிக வெளிப்படையாக தெரிகிறது. அவருடைய பிரேமாமிர்தம் என்னும் நாவல் சமூக நாவலிலிருந்து முற்றிலும் மாறுப்பட்டது. சந்துமேனனையும், சி.வி. இராமன் பிள்ளையையும் எம்.பி.பால் உலக நாவலாசிரியர்களாக மதிப்பீடு செய்ததின் விளைவாக மலையாள எழுத்தாளர்களுக்கு ஒரு உத்வேகம் பிறந்தது. மேற்கண்ட இரு நாவலாசிரியர்களின் படைப்பு களை கற்பனை உரைநடைக்கு ஒரு நல்ல உதாரணங்களாக குறிப்பிடப்பட்டது. கற்பனை படைப்புகளை உருவாக்குவதில் கேரளத்தில் உள்ள எழுத்தாளர்கள் உலகத்தில் உள்ள மற்ற எழுத்தாளர்களுடன் போட்டி போடுகிறார்கள் என்று அறிந்தபோது நமக்கு மிக பெருமிதமாக இருக்கிறது. எம்.பி.பால் அப்பன் தம்புரானை ஆடம்பரமான நடையை உருவாக்குபவர் என்று புகழாரம் சூட்டும் அதே வேளையில் அவருடைய நாவலான பூதாதாராயிரில் தென்படும் குற்றங் குறைகளை வெளிப்படுத்து கிறார். அப்பன் தம்புரானின் பாஸ்கர மேனோன் படைப்புகளில் சில பெருமை கொள்ளத்தக்க அம்சங்கள் இருந்தாலும் அது மலையாள மொழியில் தோன்றிய முதல் துப்பறியும் நாவல் என்று ஒரே நற் பெயர்க்குதான் தகுதியானது என்கிறார். சுப்ரமணியம் பொட்டியின் மொழிபெயர்ப்பான பங்கிம் சந்தர சட்டர்ஜியின் துர்கேசா நந்தினி

ஒரு நல்ல உதாரணமாக கருதுகிறார் எம்.பி.பால். மேலும் அவர் அந்நாவலை ஒரு உதாரணமாக (model) பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மலையாள எழுத்தாளர்களுக்கு பரிந்துரை செய்கிறார்.

நாவல் இலக்கியத்தின் முடிவுரையில் எம்.பி.பால் எழுதுகிறார் ''கடந்த ஐம்பது ஆண்டுகளில் மலையாள மொழியில் பெரும் எண்ணிக்கையில் கவிகள் தோன்றினார்கள். ஆனால் ஒரு சில குறிப்பிடத்தக்க நாவலாசிரியர்களே தோன்றினார்கள். நாவலாசிரியர் களுக்கு உலகத்தை பற்றி முதிர்ந்த அனுபவம் தேவை; கற்பனை சக்தி, மற்றவர்களை பார்த்தமாத்திரத்தில் அவர்களைப் பற்றி துள்ளியமாக எடைபோடக் கூடியவராக, விருப்பு வெறுப்பின்றி உலகத்தில் உள்ள விஷயங்களை அலசி ஆராய்ந்து விமர்சனம் செய்யக் கூடியவராகவும், தன்னுடைய சுய அனுபவங்களை மிக சுலபமாக, சரளமான நடையில் எடுத்துரைப்பதற்கான ஆற்றலும், அழகிய படைப்புகளை பாராட்டக் கூடிய மனப் பக்குவமும், நீண்ட நெடிய பயிற்ச்சியினால் பெற்ற வர்ணிக்கும் ஆற்றலும், நல்ல மனிதப் பண்பும் சமுதாயத்தின் மீது அக்கரையும் உள்ளவனே நாவலாசிரியர் என்று அழைக்கப்படுவர். ஒரு நல்ல சமூக நாவல் சமுதாயத்தின் சூழ்நிலையை தத்ரூபமாக விவரித்து உயிருள்ள பாத்திரங்களை உருவாக்க வேண்டும். அப்பாத்திர படைப்பு அச்சமுதாயத்தின் பிரிதிநிதியாகவும். அச்சமுதாயத்தில் நிலவும் சில சக்திகளின் விளைவாக துன்பத்திற்கு இலக்காணவையாகவும் இருக்கலாம். அக் காலத்தில் இருந்த பல நாவலாசிரியர்களுக்கு சமுதாயத்தை பற்றி விமர்சித்து எழுதுவதற்கு தேவையான புத்தி கூர்மை இல்லை. சமுதாயத்தில் உள்ளவர்களை பாத்திரங்களாக படைப்பதற்கு தைரியம் இல்லை. சமுதாயத்தை நாவலின் உயிர் நாடியாக கருதுகிறார். எம்.பி.பால் மனித இனத்தை சீர்படுத்த, அதை உயர்ந்த ஸ்தானத்திற்கு கொண்டு செல்லாமல் நாவல் என்று ஒன்று எதற்கு இருக்க வேண்டும்.

1963 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நாவல் இலக்கியத்தின் மறுபதிப்பில் குண்டாலதா (Kundalatha) பால்யகால சகி (Balyakala Saki) ஆகிய நாவல்களைப் பற்றி எம்.பி. பால் எழுதிய கட்டுரைகளை பதிப்பாசிரியரால் சேர்க்கப்பட்டன. மலையாளத்தில் வெளி வந்த நாவல்களில் முதல் நாவல் என்ற பெருமை குண்டாலதாவிற்கு மேலும் நீடித்திருக்கவில்லை. எம்.பி.பாலின்

விமர்சனத் திறமையை முழுவதும் உபயோகப்படுத்துவதற்கு ஈடானதாகவும் அது இல்லை. பால்யகால சகி பற்றிய விமர்சனக் கட்டுரை மிகச் சிறந்தது. ஒரு விமர்சகனுக்கு தற்கால இலக்கியத்தில் உள்ள சிறந்தவைகளை வெளி கொணருவது, சமகால ஆசிரியர்களின் உயர்வை சோதித்து பார்ப்பதைவிட மிக சுலபமானது. முகமது பஷீர், ஒரு சிறந்த கதை எழுத்தாளர் என்ற புகழ் பெற்றிருந்தாலும் அவரால் படைக்கப்பட்ட ஒரு கதையை மிகச் சிறந்தது என்றும், இந்துலேகாவிற்கு இணையானது என்று பிரகடனப் படுத்துவதற்கு சிறந்த விமர்சகருக்கு மிக துள்ளியமாக சீர் தூக்கி பார்க்கும் திறமை மிக அவசியமாகும். எம்.பி.பாலின் 'பால்யகால சகியைப்' பற்றிய மதிப்பீடு மிக பொருத்தமாக அமைந்தது. அது மலையாளத்தின் சிறந்த முதல் இலக்கியமாக விளங்கியது. தன் சக்தி வாய்ந்த சமுதாய விமர்சனத்தையும், மிகச் சிறந்த தத்ரூபமான கதையமைப்பையும் ஒன்றுடன் ஒன்று கலந்து எழுதிய முகமது பஷீரின் புதிய நாவல் சமுதாயத்தின் உணர்ச்சிகளை தட்டி எழுப்பலாம் என்று எம்.பி.பால் சுட்டிக் காட்டுகிறார். பால்யகால சகியே மலையாள இலக்கியத்தில் நாவல் வகையில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முதன்மையாக விளங்கியது.

நாவல் இலக்கியத்திற்கு பிறகு இருபது ஆண்டுகள் கழித்து எம்.பி.பால் **கடிய கதா** (Gadya Katha) என்னும் நீண்ட கற்பனை உரைநடைக் கட்டுரையை எழுதினார். இது இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த ஐரோப்பிய நாவல்களையும், பிற்கால மலையாள நாவல்களையும் விரிவாக, பொதுப்படையாக அணுகுவதற்காக எழுதப்பட்டது. இது முன்பு நாவல்பற்றி மிக அழகாக ஆராய்வதற்காக எழுதப்பட்ட நாவல் இலக்கியம் போன்றதொரு தெளிவுரை அல்ல. பத்தொன்பதாம் நூற்றாண்டு, நாவல்கள் வளர்வதற்கு ஏற்றதொரு செழுமையான காலமாக அமைந்தது என்றும், இருபதாம் நூற்றாண்டின் செய்தித்தாள்கள், நாடகங்களின் வருகையால் நாவலுக்கு ஒரு கடுமையான சவாலாக அமைந்தது என்றும் எம். பி. பால் குறிப்பிடுகிறார். இது ஆங்கில இலக்கியத்திற்கு ஓரளவு உண்மையாக இருந்தாலும், மலையாள நாவல்கள் 1940 ஆம் ஆண்டுகளிலும் அதற்கு பிறகும் நன்கு செழித்து வளர்ந்தது. அதனால் வரும் காலங்கள் மலையாள நாவலுக்கு பொற்காலமாக அமையும் என்று எதிர்ப்பார்த்தார். மேற்கத்திய நாடுகளில் 19ஆம் நூற்றாண்டை மிக அதிகமான நாவல்கள் படைக்கப்பட்ட நூற்றாண்டாக கருதப் பட்டது. 20ஆம் நூற்றாண்டில் விதைக்கரு போன்ற எழுத்தாளர்கள்

சிலர் இருந்தனர் என்றும் கட்டாயமாக இந் நூற்றாண்டு நாவல்களில் அவர்களுடைய தாக்கம் இருக்கும் என்றும் எம்.பி.பால் ஒப்புக் கொள்கிறார். டி.எச். லாரன்ஸ் எழுதிய சன்ஸ் - லவர்ஸ் (Sons and Lovers) என்னும் நாவல் மிக சிறந்தது. அது ஃபிரியுடியனின் (Frendian) மனோதத்துவக் கொள்கைகளை எவ்வாறு நவீன நாவல்களில் பயன்படுத்தலாம் என்பதை தெளிவாக காட்டுகிறது. கடந்த காலத்தில் கண்ணில் தென் பட்டவைகளையும், காதில் விழுந்தவைகளும் சில மனத்தில் அப்படியே அடி மனத்தில் பதிந்து விடும். அதன் விளைவாக மனத்தில் சில விபரீத விளைவுகள் ஏற்படும். அவ்வாறு புதைந்து கிடக்கும் உண்மை நிகழ்ச்சிகளை வெளி கொணர்ந்து மிக துள்ளியமாக விவரிப்பதே ஃப்ரியுடியனின் (Freudian) மனோதத்துவ முறையின் அடிப்படையாகும். ஃப்ரியுட்டியனின் (Freudian) கூற்றுப்படி, மனிதன் தன் மனப் போராட்டத்தினால் துன்பப்படுவான் என்றும், தன் மனமே அவனை சுட்டெரிக்கும் என்பதாகும். ஃப்ரியுடியனின் (Freudian) மனோ தத்துவத்தை எம்.பி.பால் ஒப்புக் கொள்ள மறுக்கும் அதே வேளையில் அது இலக்கியத்தில் மிகபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஒப்புக் கொள்கிறார். டி.எச். லாரன்சைவிட, ஜேம்ஸ் ஜாய்ஸ் சிறந்த நாவலாசிரியராவார். அவருடைய யுலிஸிஸ் (Ulyese) பல தலைமுறை எழுத்தாளர்களுக்கு, கற்பனை படைப்புகளில் புதிய சோதனைகளை புகுத்துவதற்கு தேவையான ஊக்கத்தை அளிப்பதில் வற்றாத ஜீவ நதியாக விளங்கியது. எம்.பி.பால் வர்ஜீனியா வுல்ஃபு, டொரோத்தி ரிட்சர்சன் போன்ற இங்கிலாந்து நாவலாசரி யர்களையும் குறிப்பிடுகிறார். அவருடைய கவனத்தில் அமெரிக்க, ஐரோப்பிய நாவலாசிரியர்கள் இடம் பெறவில்லை. பழைய வடிவங்கள் மறைந்து புதிய வடிவங்களில் எழுத்துப் படைப்புகள் தோன்றுவது இன்றியமையாதது என்று நன்கு அறிந்திருந்த அவர் நாவலின் சில முக்கியமான அம்சங்கள் அடிப்படையானது என்று திடமாக நம்பினார். நாவல் என்பது கட்டாயம் ஒரு கதையை விவரிப்பதாக இருக்க வேண்டும். அக்கதை பல நிகழ்ச்சிகளினால் சீராக தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். அந் நிகழ்ச்சிகளில் ஒரு சில பாத்திர படைப்புகள் உலவ வேண்டும். மேலும் அக்கால சமுதாய நடப்புகளை கடுமையாக விமர்சிப்பதாக இருக்க வேண்டும். உலக இலக்கியங்களில் எல்லாம் புரட்சிகரமான எண்ணங்களுடன் கூடிய மாற்றங்கள் புயலென உருவாகி வரும் இவ்வேலையில் எம்.பி. பால் ஆர்னால்டின் தத்துவமான இலக்கியம் என்பது மனித வாழ்க்கை

தளத்தின் அடிமட்டத்தை விமர்சனம் செய்வதில் இருந்து பிறப்பதே ஆகும் என்பதை நிலைநிறுத்துகிறார்.

சிறிது காலத்திற்கு பிறகு நாவல் இலக்கியக் கொள்கையைப் பற்றி சில புத்தகங்கள் எழுதப்பட்டாலும், எம்.பி.பாலின் நாவல் சாகித்தியம் என்ற புத்தகத்தின் தாக்கம் மலையாள இலக்கியங்களில் காணப்படுவதை இன்றும் நாம் உணரலாம். புதுமையை விரும்பும் எழுத்தாளர்கள் தொடர்ந்து காட்டி வந்த எதிர்ப்பின் விளைவாக எம்.பி.பாலின் கதைப்பின்னல் (plot) கதாபாத்திரங்கள் பற்றிய கொள்கைகள் சற்று பின்னுக்கு தள்ளப்பட்டாலும், அவருடைய சமுதாய நோக்கு - அடிப்படை இலக்கிய உத்திகளை சோதிப்பது போன்று வெளிவந்த அவட்ண்ட கார்ட்டெ (Avant Garde) புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களையும் மீறி அவருடைய சமுதாய நோக்கு நிலைத்து நிற்கிறது. ஏனென்றால் மனித சமுதாயத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்படாத படைப்புகளை நாவல் என்று சொல்வதற்கு தகுதியற்றது. அது இலக்கியப் படைப்பாக கருதப்படமாட்டாது.

9. சிறு கதை

எம்.பி.பாலின் 'கண்ட கதா பிரஸ்தானம்' என்னும் சிறு கதை பற்றிய புத்தகம் அவருடைய **நவகேரளம்** என்ற பத்திரிக்கையில் தொடர்ந்து எழுதப்பட்டு 1932 இல் புத்தகமாக வெளியிடப்பட்டது. அவர் சிறுகதை உலகத்தில் உலாவித்திரியும் வாசகர்களின் அனுபவங்களைத் தான் படைத்திருப்பதாக தன் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். இப்புத்தகத்தின் 1946 ஆம் ஆண்டில் வெளிவந்த இரண்டாம் பதிப்பில் அவர் குறிப்பிடுகிறார் ''இப்புத்தகத்தில் கையாளப்பட்ட உதாரணங்கள் இக்காலத்திற்கு பொருந்தாதவையாக இருந்தாலும் இதில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்ட அடிப்படைக் கொள்கைகள் இன்றும் செல்லத்தக்கதாகும்''. சிறிது கால இடை வெளிக்கு பிறகு இந்நூலை திருத்தி மறுபதிப்பாக வெளியிட நினைத்தார். ஆனால் முடியவில்லை. 1946 ஆம் ஆண்டு புதிய இலக்கிய நிலையை நன்கு ஆராய்ந்து, மலையாளத்தில் வெளிவந்த பலவகையான இலக்கிய வகைகளில் மிகவும் வளர்ச்சியடைந்த இலக்கியமான சி றுகதையை மிக துள்ளியமாக எடுத்துரைக்கிறார். 1930 ஆம் ஆண்டுகளில் கேரளாவில் சிறுகதை இலக்கியத்தின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய, ஊக்கம் அளிக்கக் கூடிய, வழி நடத்தி செல்லக் கூடிய முதல்தர சிறுகதை எழுத்தாளர் கூட்டம் தோன்றியது. முற்போக்கு இலக்கிய இயக்கம் இக்கூட்டத்திற்கு தேவையான ஊக்கத்தை அளித்தது. கேசரி பாலகிருஷ்ண பிள்ளையும், எம்.பி.பாலும் அவர்களுடைய மனஉறுதிக்கு அளவில்லா உற்சாகத்தை ஊட்டி அவர்களை என்றும் புதுமையாகவும் நவீனமான சிறுகதை இலக்கியங்களை உருவாக்குவதற்கு வழி நடத்தி செல்ல பட்டனர்.

மேற்கத்திய இலக்கிய கர்த்தாக்களான போ (Poe) ஸ்டீவன்சன், ஹென்றி ஜேம்ஸ் போன்றவர்களுடைய சிறு கதை உத்திகளை பற்றிய படைப்புகளையும், சிறுகதையை எப்படி எழுதுவது, சிறு கதை எழுதுதல் - இளநிலை சுயேச்சை பத்திரிகை துறை மற்றும் அட்சனின் (Hutson) இன்ட்ரொடெக்ஷன் டு தி ஸ்டெடி ஆப் லிட்டேரச்சர் (Introduction to the study of Literature) போன்ற புத்தகங்களையும் நன்கு ஆராய்ந்த பிறகு சிறுகதை உத்திகளைப் பற்றி புத்தகமாக எம்.பி. பால் எழுதினார். கேரளாவின் கலாச்சார வளர்ச்சியை மதிப்பீடு செய்வதிலும் சிறுகதை

எழுத்தாளர்களின் படைப்புகளை நுட்பமாக ஆராய்வதிலும் அவர் ஒரு மூலக் கர்த்தாவாக விளங்கினார். அவர் கையாலும் முறை அறிவு பூர்வமானது, சீரான ஒழுங்கான முறையினால் இவ்விலக்கியத்தை அணுகுகிறார்.

இப்புத்தகம் ஒன்பது அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பில் காரூரின் (Karoor) சிறு கதைகளைப் பற்றி பின் இணைப்பில் மதிப்பீடு செய்கிறார். முதல் அத்தியாயத்தில் எவ்வகையிலும் சுருக்கப்படாத கதையான சிறுகதை எவ்வாறு அமெரிக்காவில் பிறந்தது என்பதைப் பற்றி எடுத்துறைக்கிறார். மக்கள் பொழுதுபோக்கிற்கும், மகிழ்ச்சிக்கும் ஒருவகையான கற்பனை படைப்பை விரும்பினார். அப்படைப்பு குறுகிய நேரத்திற்குள் அடங்குவதாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். அவை ஒரே மூச்சில் முழு கதையையும் படிக்கக் கூடியவையாகவும், தினசரி பத்திரிகையில் கதை முழுவதும் ஒரே நாளில் பிரசுரிக்கக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். சிறுகதை என்பது விஷயங்கள் நிறைந்த சுருக்கமான கற்பனை கதையாகும். எட்கார் ஆலன் போ என்பவர் சிறுகதையை அரை மணியில் படிக்கக் கூடிய கற்பனை கதை என்று வரையறுக்கிறார். அதனுடைய குறிக்கோள் வரம்பு, அமைப்பு போன்றவற்றில் நாவலில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. ஒரு முனைப்படுத்துதல் அதன் மூலப் பண்பு ஆகும். உள்ளுணர்வுகளை தூண்டுவதாகவும், நேர்த்தியான நடையையும் கொண்டிருக்க வேண்டும். ஆர்.எல். ஸ்டீவன்சனின் கூற்றுப்படி சிறுகதைகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம். நிகழ்ச்சிகளைக் கொண்டும், பாத்திரங்களைக் கொண்டும் சூழ் நிலையை கொண்டும் சிறு கதைகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

செயற்பாடுகள் நிறைந்த சிறு கதைகள் பாத்திர மாந்தர்களின் செய்கைகளை விவரிப்பதாக இருக்கும், செய்கைகள் ஒன்று சேர்ந்து கதைப் பின்னல்களாக உருமாறும். கதை பின்னல் வாசகர்களின் ஆர்வத்தை குறைக்காமல் தனக்கே உரிய முறையில் நிகழ்ச்சிகளை விவரித்துக் கொண்டு செல்லும். உள் கருத்து பொதிந்ததாகவும் அமைய வேண்டும். கதையின் நிகழ்ச்சிகளை வர்ணிக்கும் முறையினால் வாசகர்களுக்கு கதையின் பால் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தலாம். பல பாத்திரங்களைப் பெற்றிருந்தாலும் சிறுகதையின் முக்கிய அம்சம் எடுப்பான தொடக்கமும், மிடுக்கான கதை ஓட்டமும் மனத்தில் நிலைத்து நிற்கும் ஒரு முடிவும் கொண்டதாக

அமைந்திருக்க வேண்டும். சிறு கதையின் பாத்திரங்கள் ஒரு தனித்தன்மை பொருந்தியதாகவும், அப்பாத்திர படைப்பிற்கு ஏற்றவாறு இயற்கையாக தோன்றுவதும் வாசகர் களின் கவனத்தை ஈர்க்கும் பண்புகளாகும். தன்னால் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் மூலமாக பாத்திரங்களின் பண்புகளை வெளி கொணருவதற்கு கதையாசிரியர் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். அம் மாதிரியான கதாசிரியர்கள் நிச்சயம் மனித பண்புகளைப் பற்றிய ஆழ்ந்த ஞானம் பெற்றிருப்பர். அப்பண்புகளை தங்கள் திறமையான வர்ணிப்பின் மூலம் பாத்திரங்களைக் கொண்டு சமயத்திற்கு ஏற்றவாறு வெளிப்படுத்துவார். தகுந்த பாத்திர படைப்புகளை கொண்டு நிகழ்ச்சிகளை பின்னிப்பிணைந்து ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதே கதையின் முக்கிய பணியாக இருக்க வேண்டும். எம்.பி. பால் வேங்கையில் குஞ்சுராமன் நாயனாரின் துவாராக (Dwaraha) என்னும் கதையை கதை சூழ்நிலைக்கு சிறந்த உதாரணமாக குறிப்பிடுகிறார். சிலர் துப்பறியும் கதைகளை நான்கு வகையாக பிரிக்கின்றனர். ஸ்டீவன்சன் குறிப்பிட்டது போலன்றி, தற்பொழுது எண்ணற்ற கதை வகைகள் இருப்பது நாம் இங்கு குறிப்பிடத் தேவையில்லை. இருந்தும் ஸ்டீவன்சன் ஏற்படுத்திய விசாலமான வகைபாடு இன்றைய கதைகளின் போக்கிற்கும், கடந்தகால கதைகளின் நிலைக்கும் பொருத்தமாக அமைந் திருப்பதை நாம் காணலாம். செயற்கையான உத்திகள் கையாளுவதே இன்றைய நவீன கால சிறுகதை வளர்ச்சியின் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது.

இரண்டாம் அத்தியாயம் எழுத்தாளன் எவ்வாறு தன் கதையை (Subject) கருவை தேர்ந்தெடுப்பது என்று எடுத்துரைக்கிறது. சிறுகதை எழுத்தாளன் வாழ்க்கையை, மனிதர்களை கூர்ந்து நோக்கும் ஒரு சிறந்த பார்வையாளன். மனித வாழ்க்கையில் நடைபெறும் உண்மை நிகழ்ச்சிகள் அவன் எழுதுவதற்கு தூண்டுகோளாக அமைகின்றன. செய்தித்தாளில் காணப்படும் சிறு செய்திகள், மக்களால் உணர்ச்சிகரமாகப் பேசப்படும் நிகழ்ச்சிகள், உண்மை சம்பவங்கள் ஆகியவை சிறுகதை எழுதுவதற்கு தேவை யான கருப் பொருளாகிறது. உண்மை சம்பவங்கள் கற்பனை கதையைவிட அதிசயத் தக்கதாக இருக்கும். ஆனால் அச் சம்பவங் களை அப்படியே எழுதக்கூடாது. அந்த உண்மை சம்பவங்கள் ஒரு தாதுப்பொருள் போன்றது. அதை எழுத்தாளனின் கற்பனைத் திறன் என்ற உருக்காலையில் உருக்கப்பட்டு, சுத்தப்படுத்தப்பட

வேண்டியது. எழுத்தாளன் எதை நீக்குவது, எதை தன் கதைக்கு எடுத்துக் கொள்வது என்பதை தீர்மானிக்கின்றான். பரவலாக காணும் தனக்கு சம்மந்தமில்லாத, உணர்ச்சியற்ற உண்மைகளை தன் கற்பனை சக்தியினால் தானே உணர்ந்து, தன் மனதில் தோன்றிய அநுபவமாக மாற்றுகிறான் எழுத்தாளன். சிறு கதையில் மிகமிக முக்கியமான அம்சம் கதை, நம்பக் கூடியதாக இருக்க வேண்டும். இங்கு எம். பி. பால் அரிஸ்டாடெல்லியனின் கொள்கையான லா ஆப் பிரேபபிள்டி (Law of Probability) யின் மீது பெரிதும் சார்ந்து காணப்படுகிறார். உண்மையில் நடந்த சம்பவங்களைக் கொண்டு கதையை அமைக்காமல், நடக்க இருக்கும் சம்பவங் களை கையாளுகிறது கதை. அதாவது உண்மை கதை அல்ல, உண்மை நிகழ்ச்சிகளைப் போன்று தோன்றுபவை - வாசகர்களின் நம்பிக்கையை சோதிப்பதாக அது இருக்கக் கூடாது. எழுத்தாளனால் வர்ணிக்கப்படும் நிகழ்ச்சிகளில் வாசகனும் பங்கெடுத்துக் கொள்ளத்தக்கதாகவும், அவ்வனுபவம் வாசகனின் சொந்த அநுபவமாக பாவிக்கக் கூடிய உணர்வை ஏற்படுத்தக் கூடிய தாகவும் இருக்க வேண்டும்.

'கதையின் கரு' என்னும் தலைப்பில் உள்ள மூன்றாம் அத்தியாயத்தில் எப்படி கதை எழுத்தாளனின் கற்பனையில் உருவாகி உணர்ச்சிப் பெறுகிறது என்பதை விவரிக்கிறார். எழுத்தாளனின் உணர்ச்சி ததும்பும் உள்ளத்தில் விதைக்கப்பட்ட கதைக்கரு, தனக்கே உரிய முறையில் கிளைவிட்டு வளர்ந்து கருவில் இருந்து வெளிவருவதுபோல் வெளிவரும். சில கதைகள் மனிதனின் மனநிலையை எடுத்துக் காட்டும், வேறு சில மனிதனின் சுற்றத்தை படம் பிடிக்கும். மற்றும் சில சுற்றுச் சூழ் நிலையை பிரிதிபலிக்கும். கதைகள், உணர்ச்சிகளை, வேதனை களை, அன்பை, காதலை, பயம் போன்றவற்றை எடுத்தாளலாம். ஆண்களும், பெண்களும் இருக்கும் வரை, இவ்வுலகில் கதைக்கு தேவையான கருத்துக்கள் குறைவின்றி தோன்றக்கூடும் என்று சொல்லப்படுகிறது. பெரும்பான்மையானவர்களால் பொதுவாக கையாளப்படும் கருத்து காதலாக இருந்தாலும், வேறு பல உணர்ச்சிகளும் கையாளப்படுவதுண்டு. சிறுகதைக்கு உயிர் போன்றது கதைக்கரு, அதை கதாசிரியராலேயே தேர்ந்தெடுக்கப் படுகிறது. அது ஒரு நிகழ்ச்சியிலிருந்தோ, ஒரு மனிதனின் பழக்கத்திலிருந்தோ அல்லது சுற்றுச் சூழ்நிலையிலிருந்தோ பிறக்கலாம். பல வகையான கதை கருத்துக்கள் இருக்கின்றன.

அவைகள் மனோபாவத்திலிருந்தோ, அல்லது கற்பனையிலிருந்தோ பிறந்தவையாக இருக்கலாம். அல்லது சில மனிதர் களின் குறிப்பிடத் தகுந்த பண்புகளிலிருந்தும் பிறக்கலாம். எதிர்மாறான பண்புகள் கொண்ட மனிதர்கள் மற்றும் ஒத்த பண்புகள் கொண்ட மாந்தர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் அவர்களுடைய நடத்தையில் காணப்படும் முரண்பாடான போக்குகள், அவர்களுக்குள் ஏற்படும் கருத்து மோதல்கள், பல் வேறு நிகழ்ச்சிகளில் அவர்களுக்குள் காணப்படும் மாறுபட்ட செய்கைகள் அகியவை கதை எழுதுவதற்கு எழுத்தாளர்களுக்கு பயன்படுகின்றன. சில குறிக்கோள், அல்லது உத்தரவின் மீது கதாசிரியனுக்கு உள்ள கவலையின் விளைவாக சில கதைகள் பிறந்திருக்கலாம். அக்கதைகள் அறிவுறுத்துபவையாக எழுதப் பட்டிருக்கும். சம்பவங்கள் அறிக்கையின் மூலமாக அனு மானித்தல், அதிசயமான நிகழ்ச்சிகள், உணர்ச்சிகள், சில குறிப் பிடத்தக்க பண்புகள், முரண்பாடுகள் வேதாந்தங்கள் ஆகியவை சிறு கதை பிறப்பதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

பின்வரும் அத்தியாயங்களில் எம்.பி.பால் கதைகளின் வளர்ச்சியைப் பற்றி தன் விவாதத்தை தொடர்கிறார். சிறு கதையின் அமைப்பை உருவாக்கும் தருணத்தில் அக்கதையில் ஏற்படும் நெருக்கடி நிலைக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கிறார் கதாசிரியர். ஏனென்றால் அது கதைப் பின்னலுக்கு உயிர் போன்றது. கதைக்கு கரு போன்றது. இதை கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு தெளிவாக, திடமாக தன் கதை அமைப்பை பின்னிப் பிணைக் கிறார். கதாசிரியர் நாவல் எழுதும்பொழுது பெரும்பான்மையான நாவலாசிரியருக்கு நாவலின் கதை வளர்ச்சியைப் பற்றி முன்பே தெரிந்திருக்க நியாயமில்லை. அது தன் வழியில் தானே வளர்ச்சி பெறுகிறது. ஆனால் சிறுகதையை பொறுத்த வரையில் எழுத்தாளர் அம்மாதிரியாக செயல்படுவதற்கு வாய்ப்பில்லை. அவர் நெருக் கடியை முன் கூட்டியே அனுமானிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு உறுதியாக அனுமானித்தவுடன் அதைச் சுற்றி கதையை மெதுவாகவோ, அல்லது சுறுசுறுப்புடனோ விவரித்து செல்ல வேண்டும். ஆனால் எக்காரணத்தை கொண்டும் திடீரென்று நெருக்கடியை நோக்கி அதை வருணித்துக் கொண்டு சென்று கதையை முடிக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் அக்கதை நம்பக் கூடியதாக அமையாது. கதையின் முடிவில் நெருக்கடியின் உச்ச நிலையானது இயற்கையாக உருவானவை என்று வாசகன் உணரும் வகையில் அமைய வேண்டும். இதில் கதாசிரியர்கள் அதிக கவனம்

செலுத்த வேண்டும் என்று எம்.பி.பால் வலியுறுத்துகிறார். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலுள்ள சமுதாயத்தை பிரிதிபலிக்க விழையும் ஒரு நாவலாசிரியன் பல கருத்துக்களையும், கதை அமைப்புகளையும் அறிமுகம் செய்ய முற்படலாம். சிறு கதை எழுத்தாளர்கள் முழு கவனமுள்ளவர்களாகவும் தங்கள் நோக்கங் களில் பற்றுள்ளவர்களாகவும், இருப்பர். தன் படைப்பு கூடிய வரையில் மிக தெளிவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள சிறுகதையாசிரியர்கள் முயலுவது மிக முக்கியமாகும். சிறுகதை ஒரு கருத்தை சூசகமாக தெரிவிப்பதாக இருக்க வேண்டும். அதன் நடை கதையின் கருத்தை ஒட்டியதாக இருக்க வேண்டும். கதையின் நடை, கருத்து, கதைப்பின்னல் ஆகியவை ஒன்றுடன் ஒன்று பிணைந்து, பூரணத்துவம் பொருந்தியதாக அமைய வேண்டும். சூழ்நிலை, கதாபாத்திரம், நிகழ்ச்சிகள், முக்கிய சம்பவங்கள் ஆகியவை எல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் ஐக்கியத்தை ஏற்படுத் துவதாக இருக்க வேண்டும். இவ்வொற்றுமையின் அவசியத்தை வலியுறுத்துவதற்காக எம். பி. பால் அரிஸ்டாடிலினால் குறிப் பிடப்படும் ஒற்றுமைகளை விளக்குகிறார். அதில் செயற்பாடுகளின் ஒற்றுமை (Unity of Action) மிக முக்கியமாகும். பெரும்பாலான மலையாள சிறுகதையாசிரியர்களின் முக்கிய குறைபாடு அவர்களின் கவனக்குறைவே ஆகும். மேலும் கதையின் கருத்தை உணர்த்து வதற்கு முற்படாமல் அவர்கள் பெரும்பாலும் வார்த்தை ஜாலங்களை பயன்படுத்தி தாங்கள் விரும்பும் விளைவுகளை ஏற்படுத்த முற்படுகிறார்கள். வாழ்க்கையை திறமையாக சித்தரிப் பதற்கு தேவையற்ற வார்த்தை ஜாலங்கள் ஒருபோதும் உபயோகப் படாது.

சிலர் கதைக்கு சம்பந்தமில்லாத, தனிமையில் பேசுதலை (Soliloquy) இடையிடையே உபயோகிப்பதும், வேறு சிலர் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத வர்ணனைகளை நட்சத்திர குறியுடன் உபயோகிப்பதும் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

ஐந்தாவது அத்தியாயத்தில் கதைப்பின்னலின் அமைப்பை எம்.பி.பால் ஆராய்கிறார். கதைப்பின்னல் ஒரு தொடக்கக் கதையும், இடைப்பகுதியையும், கடைப்பகுதியையும் கண்டிப்பாக கொண்டிருக்கும். ஆர். எல். ஸ்டீவன்சனின் 'மார்கோபம்' கதையை ஒரு நல்ல கதைப் பின்னலுக்கு உதாரணமாக குறிப்பிடுகிறார். சிறு கதையின் எந்த ஒரு பாகமும் செயற்கையான தோற்றத்தை

கொண்டிருக்கலாகாது. கதையின் சிக்கலை தீர்த்து வைக்கும் கடைப்பகுதியில் மிக மிக முக்கியமான கவனம் செலுத்த வேண்டும். கதைப்படிப்பவர்க்கு, கதையின் முடிவு தெளிவு படுத்தும் விதம் கதையோடு ஒன்றிணைந்து அமைய வேண்டுமே யல்லாமல் ஒரு சிறிதும் செயற்கையாக தோன்றக் கூடாது. அதே சமயம் டாகூரின் சிறுகதைகள் போல் ஒவ்வொரு சிறு கதையும் படிப்பவர்களின் கற்பனையை தூண்டுவதற்கு போதுமான சந்தர்பங்கள் கொண்டிருப்பதாக இருப்பது அவசியம்.

ஒரு கதையை பல்வேறு விதமாக உருவாக்கலாம் என்று எம்.பி.பால் கூறுகிறார். நாவலைப்போன்று சிறுகதையும் நிகழ்ச்சிகளை கதைக்கேற்றபடி அமைக்கப்பட வேண்டுமே யல்லாமல், நிகழ்ச்சிகளை வரிசை கிரமப்படி அமைக்கக் கூடாது. உதாரணமாக பின் நிகழும் நிகழ்ச்சிகளினால் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மறக்கப்படலாகாது. ஒரு நிகழ்ச்சி, அடுத்து வரும் காட்சி உருவாவதற்கு தூண்டுகோளாக அமைய வேண்டும். எழுத்தாளர் கதையை, தானே விவரித்து சொல்லலாம். இவ்வித கதைகளில் எங்கும், எல்லா வல்ல எழுத்தாளனே கதை முழுவதும் வியாபித்திருப்பார். அவரே தான் காணும், கோட்கும் நிகழ்ச்சிகளை வாசகர்களுக்கு தானே எடுத்துரைப்பார். அவ்வாறு விவரித்து சொல்லும்போது கதைதானே, வாசகர்களுக்கு புரியுமாறு தெள்ளத்தெளிவாக அமைக்கப்பட வேண்டுமேயல்லாமல், முழு கதையும் எழுத்தாளனே தன் வாய் மூலமாக கூறுவதுபோல் அமைக்கப்படலாகாது. கதையின் முடிவை எழுத்தாளன் வேண்டும் என்றே தனக்குள் மறைத்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு வாசகர்களுக்கு ஏற்படாமலிருப்பது மிகமிக அவசியமாகும். கதையை எப்பொழுது முடிக்கப்பட வேண்டுமோ அப்பொழுது உரிய நேரத்தில் தானாக முடிவது போல் அமைக்கப்பட வேண்டும். வேறுசில கதாசிரியர்கள், கதாபாத்திரங்களின் மூலமாக கதையை விவரிப்பர். அவ்வாறு விவரிக்கும் அக்கதாபாத்திரம், மற்ற கதாபாத்திரத்தை நன்கு புரிந்து கொண்டு அவைகளைப்பற்றி ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் இருந்து கொண்டு விளக்க வேண்டியதாகிறது. மேலும் கதாநாயகனால் கூறப்படும் கதையில் அவன் ஈடுபடும் செய்கைகளினால் ஏற்படும் ஆபத்திலிருந்து கதாநாயகனை பாதிக்காமல் பாதுகாப்பாக இருப்பான் என்று வாசகர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். கதாசிரியரால் அவரது பாத்திரங்களின் மூலமாக கதைய்யை விவரிப்பதும், மற்றும் ஒரு

கதாபாத்திரம் மற்ற பாத்திரங்களுக்கு கதையை விவரிப்பது போன்ற இம்மூன்று முறைகள் அல்லாமல் கடிதம் மூலமாகவும் கதையை விவரிக்கும் மற்றொரு முறையும் வழக்கத்திலிருந்தது.

ஏழாம் அத்தியாயத்தில் எம். பி. பால் கதாபாத்திரங்களைப் பற்றி விவரிக்கிறார். கதை நிகழ்ச்சிகள், கதாபாத்திரங்களினால் உருவாவதுபோல், கதாபாத்திரங்களை கதை நிகழ்ச்சிகளிலிருந்து உயிர்பிக்க வேண்டும். பாத்திரங்கள், அடிப்படை பண்புகள் உண்மையான, மனிதப்பண்புகளுடன் ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். அசாதாரண பாத்திரங்களை புகுத்தி கதை வித்தியாச மாக தோன்றும்படி செய்து சில முக்கிய மனிதப் பண்புகளை பெரிதுபடுத்தி காட்டலாம். நல்ல கற்பனை வளம் பொருந்திய ஒரு சிறுகதை எழுத்தாளன் மக்களிடையே தனக்கென்று ஒரு தனி இடத்தை ஏற்படுத்தி கொண்ட அவனால் கண்டிப்பாக சிறந்த கதாபாத்திரங்களை உருவாக்க முடியும். செயல்கள், வர்ணனைகள் மூலமாகவும், அல்லது கதாபாத்திரத்தின் வாய் மூலமாக வெளிப் படும் வசனங்களின் மூலமாகவும் அல்லது மேற்கூறிய மூன்று முறை களினாலும் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கலாம். கதாபாத் திரங்களினால் இறந்த கால, எதிர்கால எண்ண ஓட்டங்களில் ஏற்படும் முரண்பாடுகளை விலக்குவதின் மூலமாகவும், ஒரு கதா பாத்திரத்தை வெளி கொணரலாம். இக்கதாபாத்திரங்கள் தங்கள் கடந்த கால வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் அவர்களை உருத்திக் கொண்டிருக்கும். இக்கடந்த கால நிகழ்ச்சியின் பிடியி லிருந்து விடுபடக் கதாபாத்திரங்கள் முயலும். இதனால் உருவாகும் மனப் போராட்டங்களின் விளைவாக ஓர் உணர்ச்சி மயமான நிலை ஏற்படும். இந் நிலையில் அக் கதாபாத்திரத்தின் உண்மை யான பண்புகள் வெளிப்படும். கதாபாத்திரங்களின் மனதில் ஏற்படும் எண்ண ஓட்டங்களை தெள்ளத்தெளிவாக வாசகர்களுக்கு எடுத்தியம்பக் கூடியவராக இருக்க வேண்டும். எழுத்தாளர்கள், கதாபாத்திரங்களை தேர்ந்தெடுப்பதிலும், அதை உருவாக்குவதிலும் எவ்வளவு முன்யோசனை தேவையோ அதே அளவு அவைகளுக்கு பெயர் சூட்டுவதிலும் தேவை என்று எம். பி. பால் கூறுகிறார்.

எட்டாவது அத்தியாத்தில் உரையாடல்கள் இயற்கையாகவும், கதாபாத்திரங்களுக்கு தக்கப்படி அமைக்கப்பட வேண்டும், என்பதை உறுதியாக நிலைநிறுத்துகிறார். ஒவ்வொரு கதாபாத்திரமும் தன் மனதில் தோன்றிய எண்ணங்களை, உணர்வுகளை தனக்கே உரிய

முறையில் வெளிப்படுத்தும் உரையாடல்கள் கதையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமேயல்லாமல் அதன் முன்னேற்றத் திற்கு தடையேதும் ஏற்படாவண்ணம் இருக்க வேண்டும். அது சுவையற்ற கதை விவரித்தலில் இருந்து விடுபடுவதல்லாமல், கதாபாத்திரத்தின் சுய பண்பை வெளிக்காட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால் உரையாடல்கள் தேவையற்ற இடங்களிலோ அளவுக்கு அதிகமாகவோ இருக்கக் கூடாது. அது உணர்ச்சி ததும்பியதாகவும், சுவைபடவும், அர்த்தமுள்ளதாகவும், ஊக்கமுள்ள தாகவும் இருக்க வேண்டும். அது ஹாஸ்சியம் பொருந்தியதாகவோ, சோகமுள்ளதாகவோ, இடத்திற்கு தகுந்தாற்போல் இருக்க வேண்டும். நடைமுறை வாழ்க்கையில் உரையாடல்கள் உற்சாகமற்ற, சலனமற்ற, கட்டுப்பாடற்றதாகவும் இருக்கலாம். ஆனால் கதையின் அமைப்பு அல்லது கதாபாத்திரம் சிறப்பாக அமைவதற்கு உரையாடல்கள் சிறப்பானதாகவும், சுவைப்படவும் அமைவது இன்றியமையாததாகும். எந்த ஒரு சிறுகதையும் முழுக்க முழுக்க உரையாடல்களால் மட்டுமே அமைந்திராது. அது பாதிபாகம் உரையாடலும், பாதிபாகம் விவரித்தலும் கொண்டு பின்னப் பட்டதாக அமைந்திருக்கும். எம்.பி.பால் உரையாடல்களை எவ்வாறு பெயர்களில்லாமல் அச்சிடப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒன்பதாவது அத்தியாத்தில் முழுவதும் சிறுகதைக்கு தலைப்பு கொடுப்பது பற்றி ஆராய்கிறார். அர்த்தமில்லாத அடுக்கு மொழியில் அமைந்த சில விநோதமான தலைப்புகளைப் பற்றியும் சாடுகிறார்.

கரூரின் சிறுகதைகளை மதிப்பீடு செய்கையில் எம்.பி.பாலிற்கு நடைமுறை விமர்சனத்தில் உள்ள திறமை நன்கு வெளிப்படுகிறது. நடைமுறை வாழ்க்கையில் உள்ள நிகழ்ச்சிகளை தேர்ந்தெடுத்து அதை தம் கதைக்கு கருவாகக் கொண்டு, அதை கவிதையாக தோன்றும்படி செய்கிறார் கரூர் என்று எம்.பி.பால் கூறுகிறார். அவர் வெளிப்படையாக இச்சமூகத்தை சாடாமல் அதில் உள்ள நன்மை தீமைகளை கண்டிப்புடன் எடுத்தியம்புகிறார். சிறுகதைக்கு மனிதனையே கருவாக கொள்ளும் கரூர் சிறுகதைதுறையில் மாயாஜால மன்னனாக விளங்குவதற்கு அவருடைய மனித நேயமே மூலக் காரணம் என்று கூறுகிறார். ஏழைகளிடமும், பணக்காரர் களிடமும், அவர் மனித நேயத்தை காண்கிறார். எங்கெல்லாம் அநியாயம் தாண்டவமாடுகிறதோ, அங்கெல்லாம் அதை

எதிர்க்கிறார். அவருடைய கதாபாத்திரப் படைப்புகளை நாம் இன்றைய வாழ்க்கை நடைமுறையில் பலமுறை சந்திக்கின்றோம். மேற்கத்திய நாடுகளில் பிரபலமாகியுள்ள சில கதைகள் அதன் படைப்பாளர்களால் படிக்கப்படாமல் இருப்பதை அறிந்த எம்.பி.பால் எல்லா இடங்களிலும் மனிதப் பண்புகள் எங்கும் ஒரே மாதிரி இருப்பதால் இலக்கியங்களும் ஒரே மாதிரியாக காணப்படு கின்றன என்று எம்.பி.பால் கூறுகிறார். மேற்கத்திய நாடுகளில் சிறு கதை வளர்ச்சி இரண்டு கால கட்டங்களாக உள்ளது என்றும், அதில் முதல் காலகட்டம் மாபஸாண்ட் (Maupasant) காலமும், இரண்டாம் காலகட்டம் செக்கோவ் (Chekov) காலமும் ஆகும் என்று குறிப்பிடுகிறார். இவ்விருவர்களுக்கு முன்பு கதைகள் மிகவும் குறுகியதாக இருந்தாலும், இவ்விருவரும் சிறுகதை அமைப்பில் ஒரு புரட்சிகரமான மாறுதலை உருவாக்கி அதை ஒரு காவியத்திற்கு இணையாக மாற்றினார்கள் என்று எடுத்துக் கூறிய எம்.பி.பால் இளம் எழுத்தாளர்கள் மாபஸண்ட், செக்கோவ் போன்றவர்களை பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். கேசரி பாலகிருஷ்ண பிள்ளையின் மொழி பெயர்ப்பு நூல்களை, தேவ், தகழி சிவசங்கர் பிள்ளை, பஷீர், பொற்றேகாட், பொன்குன்னம் வர்க்கி, லலிதாம்பிகே அந்தர்ஜனம் போன்றவர்களின் படைப்புகளை புகழ்ந்துரைக்கிறார் எம்.பி.பால். சிறுகதை துறையில் ஆற்றிய பணியின் விளைவாக அவர் அத்துறையில் ஒரு வழி காட்டியாக விளங்குகிறார்.

10. முற்போக்கு இலக்கிய இயக்கம்

அக்கம்பக்கத்திலுள்ளவர்களிடம் அக்கறை காட்டுவது முக்கிய கிருஸ்துவ சமூகத்தினரின் சிறப்பியல்பு ஆகும். எம்.பி. பால், பொன் குன்னம் வர்கி, ஜோசப் முண்டசேரி போன்றவர்கள் கிருஸ்துவ ஏகாதிபத்தியத்துடன் மோதியவர்கள். இவர்கள் சமுதாயத்தில் நிலவும் நியாயங்கள், பொருளாதார விடுதலை, அறியாமையில் இருந்து விடுவித்தல் போன்ற கொள்கைகளில் அதிக பற்று கொண்டிருந்தனர். இச்சிறப்பியல்பு இம்மூவரையும் முற்போக்கு இயக்கத்தில் சேர்வதற்கு தூண்டுகோலாக அமைந்தது. பொன் குன்னம் வர்கியும், முண்டசேரியும் பிற்காலத்தில் வெளிப்படையாக மார்க்ஸிஸ்ட் தத்துவத்தை ஆதரித்தனர். தனி மனிதனின் சுதந்திரத்தை ஆதரித்த எம்.பி.பால் கிருஸ்துவ தேவாலயத்திற்கும், கம்யூனிசத்திற்கும் ஆட்படாமல் இவை இரண்டிற்கும் சம தூரத்தில் இருந்து வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியும் கிருஸ்துவ தேவாலயங்களும் சமூக முன்னேற்றத்தில் அக்கறை காட்டி வந்தன. எம்.பி. பாலும் ஏழை எளிய மக்களிடம் அக்கறை காட்டி வந்தார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுகளில் சமூக அரசியல் நிலைமைகள் அக்கால எழுத்தாளர்கள் - மக்களின் உள்ளங்களில் ஒரு சமூக விழப்புணர்ச்சியை உருவாக்கியது.

உப்பு சத்தியாகிரஹம் 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டம், 1937 ஆம் ஆண்டு புகுத்தப்பட்ட மண்டல சுயாட்சி, அரிஜனங்களுக்கு அடிப்படை கல்வி, அவர்தம் வாழ்க்கை தரம் உயர்த்த காந்தி ஆரம்பித்த இயக்கம், பல்வேறு கொள்கைகள் கொண்ட பல அரசியல் கட்சிகளின் (காங்கிரஸ், சோசியலிஸ்ட் கம்யூனிஸ்ட், மற்றும், அரச வம்சத்தினர்) ஒருங்கிணைப்பு, 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகப்போரில் பங்கேற்றல், காங்கிரஸ் கட்சியில் சுபாஸ் சந்திர போசிற்கு ஏற்பட்ட எதிர்ப்பின் விளைவாக அவரை கட்சியில் இருந்து வெளியேற்றியதும், அவர் ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் தப்பிச் சென்றதும், ஆகிய இந்நிகழ்ச்சிகள் எல்லாம் 1930-39 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றதால் இக்கால கட்டத்தை புதிய பண்பாடு பொருந்திய, நவீன இந்தியா துளிர் விடுவதற்கு ஏற்ற கரு ஆண்டுகளாகக் கருதப்பட்டது. இச்சூழ் நிலையில் வடஇந்தியாவில் பிரேம்சந்த் தலைமையில் பல

எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்து 1930ஆம் ஆண்டில் முற்போக்கு எழுத்தாளர் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். இவ்வியக்கத்தின் தூண்டுதலால் கேரளாவில் 1937ஆம் ஆண்டு **ஜீவட் சாகித்திய சங்கம்** (Jeevat Sahitya Organization) என்னும் பெயருடைய இயக்கம் உருவாகியது. எம்.பி.பால் முதலில் நேரடியாக இவ்வியக்கத்தில் ஈடுபடவில்லை. இதைப்பற்றி தான் ஆற்றிய சொற்பொழிவில் விளக்கியுள்ளார். மலையாள எழுத்தாளர்கள் ஜீவட் சாகித்தியம் என்ற சொல்லை இந்தியில் இருந்து பெற்றனர். அதன் அர்த்தம் முற்போக்கு இலக்கியம் (Progressive Literature) என்பது. முற்போக்கு இலக்கியம் என்பது மக்களை விஞ்ஞான ரீதியாக சிந்திக்க வைத்து வாழ்க்கையில் முன்னேற்ற பாதையில் இட்டுச் செல்ல தூண்டுகோளாக செயல்படும் இலக்கியமே என்பதாகும். அப்பாதை புரட்சிகரமானதாக இருக்கலாம். எம்.பி. பாலின் கூற்றுப்படி இப்சன் (Ibson) டால்ஸ்டாய், ரொமன் ரோலண்ட், பெர்னாட்ஷா, மற்றும் எச்.ஜி. வெல்ஸ் போன்றவர்கள், ஜீவட் சாகித்தியம் என்ற சொல்லிற்கு உதாரணமாக தங்கள் படைப்புகளில் மனிதநேயத்திற்கு முக்கியத் துவம் கொடுத்த முற்போக்கு எழுத்தாளர்களாக கருதப்பட்டனர். முற்போக்கு எழுத்தாளர்கள் மக்களை எல்லா நிலைகளிலிருந்தும் விடுவிப்பதை குறிக்கோளாக கொண்டனர். மனித நேயத்திற்கு மதிப்பு கொடுக்கும் இந்நிலையில் கலை அவனுடைய அறிவை செம்மையாக்க பயன்படுகிறது. உயர்ந்த நாகரிகத்தைப்போல், மதம், கடவுள், உண்மை, கடமை ஆகியவை எல்லாம் மனிதனால் உருவாக்கப்பட்டவை. அது போல் கலையும் மனிதனால் படைக்கப் பட்டவையே. அதனால் அவனால் உருவாக்கப்பட்டதை அவனுடைய உபயோகத்திற்கல்லாமல், அதை வழிப்பட கூடாது. மனிதனால் உருவாக்கப்பட்டதே அழகு; அதை அவன் பயன்படுத்த வேண்டும். பெர்னாட்ஷாவின் படைப்பான ***பேக் டு மெதுசிலா*** (Back to Methusela) அல்லது ***ஹக்சிலின்*** (Hucsilin) ***பிரேவ் நியுவோர்ல்ட்*** (Brave New World) போன்ற வருங்காலத்தைப் பற்றிய நூல்களில் மனிதன் முன்னேறுபவனாக படைக்கப் பட்டுள்ளான். அவ்வாறு முன்னேறுகையில் அவன் பல இடையூறு களை சமாளிக்க வேண்டி இருந்தது. இவ்விடையூறுகளை சமாளிக்க அவன் பல விஞ்ஞான உபகரணங்களை கையாள வேண்டியிருந்தது.

கலை மனிதன் தன் முன்னேற்ற பாதையை வகுப்பதற்கு உதவிகரமாக இருக்க வேண்டும். இன்றைய நிலையில் மனிதனை பயமுறுத்திக் கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினை நியாயமற்ற

பொருளாதார ஏற்றதாழ்வு ஆகும். இயற்கை வளம் உலகத்தில் சரிசமமாக எங்கும் வியாபித்திருக்கவில்லை. அதனால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் மலிந்துள்ளன. இதன் விளைவாக மக்கள் ஏழை பணக்காரன் என்ற இரு பிரிவாக பிரிந்துள்ளனர். அதனால் முற்போக்கு எழுத்தாளர் கூட்டம் கலையும் இலக்கியத்தையும் ஒரு கருவியாக பயன்படுத்தி மக்களிடையே காணப்படும் பொருளாதார ஏற்றதாழ்வுகளை நீக்க இந்த முற்போக்கு எழுத்தாளர் கூட்டம் முயன்றது. அதனால் மனித நேயத்தில் பற்றுள்ள எம்.பி.பாலிற்கு இவ்வியக்கத்தின் பால் ஒரு பற்று - அனுதாபம் ஏற்பட்டது. இடதுசாரி கொள்கையில் பற்றுள்ள பல எழுத்தாளர்கள் இவ்வியக்கத் தின்பால் ஈர்க்கப்பட்டனர். ஆனால் ஜீவட் சாகித்திய இயக்கம் முற்போக்கு எண்ணம் கொண்ட பல எழுத்தாளர்களின் சேவையை பெறுவதற்கு பெரும் முயற்சி செய்தும் பலன் அளிக்கவில்லை. இவ்வியக்கம் மலையாள இலக்கியத்திற்கு குறிப்பிடதக்க பலனை அளிக்க முடியாமல் போயிற்று. 1944ஆம் ஆண்டு இவ்வியக்கம் முற்போக்கு இலக்கிய இயக்கத்திற்கு சந்தர்ப்பம் கொடுத்து சமுதாய வளர்ச்சிக்கு தடை ஏற்படுத்தும் தீய சக்திகளை எதிர்த்து முன்னின்று வழி நடத்தி செல்ல எம்.பி.பால் அழைக்கப்பட்டார்.

மலையாள இலக்கியத்தில் முற்போக்கு இயக்கம் 1944ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் முதல் கூட்டத்திற்கு ஜி. சங்கர குருப்பும், இரண்டாம் கூட்டத்திற்கு எம்.பி.பாலும் தலைவராக இருந்து நடத்தப்பட்டது. ஜோசப் முண்டச்சேரி போன்றவர்கள் பேசினார்கள். மேற்கூறிய கூட்டம் ஒன்றில் இவ்வியக்க எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்ட அறிக்கையை பி.கேசவ தேவ் வெளியிட்டார். கூட்டத்தில் எம்.பி. பால் தலைவராகவும் சி. அச்சுத குருப், பி.கே. கேசவதேவ் போன்றவர்கள் கன்வீனர்களாகக் உள்ள ஒன்பதுபேர் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இரண்டாம் ஆண்டு கூட்டம் 1945 ஆம் ஆண்டு கோட்டயத்தில் நடத்தப்பட்டது. முதல் கூட்டத்தை ஹிரேன்திரநாத் சட்டோ பாத்தியாய என்பவர் ஆரம்பித்து வைத்தார். எம்.பி.பால் வரவேற்றுரை வழங்கினார். (இக்கூட்டத்திற்கு முண்டச்சேரி தலைமை தாங்கினார்) இரண்டாம் கூட்டத்திற்கு செங்கம்புழா கிருஷ்ணபிள்ளையும் மூன்றாம் கூட்டத்திற்கு (Session) குட்டி கிருஷ்ணபிள்ளையும் தலைமை ஏற்றனர். இக்கூட்டங் களில் ஆற்றப்பெற்ற சொற்பொழிவுகளைத் தொகுத்து முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன? (What is progressive Literature?)

என்னும் தலைப்பில் புத்தகமாக வெளியிட்டனர். மேற்கூறிய கமிட்டியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 28 ஆக விரிவாக்கப் பட்டது. முண்டசேரியும், சங்கர குரூப்பும் புதிய கமிட்டியில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். எம்.பி.பால் மறுபடியும் தலைவராகவும், சி. அச்சுத குரூப் கன்வீனராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். 1946-47 ஆம் ஆண்டுக் கூட்டங்கள் நடைபெறவில்லை என்று தோன்றுகிறது. இக்காலகட்டத்தில் தான் பல ஒழுங்கீனங்கள் ஏற்பட்டு உட் பூசலால் இருவேறு குழுக்களாக பிரிந்து இவ் வியக்கத்தை இருவேறு திசைகளை நோக்கி இழுத்துச் சென்றனர். மார்க்சீய தத்துவத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் புரட்சியினால்தான் தனிமனிதன் முன்னேற முடியும் என்று கருதும் பல மார்க்லிஸ்ட்டு கள் இருந்தனர். அவர்கள் எழுத்தாளர்களின் முதல் கடமை அவர்கள் ஜாதி வேற்றுமையை எதிர்த்து போராட வேண்டும் என்பது; மற்றொரு சாரார், எழுத்தாளர்களின் சுதந்திர உரிமையை நிலைநாட்டுவதற்கு ஆவேசமுடன் எதிர்த்து நின்றனர். அவர்கள் மக்கள் மனத்தில் ஒரு சமுதாயநோக்கை ஏற்படுத்தி அதன்மூலம் அம்மக்களை முன்னேற்ற முடியும் என்று உறுதியாக கூறினார். ஒவ்வொரு இலக்கியப்படைப்பும் அழகாகவும், கலை நுணுக்கத் துடனும் அமைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். சம்பிரதாயப்படி அவ்வழகு அமைக்கப்பட வேண்டியது முக்கிய மானதொன்று என்று முண்டசேரி கருதினார். 1948 ஆம் ஆண்டு திருச்சூரில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முற்போக்கு இயக்கத்தின் மூன்றாவது கூட்டத்தில் இவ்விரு குழுக்களிடையே நிலவி வந்த கொள்கை வேறுபாடுகள் வெளிப்படையாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தை முல்க்ராஜ் ஆனந்த் தொடங்கி வைத்தார். ஜோசப் முண்டசேரி கன்வீனராக இருந்தார். அக்கூட்டத்தில் மார்க்ஸிட்டு குழுவில் இருந்த இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், கே. தாமோதரன், மற்றும் பலர் சேர்ந்து கல்கத்தாவில் பிரகடனப்படுத்தப்பட்ட மார்க்ஸிஸ்ட் கொள்கையை பொதுகுழு கூட்டத்தில் நிறை வேற்ற முயற்சி செய்தனர். ஆனால் எம்.பி.பால், தேவ் மற்றும் பல உறுப்பினர்கள் அக்கொள்கையை உறுதியுடன் எதிர்த்து நின்று தோற்கடித்தனர். எம்.பி.பால் அப்பொழுது வெளிப்படையாக சோவியத்து ஸ்டாலினிசத்தை எதிர்த்து குரல் எழுப்பினார். 1949ஆம் ஆண்டு இவ்வியக்கத்தின் ஆண்டு கூட்டம் கொல்லத்தில் நடைப்பெற்றது. எம்.பி.பால் அக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இக்கூட்டத்திற்கு பிறகு இவ்வியக்கம் பிசுபிசுத்து

போயிற்று. 1954ஆம் ஆண்டுவரை இவ்வியக்கம் தொடர்ந்து பணியாற்றி வந்தது. அதன்பிறகு அது கலைந்து போயிற்று. *'முண்டசேரியின் ஆத்மகதா'* என்ற சுயசரிதையில் 43ஆம் அத்தியாயத்தில் அவர் கொல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தைப்பற்றி நன்கு தெளிவாக விளக்குகிறார்.

கேரளாவில் சாகித்திய பரிஷத் என்னும் இலக்கிய சங்கம் பல இலக்கிய கர்த்தாக்களை அங்கத்தினர்களாக கொண்டு இயங்கி வந்தது. அதில் இருந்த இளம் இலக்கியவாதிகளால் அச்சங்கத்தின் செயல் முறையை அங்கீகரிக்க முடியவில்லை. பெரும்பான்மையான இளம் எழுத்தாளர்கள் அக்காலத்தில் வழக்கில் இருந்து வந்த இலக்கிய அமைப்பையும் நடையையும் எதிர்த்து குரல் எழுப்பினார்கள். வள்ளத்தோல் அல்லது குமாரன் ஆசானைப் போன்று செங்கம் புழா ஒரு நல்ல ரொமான்டிக் புலவராக திகழந்தார். ஆனால் அவருடைய நடை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அவர் நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் விஷயங்களை தன் படைப்புகளில் முத்திரைப் பதித்ததுபோல் தனக்கே உரிய முறையில் எடுத்தாள்வார். அவரை பலர் சமூகக் கண்ணோட்டத்துடன் நோக்கினார்கள். கேடமங்கலம் பாப்பு குட்டி இவரை ஆதரித்தார். பழம்பெரும் எழுத்தாளர்களில் இருந்து சங்கர குரூப் மாறுபட்டிருந்தார். செங்கம்புழாவும், ஜி. சங்கர குரூப்பும் முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்துடன் தங்களை முழுமனத்துடன் ஐக்கியப் படுத்திக்கொண்டனர். இவ்வியக்கத்தில் முக்கியமாக உரைநடை எழுத்தாளர்கள், சிறுகதை, நாவல் மற்றும் நாடக எழுத்தாளர்கள் இருந்தனர். சமுதாயத்தில் முன்னனியில் உள்ள அவர்கள், தங்கள் உரிமையை நிலைநிறுத்திக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் ஆவலையும் ஆதங்கத்தையும் எடுத்துரைத்தனர். தேசியவாதியாகவும், மார்க்ஸிஸ்டாகவும் இருந்த குட்டி புழா சிந்தனையை புதிய முறையில் செலுத்த தலைப்பட்டார். சிந்தனையை வளர்ப்பதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். எம்.பி.பாலும் முண்டசேரியும் சமுதாயத்தின்பால் அக்கரையும் புரட்சிகரமான சிந்தனையையும் தொண்டிருந்தனர். இவ்விருவரையும் கேசரி பாலகிருஷ்ண பிள்ளை போதிய அளவில் ஊக்குவித்தார். ஒடுக்கப்பட்டவர்களின் ஆசை அபிலாஷைகளை தேவ், தகழி மற்றும் பஷீர் போன்ற எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த சிறுகதைகளில் எடுத்துரைத்தனர். மார்க்ஸிஸ்ட்களான இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், கே. தாமோதரன், சி. அச்சுத குரூப், எம்.எஸ். தேவதாஸ் போன்றவர்கள் பொறாமை

கொள்ளத்தக்க அளவிற்கு படிப்பாளியாகவும், நேர்மையானவர் களாகவும், பண்புள்ளவர்களாகவும் இருந்த எம்.பி.பாலை தங்களுக்கு சிறந்த தலைவராக இருப்பதற்கு உகந்தவர் என்பதை உணர்ந்தனர். ஆதலின் அவரை முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் செயற்கமிட்டியின் தலைவராக தேர்தெடுக்கப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. 1930-40ஆம் ஆண்டுகளில் அவர் இவ்வியக்கக் கூட்டங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளில் இருந்து, இலக்கியத் திற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பணியை நன்கு அறிந்து கொள்ளலாம். சொரனூரில் நடந்த கூட்டத்தில் இவர் ஆற்றிய தலைமை சொற்பொழியில் இவ்வியக்கத்தின் குறிக்கோளையும் அதன் பணியையும் தெளிவாக உணரலாம்.

> ''மனிதனின் ஒளிமயமான எதிர்காலத்தின்மீது அசைக்க முடியாத நம்பிக்கையும், உலகலாவிய சகோதரத்துவமும், ஷெல்லியினால் (Shelly) சித்தரிக்கப்பட்ட சுதந்திரத் தன்மையை நிலைநிறுத்தவது ஆகியவையே இம்முன்னேற்ற இலக்கிய இயக்கத்தின் அடித்தளம் ஆகும். இலக்கியமும் கலையும் முற்போக்கானவையாக இருந்து மனிதன், மேற்கண்ட குறிக்கோளை புரிந்து கொள்ள துணை செய்பவையாக இருக்க வேண்டும். அவை மனிதனை பயமின்றி சுறுசுறுப்புள்ள வராகவும், சாகசம் புரியக் கூடியவர்களாகவும் ஆக்க வேண்டும். கடந்த கால வாழ்க்கை மனிதனுக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டுமே ஒழிய அது அவனுக்கு வழிகாட்டும் நட்சத்திரமாக ஒரு காலமும் இருக்க முடியாது. நியுகிளாஸிஸ்ட்டுகள் (Neoclassists) பழமைகளை உறுதியுடன் கடைபிடிப்பது மட்டுமல்லாமல் அவைகளை தெய்வங்களாக வழிபட தலைப்பட்டனர். மனிதன் கடந்த காலகொள்கை பிடியில் இருந்து விடுபட வேண்டும். அவன் வாழும் தற்கால உலகத்தை பார்த்து அதில் இருந்து அவன் ஊக்கம் பெற வேண்டும். முன்னேற்ற இலக்கியம் இளஞர் களின் விநோதமான (கற்பனைான) கூச்சலாகவோ, அல்லது பண்பாட்டு துறையை கைப்பற்ற கம்யூனிஸ்டுகளை திட்ட மிட்ட நடவடிக்கையாகவோ இருக்கக் கூடாது.
>
> முன்னேற்ற இலக்கிய கூட்டத்தில் உள்ளவர்கள் சமுக நியாயத்தின்மீது உண்மையான அக்கரை உள்ளவர்கள், பொருளாதார விடுதனல எம்முறையிலாவது அடைந்தே

தீரவேண்டும்; ஆனால் அது கம்யூனிஸத்தின் மூலமாகத்தான் வரவேண்டும் என்ற அவசியம் இல்லை. முன்னேற்ற இலக்கியவாதிகள் சமுதாய கெடுதிகளை எதிர்த்து போராடி சமூக நியாயத்தை நிலை நாட்ட பாடுபடவேண்டும். இந்நாள்வரை கவிதைகள் கடவுள், இயற்கை மற்றும் பெண்களை அடிப்படை கரு பொருளாக கொண்டு படைக்கப் பட்டன. பிறகு விஞ்ஞான ரீதியாக சிந்தித்து, சமூக உண்மைகளை எடுத்தாள ஆரம்பித்தன கவிதைகள். எழுத்தாளர்களின் புரட்சிகரமான மனப்போக்கு முன்னேற்ற இலக்கியங்களை உருவாக்குவதற்கு உதவிகரமாக இருந்தது. நேர்மையாக வாழ்க்கையை நடத்துவதற்கும் காரணமாக அமைந்தது.''

மேற்கண்ட சொற்பொழிவில் முன்னேற்ற இலக்கியத்தின் அடிப்படை கொள்கைகளைப்பற்றி நன்கு தெளிவாக்குகிறார். பெரும்பான்மையான மலையாள இலக்கியவாதிகள் அந்நாள் வரை கடந்த காலத்தைப்பற்றியும், புராணங்களில் இருந்தும் தன் படைப்புகளுக்கு தேவையான கருக்களை தேர்ந்தெடுத்தனர். புதிய எழுத்தாளர்கள் நிகழ்கால நிகழ்ச்சிகளை விளக்கிக்கூறி ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடிகோள் வேண்டும் என்று எம்.பி. பால் விரும்பினார். பழைய எழுத்தாளர் கூட்டம் பரம்பரை பழக்க வழக்கத்தின் முக்கியத்துவத்தையும் உயர்வை பற்றியே சிந்தித்தனர். புதிய எழுத்தாளர்கள் மனித நேயத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றி அவனை உலுத்துப்போன மூட நம்பிக்கையில் இருந்து விடுபட பாடுபட்டனர். ஒரு விதத்தில் பழம் எழுத்தாளர்கள் நிகழ்கால நிகழ்ச்சிகளை புறக்கணித்து விட்டு ஒதுங்கி ஓடுபவர்களாக இருந்தனர். புதிய எழுத்தாளர்கள் கட்டாயமாக நிகழ்காலத்தை நன்கு புரிந்து கொண்டு முன்னேற்ற பாதையில் வீறுநடை போட வேண்டும். சமுதாய நிகழ்ச்சிகள் இலக்கிய படைப்புகளுக்கு மூலக்கருவாக அமைய வேண்டும். கடியகத்தில் (Gadyagathi) உள்ள கற்பனை உரையாடலில் பாய்மரக்கப்பலில் உள்ள சுக்கானுக்கும், பாய் மரத்திற்கும் நடைபெறும் கற்பனை உரையாடலில் 'எம்.பி.பால் இலக்கியம் நற்பயன் அளிக்க கூடிய வகையில் அதை நிர்வகிக்க வேண்டும். சுக்கானும், பாய்மரமும் ஒரு சேர இணையாக செயல்பட்டு கப்பலை அதன் இலக்கை நோக்கி நகரும்படி செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நல்ல இலக்கியங்களை உருவாக்கி அதை ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாக பயன்படுத்தி சமூகமாற்றங்களை ஏற்படுத்துவதற்காக உலகம் முழுவதும் ஓர் இயக்கம் இயங்கி வந்தது. அதன் விளைவாக ஊக்கம் பெற்ற அகில இந்திய முன்னேற்ற இலக்கிய இயக்கத்தின் ஒரு கிளையாக செயல்பட்டு வந்த கேரள இலக்கிய நிறுவனத்தினைப்பற்றி கோட்டயத்தில் நடை பெற்ற ஒரு கூட்டத்தில் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார் எம்.பி.பால். சமஸ்கிரத மரபுரிமையை முழுவதும் நம்பி இருந்த முன் தலைமுறை எழுத்தாளர்கள் நவீன இயக்கியத்தின் செல்வாக்கை தடுத்து நிறுத்த விரும்பினார்கள். முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள் சமஸ்கிருத இலக்கியத்தின் பணியை (Contribution) மதிக்கும் அதே சமயத்தில், இந்திய பண் பாட்டு குறைகளை பற்றி நன்கு அறிந்திருந்தனர். மலையாள இலக்கியம் அதற்கே உரிய தனித்தன்மை பொருந்தியது. அது கண்மூடித்தனமாக சமஸ்கிருத இலக்கியத்தை நம்பி இராமல் கிழக்கித்திய மேற்கத்திய இலக்கியங்களில் இருந்தும் கருத்துக்களை எடுத்தாளலாம். மலையாள இலக்கியம் கேரள மண்ணிற்கே முதன்மை தர வேண்டும்.

முதலில் மலையாள இலக்கியங்கள் பிரபுக்களைப் பற்றியதாக இருந்தது. அரச பரம்பரையினர் மகிழ்விக்கும் ஒரு சாதணமாக மாறியது. பொது மக்களின் பால் அதற்கு தொடர்பற்று இருந்தது. இந்நிலை முற்றிலும் மாற்றப்பட வேண்டும். இலக்கியமும் கலையும் மனிதனைப்பற்றியதாக, மனிதனுக்காக அவனுடைய முன்னேற்றத்திற்காக படைக்கப் பட வேண்டும். விஞ்ஞானமும், சாஸ்திரங்களும், அரசியலும் கூட மனிதனுக்காக உருவானவையே. எல்லா உயர்ந்த இலக்கியங்களும் ஓர் நோக்கம் கொண்டிருக்கும். ஆனால் அந்நோக்கம் ஒருபோதும் மனித வாழ்க்கைக்கு தடையாக இருக்கக் கூடாது. போதனை செய்யும் ஒரு படைப்பில் கலை நுணுக்கம் இருக்காது. முக்கியமாக அதில் அழகுணர்ச்சி காணப்படுவதில்லை. உயர்ந்த இலக்கியங்கள் ஒரே குறிக்கோளுடன் போதிப்பதை விட்டு விட்டு குறுக்கும் நெடுக்கமாக பின்னிப் பிணைந்து நீண்ட காவியமாக அமைக்கப்பட வேண்டும். இராமாயணம் மற்றும் ***வெர்ஸ்ட வொர்த்து*** போன்ற காவியங்களில் மேற்கண்ட உண்மை நன்கு புலப்படும். நல்ல இலக்கியங்கள் எப்பொழுதும் மக்களின் முன்னேற்றத்தையே குறிகோளாக கொண்டிருக்கும். குறுகிய மனப்போக்குடைய சிலர் தர்ம சாஸ்திரங்களின் அர்த்தங்களை ஓர் வரம்பிற்குட்படுத்தி, நல்லொழுக்க விதிமுறைகளை ஓர் குறுகிய

வட்டத்திற்குள் அடைக்க நினைத்தனர். உயர்ந்த இலக்கியங்கள் மனித இனத்தை கடந்து அவனுடைய கற்பனையை விசால மாக்கியது. முற்போக்கு இலக்கியம் எந்த விஷயத்தைப்பற்றியும் எடுத்தாள முடியும். அது முக்கியமாக பொது மக்களை அவர் களுடைய குறுகிய மனப்பான்மையில் இருந்து விடுபட செய்ய முடியும். அதனுடைய விதிமுறைகள் மனிதனை சுறுசுறுப்புள்ள வனாக மாற்றக்கூடியதாக இருக்க வேண்டும். எம்.பி.பால் முற்போக்கு இலக்கியவாதிகள், கம்யூனிஸ்ட்டுகள் என்பதையும் அவர்கள் பரம்பரை பழக்க வழக்கங்களை பழிப்பவர்கள் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறார். முற்போக்கு இலக்கியங்களின் உறுதியான குறிக்கோள் மனிதனை அவனுடைய பிற்போக்கான எண்ணங்களில் இருந்து விடுவித்து அவனை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லவதே ஆகும்.

எம்.பி. பாலின் எண்ணங்கள் விஞ்ஞான ரீதியானதே ஒழிய அவர் ஓர் கம்யூனிஸ்ட் அல்ல. அவருடைய கூட்டாளிகள் முற் போக்கு இலக்கிய கழகத்தை கம்யூனிஸிஸ்ட் கட்சியின் கலாச்சார பிரிவாக மாற்றுவதற்காக செய்த முயற்ச்சியை அவர் உறுதியுடன் எதிர்த்தார். திருச்சூரில் நடைபெற்ற கூட்டத்தில் அவருடைய தலைமையுரையில் முற்போக்கு இலக்கிய கழகத்தை கைப்பற்ற கம்யூனிஸ்ட்டுகள் செய்த முயற்ச்சியை எதிர்த்து அவர் வெளிப் படையாக குரல் எழுப்பினார். அவருடைய தலைமையுரை எழுத்தாளர்களின் சுதந்திரத்தன்மைக்கு ஆதரவாகவும், முதல்தரமான வாதமாகவும் இக்கழகத்தை சேர்ந்த சில உறுப்பினர்கள் உருவாக்கிய கம்யூனிஸிஸ்ட் அறிக்கைக்கு கடுமையான கண்டனமாகவும் விளங்கியது. ஜோசப் முண்டசேரி இக்கூட்டத் தலைவராக (Convener) இருந்தார். அவரும் மார்க்ஸிஸ்ட் கட்சியின் ஏற்பாட்டின்படி இவ்விலக்கிய கழகத்தை அதன் கலாச்சார பிரிவாக மாற்றச் செய்த முயற்சியை தவிர்க்க முயற்சி செய்தார். கே. தாமோதரன் என்ற மார்க்ஸிஸ்ட்டு தலைவர் எம்.பி.பாலை நேரடியாகவும், ஜோசப் முண்டசேரியை மறை முகமாகவும் எதிர்த்து வந்தார். மங்களோதயம் (Mangolodayam) பத்திரிகையில் பணியாற்றும் ஜோசப் முண்ட சேரி அப்பத்திரிகையில் தன் சிறந்த கட்டுரையின் மூலமாக தன்மீது கூறிய குற்றச்சாட்டுகளை உடைத்தெறிந்தார். தலைசிறந்த கலைகள் உருவாவதற்கு மூலக்காரணமாக இருந்த கலைநுணுக்க வெளிப் பாட்டு விதிமுறைகள் என்ற (Roopa Bhadala) இலக்கிய கொள்கையை சோசலிஸ்ட் கொள்கைகள் இலக்கியப் படைப்புகளில்

ஊடுறுவுவதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்திற்கு எதிர்ப்பாக உருவாக்கினார் ஜோசப் முண்டசேரி. எம்.பி. பாலும் இவ்விதி முறைகளை ஆதரித்தார். இலக்கியங்கள் எல்லா நடைமுறை உபயோகத்திற்கும், மக்களின் பிரச்சனைகளை பற்றியதாகவும், சமுதாய நியாயத்திற்காக போராடுவதற்காக மக்களை ஊக்குவிப் பவையாகவும் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பினார்கள், என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இவர்களுக்கும் மார்க்ஸிஸ்ட்களுக்குமிடையே உள்ள முக்கிய வித்தியாசம், மார்க்ஸிஸ்ட்டுகள், மார்க்ஸிஸ்ட் தத்துவத்தின் மூலமாகதான் சமுதாயத்தை உயர்த்த முடியும் என்று நினைத்தார். ஆனால் முற்போக்கு எழுத்தாளர்கள் சமுதாய முன்னேற்றத்தை கொனுரு வதற்கு தாங்களே சுயமாக ஒரு வழியை பின்பற்றுவதற்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். அரசியல் ஆதாயத்திற்காக அழகிய அமைப்பை ஒருபோதும் அவர்கள் தியாகம் செய்யக்கூடாது என்று எண்ணினார்கள்.

அரசியல் குழப்பங்களினால் கலையழகு (கற்பனைத்திறம்) மறைந்து விடுவதை எம்.பி.பால் முதலில் சுட்டிக்காட்டுகிறார். கலையழகை நிலைநிறுத்துவது மிக அவசியமாகும். விஞ்ஞான உண்மைகள் கவிதையழகை எதிர்பவை என்று பரவலாக நம்பப் பட்டது. உண்மையும் அழகும், கலையும் விஞ்ஞானமும் ஒன்றை ஒன்று எதிர்பவையல்ல என்று வலியுறுத்துவதே முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களின் முக்கிய பணியாக இருந்தது. மார்க்சின் (Mark) பொருளாதாரத் தத்துவமும், மெண்டலின் (Mendel) சிறந்த இனவிருத்தி விதியும், டார்வினின் (Darvin) பரிணாம வளர்ச்சி சாஸ்திரமும் ஜங் மற்றும் ப்ரயூட்டு (Freud & Jiang), மனோதத்துவ கொள்கையும் ஐன்ஸ்டீனின் relativity தத்துவம் ஆகிய விஞ்ஞான கொள்கைகள் எல்லாம் நெடுங்காலம் ஒன்றிணைந்து இன்றைய நவீன இலக்கியவாதியின் கண் ணோட்டத்தை உருவாக்கின. விஞ்ஞானிக்கு வார்த்தைகள் உண்மையின் சமிஞ்சையாக இருந்தது. இலக்கியவாதிக்கு வார்த்தைகள் தன் உணர்வுகளின் வெளிப்பாடு. இவ்வார்த்தைகள் ஒன்று சேர்ந்து பேரின்பத்தை ஏற்படுத்தியது. விஞ்ஞானம் மொழியை தான் இடும் கட்டளைகளை அடிமையைப் போல் நிறைவேற்றும் ஒரு இடைத்தரகராக பயன்படுத்துகிறது. இலக்கியவாதி மொழியை நற்காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஒன்று சேர்ந்து பாடுபடும் உழைப்பாளியைப் போல் தனித்து இயங்கும் ஒரு உயிராக

பயன்படுத்துகிறான். (இந்த ஒப்பீடு சாமார்த்தியமானது, ஆனால் இன்புறத்தக்கதல்ல) இவ்வொப்பீடு விஞ்ஞானி மொழியை முழுக்க முழுக்க கருவியாக பயன்படுத்துகின்றான். ஆனால் இலக்கியவாதி மொழியை கற்பனைப் படைப்பை உருவாக்க பயன்படுத்து கின்றான் என்று விளக்குவதாக கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தின் அடிப்படை கொள்கை, ஆராய்தலும், சோதித்துப் பார்த்தலும் ஆகும். ஆனால் இலக்கியத்தின் அடிப் படைக் கொள்கை அழகுணர்வும், வெளிப்பாட்டுத்திறனும் (power of expression) ஆகும். புலவன் வார்த்தை ஜாலத்தால் பேரின்பத்தை படைக்கின்றான். அவன் மூன்று சப்தங்களை ஒருங்கிணைத்து அதிலிருந்து நான்காவதாக ஒரு சப்த முமின்றி ஒரு முழு நட்சத்திரத்தை உருவாக்குகின்றான்.

சமுதாயத்தில் இருந்து பெற்ற அனுபவத்தை தன் உள்ளுணர் விற்கும் கலை உணர்ச்சிக்கும் ஏற்றவாறு மாற்றி இலக்கியங்களாக உருவாக்குகின்றான். சாந்த நிலையில் இருந்துக் கொண்டு இதை சாதிக்கின்றானேயன்றி ஒரு ஆவேசத்தின் விளைவாக அல்ல. கலை படைப்பிற்கு இதுவே அடிப்படைக் கொள்கையாக இருப்பதினால் நல்ல இலக்கியம் என்பது வாழ்க்கையை பிரிதிபலிக்கும் ஒரு உணர்ச்சியற்ற புத்தகங்களோ, அல்லது சமுதாயத்தில் நடைபெறும் அநியாயத்தை எதிர்த்து எழுப்பப்படும் உணர்ச்சி மிக்க கூக்குரலோ அல்ல. அனுபவங்களை நல்ல கற்பனை வளத்தினால் அழகு வடிவமாக மாற்றப்பட வேண்டும். இலக்கியவாதி தன்னடக் கத்தையே துணையாக கொண்டு தன் படைப்பை சிறப்பாக வாழ்க்கையை பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக படைக்க வேண்டும். அப்பட்டமான காம செயல்களைப்பற்றி விவரிக்கும் எழுத்தாளர்களின் மீது ஒரு சிறிதும் கருணை காட்டவில்லை.

எம்.பி. பாலின் கூற்றுப்படி எந்த இலக்கியவாதியும் தன்னிஷ்டத்திற்கு ஏற்றவாறு எந்த அரசியல் கட்சியில் சேர்வதற்கும் உரிமை உள்ளவன். அவன் ஒரு முற்போக்கு கட்சியில் சேர்ந்தால் அது நல்லதாகும். ஆனால் அவனுடைய முக்கிய கடமை மனிதனைப்பற்றியதாக இந்த மனித இனமே அவனுடைய கொள்கையாக இருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தலைசிறந்த முற்போக்கு கட்சி என்றும் அது மட்டுமே மனிதத் தன்மை பொருந்தியது என்ற கருத்தில் இருந்து எம்.பி. பால் மாறுபடுகிறார். முதலில் அக்கட்சி தன் எழுத்தாளர்களுக்கு தனித்தியங்குவதற்கு முழு உரிமை அளித்திருக்கிறதா? என்பதே

முக்கிய கேள்வியாகும். ஒவ்வொரு எழுத்தாளனும் சுயமாக முயற்சி செய்வதற்கு உரிமை உள்ளவன். ஒரு கலைஞனின் படைப் பாற்றலையும் சமுதாய நலனையும் அதன் வளத்தையும் ஒருங் கிணைப்பதே எல்லா அரசியல் கொள்கைகளிலும் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. ஆனால் எழுத்தாளனைப் பொருத்தவரை அவனுடைய சுதந்திரத்தன்மை முக்கிய சாரம்சமாகும். அதனால் தான் கார்க்கிக்கு (Gorky)தனக்கே உரிய ஒரு அமைப்பையும், நடையையும் தேர்ந்தெடுத்துக் கொள்ள லெனினால் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் கார்க்கி இலக்கியப்படைப்புகளில் லெனினைப் போல் அல்லாமல் செக்கோவ்ப் போன்று தேர்ச்சி பெற்று விளங்கினர். துர்திருஷ்டமாக ரஷ்யாவில் ஸ்டாலின் ஆட்சியில் எழுத்தாளர்கள் சுதந்திரமாக இயங்கமுடியாமல் போயிற்று. ஸ்டாலின் விரும்பியப்படி எப்படி எல்லோரும் ஆட வேண்டி இருந்தது என்பதற்கு உதாரணமாக எம். பி. பால் ஒப்ரா ரைடர் (Opera Writer) எழுத்தாளரான சோஸ்டகோவிச்சினை எடுத்துக் காட்டுகிறார். மாயோகோவஸ்கி (Mayakovsky) போன்ற எழுத்தாளர்களுக்கு உயர்ந்த ஸ்தானத்தை கொடுக்கக்கூடிய பல எழுத்தாளர்கள் கேரளாவில் இருந்தனர். இதை மாற்றும்படி எம்.பி.பால் கெஞ்கிக் கேட்டுக்கொண்டார். அவர் சோவியத்து பண்பாட்டில் உள்ள நல்லவைகளை எடுத்துக் கொள்ள தயக்கம் காட்டவில்லை. ஆனால் அதே சமயம் முற்போக்கு இலக்கிய கூட்டம் ஸ்டாலினை அப்படியே காப்பியடிப்பதை கடுமையாக எதிர்த்தார். இலக்கியங்கள் பொது மக்களுக்காகவும் படைக்கப் பட வேண்டும். அது முற்றிலும் பிரபுக்களுக்கு மட்டும் படைக்கப் படலாகாது. மேலும் பலதரப்பட்ட எண்ணங்களுக்கும், கொள்கைகளுக்கும் இடையே ஒரு சங்கமம் ஏற்பட வேண்டும். இப்பண்பாட்டு இயக்கத்தில் பலதரப்பட்ட எண்ணங்கள், கொள்கைகளின் சங்கமத்தால் நெருப்பு பொறி போன்ற இலக்கியங்கள் தோன்றும். பொது மக்களுக்காக உண்டாக்கப்பட்ட இலக்கியங்கள் எந்த விதத்திலும் தரம் தாழ்ந்ததாக இருக்கக் கூடாது. அது உயர்ந்ததாக இருக்க வேண்டும். இரண்டு முக்கிய அடிப்படைக் கொள்கைகளுடன் ஒத்துப்போவதாக இருக்க வேண்டும் என்றும் இலக்கியங்கள் *'இலக்கியங்கள்'* என்று சொல்லும்படியும் இரண்டாவதாக இலக்கியவாதிக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்''. இச்சொற்பொழிவை ஜோசப் முண்டசேரி உணர்ச்சி மிக்க ஆவேசமான சொற்பொழிவு என்று வர்ணித்தார்.

ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் இச்சொற்பொழிவைப்பற்றி ''மத மேடையில் இருந்து முழங்கிய பிற்போக்குவாதியின் மதபோதனை'' என்று தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வர்ணித்தார்.

அடுத்து கொல்லத்தில் நடைபெற்ற ஆண்டு கூட்டத்தில் எம். பி. பால் தலைமை தாங்கினார். அவருடைய தலைமை உரையில் இலக்கியம், இலக்கியம் போன்று அழகிய அமைப்புடன் இருக்க வேண்டும் என்று தெள்ளத் தெளிவாக விளக்கினார். கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் இலக்கியங்களில் விஷயத்திற்கும், கருத்துகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். இத்தேவையில்லா குழப்பங்களினால் நல்ல தலை சிறந்த இலக்கியங்களுக்கு ஏற்படும் அபாயத்தை உணர்ந்த ஜோசப் முண்டசேரி, அழகிய அமைப்பு இலக்கியத்திற்கு உயிர் போன்றது என்ற கொள்கையை உருவாக்கினார். அது எம். பி. பாலின் இலக்கிய வார்த்தைகள் உணர்வுகளுக்கும் உருவம் கொடுக்கப் பட வேண்டும் என்ற விவாதத்தில் இருந்து பிறந்ததாகும். அழகிய அமைப்பு என்ற கூற்றை இடது சாரிகள் கேலி செய்தனர். ஆனால் எம்.பி.பால் இரஷ்யாவில் உள்ள சிறந்த இலக்கியங்கள் என்று பெயர் பெற்ற இலக்கியங்கள் எல்லாம் நல்ல அழகிய அமைப்புடன் இருப்பதை சுட்டிக் காட்டினார். எம்.பி.பாலின் இலக்கிய அமைப்பு பற்றிய வாதம் சாதி மற்றும் சமுதாய நோக்கு பற்றியதாகும். வார்த்தைகள் காவியக் கருத்தையும் அனுபவங்களையும் எடுத்தியம்புவது மட்டுமல்லாமல் ஆழ்ந்த உணர்ச்சிகளை தூண்டக் கூடியது. கவிஞனும், பாமரமக்களும் எளிதில் அணுகக் கூடிய இலக்கிய அமைப்பை உடையதாகும்; கவிஞனையும், படிப்பவனையும் இணைக்கும் பாலமாகும்; முக்கிய தொடர்புமையமாக விளங்குவது இலக்கிய அமைப்பாகும். அதனால் கருத்தைப் போல் அமைப்பும் சமுதாயத்தை கூடிய வரையில் எதிரொளிப்பவையாக இருக்க வேண்டும். ஆதலால் சமுதாயத்தில் இருந்து உருவான அழகிய அமைப்பை யார் ஒதுக்குகின்றார்களோ அவர்கள் சமுதாயத்தையே ஒதுக்கியதுபோல் ஆகும். அமைப்பை மாற்றி அமைக்கின்றேன் என்று யாராவது பொறுப்பற்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு அழகிய அமைப்பை கெடுத்து அழிப்பவன் யாராக இருந்தாலும் அவன் ஒரு குழப்பவாதி, சமுக விரோதி யாகும். சமுதாயத்தின் விருப்பத்தை அனுசரித்தும், கதை கருத்தின் தேவைக்கேற்பவும் அமைப்பை மாற்றலாம். முற்போக்கு எழுத்தாளர், அமைப்பை ஒதுக்குவதை விட்டு விட்டு அதற்கு புத்துயிர் ஊட்டலாம். அமைப்பிற்கும் கருத்திற்கும் இடையே

இணக்கமான ஒற்றுமை நிலவ வேண்டும். இவ்வொற்றுமையில் இருந்துதான் அழகு துளிர்விடும். இவ்வழகே கலை என்று போற்றப்படும். இவ் விலக்கியமும் வாழ்க்கையும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாதது. அதற்கு அர்த்தம் இலக்கியம் எந்த அரசியல் கட்சியையும் பின் தொடர்ந்து செல்பவை என்று கருதத்தக்கது அல்ல. அரசியல் தலைவர் அல்லது கட்சியின் கட்டளைக்கு எந்த இலக்கியவாதியும் அடிபணியமாட்டான். அரசியல் கட்சிகள் எல்லாம் களவும் கற்றதல்ல. அல்லது அதுவே சர்வ வல்லமை பொருந்தியது என்று நாம் கருதவும் கூடாது. கம்யூனிஸ்ட்டுகள் இலக்கியத்தை ஒரு ஆயுதமாக உபயோகித்து சாதிச் சண்டையை ஏற்படுத்த முயலுகிறார்கள். அவ்வித இலக்கியங்களோ, சாதிச் சண்டைகளோ உருவாவது அவ்வளவு எளிதல்ல. ஒரு முற்போக்கு எழுத்தாளன் சுதந்திரமானவன். அவன் சுயமாக சிந்திக்கவோ, விமர்சனம் செய்யவோ, புதிய படைப்புகளை உருவாக்கவோ உரிமை உள்ளவன். அவன் அமெரிக்காவையோ ரஷ்யாவையோ சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இலக்கியவாதிகள் இவ்வித கட்டுப்பாடு எல்லைகளுக்கு அப்பாற் பட்ட முற்போக்குவாதிகள். அவன் புதிய உலகத்தை சாதிசமய பூசலால் பிரிக்க முடியாத, இன வெறியால் மாற்ற முடியாத புதிய உலகத்தை உருவாக்க முயலுபவன்; நியாயங்கள் நிறைந்த சொர்கபுரியை படைப்பவன்.

எம்.பி.பாலின் நோக்கு தெளிவானது. அவர் மனிதனின் மீது கொண்ட நம்பிக்கை உறுதியானது. சமுதாயமே அவருடைய கொள்கை. சமுதாய முன்னேற்றம் அவருடைய கனவு. இலக்கிய விமர்சகராக இலக்கியவாதியின் சுதந்திரத் தன்மையை உயர்வாக மதிக்கின்றார். இலக்கியக் கொள்கைகளாக அழகையும் உண்மை யையும் கடைப்பிடிப்பதில் கண்டிப்பாக காணப்படுகிறார். அவருடைய இலக்கிய கொள்கைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுபவை. இவ்வித இலக்கிய சாதனங்களைக் கொண்டு கேரளாவில் அக்கால முற்போக்கு எண்ணங்கொண்ட எழுத்தாளர்களுக்கு அவசியமாக தேவைப்பட்ட தலைமை பொறுப்பேற்று சிறந்த வழி காட்டியாக விளங்கினார்.

சில விமர்சகர்கள் மலையாள இலக்கியத்திற்கு இந்த முற்போக்கு இயக்கம் மதிக்கத்தக்க அளவிற்கு தன் பங்கை அளித்திருக்கிறதா? என்று வியப்பதுண்டு. ஆனால் உண்மை எது

என்றால் இம்முற்போக்கு இயக்கத்துடன்தான் மலையாள இலக்கிய உலகம் இணைந்து ஒரு புதிய சகாப்தத்தை நோக்கி வீறுநடை போடத்தொடங்கியது. ஆசானும் சந்துமேனனும் சமுதாயத்தின்பால் பற்றுள்ளவர்கள். ஆனால் முற்போக்கு எழுத்தாளர்கள் தான் இலக்கிய சக்ரவர்த்திகள் என்று கருதப்பட்டவர்களை தங்கள் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து கீழே இறக்கி விடுப்பட்டு பொது மக்களுக்கு பணியாற்ற தூண்டப்பட்டு அடித்தள மக்களின் ஆசை அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை அங்கீகரித்து, அவர்களுக்கு ஒரு தனிமரியாதையை ஏற்படுத்தியது முற்போக்கு இலக்கியம். பிரபுகளுக்காக இயற்றப்பட்ட இலக்கியங்கள் பண்பாட்டு துறைகளில் மீண்டும் முழு ஆக்ரமிப்பு ஏற்படுத்த முடியாதபடி இருந்தது. மலையாள மொழியின் அமைப்பை எளிதாக்கி, சிறந்ததாகவும், வலுவுள்ளதாகவும் மாற்றி மறு மலர்ச்சிக்கு வித்திட்டது. ஒவ்வொரு இலக்கிய படைப்பையும் மதிக்கத்தக்க தாக்கியது. இலக்கியவாதிகளை கடந்தகால நிகழ்ச்சிகளை தேடி ஓடி ஒளிந்து போக விடாமல் நிகழ்கால பிரச்சினைகளை அலச வைத்தது. மனிதனை அவன் இருக்கும் சூழ்நிலையின் மூலமாக நோக்கி அவனை ஒரு தனி மனிதனாகவும் அவன் வாழும் காலத்தின் சமூகத்தின் விளைச்சலாகவும் படைக்க தூண்டியது. மனிதக் கலாச்சாரமும் சமுதாயத்தில் நிலவும் பல்வேறு சக்திகளை இனி தெரிந்து கொள்ள நேர்ந்தால் அது விதியின் விளையாட்டு என்று வாளவிராமல், பெரும்பாலான எழுத்தாளர்களின் பார்வையை மாற்றி அந்த எதிர்கொள்ளலை விஞ்ஞான ரீதியாக சிந்திக்க வைத்தது. 1940-50 ஆம் ஆண்டுகளில் மலையாள இலக்கியத்தில் குறிப்பாக கட்டுரை, சிறுகதை, நாவல் போன்ற வகைகள் ஒரு மறுமலர்ச்சியை கண்டது. அதற்கு முக்கிய காரணமாக விளங்கியது முற்போக்கு இலக்கிய இயக்கமாகும். எம்.பி.பால் சந்தேகமின்றி இந்த புதிய சகாப்தத்தை உருவாக்கியவர்களில் ஒருவராவார்.

11. உரைநடை எழுத்தாளராக எம்.பி.பால்

எம்.பி.பால் மிக அதிகமாக எழுதி குவித்த பெரும் எழுத்தாளராக கருத முடியாது. அவர் தான் படைத்த சில உரை நடைகளை தொகுத்து வெளியிடுவதற்கு எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ***நாவல் சாகித்தியம்*** மற்றும் ***செருகதா பிரஸ்தாணம்*** ஆகிய தன் இரு படைப்புகளை திருத்தி மறு பதிப்பாக வெளியிட நினைத்தார். மேலும் **நாடக சாகித்தியம்** என்னும் நூலை இயற்றவும், மலையாள-ஆங்கில அகராதியை தொகுக்கவும் விரும்பினார். ஆனால் அவ்விருப்பங்கள், அவருடைய டுடோரியல் கல்லூரி பொறுப்பும், உடல் நலக்குறைவும், தொடர்ந்து படிப்பதில் அவருக்கிருந்த ஆர்வமும் அவருடைய விருப்பத்தை ஈடேர விடாமல் செய்து விட்டது. 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவரின் மறைவிற்கு பிறகு, கோட்டயத்தில், உள்ள சாஹித்திய பிரவர்த்தகா (SPLA) என்னும் அமைப்பு அவருடைய ***'சாகித்திய விசாரம்'*** (இலக்கிய சிந்தனை) மற்றும் ***கடிய கத்தி*** (உரைநடையின் வளர்ச்சி) என்ற சிறிய இரு கட்டுரைகளை 1953-54 ஆம் ஆண்டுகளில் வரிசையாக ஜூலை மாதங்களில் வெளி யிட்டனர்.

அவர் அணுகும் எந்த விஷயத்தையும் மிக துள்ளியமாக தன் திறமையை உபயோகித்து நுணுக்கமாக பகுப்பாய்வு செய்வதை காண்பதற்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்கும். வாசகர்களின் கவனத்தை கவர்ந்திழுத்து தான் எடுக்கும் முடிவை யாரும் ஆட்சேபிக்க முடியாதவாறு தன் வாதத்தை எடுத்தியம்புவார். அவருடைய கட்டுரைகள் சிறந்ததாக விளங்குவதற்கு மூல காரணம் அவைகள் நிகரற்ற நடையும், குறிப்பிடத்தக்க தெளிவும் பெற்று சிறந்த வடிவத்துடன் விளங்குவதே ஆகும். அவர் சுய சரிதை எழுத முனைந்திருந்தால் கோல்ட்ஸ்மித், ஸ்டீவன்சன், இ.வி.லூகாஸ் போன்றவர்களைப் போல் சிறந்த கட்டுரையாளராக விளங்கி யிருப்பார் என்று அவருடைய நாட்குறிப்பில் இருந்து அறியலாம். இதற்கு உதாரணமாக தன் சுயசரிதையில் ஆங்கில நாட்குறிப்பில் உள்ள ஒரு சிறு பகுதியை குறிப்பிடலாம். அது ***'கடிய கத்தியில்'*** (Gadya Gathi) மொழி பெயர்த்து சேர்க்கப்பட்டுள்ளது. அவர் கீழ்கண்டவாறு எழுதி இருந்தார்.

''நான் யார்? எங்கிருந்து வந்தேன், எங்கு போகிறேன்? என்று எனக்கே தெரியவில்லை. இதற்கு விடையளிப்பதற்கு சில மதங்கள் இருக்கின்றன. ஆனால் அம்மதங்களில் எனக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது. இப்பொழுது நான் பிறப்பால் கிருஸ்துவ மதத்தினன். ஆனால் என்னை பொருத்தவரை எனக்கும் அம் மதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. எம்.பி.பால் என்றழைக்கப்படுகின்ற நான் இன்ன மதத்தை சார்ந்தவன் என்று எந்த மத அமைப்பும் உரிமை கொண்டாடுவதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நான் என்னுடைய மனசாட்சிக்கு உண்மையற்றவனாக இருக்க விரும்பவில்லை. மற்றவர்களை திருப்தி படுத்துவதற் காகவும் நான் மதத்தை போதிக்க முடியாது. அவர்கள் என் உடன் பிறந்த கத்தோலிக்க சகோதரனாக இருந்தாலும் சரி.

மேற்கண்ட வாக்கியங்களை மலையாளத்தில் குறிப்பிடாமல் ஆங்கிலத்தில் குறிப்பிட்டத்தை எண்ணி அவர் வருத்தப் பட்டுள்ளார். இருந்தாலும் எப்படி கோல்ட் ஸ்மித்தின் **சிடி நைட் பீஸ்** (City Night Peace) என்ற படைப்பு ஆங்கில இலக்கியத்தில் முக்கிய இடம் பெறுகிறதோ அதேபோன்று மேற்கண்ட எம்.பி. பாலின் சுயசரிதை பகுதி மலையாள இலக்கியத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. அவருடைய 'சமயம்' பற்றிய குறிப்புரைகள் படிப்பதற்கு உரையாடல் போன்று இருந்தாலும் அது இசைக் காவியம் போன்று ஓர் உணர்வை தோற்றுவிக்கிறது என்று சொல்லலாம். அதில் அவர் எகிப்தை சேர்ந்த அகிநாடன் (Akinatan) போன்று ''சூரியனை வணங்குங்கள் ஏனென்றால் சூரியனே நம் பூ உலகத்தில் உள்ள மனித குலத்திற்கு முக்கியமான உயிர்நாடி. இந்த சூரிய கடவுளின் கருணையினால்தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது''. இவ்வித இசைக்காவியம் போன்று தோன்றும் கட்டுரைகளை எழுதுவதில் எம்.பி.பால் பழமைவாதியாக இருந்தாலும் அவ்வித கட்டுரைகளை எழுதுவதற்கு அவர் தயங்குவதில்லை. அவர் சிறுகதை எழுதுவதற்கு செய்த முயற்சி பலனளிக்காமல் போய்விட்டது. அவருடைய விமர்சன திறமையை பாராட்டும் கேசரி, எம்.பி.பாலின் ஆரம்ப கால சிறுகதைகள் ஏமாற்றம் தருவதாகக் கூறியுள்ளார். எம்.பி.பால் தான் சிறுகதை எழுத்தாளன் என்று ஒருபோதும் பாசாங்கு செய்யாமல் லுபின் (Lupin) கதைகளை மொழியாக்கம் செய்வதுடன் நிறுத்திக் கொண்டார். தான் நடத்தும் விடுதியில் பணியாற்றும் ஒரு பெண்

வார்டனை வேலையின்மையால் வெளியேற்றுவதிலிருந்து தவிர்த்து எழுதுவதற்கு உதவியாளராக அமர்த்திக் கொண்டார். தனக்கு மொழி பெயர்பதில் உள்ள ஆர்வத்தின் காரணமாக மௌலியரின் நாடகத்தை முழுவதுமாக மொழி பெயர்த்து சொல்ல அந்த பெண் உதவியாளாரால் எழுதப்பட்டது. ஹாஸ்சியத்தின் (நகைச்சுவை) மறுமலர்ச்சிக் கொள்கையைப் பற்றி விரிவாக விளக்கும் அந்நாடகம் ஒரு வடிகட்டிய கருமியின் முட்டாள் தனத்தை வெளிகொணறுவதாக அமைந்துள்ளது. அந்நாடகம் மாறுவேட கூறுகள் மற்றும், எதிரிடை காட்சிகளை அமைத்தல், மிகைப்படுத்துதல், பாத்திரங்களின் ஏகோபித்த குணங்களை வெளி கொணருதல் ஆகிய புரட்சிகரமான நாடக உத்திகளை கையாண்டு எழுதப் பட்டுள்ளது. எம்.பி.பால் தானே சொந்தமாக எந்த நாடகமும் எழுதாவிட்டாலும், நாடகம் எழுதுவதில் உள்ள நுணுக் கங்களைப்பற்றிய ஆழ்ந்த ஞானம் பெற்றிருந்தார். அக்கால மலையாள நாடகங்கள் தொடர்ந்து தமிழ் நாடகங்களைப் பின்பற்றி மேடையில் நடுவில் ஹார்மோனியம் வாசிப்பவரை சுற்றி மற்ற கதாபாத்திரங்கள், ஹார்மோனிய இசையுடன் தங்களுக்குண்டான பாடல்களை விவரமறிந்த பார்வையாளர்கள் வெறுப்படையும் வரை பாடும் உத்திகளை மலையாள நாடகங்கள் பின்பற்றுவதை எம்.பி.பால் தன்னுடைய கடிய கத்தியில் உள்ள கட்டுரையின் மூலமாக வண்மையாக கண்டிக்கிறார். கதாபாத்திரங்களால் ஹார்மோனிய தாளத்துடன் இணைந்தோ, தாளம் தப்பியோ எதிர்பாரா வண்ணம் திடீரென்று பாடல்கள் பாடப்பட்டன. இவ்வாறு கச்சேரியும், நாடக நடிப்பும் கலந்த இக்கலவையானது ''மனப்போராட்டங்கள் கொண்டு உருவாக்கப்பட்ட நாடகம்'' என்ற அடிப்படைக் கொள்கைக்கு முற்றிலும் மாறுப்பட்டதாகும். ஒரு நல்ல நாடகம் என்பது மனித மனப்போராட்டங்களை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தி மனித வாழ்க்கைக்கு நல்ல விளக்கம் தருவதோடல்லாமல், பார்வையாளரின் உணர்வுகளையும் அவர்தம் வாழ்க்கையை செம்மை படுத்துவதாகவும் இருக்க வேண்டும். நாடக இலக்கியத்தைப்பற்றி தன் கருத்தை விவரிக்கவில்லை, எம்.பி.பால்; மனதில் தோன்றும் எண்ணங்களை எடுத்தியம்பு வதற்கு கட்டுரை ஒரு சிறந்த சாதனமாக விளங்கினாலும் அவர் தன் பகுத்தறிவை முழுவதும் பயன் படுத்தி இலக்கிய கொள்கைகளை விளக்குவதிலும், அக்கால இலக்கிய படைப்புகளை தரம்பிரித்து ஆராய்வதிலும் மிகச் சிறந்து விளங்கினார்.

மேற் குறிப்பிட்ட கட்டுரைகளையும் சேர்த்து அவருடைய கட்டுரைகளை பொதுகட்டுரை, சுயசரிதை கட்டுரை என இருதலைப் புகளில் வகைப்படுத்தலாம். இவ்வகைப்பாடு எம்.பி.பால் அங்கீகரிக்கவில்லையானாலும் இக்கட்டுரைகளில் அவருக்கே உரிய சிறப்பியல்புகள் இருப்பதைக் காணலாம். பொது கட்டுரைகளில் நம் கவனத்தை கவரும் கட்டுரை. அரசியல் வாதிகளை வழிபாடு செய்வது பற்றியும், ஹெக்கல் கொள்கையில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி தனக்கு தனி மனிதனின் சுதந்திரத்தில் உள்ள நம்பிக்கையை உறுதி செய்யும் கட்டுரை நம் கவனத்தை பெரிதும் கவருகிறது. ஹெக்கலின் அரசியல் கொள்கைக்கு எதிராக ஏழு விவாதங்களை முன் வைக்கிறார் எம்.பி.பால். மனிதன் என்பவன் கை, கால்கள் உள்ள ஒரு மாமிச பிண்டம் அல்ல. அதனால் அவனுடைய உரிமையான தனித் தன்மையை இழந்துவிடலாகாது. ஒரு அரசாங்கம் தனக்கென்று ஒரு சிறப்பு குணம் பெற்றிருக்கலாம். ஆனால் அந்த அரசாங்கத்தில் உள்ள சமூகத்திற்கும், அதிலும் பிற்படுத்தப்பட்ட மக்கள் தனக்கென்று ஒரு தனித்துவம் பெற்றிருப்பர். எவ்வளவு சிறுபான்மையினராக இருந்தாலும் தங்கள் உரிமையை, சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள உரிமை உள்ளவர் களாவார்கள். அரசாங்கம் தானே முக்கியமானது என்று கருதி, தனி மனிதனின் உரிமையை அழிக்க முனைந்தால் உலகலாவிய அரசாங்கம் - பெரும்பாலும் இவ்வமைப்பு உருவாகாது அக் குறிப்பிட்ட அரசாங்கத்தை அழித்துவிடும். உலகத்தில் பல கண்டங்களில் பரவி உள்ள சமய அமைப்பு தானே எல்லா வற்றிக்கும் முதன்மையானது என்று சொல்லிக் கொள்ளும் அரசாங்கத்தையும் பேரரசையும் அழித்து விடும். உண்மை என்னவென்றால் எம்.பி.பாலின் கூற்றுப்படி, தனக்கென்று எந்த சிறப்பியல்பும் கொண்டுள்ள அரசாங்க அமைப்பு எதுவும் கிடையாது. இவ்வுலகம் எந்தெந்த வகையிலோ முன்னேறி உள்ளது. அதற்கு காரணம் தனிப்பட்ட மக்களே தவிர அரசாங்கம் அல்ல. தனி மனிதனை உருவாக்குவதில் அரசாங்கத்தின் பங்கை விட அத்தனி மனிதனை ஓர் அங்கமாக கொண்டுள்ள சமூகத்தின் பங்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்று கூறுகிறார். கடிய கத்தியில் சேர்க்கப்பட்டுள்ள சொற்பொழிவில் ''என் கட்டுரையின் பகுதி கல்வித்துறையில் நிலவி வரும் சில பிரச்சினைகளை குறிப்பிடுகிறது. கல்வியின் முக்கிய குறிக்கோள் மக்களுக்கு அறிவு புகட்டுவதாக இருக்க வேண்டும் என்று எம்.பி.பால் கூறுகிறார். இந்த கருத்தை நன்கு விரிவாக

அலசுவார் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக அவர் கல்வியை பற்றிய முன்னிலை கருத்துகளை, நவீன மாற்றங்களை இலக்கியத்திற்கு கொணர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதுடன் நிறுத்திக் கொள்கிறார்.

அவர் ஒரு விமர்சகராகவும், இலக்கிய சிந்தனையாளராகவும், அவருடைய கட்டுரைகளில் திகழ்கிறார். 1930-40 ஆண்டு மலையாள இலக்கிய வரலாற்றின் முக்கிய மாற்றங்கள் ஏற்படுத்திய காலமாக கருதப்பட்டது. இக்கால கட்டங்களில் நவீனமுறைகளில் எடுத்தியம்புவதற்கு பல நவீன உத்திகள் சோதித்து பார்ப்பது வழக்கமான ஒன்றாக கருதப்பட்டது. இக்காலத்தில் சிறந்த இலக்கிய வாதிகளால் பல சோதனைகள் நிகழ்த்தப்பட்டன. சில சோதனைகள் அற்ப ஆயுலுடன் உபயோகமற்று மறைந்தன. ஆனால் ஒரு சில உத்திகள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. இக்கட்டுரையில் சில இலக்கிய குழுக்களைப் பற்றியும் கேரள எழுத்தாளர்களுக்கு பரிச்சியமில்லாத மேற் கத்திய இலக்கிய அமைப்புகளைப் பற்றியும் விவரித்துக் கொண்டு செல்கிறார். மேலும் ஜீவட் சாகித்தியம் ரியாலிசம், மிஸ்டிசிசம் மற்றும் சானட் (Dramatic monologue,) நாடகத் தனிமொழி போன்றவற்றைப் பற்றி சிறு குறிப்புகளையும் வழங்குகிறார். அவைகள் தெளிவாக இருந்தாலும் மிக விரிவாக கூறப் படவில்லை. ஒரு விரிவான பாடத்தை தருவதை விட பல்வேறு பாடங்களைப் பற்றி சிறு குறிப்புகளுடன் அறிமுகம் செய்வதே அவருடைய குறிக்கோளாக இருந்தது.

விசாரதர்பணம் (Vicharadarpanam)என்னும் புத்தகத்தில் (எண்ணங்களின் பிரதிபளிப்பு) Soliloquy வைப்பற்றியும் எபிஸ்டிலிஸ் பற்றி மற்றொரு கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் முன்னுரை போன்று அளவில் சிறியனவாகவும் அழகான சிறந்த அமைப்புடனும் விளங்குகின்றன. சுயசரிதை - கவிதை, கட்டுரைகளில் உள்ளது போல் லிகிதக் கட்டுரையிலும் நேர்மை, நாணயம் உயிர் நாடியாகும், என்று குறிப்பிடுகிறார். இந்தியர்கள் கடிதங்கள் எழுதுகிறார்கள். ஆனால் அக்கடிதங்களை வருங்கால சந்ததியினருக்காக, பத்திரப்படுத்தி வைக்கவும், அவைகளை புத்தகங்களாக பதிப்பிக்கவும் முயற்ச்சிப்பதில்லை, என்று 'கவிதைக் கோட்பாடு' என்னும் கட்டுரையில் மேற்கத்திய கவிகள் மற்றும் விமர்சன கர்த்தாக்களினால் உருவாக்கப்பட்ட என்னெற்ற கோட்பாடுகளை வரிசைபடுத்தி கூறியுள்ள போதிலும்

டி.எஸ். எலியட், ஐ.எ.ரிச்சர்ட் போன்ற தற்கால விமர்சகர்களின் படைப்புகளின் வரைமுறைகளை எதையும் அவர் எடுத்தாள வில்லை. உண்மை காரணம் என்னவென்றால் 1930-40 ஆண்டுகளில் எம்.பி.பாலை போன்று பிரபலமான ஆங்கில பேராசிரியர்கள், விக்டோரியா - ரொமாண்டிக் கால இலக்கிய கர்த்தாக்களை தங்கள் தலைவர்களாக கருதிவந்தனர். ஆனால் எம்.பி.பால் அந்த மாய உலகில் இருந்து விடுபட்டதுமல்லாமல் முற்போக்கு இயக்கிய இயக்கத்தில் மூழ்கியதன் விளைவாக அக்கால சமூக நடைமுறை வழக்கங்களுக்கு தன்னை அர்பணித்துக் கொண்டார். அவருடைய சங்கீதாம்பி (Sangeethampi) என்னும் சங்கீத கட்டுரையில் பண்டை - தற்கால சங்கீத வித்வான்களைப்பற்றி ஒப்பாய்வு செய்கிறார். மலையாள கட்டுரைகளில் இது மிகச் சிறந்ததாக கருதப்படுகிறது. இக்கட்டுரையில் மலையாள சொற்றொடர்கள் ஒரே சீரான ஒலி சப்தத்துடன் (Rhythming) இருப்பதால் அவை பொங்கி எழுவதுபோல அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையை எம்.பி. பாலின் சிறந்த திறனாய்வு கட்டுரையாக சிலரால் கருதப்படாமல் இருந்தாலும், அவருடைய ஒப்பாய்வு உன்னதமானதாகவும், காலத்திற்கு பொருத்தமானதாகவும் இருப்பதை உணரலாம்.

அவருடைய இலக்கிய கட்டுரைகள் யாவும் உயர்ந்த உரைநடைக்குரிய எல்லா அம்சங்களை பெற்றிருந்தாலும் அவை அவருடைய சிறந்த பகுப்பாய்வின் திறமையை பிரிதிபலிப்பவை யாகவே அமைந்திருக்கின்றன. நவீன மலையாள உரைநடை இலக்கியத்தைப் பற்றிய கட்டுரைகளில் எல்லாவித நவீன மலையாள உரைநடை மற்றும் உரைநடை-நாடகங்களை புரிய வைக்க முனைகிறார். பலவிதமான இலக்கிய அமைப்புகளை ஒவ் வொன்றையும் தனித்தனியாக அறிவு பூர்வமான முறையில் ஆராய்கிறார். சிறந்த கவிதைகள் உரைநடையை விட உயர்ந்ததாக இருந்தாலும் ஒரு மொழியின் பண்பாட்டு வளர்ச்சியை தெளிவாக உணர்வதற்கு அம்மொழியின் உரை நடை வளர்ச்சியே ஒரு முக்கிய அறிகுறியாக கருதப்படுகிறது, என்று குறிப்பிடுகிறார். வாழ்க்கை வரலாறு, நாவல், சிறுகதை, கட்டுரை, நகைச்சுவை நாடகங்கள், எள்ளல், விமர்சனம் போன்ற பலவகையான இலக்கிய வடிவங்களில் ஒவ்வொன்றும் அதற்கே உரிய இயற்கையான வளர்ச்சியை, மலையாள இலக்கியத்தில் காணலாம். குஞ்சன் நம்பியாரை ஒரு சிறந்த நகைச்சுவை கர்த்தாவாக கருதினாலும், உலகில் எந்த மொழியிலும் அவரைபோல் இணையாக இல்லை என்று கூறுகிறார்

எம்.பி.பால். மலையாள மொழியில் ஹாஸ்சியம் நன்கு வளர்ச்சிபெற்று இருக்கிறது என்று எம்.பி.பால் உணர்கிறார். கீழ்தரமான படைப்புகளை அப்படியே பின் பற்றும் மலையாள நாடகாசிரியர்கள் சமூகத்தை நன்கு ஆராய்வதற்கும், இப்சன், பெர்னாட்ஷா போன்ற நாடக ஆசிரியர்கள் செய்ததுபோல் சமூகத்தில் உள்ள தீய சக்திகளை வெளி கொணருவதற்கும் கற்றுணர வேண்டும் என்று எம்.பி. பால் விரும்புகிறார். மலையாள இலக்கிய வளர்ச்சியை சீர் குலைக்கும் இன்ப உணர்ச்சியூட்டும் நாடகங் களையும், நாவல்களையும் எம்.பி.பால் வன்மையாக சாடுகிறார். அதிருஷ்ட வசமாக கேசரி பாலகிருஷ்ணபிள்ளை போன்றவர்கள் அடங்கிய ஒரு எழுத்தாளர் குழுவினால் மலையாள சிறுகதை இயக்கத்திற்கு புத்துயிர் அளிக்க முடிந்தது. வேங்கையில் குஞ்சுராமன் நாயனார், ஈ.வி.கிருஷ்ணபிள்ளை, சி. அந்தபாயி மற்றும் பல எழுத்தாளர்களின் உதவியினால் மலையாள மொழியில் சுயக்கட்டுரை (personal Essays) மிகுந்திருந்தாலும் சார்ல்ஸ் லேம் (Charles Lamb) போன்றவர்களால் எழுதப்பட்ட கட்டுரையைப் போல் மலையாள மொழியில் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இலக்கிய விமர்சனத்திலும் மலையாள மொழி இன்னும் முன்னேற வேண்டி இருந்தது. விமர்சனங்களில் கருத்து இல்லாத அடுக்கு மொழிக்கு தேவையில்லாத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் அவைகள் படைப்பின் அழகை வெளிக் கொணர தவறிவிட்டன. சரித்திர வகை நியாய வகை, ஒப்பிடுவகை மற்றும் உறைக்கல் முறை போன்ற பல வகையான விமர்சனங்களை ஒவ்வொன்றாக கூறும் எம்.பி.பால் இவைகளில் விமர்சகன் மேற்கூறிய எந்த இலக்கிய வகைளில் எதாவதொன்றை பின்பற்ற படாததினால் அவ்வகை தவறானவை என்று கூற முடியாது. மலையாள கட்டுரையை முழுமையாக நோக்கும் எம்.பி.பால் அது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று உணரும்படி செய்வது மல்லாமல் அதனுடைய எதிர்காலம் கட்டாயமாக பிரகாசமாக இருக்கும் என்றும் பறை சாற்றுகிறார். எம்.பி.பாலின் இக்கூற்று கேரளாவின் இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை கொடுத்தது.

'கலையும் காலவும் (Art and time) 'காவ்விய ப்ரசோதனம்' (Inspiration for Poetry) வாக்ரதாவிய சாம்பிரதாவு (the Binding of Sounds and Sense) பாஷா கடிய சாய்லி (Prose Style)

கட்டுரைகள் சுத்தமான இலக்கிய வகையை சேர்ந்தவை. வக்ரதாவிய சம்பிரதாவ்வு கட்டுரை காளிதாசரின் ரகுவம்சத்தின் பிரதி பலிப்பாகும். விமர்சகர்கள் பகுப்பாய்வு செய்வதற்கு எழுத்தையும், அதன் கருத்தையும் தனித்தனியாக அனுகினாலும் இரண்டும் ஒன்றோடொன்று இணைந்தவையேயாகும். சொற்களும் அதன் கருத்தும் பாட்டுக்கு முக்கியமான அங்கமாக விளங்கினாலும் அதுவே பாட்டின் உயிர்நாடியாக கருதப்பட மாட்டாது. இவை எல்லாம் ஒன்றுடன் ஒன்றாக கலந்து, இணைந்து ஒருமித்த காவிய அனுபவத்தை உணரச் செய்ய வேண்டும். இந்த ஒருமித்த சக்தியை உருவாக்குவது ஒரு கவியின் படைப்பாற்றலின் திறமையாகும். எம்.பி. பாலின் கூற்றுப்படி கவிதை படைப்பிற்கு மிக முக்கியமானது கவியின் கவியாக்கத் திறமையும் அக்கவிதையை அனுகும் பாமரனின் விவேகமும் முக்கியமானதாகும். திரு. எம்.எம். அப்பிராம்ஸ் உருவாக்கிய கருத்தைப்போல் எம். பி. பாலும், **சாரிதய** (Sahridaya) காப்பிய படைப்பிற்கு முக்கியமானதாக கருதுவது குறிப்பிடத்தக்கதாகும். இதன்படி கவிதை என்பது தொடர்பை ஏற்படுத்தும் ஒரு சாதனமாகும். எம்.பி.பால் இந்நிலையில் இருந்து மிக சுலபமாக பாமரனுக்கும்-கவிக்கும் இடையே முக்கிய இணைப்பை ஏற்படுத்தும், கவியின் அழகியல் பகுதியை மிக சுலபமாக அனுகுகிறார். அமைபின் வரைமுறைப்படி பார்த்தால் இவ்விணைப்பு, கவிதையின் அழகு ஒரு சமுதாய குணத்தை பெற்றிருக்க வேண்டும். அதே சமயம் அப்படைப்பு அதற்கே உரிய தனித்தன்மையை பெற்றிருக்க வேண்டும். ஏனென்றால் அது ஒரு தனி மனிதனின் திறமையினால் உருவாக்கப்பட்ட படைப்பாகும். கவிதை என்பது ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ள ஒரு முழுமையான அமைப்பாதலால் அதை முழுமையான மொழி பெயர்ப்புக்கு உட்படுத்த இயலாது. மேலும் ராபர்ட் பிரௌன் குறிப்பது போல் கவிதை, நட்சத்திரத்தைப் போல் இன்ப வெள்ளத்தை வாரி வழங்கக் கூடியது. இன்ப வெள்ளத்தின் அளவை நிர்ணயிப்பது சாரிதய (Sahridaya) ஆகும். இன்பத்தை-மகிழ்ச்சியை தூண்டத் தவறும் எந்த ஒரு சொல்லமைப்பும் இலக்கிய தகுதியை அடைவது இயலாததாகும். சிறந்த கவிதையை உருவாக்கும் போது அதன் கருத்து உழைக்கும் வர்க்கத்தை பிரிதிபலிப்பதாகவும் இருக்க வேண்டுமேயல்லாமல் அது அழகான அமைப்பை பெற்றிருப்பது ஒரு பொருட்டாக கருதப்படமாட்டாது'' என்று சிறந்த கவிதைப் படைப்பை குறைத்து மதிப்பிடும்

மார்க்ஸிஸ்ட் வாதிகளை கடுமையாக சாடுகிறார். ஒவ்வொரு இலக்கிய படைப்பும் இலக்கியவாதியின் திறமையான படைப்பாக இருந்தாலும் அப்படைப்பு அக்கவிஞனின் காலகட்டத்தின் 'சிறந்த படைப்பு' என்று கருதப்படும் என்று அவருடைய 'கலையும் காலவும்' கட்டுரையில் மிக தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மாபெரும் கலைகள், ஒரு சமுதாயம் மிக தழைத்தோங்கி உயர்ந்த நிலையில் இருக்கும்போது உருவாக்கப்பட்டதே ஆகும். சமுதாயம் சிதைவு அடையும்போது கலைகளும் சீர்குலையும். இலக்கிய படைப்பானது சமுதாய காலகட்டத்தின் தாக்கத்தை மிக அதிகமாக பெற்றிருக்கும். பெரிகல்ஸ் (Pericles) காலத்தில் மகா காவியங்களும் கலைகளும் செழித்து வளர்ந்திருந்தது. ரோம் நாட்டு அகஸ்டஸ் - சீசர் காலத்தில் மிகச் சிறந்த படைப்புகள் உருவாக்கப்பட்டன. 15ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாடு மிகச் சிறந்த சிற்பிகளையும், சித்திரக்காரர்களையும் உருவாக்கி கலையின் பரிணாமத்தை ஐரோப்பியக் கண்டம் முழுமைக்கும் விரிவுபடுத்தி, இத்தாலி நாடு சிறந்து விளங்கியது. காலத் திற்கும், கலைக்கும் உள்ள நெருங்கிய இணைப்பையும், ஒன்றுடன் ஒன்று சார்ந்துள்ள நிலைக்கு மேலும் பல குறிப்பிடத்தக்க உதாரணங்களாக இங்கிலாந்து நாட்டு எலிசபெத் காலத்திய இலக்கியங்களையும் பிரான்ஸின் பதினான் காவது லூயிஸ் காலத்திய இலக்கியங்களையும் குறிப்பிடுகிறார்.

எம்.பி.பால் திறமையான படைப்பாளர்களை ஒரு கால கட்டத்தின் விளைச்சலாக கருதாமல், அவ்விளைச்சலை அத்திறமை யாளர்களை உருவாக்குவதற்கு காலம் தன் பங்குக்கு அவர்களை ஊக்குவித்து உதவிபுரிந்து அவர்களை செழிப்புறச் செய்கிறது, என்று தெள்ளத் தெளிவாக குறிப்பிட விழைகிறார். எந்த ஒரு மகா கலைஞனும் தான் வாழும் காலத்திற்கு நன்றி செலுத்த தவற மாட்டான். தன் சம காலத்தவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தால் அவர்கள் எப்படி வேறுவிதமாக எழுதியிருப் பார்கள் என்பதை நகைச்சுவையோடு கூறுகிறார். தான் இலக்கியங் களை வெறுக்கும் பாதிரியாகவும், பஹீர் பலசரக்கு விற்பனை செய்யும் கடைக்காரராகவும் இருந்திருப்பார்கள் என்று நகைச் சுவையோடு கூறுகிறார்.

கலையின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றை விளக்குகையில், அவர் கூறுகிறார். கலைஞன் அவனுடைய அக வாழ்க்கையில் தான் சார்ந்த கால கட்டத்தின் வழக்காறுகளுடன்

நேரிடியாக மோதுகையில் ஒன்று அவன் ஆராய்ச்சியாளனாக மாறுகிறார் அல்லது ஒதுங்கி நழுவச் செல்ல முயல்கிறான். நவீன மாற்றத் தின் தாக்கம் இன்னும் மலையாள இலக்கிய உலகில் ஏற்பட வில்லை. எம்.பி.பாலின் கூற்றுப்படி ஸகாட், டூமாஸ், மற்றும் சி.வி. இராமன் பிள்ளை ஆகியோர்கள் ஒதுங்கி வாழ்பவர்கள். சிறந்த எழுத்தாளர்கள் அடக்குமுறையை தொடர்ந்து எதிர்ப்பவர்கள். வோல்டைர், பைரன் மற்றும் ஹெல்லி போன்றவர்கள் சோர்வடையாத சுதந்திர போராட்ட வீரர்களாக திகழ்ந்தார்கள். கே. ராமகிருஷ்ணபிள்ளை ஒரு கவியாக இல்லாமல் இருந்தாலும் அவர் ஒரு புரட்சிக் கனலாக திகழ்ந்தார். சமூகத்தில் உருமாறும் தீய சக்திகளை எதிர்த்து தொடர்ந்து இலக்கிய கர்த்தர்க்கள் போராடு பவர்கள், சிலர் போராடுவதற்கு எதார்த்தமாக எழுதுவ்தை (Satire) ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக பயன்படுத்துவர். வேறு சிலர் நேரிடையாக மோதுவதை தேர்ந்தெடுப்பர். மகா கற்பனை காவியங்கள் நிச்சயமாக சமுகத்தை உயிரத்தெழச் செய்து, சமுதாயத்திற்கு அதன் கடமையை உணர்த்தி ஒரு நல்ல பாதையை அமைத்துக் கொடுத்து அதை வளர்ச்சி பாதையில் முன்னனியில் இட்டுச் செல்கிறது.

அவருடைய ***பாஹா கடிய சாய்லீ*** (Bhaha Gadya Sailee- Prose Style) என்ற கட்டுரை அவர் பரிஷத்தில் 1938ஆம் ஆண்டு கோட்டயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, கட்டுரை நடையில் (Prose Style) அவர் கொண்டுள்ள ஆழ்ந்த ஞானத்தின் வெளிப்பாடே ஆகும். கட்டுரையின் நடை வாமனின் ரீதி என்று சொல்ல முடியாது. **வாமன், வைதார்பி, பஞ்சலி** மற்றும் **கௌடி** போன்ற ரீதிகளைபற்றி பேசுகிறார். அவர் இனிமையான வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு தம் தத்துவங்களை உருவாக்குகிறார். தண்டியின் மார்க்கத்தின் கொள்கை, ரீதியின் கொள்கையுடன் ஒத்திருக்கிறது. அமைப்பு முறை ஆங்கில மொழி யில் இருந்து மாறுபட்டு புரிந்து கொள்ளப்படுகிறது. அமைப்பு என்பது **சைலி** (Sailee) என்று சரியாக மொழியாக்கம் செய்யலாம் என்று எம். பி. பால் கருதுகிறார். மலையாளத்தில் சைலி என்றால் **நடை** (idiom) என்று அழைக்கப்படுகிறது என்றும் அமைப்பு என்பது 'நடையில்' இருந்து மாறுபட்டதாகும் என்றும் கூறுகிறார்.

அமைப்பின் மூலமாகதான் ஒருவனின் குணாதிசியங்களை எடுத்தியம்ப முடியும். அதனால்தான் மனிதனால் பழமொழிகளை

உருவாக்க முடிகிறது. நல்ல அமைப்பு தனித் தன்மை, மொழியுடன் ஒத்திருத்தல் மற்றும் அம்மொழியுடன் ஒன்று பட்டு அழியாத் தன்மை ஆகிய மூன்று குணாதிசியங்களைப் பெற்றிருக்கும். எழுத்தாளனின் குணாதிசியங்களை எடுத்தியம்புவதினால் அவ்வமைப்பு தன் தனித் தன்மையை பெறுகிறது. சிறந்த எழுத்தாளனின் படைப்புகளில் நன்கு பரிச்சயப்பட்ட படைப்பில் உள்ள அமைப்பு முறையில் அவ்வொழுத்தாளனின் முத்திரையை அவ்வாசகன் எளிதில் உணரக்கூடிய வகையில் இருக்க வேண்டும். தேவையற்ற வர்ணனைகளும், ஆட்சேபகரமான வாக்கியங்களும் ஒரு எழுத்தாளனின் உண்மையற்ற தன்மையை காட்டிக் கொடுத்து விடும். உண்மையான அமைப்பு முறையை அதன் எளிமை, தெள்ளத்தெளிவாக எளிதில் புரியக் கூடியதாக இருப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். எந்த ஒரு நல்ல படைப்பும் மனித வாழ்க்கை யுடன் உறுதியான தொடர்பு கொண்டிருக்க வேண்டும். உண்மைக்கு புறம்பானதாக இருக்கக்கூடாது.

அக்காலத்தில் மலையாள மொழியில் வழக்கத்தில் இருந்த உரைநடைக் கவிதை நடையை (Poetic Prose) எம்.பி. பாலினால் அங்கீகரிக்க முடியவில்லை. நல்ல கட்டுரைகள் என்பது செயற்கையான தோற்றத்தை ஏற்படுத்தாமல் அச்சமின்றி தைரியத்துடன் எழுதப்படும் கட்டுரைகளே சிறந்த கட்டுரைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும். எழுத்தாளனும் வர்ணனைகள் புதிய நோக்குடனும், கையாலும் வார்த்தைகள் ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். எம்.பி.பாலின் கட்டுரைகள் எளிமையானதாகவும் அவருடைய தனித்தன்மையை தெளிவுடன் எடுத்தியம்புவதினால், மலையாள கட்டுரை இலக்கிய வகையில் அவர் ஒரு சிறந்த கட்டமைப்பாளராக விளங்குகிறார்.

எம்.பி.பாலின் ***காவ்ய பிரசோதனம்*** (The Poetic inspiration) மற்றும் ***ஹாஸ்யத்தின்டே உட்பதி*** (The Origin of Humour) கட்டுரைகள் அவர் இலக்கியவிதிகளை எவ்வாறு மிக கஷ்டப்பட்டு கடைபிடித்து தன் படைப்புகளை உருவாக்கினார் என்பதை காட்டுகிறது. விஞ்ஞான சாஸ்திரம், காரண காரியங்களை அடிப் படையாக கொண்டுள்ளது. ஆனால் கலையும் இலக்கியங்களும் உள்ளுணர்வில் இருந்து துள்ளி எழுகிறது என்பது எம்.பி.பாலின் கூற்று. மாயாஜால படைப் புகளில் உள்ள சில கவிதைகள் உணர்ச்சி வடிவங்களாக தோன்றினாலும் காவியபரவசம் என்பது ஒரு விவரிக்க

முடியாத ஒன்று. அது காரண காரியங்களால் துள்ளியமாக அனுமானித்தலுக்கு அப்பாற்பட்டது.

கவிதைப்படைப்பின் அடிப்படை உண்மையை எலியட் (Eliot) என்ற கவிஞனை உதாரணத்திற்கு அழைக்காமல் எம்.பி.பாலினால் நன்கு விளக்கமாக எடுத்துரைக்க முடிகிறது. அவர் ஒரு நல்ல எண்ணங்களை எவ்வாறு மன எழுச்சியுடன் உணர்ச்சி பிழம்பாக மாற்ற முடியும் என்று வினாக்களை தொடுக்கிறார். இந்த ஜாலத்தை எந்த ஒரு அணி அலங்காரங்களை பிரயோகித்தும் நிறைவேற்ற முடியாது. கவிதையின் எண்ணங்களை, கற்பனை என்ற உருக்காலையில் இட்டு உருக்கப்படுகிறது. உணர்ச்சியூட்டும் கவிதையாக மாற்றமடையாத எந்த ஒரு கருத்தும் எண்ணமும் கவிதையில் இடம் பெறுவதற்கு தகுதியுடையது இல்லை என்று உறுதியாக கூறுகிறார் எம்.பி.பால். இக்கருத்து எண்ணங்களை உணர்ச்சிப் பிழம்பாக மாற்றக் கூடிய, ஒருங்கிணைந்த உணர்வு (Unified Sensibility) என்ற எலியட்டின் (Eliot) கருத்துடன் ஒத்திருக்கிறது. மேலும் அவர் இக்கருத்தை ஐ.எ.ரிட்சர்ட் (I.A. Richard) டின் ***சினாஸ்திஸிஸ்*** (Theory of Synaesthesis) கொள்கையை துணைக்கு அழைக்காமல் விளக்க முற்படுகிறார். உணர்வுகள் எம்.பி.பாலின் கூற்றுப்படி மனிதனுக்கு இருக்கும் ஒரு அரிதான சாதனமாகும். எண்ணங்களையும், அனுபவங்களையும் கற்பனைகளையும் ஒன்றிணைந்து பேரின்ப நிலைக்கு எடுத்துச் செல்லும் திறமை அவ்வுணர்வுகளுக்கு உண்டு. அச்சாதனம் உணரக்கூடிய, பாராட்டக் கூடிய அனுபவங்களை தெளிவாக எடுத்தியம்பக் கூடியது. காவிய உணர்வு என்பது சாதாரண உணர்ச்சியில் இருந்து வேறுபட்டதாகும். கவிஞனின் உள்ளத்தில் பொங்கி எழும் எண்ணங்கள் அவனுடைய உணர்ச்சியினால் அடிப்படை மாற்றத்திற்கு உள்ளாகிறது. அப்போதுதான் அவனுடைய வெளிப்பாடு காவியத்தன்மையடைகிறது. உணர்ச்சியும் எண்ணங்களும் எவ்வாறு காவியத்தன்மையடைகிறது என்று விளக்குவது கடினம் என்பதை எம்.பி.பால் ஒப்புக் கொள்கிறார்.

பல்வேறு விதமான கொள்கைகளை ஒருசேர இனைத்து ஒரு முழுமையை ஏற்படுத்தும் கற்பனைக் கொள்கையை எம். பி. பால் நாடாமல் இருப்பதைக் கண்டு பலர் வியப்பில் ஆழ்வர். அவருடைய கவிதையாக்க கொள்கை தெளிவானது, எளிதில் புரியக் கூடியது ஆகும். எவ்வளவுதான் சொன்னாலும் எழுதினாலும் கவிதையாக்கம்

என்பது ஒரு புரியாதபுதிராகும். பிரிஸ்ட்லி (Priestly) போன்ற எழுத்தாளர்கள் தாங்கள் கவிதையாக்கத்தின்போது ஒரு தெய்வீக சக்தியை பெறுவதை உணர்கிறார்கள் என்பதை எம்.பி.பால் குறிப்பிடுகிறார். அவர்கள் அச்சக்தியைதான் உனர்ச்சி தூண்டுதல் என்று விவரிக்கிறார்கள். எழுத்தாளர்கள் படைப்பாக்கத்தின்போது அவர்கள் அதிர்ஷ்ட வசமான சந்தர்பங்களை பெறும் அதிர்ஷ்ட சாலிகள். கவிஞன் உணர்வினாலும் எண்ணங்களினாலும் அறிந்து கொள்வான் என்ற உண்மையை Shelley எழுதும்போது உணர்ந்தார். கவிஞர்களை தூண்டும் சக்தியை தெளிவாக விளக்குவதில் எம்.பி.பால் இந்தக் கட்டத்தில் இருந்து மேற்கொண்டு தொடர்ந்து விவரித்து செல்லவில்லை.

நகைச்சுவை (Humour) பற்றிய கட்டுரையில் அதன் தோற்றத்தைப் பற்றி மிக உன்னிப்பாக ஆராய்கிறார். மனோதத்துவ நிபுணர்கள் சிரிப்பு என்பது ஒருவித இன்ப தூண்டுதலினால் உண்டாகிறது என்று எடுத்துக் காட்டியுள்ளனர். ஒருவித ரசாயன வாயுவை சுவாசிப்பதால் சிரிப்பை உண்டாக்க முடியும் என்று அறியப்படுகிறது. ஒரு நிகழ்ச்சி பின்நோக்கி செயல்பட்டால் சிரிப்பு உண்டாகிறது என்று அரிஸ்டாடல் கூறுகிறார். உதாரணமாக அகந்தையுள்ள மனிதன் தடுக்கி விழுவதால் சிரிப்பு உண்டாகிறது. தடுக்கி விழுவதால் சில நேரங்களில் சிரிப்பு எழலாம். ஆனால் சிரிப்புக்காக விழுவது முழுமையான மூலக்காரணம் அல்ல. வேறு சிலர் மனித குறைபாடுகளையும், விகாரத்தையும் மிகைப்படுத்தி விவரிப் பதால் சிரிப்பு உண்டாகிறது என்று கூறுவர். ரெபெல்லா மனித குறைபாடுகளை மிகைபடுத்தி விவரிப்பதின் மூலம் நகைப் பூட்டுவதில் சிறந்து விளங்குகிறார். மேலும் **ஜான் ஆஸ்டின்** (Jane Austin) ***ஆர்னால் பெர்னட்டு*** (Arnold Bernat) மற்றும் ***கிளாஸ்வொர்த்தி*** (Glasworthy) போன்றவர்களின் படைப்புகளில் உள்ளதை போன்று பெரிய விஷயத்தை சாதாரணமாக விவரிப்பதி லிருந்து சிரிப்பை வரவழைக்கலாம். ஹேசலிட் (Hazalit) போன்ற எழுத்தாளர்கள் பொருத்தமின்மையால் சிரிப்பு உண்டாகிறது என்று கூறுகிறார்கள். இரண்டு கதாபாத்திரங்களுக்கிடையேயும், இரண்டு மன நிலையில் உள்ள ஒரே கதாபாத்திரங்களின் பொருத்த மின்மையில் இருந்தும் சிரிப்பு பிறக்கலாம். அவர்களுடைய வாக்கு வாதங்களில், நடத்தை களில் உள்ள பொருத்தமின்மையாலும், நகைப்புண்டாகலாம். எல்லா வகையான நகைப்பும் பொருத்த மின்மையிலிருந்து தான் பிறக்கிறது என்பது இல்லை என்றும்

எம்.பி.பால் கூறுகிறார். மனிதன் என்பவன் ஒரு சிரிக்கும் மிருகம். அவனை ஒரு மிருகமாக வரையறுத்து, அவனை ஒரு உண்மையான சிரிப்புக் குரிய பொருளாக்குகிறான். சுறுசுறுப்பான வாழ்க்கையில் இயந்திர கூறுகளை (Mechanical element) உட்படுத்துவதால் சிரிப்பை உண்டாக்கலாம் என்ற கருத்தை பெர்க்ஸன் (Bergson) வெளியிடுகிறார். சீரான வாழ்க்கை ஓட்டத்தை தடுத்து நிறுத்தும் எந்த நிகழ்ச்சியும், சுறுசுறுப்பான இயந்திர கதியில் நடைபெறும் சீரான நிகழ்ச்சியை திசை திருப்பும் எந்த சக்தியினாலும் சிரிப்பு எழலாம். ஒரு மனிதன் சுரத்தையற்று நடப்பதிலும், இயந்திர கதியில் செல்வதினாலும் கீழே விழுகிறான். இயந்திர கதியில் செயல் படுவதால் ஒரு தனி பழக்கத்திற்குள்ளாகிறான். அவன் இயந்திர வாழ்க்கையில் அதிகமாக மூழ்குவதால் சமுதாய பண்பாட்டு - பழக்கவழக்கங்களை புறகணிக்கிறான்.

12. அழகியல்

அழகியல் பற்றி மலையாள மொழியில் வெளிவந்த புத்தகங்களில் எம்.பி.பால் எழுதிய ***சௌந்தர்ய நிரீக்ஷணம்*** (Soundariya Nireekshanam) என்னும் புத்தகம் ஒரு அங்கீ கரிக்கப்பட்ட புத்தகமாக கருதப்படுகிறது. இப் புத்தகம் 1947 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இலக்கிய வடிவத்திற்கும், அது எடுத்தாளும் கருத்துகளுக்கும் இடையே உள்ள முக்கியத்துவத்தைப் பற்றிய கடுமையான வாக்குவாதம் பல்வேறு முன்னேற்ற இலக்கிய நிறுவனங்களில் நிகழ்த்தப்பட்ட கால கட்டத்தில் எம்.பி.பாலின் கவனத்தை இச்சர்ச்சை ஈர்த்தது. கலையும் இலக்கியமும்பொது மக்கள் இன்புருவதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை உடையவராக இருந்தார் எம்.பி. பால். அது சிறந்த வடிவ அமைப்புடனும், அழகு பொருந்தியதாகவும் இருக்க வேண்டும் என்றும் கருதினார். அதாவது சிறந்த படைப்பின் உயிர்நாடி போன்றது அதன் வடிவமாகும். இலக்கிய கருத்தை (Subject) பற்றி ஆராய்ந்து சிந்திக்கும் எம்.பி.பால் பர்க்ஸின் (Burke) The Subline and the Beautiful என்ற கட்டுரைகளையும், பர்க்ஸ்சன் (Bergson) படைத்த அழகியல் (Aesthetic) என்ற புத்தகமும், கவிதை-சித்திரம், இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை ஆராயும் லெஸ்ஸிங்ஸ் (Lessings) கட்டுரையும், ஜோட்ஸ் எழுதிய A Guide to philosophy போன்ற இலக்கியங்கள் அவருடைய நினைவுக்கு வருகிறது. தான் படைத்த ***சௌந்தர்ய நிரீக்ஷணத்தில்*** எம். பி. பால் அழகியல் (Aesthetics) பற்றிய நான்கு கட்டுரைகளில் அவர் அழகின் சாரம்சத்தை ஆராய்கிறார்.

Beauty in Nature and Arts என்னும் தலைப்பில் உள்ள கட்டுரையில் விவாதங்கள் சீராக, ஒழுங்குடன் அமைக்கப் பட்டுள்ளன. இயற்கையில் அழகு இருக்கிறது. ஆனால் அவ்வழகு எப்பொழுதும் வெளிப்படையாக தெரிவதில்லை. அது ஒரு கலவை போன்றது. மின்னல் போன்று தோன்றி மறைவது, ரசிகத் தன்மையுள்ள கலைஞன் மின்னல் வேகத்தில் தோன்றி மறையும் அவ்வழகை உணர்ந்து பேரின்பம் கொள்கிறான். பிறகு அவன் தான் உணர்ந்து அனுபவித்த பேரின்பத்தை, எண்ணங்களை வார்த்தை களாக மாற்றி மற்றவர்களுக்கு எளிதில் புரியும்படி உருமாற்றம்

பேரின்பத்தை தெளிவாக அறிவிப்பதாகும். இவ்வித அறிவிப்பு ஒரு உள்நோக்கம், ஒரு பயனை உள்ளடக்கியதாக இருப்பதால், கலை என்பது ஒரு பயன்படு பொருளாகிறது. இவ்விவாதத்திலிருந்து கீழ்கண்டவாறு தீர்மானிக்கலாம்.

கலையழகு என்பது முழுவதும் அகநிலையை (Subjective) சார்ந்தோ அல்லது முழுவதும் புற நிலையை சார்ந்தோ (Objective) இல்லை. அது அக - புற நிலையை சார்ந்ததாகும். இவ்வுலகில் உள்ள இயற்கை வடிவங்களில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்துக் கொண்டிருப்பதின் விளைவாக, ஒவ்வொரு வினாடிக்கும் முழுமை பெற்ற அழகு வடிவங்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இந்த அதிசய காட்சிகளில், சில காட்சிகள் கலைஞனால் கவர்ந் திழுக்கப்பட்டு, அவனால் விவரித்து சொல்லப்படுகிறது. அவன் இயற்கையில் தோன்றிய அழகு வடிவங்களை விவரிக்காமல் அவ்வழகு வடிவங்களினால் தான் பெற்ற பேரின்ப நிலையை விவரிக்கிறான். அக்கலைஞன் தான் பெற்ற பேரின்பத்திற்கு காணிக்கையாக அதற்கு ஒரு முன்னுரிமை, முக்கியத்துவம் கொடுக்கிறான். தன்னை ஆட்கொள்ளும் காட்சியானது அழகற்று இருந்தாலும், அதற்கு அக்கலைஞனின் திறமையினால் அக்காட்சி - அவனுடைய எழுத்தோவியம் மூலம் அழகு பெற்று விளங்குகிறது. ஒவ்வொரு நிமிடமும் இயற்கையில் ஏதாவதொன்று அழகிய தோற்றமாக உருமாறிக் கொண்டே இருக்கிறது என்ற எம்.பி.பாலின் அனுமானம், அவர் படித்த பேட்டரின் (Pater) கட்டுரையின் விளைவாக இருந்தாலும், இயற்கை காட்சியை கண்ணுரும் கலைஞன் பேரின்பம் அடைகிறான். தான் அடையும் பேரின்பத்தின் விளைவாக அக்காட்சியை உருமாற்றம் செய்து எழுத்தோவியமாக படைக்கிறான் என்று தன் கட்டுரையில் விவாதிப்பது எம்.பி.பாலின் சுயபடைப்பாகும். அவர் இயற்கையில் தோன்றும் காட்சி அழகானதோ அழகற்றோ இருந்தாலும் கலைஞன் தன் திறமையினால் அதை உயிர்பித்து, அதற்கு உருமாற்றம் கொடுத்து அழகுள்ள ஒரு எழுத்தோவியமாக படைக்கிறான், என்ற கருத்தை தெள்ளத் தெளிவாக விளக்குகிறார். அக்கட்டுரைக் கொத்தில் உள்ள மூன்றாம் கட்டுரையில் லெஸ்சிங்ஸ் (Lessings Theory) கொள்கையான கலையை, அதாவது குறிப்பிட்டு சொல்ல வேண்டு மென்றால் ஓவியத்திற்கும் கதைக்கும் உள்ள கட்டுப்பாட்டுக் கொள்கையை பற்றி அலசுகிறார். ஓவியம் வரைதல், கவிதை புனைதல் என்பது இருவேறுபட்ட ஊடகங்களின் மூலமாக

உணர்ச்சிகளுக்கு உருமாற்றம் கொடுக்கும் இரண்டு வேறுபட்ட கலை படைப்பாகும். ஓவியம் வரைதல் நிலைத்து நிற்கும் கலை வடிவத்திற்கு உதாரணமாகும். அது நிலையானது; கடந்த காலத்தில் இருந்து நிகழ்காலத்திற்கும், நிகழ்காலத்தில் இருந்து எதிர்காலத்திற்கும், தொடர்ந்து காலத்திற்கு ஏற்றவாறு அக்கலை வடிவம் உணர்வுகளை மாற்றி எடுத்துரைக்க முடியாததாகும். அதனால் ஓவியம் கண்டிப்பாக ஒரு முகப் பரப்பளவை கொண்டிருக்கும். (சிற்பமும் அவ்வாறே!) அது ஒரு நிகழ்ச்சியை அல்லது தலையான வளர்ச்சியை அல்லது சக்தி வாய்ந்த தொடர் நிகழ்ச்சிகளை (Laocoon) தன் மன வேதனைகளை லோலாகோன் மறைமுகமாக மட்டுமே வெளிப்படுத்தலை ஒரு உயர்ந்த உதாரணமாக லெஸ்ஸிங்ஸ் (Lessings) நமக்கு சுட்டிக் காட்டுகிறார். அதே சமயத்தில் இவ்வித லெஸ்ஸிங்ஸ் கருத்தை மகாகலைப் படைப்பில் நாம் காணும் அரிய கலை நுட்பங்களை விவரங்களுடன் இணைத்து விவாதத்திற்கு உட் படுத்துவதின் மூலமாக பகுப்பாய்வு செய்யலாம். கண்ணுக்கு புலப்படும் தோற்றத்தை அரிவதற்கு அதிக நேரமாகலாம். அதேபோல் அத்தோற்றத்தை உணர்ந்து இன்புரு வதற்கும் காலதாமதமாகலாம். காலம் என்பது நான்காவது பரிணாமத்திற்குட்பட்டதால் அக்கால அளவிற்கேற்ப நன்கு கணக்கிட்டு நுணுக்கமாக ஆராயாமல், சிற்பங்களையும் ஓவியங் களையும் பாராட்டிற்கு உட்படுத்தலாம் என்று நாம் கருதலாம். லெஸ்ஸிங்ஸ் (Lessings) கூற்றுப்படி, எல்லா கவிதைகளும் காலத்தின் துணைக்கொண்டுதான் செயலாற்றுகிறது என்பதாகும். ஒரு வார்த்தையை தொடர்ந்து அடுத்த வார்த்தை வரும் கவிதைக்கு எல்லா வார்த்தைகளையும் ஒரு சேர கூட்டிணைப்பது (assemble) முடியாத காரியமாகும்.

. இலியட்டில் உள்ள ஆகமனின் (Agamenin) கேடயத்தைப் பற்றி ஹோமர் வர்ணிக்கும் நிகழ்ச்சியை லெஸ்ஸிங்ஸ் உதாரண மாக காட்டுகிறார். கவிஞன் காலமறிந்து கவிதையாக்க முடியும். அவன் எப்பொழுதும் நிலையற்றவன் அல்ல. அதனால் அவன் சலனமற்ற உணர்ச்சிகளை மறைமுகமாக மட்டுமே கூற முடியும். ஆனால் இக்கருத்து ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட வேண்டியது. ஒரு நிகழ்ச்சியை பற்றிய வர்ணிப்பை படிக்கும் வாசகன் அதை தன் மனத்திரையில் மீண்டும் உயிர்தெழச் செய்ய முடியும். அவ்வாறு உயிர்தெழச் செய்த அந்த வர்ணனை மனத்திரையில் நிரந்தரமாக நிலை பெற்றுவிடும். கீட்ஸ்ஸின் Ode to a Grecean Urn

கவிதையை படிக்கும் எந்த வாசகனும் அதில் உள்ள குப்பியின் மேல் செதுக்கப்பட்டுள்ள காதலர்களின் ஓவியத்தை தன் மனத்தில் நிலைநிறுத்திக் கொள்ள முடியும். ஆனால் லெஸ்ஸிங்ஸ் (Lessings) கொள்கைகள் கவிஞராலும், ஓவியராலும் பயன் படுத்தப்பட்ட பல்வேறு விதமான குறியீடுகளின் (symbols) வேறுபாடுகளை விசேசமாக ஆராய்வது முக்கியமானதாக கருதப்படுகிறது. அவைகள் கட்டாயம் ஆலோசனைக் கூறத் தக்கதாகும். ஓவியங் களிலும் சிற்பங்களிலும் உள்ள குறி யீடுகள், இயக்கத்தையும் செயற் பாடுகளையும் உணர்த்துகிறது. அதே போல் கவிதையில் உள்ள குறியீடுகள் நிச்சயம் சலனமற்று இருக்கும் நிலையை தெரிவிக்கும். ஒவ்வொரு குறியீடுகளும் மறைமுகமாக சில செய்திகளை உணர்த் தும் குணாதிசைங்களை பெற்றிருக்கும்.

நான்காவது கட்டுரை Ideal and Reality என்பதைப் பற்றியதாகும். அது பெர்க்ஸன் (Bergson) என்பவரின் அழகியல் (முருகியல்) கொள்கையை அடிப்படையாக கொண்டு எழுதப் பட்டது. 1950 ஆண்டுகளில் பெர்க்ஸன் (Bergson) தத்துவவாதியாக புகழ் உச்சியில் இருந்தார். அவருடைய கொள்கையான 'வான வெளியில் இடைவிடாத மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன என்பதே இறுதியான உண்மை'' என்ற அவருடைய கொள்கையும், மெக்கானிக்கல் காலத்திற்கும், சைக்காலஜிக்கள் காலத்திற்கும் உள்ள வேற்றுமை பற்றிய அவருடைய ஆழ்ந்த அறிவும், மேற்கத்திய- கிழக்கித்திய பண்பாடுகளில் அவருக்கு இருந்த நம்பிக்கை முதலியவைகள் குறிப்பாக எம்.பி.பாலை கவர்ந்தன. மேலும் அவர் பெர்க்ஸனின் (Bergson) தத்துவத் தையும் அவருடைய துடிப்பின் உயிர் நிலை (Elan-Vital) யின் கொள்கையைப் பற்றி எம்.பி.பால் விரிவாக விளக்குகிறார் என்று அவருடைய கட்டுரையை படிக்கும் ஒவ்வொரு வாசகனும் உணர் வான். பெர்க்ஸனின் முக்கியக் குறிக்கோள் Materialism தையும் Idealism தையும் ஒருங்கிணைப்பதே முக்கியமாக இருந்தது. பெருகிவரும் அணுக்கூறுகளால் உருவானது இந்த பிரபஞ்சம். இவ்வித அணுக்கூறுகளால் உருவான ஒவ்வொரு பொருளும் அதற்குரிய சக்தியைப் பெற்று எப்பொழுதும் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும். ஆனால் இந்த அனுக் கூறுகளை எது இயக்குகிறது? யார் அதை சலனத்திற்குள்ளாக்குவது? எவ்வாறு அது செயல்படுகிறது? நிச்சயமாக (Dynamic Force) ஒரு துடிப்பான சக்தியானது இவ்வுலகை இயக்குகிறது. இச் சக்தியைதான்

பெர்க்ஸன் 'Elan Vital'. அதாவது 'துடிக்கும் ஜீவாதாரம்' என்று கூறுகிறார். இந்த பிரபஞ்சம் தன்னகத்தே ஒரு இனிய நாதத்தை (இசையை) அதாவது சீரான இசை நயத்தை பெற்றுள்ளது. வேகமாக சுழன்றோடும் இக்கால சூழ்நிலையில் சிக்கித் தவிக்கும் மனிதன் இந்த நாதத்தை உணர்வதில்லை. அவனுடைய எண்ணங்கள் முழு வதும் இவ்வுலக வாழ்க்கையை எவ்வாறு நடத்தி செல்வது, எவ்வாறு அனுபவிப்பது என்று தொடர்ந்து போராடிக் கொண்டு எப்படி என்றென்றும் நிலைத்த ஜீவித்திருப்பது என்பதைப் பற்றிய எண்ணங்களில் மூழ்கியிருக்கிறான். ஆனால் இயற்கையிலேயே கற்பனைச் சக்தியை தன்னகத்தே கொண்டுள்ள கலைஞனும், அறி வாளியும் இப் பிரபஞ்சத்தில் இரண்டர கலந்துள்ள இசை நாதத்தை, அமைதியை, ஒற்றுமையை தன்னுடைய உள்ளுணர்வின் வலிமை யினால் உணர்ந்து தன் படைப்புகளில் வெளிப்படுத்துகிறான். இவ்வித படைப்புகளின் மூலமாக மற்றவர்களும் இப் பிரபஞ்சத்தில் இரண்டர கலந்துள்ள இசை நாதத்தை அறிந்து கொள்ளச் செய்கின்றான். இவ்வித திறமையை பெற்றுள்ள கலைஞனும் ஞாணிகளும் இந்த பிரபஞ்த்தின் இயற்கை அழகின் ரகசியத்தை அறிந்து கொண்டு தன் படைப்பு களில் வெளிப் படுத்துவர். ஒவ்வொரு பொருளிலும் பொதிந் திருக்கும் பல்வேறு வடிவங்களில் காணப்படும் தோற்றங்களில் சிலவற்றே கவிஞனின் - கலைஞனின் கவனத்தை கவருகிறது. அந்த குறிப்பிட்ட அழகு வடிவங்களைப் பற்றி அவன் தான் அனுபவித்தை தன் படைப்பு களில் வெளிப் படுத்துவதைதான் 'அழகு' என்று கூறுகிறார் பெர்க்ஸன். ஆனால் பெர்க்ஸன் கலையிலும் அழகிலும், சமூக-வரலாற்று உண்மைகளை புறகணித்து விடுகிறார் என்று எம்.பி.பால் சுட்டிக் காட்டுகிறார். **'சக்தியின் ஓட்டம்'** (Flow of Energy) என்னும் பெர்கஸனின் கொள்கையில், சமூகத்தைப்பற்றியும் வரலாற்றை பற்றியும் அவர் நன்கு சிந்தித்துள்ளதை தெளிவாக உணரலாம். இவ் விரண்டிலும், சீரான நடையுடன் துடிப்பின் உயிர் (Elan - Vital) நிலையுடன் இயைந்து ஒன்றுபட்டு இயங்கும். இந்த இயைபின் (Harmony) மூலமாகதான் கலைஞன் புரிந்து கொள்கிறான். பிளாட்டினஸ் (Platinus) மற்றும் பிளோட்டோ (Plato) போன்றவர்களிடம் இருந்து பெர்க்ஸன் தன் உள்ளுணர்வுக் கொள்கையின் மையக் கருத்தை பெறுகிறார். The Foundation of Aesthetics என்ற புத்தகத்தில் உள்ள முதல் கட்டுரை மலையாள மொழியில் உள்ள ஒரு சிறந்த கட்டுரைகளில் ஒன்றாக

கருதப்படுகிறது. எம்.பி.பால், CEM, மற்றும் ஜோட் (Joad) டின் Guide to philosophy போன்றவர்களின் கட்டுரைகளில் இருந்து தன் கட்டுரைக்கு தேவையான குறிப்புகளை எடுத்திருக்கலாம். ஆனால் எம்.பி.பாலுக்கும் அவருடைய சுயமான அணுகு முறையும், முடிவான கருத்தும் பெற்றிருந்தார். அழகு என்பது ஒரு புறநிலையை சார்ந்தது (Objection) என்று வாதிடும் விமர் சகர்கள் பலர் இருந்தனர். மேலும் அழகியலில் இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. புறநிலை அழகு (Objective) பார்ப்பதற்கு மெச்சத்தக்கவாறு இருக்கும் அதன் உள்ளே மறைந்திருக்கும் அக அழகு (Subjective) புற அழகை அதிகரித்து காட்டும். குறிப்பாக நாம் அழகின் இரகசியத்தை புறநிலையிலோ அல்லது அகநிலையிலோ காண முடிவதில்லை. அது முழுவதும் அகநிலையைச் சார்ந்து இருந்தால் சில புறநிலை கூறுகள் நம்மை கவர்ந்திழுத்து இன்ப நிலைக்கு கொண்டு செல்ல முடியும். அதே போல வேறு சில கூறுகள் நம்மை அதனிட மிருந்து விலகிச் செல்லுமாறு செய்யும். சில பொருள்கள் (Object) கண்டிப்பாக மற்றவைகளை விட மிக அழகானதான காணப்படுகின்றன. ஆனால் பலரை தன் அழகால் கவர்ந்திழுக்கும் பொருள்கள் சிலரை மகிழ்ச்சிக்குள்ளாக்கு வதில்லை. அழகு என்பது பொருளை மட்டும் சார்ந்திராமல் அப்பொருளை நோக்கும் பார்வையாளர்களின் (reaction) நோக்கும் விதத்தைப் பொருத்தும் இருக்கும்.

இக் கட்டுரையின் இரண்டாம் பாகத்தில் எட்மண்டு பர்க் (Edmund Burke) என்பவரின் ஆராய்ச்சிக் கட்டுரையில் (Dissertation) The Subline and the Beautiful என்ற கட்டுரையில் விவரித்துச் சொல்லப்பட்ட அழகின் குணாதிசியங்களை இப் பகுதியில் ஆராய்கிறார். பெர்க்கின் (Burke) கூற்றுப்படி அழகிய பொருள் என்பது சிறியதாகவும் மிருதுவாகவும், நிசப்தமாகவும், வளைந்தும், நேர்த்தியாகவும், நுட்பமாகவும், சுத்தமாகவும் வெண்மையாகவும் இருக்கும் என்பதாகும். போதுமான அளவு சிறிய அளவினதாகவும், பார்த்து உணர்தலுக்கு முழுமைபெற்று விளங்கும் என்று பெர்க் நினைக்கிறார். அவர் மேலும் சில பண்புகளை பற்றியும் பேசுகிறார். அழகான பொருள்கள் காதல் வயப்படுவதைப் போன்று நம்மனத்தில் ஒரு போதையை உண்டாக்கக் கூடியது. அது நம் மனத்தை உருக்கவல்லது. நம் மனத்தின் திடத் தன்மையை இளகச் செய்து . நம் உடல் முழுவதும் ஒரு மாற்றத்திற் குள்ளாக்குவது. அழகு என்பது பார்ப்பதற்கு Materialist ஆக

இருந்தாலும் அது புறநிலை பண்புகளை பிரத்தியோகமாக பெற்று இருக்கும். ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) பொருள் ஒரு இயக்கத்தில் (Motion) இருக்கும் போதும், நிலைத்து நிற்கும்போதும் எவ்வித இயக்கத்திலும் ஈடுபடாமல் இருக்கும் போதும் அழகானதாக காணப்படுவதாக கூறுகிறார். அழகு என்பது எவ்வித சலனமும் இல்லாமல் தோன்றுவது. எம்.பி.பால் பெர்க்கின் மற்றும் ஸ்பென்சரின் அழகியல் கொள்கையை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்.

மூன்றாம் பகுதியில் எம்.பி.பால் பிளேட்டோவின் (Plato) பூரணத்துவம் பொருந்திய அழகியல் கொள்கையை அலசு கிறார். இயற்கையில் காணும் அழகு அல்லது அழகு பொருந்திய பொருள் என்பது முழுமை பெற்ற அழகின் பிரதிபலிப்பே. அதனால் பிளேட்டோவின் கூற்றுப்படி 'அழகின் அடிப்படை' எல்லா வற்றையும் விஞ்சி நிற்கக்கூடியது; அருள் பெற்று பேரின்ப நிலையில் இருக்கும், அதிருஷ்டசாலிகளான படைப்பாளர்களின் உள்ளுணர்வு களில் முழுமை பெற்ற அழகியல் கருத்துக்கள் பளிச்சிடும் என்னும் கூற்றுடன் எம்.பி.பால் ஒத்துப் போகிறார். பிளேடோனிக் (Platonic) கூற்றானது இது. பிறகு ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட கொள்கையாக, பிளேட்டோவின் ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டு பெர்க்ஸனால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இது பெரும்பாலும் இந்திய அழகியல் கொள்கையுடன் ஒத்துப்போவதாக காணப் படுகிறது. ஹெக்கல் (Hegel) அழகின் அடிப்படையை விளக்கி கூறுவதற்கு தன்னுடைய (Dialect) மொழியினால் முடியாத காரியம் என்பதை உணர்ந்த அவர் பிளேட்டோவின் (Plato) அழகியல் கருத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதாகிறது. இவ்வுலகம் முன் என்றும் இராத புதிய கருத்துக்கள் கொண்டதாக மாறிக் கொண்டிருக்கிறது. அழகு என்பது புதிய எண்ணங்களுடன் பிரிக்க முடியாத ஒன்று. இயற்க்கையில் நாம் காணும் அழகு என்பது முழுமை பெற்ற நவீன எண்ணங்கள் - வடிவங்கள் (Material) மூலமாக இவ்வுலகுக்கு உறுதியாக உணர்த்துபவையாகும். காரணிகளால் (Reason) நெருங்க முடியாத Realism of idea என்பதை ஒப்புக்கொள்கிறார் எம்.பி.பால். அது படைப்பாளர்களின் உள்ளுணர்வின் மூலமாக மட்டுமே நெருங்க முடியும். பொருத்தமான அளவும், இயைபும் (Harmony) அழகின் இரண்டு முக்கிய கூறுகள் என்ற கருத்தை எம். பி. பால் ஒதுக்கித் தள்ளுகிறார். கவிதையில் கூட பொருத்தமான அளவு மற்றும் இயைபு ஆகிய இரண்டு

மட்டும்தான் அழகின் முக்கிய காரணங்கள் என்பதல்ல. கிரேக்க தத்துவ மேதையான சாக்கரடீஸ் என்பவர் அழகும், உண்மை மற்றும் நற்குணங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்பவை. எம். பி. பால் இந்த Metaphysical கொள்கையை விவரித்துச் சொல்லவில்லை. சாக்ரடீஸின் அழகுகொள்கை என்பது உபயோகத்தை குறிக்கோளாக கொண்ட ஒரு தத்துவ மாகும். கடைசியில் நற்குணங்களை அடிப்படையாக கொண்டுள்ள அக் கொள்கைளை நாம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கொள்கைகள். வாழ்க்கையில் நாம் தெளிவாக, வெளிப்படையாக காணும் நற்பண்புகள்- அவை எந்த வடிவத்தில் இருந்தாலும் நமக்கு மிக உபயோகமுள்ளதாக இருக்கும். அதனால் நாம் எவை நற்குணங்கள் பொருந்தியவை என்று கருதுகிறோமோ அவைகள் எல்லாம் மதிப்பிற்குரியதாக கருதப்படும். இந்த விவாதம் எந்த அளவுக்கு அழகியலுக்கு பொருந்துமோ அதே அளவு மற்ற நல்லொழுக்கத் திற்கும் பொருந்தும், எம்.பி. பால் இக்கருத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். அவருடைய கூற்றுப்படி அழகை மதிப்பிடுவதற்கு உபயோகத்தன்மையை (Utility) பயன்படுத்தக் கூடாது என்று கருதுகிறார்.

அவருடைய கட்டுரையில் ஐந்தாவது பகுதியில் பாலுணர்ச் சியுடன் இணைந்து இருக்கும் வேறு பல பண்புகளை பட்டியலிட்டு காட்டுகிறார். அவைகளில் எல்லாம் சிறப்பாக அழகு குணம் பொருந்தியதாகும். ஆனால் அவைகள் எல்லாம் அழகின் அடிப் படையை கொண்டிருப்பதில்லை. அழகின் புறநிலை அஸ்தி வாரத்தை காணுதல் என்பது மிக அரிதான காரியமாக கருதும் எம்.பி. பால் அதை கட்டாயம் படைப்பாக்க உள்ளுணர்வின் மூலமாக அல்லது அகநிலை அழகை உணர்வதின் மூலமாக மட்டும்தான் கட்டாயம் இயலும் என்று கூறுகிறார். அழகு என்பது அடிப் படையில் அதை அனுபவித்து உணர்வது. புலன் உணர்வால் உணரக் கூடியது. ஒரு அழகிய பொருளுடன் சம்மந்தப்பட்ட குணாதிசியங் களை அப்பொருளின் அழகை அந்த குணாதிசியங்கள் ஊக்கப்படுத்தி தூண்டுவதை நாம் உணரலாம். அக்குணங்கள் அப்பொருளின் அழகியல் அம்சத்தை (Asthetic Sense) எடுப்பாக எடுத்துக் காட்டுபவை. தூண்டிகள்(Stimuli)அழகுப் பொருள்களின் புறநிலை பண்புகளாகும். ஆனால் அழகுணர்வுகள் (Asthetic) அகநிலையில் ஆழ்ந்துள்ளவையாகும்; பொருள்களின் அக நிலையில் உள்ள காரணிகளுக்கும் மனித உணர்வுகளுக்கு மிடையே ஏற்படும்

இயக்கத்தின் விளைவாக (action) உணரக் கூடியது. அது இவ்வுலகத்தில் முக்கிய குணங்களை உணரும் மனிதனின் மனிதப் பண்புகளுக்கும் அவனால் உணரப்படும் பொருள்களின் குணங் களுக்கும் இடையே ஒன்றுடன் ஒன்று இணைந்து உருவாகி முழுமை பெற்று விளங்குவது. அவனால் உணரப்படும் பல்வேறு குணங்களில் ஒரு சிலவே அழகுணர்ச்சி பொருந்தியதாக அவனுக்குத் தோன்றும். அவ்வாறு உணரப்படும் அனுபவங்களைப் பற்றிய மனிதனின் மனத்தில் உருவாகும் முடிவான **தீர்ப்பே** அழகு என்பதாகும். அத்தீர்ப்பு மனிதர்களிடையே வேறுபட்டு காணப்படலாம். இவ்வித அழகு தீர்ப்பை உருவாக்கும் திறமை என்பது ஒரு Supernatural. ஆழ்ந்த கருத்து. அனுமானம் நினைவுகள் மற்றும் பிரித்தறியும் திறமை போன்றவற்றை விட அதி மூலாதாரமானது. அது எல்லா விதமான மனித செயல்பாடுகளை - அறிவியல் சம்மந்தமான எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். இக்கருத்து ஜோட்(Joad)எழுதிய *Guide to Philosophy* என்ற புத்தகத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட காண்டியனின் (Kantian) கருத் தாகும். அதாவது அது முக்கியமான தீர்ப்பின் விஷயமாகும். நுணுக்கமாக ஆராய்வதால் உண்மை, நற்குணம், மற்றும் அழகு போன்ற விஷயங்களை பற்றிய முடிவான கருத்தை எடுத்தியம்பு வது மேற் குறிப்பிட்ட அதே **உணர்வுத் திறமைதான்** (Mental faculty) என்பதை நம்மை நம்பச் செய்யும். **அழகுணர்ச்சி** (Asthetic Sense) உள்மனம் மற்றும் **காரணிகள்** (Stimuli) ஆகிய மூன்றும் மனிதனின் அடிப்படைத் திறமையாகும். ஆனால் இம்மூன்றும் மேற்கூறிய மூன்று திறமைகளில் மூன்று வேறுபட்ட பரிமாணங்களில் (Mode) இயங்கவல்லது. எம்.பி.பால் கீழ்கண்ட கீட்ஸ்சின் கருத்தை ஒப்புக் கொள்கிறார்.

கற்பனையில் ஈடுபட்டு இருக்கும்போது அழகானது என்று கருதப்படுபவை எல்லாம் கட்டாயம் உண்மையுள்ளதாக இருக்கும். இது பிளேடோனிக் (Platonic) கருத்துடன் ஒத்ததாக இருக்கிறது. ஆனால்அழகு முழுவதும் Subjective ஆக இருக்கும் என்று கொள்ள லாகாது. ஏனென்றால் ஒரு பொருளின் புற நிலை வெளிப்பாடு, அகநிலையில் பொதிந்திருக்கும் அழகுணர்வு ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து உருவாகும். ஏதே உணர்ச்சிபற்றி எழுதப்பட்ட தீர்ப்பாகும். **அழகு** என்பது கடைசியில் Subjective என்ற மிக தீவிரமான ஒரு நிலைக்கு போகிறார் குட்டிகிருஷ்ணமாரர். அந்நிலையை **அஹம்பிரம்மாஸ்மி** என்ற ஊடகத்தின் (Plane) மூலமாக நியாயப்படுத்தப்படுகிறது.

எம்.பி.பாலின் அழகியல் கொள்கையானது நிலையற்ற வாழ்க்கையை பற்றியது (materialist)அல்ல. இறுதி ஆய்விற்கு பிறகு அது பிளடோனின் (Platonic) கருத்துடன் ஒத்திருப்பதை உணரலாம். அவர் பிளோட்டோவின் (Plato) முழுமை பொருந்திய, உண்மை அழகு நேர்மை ஆகியவற்றை முழுமை பொருந்திய எண்ணங்கள் கொண்ட கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தாரா? அவ்வாறு தெரிவித்திருந்தால் அவர் ஒரு idealist. இல்லை யென்றால் அவர் ஒரு materialist. அவர் இறப்பிற்கு பிறகு ஆத்மா அல்லது உயிர் அல்லது இறந்தவர்களை கடவுளாக கற்பனையாக உருவகப்படுத்தி அக்கடவுளுக்கு மதங்களால் தொடர்ந்து அங்கீ கரிக்கும் இப்பழக்கத்தின் மீது எம்.பி.பாலுக்கு சிறிது நம்பிக்கை இருந்திருந்தது. உண்மைதான். இருந்த போதிலும் வெறும் சரித்திர அல்லது நிலையாமையை (materialistic) விட உயர்ந்த நம் அறிவுக்கு புலப்படாத ஏதோ ஒன்று தெய்வீகமானது. இம்மனித இனம், மனிதன் தன்னுடைய மர்மமான (Mysterious) திறமையை பெற்றுள்ள அவன் தன்னை இவ்வுலகத்தில் இருந்து விடுபட விரும்புகிறான். அவ்வித மனிதன் மண்போன்ற ஜடமா? அல்லது தூசியின் ஒரு பகுதியை ஒத்தவனா? அழகு, உண்மை, நற்குணங்கள் இவ்வுலகில் இருந்தாலும் அவைகள் எங்கிருந்தோ கண்ணுக்கு புலப்படாத இடத்திலிருந்து வருகிறது. அவைகள் எங்கும் பரவி எல்லா வற்றிற்கும் மேலாக தனித்து நிற்கும். அதனால் எம்.பி.பாலின் அழகியல் கொள்கை ஒரு அறிவியல் எண்ணங்களால் ஞானம் பெற்ற ஒரு idealist கொள்கை என்று நாம் நம்புவதற்கு ஏதுவாகிறது.

13. எம். பி. பாலின் திறனாய்வின் நிலை

இலக்கியம் மற்றும் இலக்கிய வாழ்க்கை என்பது பற்றிய எம்.பி.பாலின் எண்ணங்கள், அவர் மனிதவர்கம் மற்றும் தனிமனி தன் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும் அவர்களுடைய முன்னேற்றத்தையும் ஆதாரமாக கொண்டி ருப்பதாகும். மனிதனை சரியான முறையில் ஆராய்வது, இந்த மனித சமுதாயத்தையையே ஆராய்வதற்கு சமமாகும் என்ற கருத்துக்கு அவர் உடன்படுகிறார். இந்த பிரபஞ்சத்தில் பரந்து விரிந்து, பல்வேறு வடிவங்களாக, தொடர்ந்து தங்கள் வடிவங்களை மாற்றி கொண்டிருக்கும் அழகான இயற்கை காட்சிகளையும் அதன் உயிர் துடிப்புகளையும் படம் பிடித்து காட்டுவது, மனிதன் அதை இன்புற்று அனுபவிப்பதற்கும் அதை ஆர்வத்துடன் பின்பற்று வதற்கும் அல்லவா? இலக்கியத்தின் தலையாய கடமை, அது இந்த மனித சமுதாயத்திற்கு தன் கடமையை ஆற்றுவதே ஆகும். உண்மையும், அழகும், நற்குணங்களும் மனிதனை நல்லவனாக உருவாக்குவதற்கு பயன்படுகின்றன. இந்த நல்ல எண்ணங்கள் தன் பங்குக்கு மனித மனத்தில் ஆழப்பதிந்து அவனை நல்ல பண்புகள் நிறைந்த மனிதனாக நிலை நிறுத்துகிறது. மனிதனுக்கு தேவை யில்லாத, மிக ஆழ்ந்த தத்துவ இலக்கிய வகைகள் மனித வாழ்க்கைக்கு தேவையானதல்ல. இந்த மனித சமுதாயத்தால் அறிந்து கொள்ளப்பட்ட, படைக்கப்பட்ட நிறைவேற்றப்பட்ட சாதனைகள், மனிதனால் உருவாக்கப்பட்ட எல்லா கல்வி செல்வங்களும், ஞானம் பொருட் செல்வங்கள் எல்லாம் மனிதனுக்காக பயன்பட வேண்டும்.

ஆதலால் கலையும் இலக்கியங்களும் மனிதனுக்காக படைக்கப் பட்டது. மனிதனைப் பற்றியே எடுத்தாளப்பட்டது. கலை மற்றும் இலக்கியத்தில் மனித தத்துவத்தை உறுதியாக எடுத்துரைக்கிறார் எம்.பி. பால். அவருடைய கூற்றுப்படி மனித சமுதாயம் குறைந்த பட்சம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று தனி மனிதனைப் பற்றியது. மற்றது இந்த சமுதாயத்தைப் பற்றியது. அவருடைய கலை மற்றும் இலக்கியம் பற்றிய பரந்த நோக்கு மேற்குறித்த இரண்டையும் விளக்குவதே. ஒரு தனி மனிதனாக எடுத்துக்கொண்டால் அவனுக்கு சுதந்திர வேட்கை அவனுடைய உயிர் நாடியாகும். எம்.பி.பாலின் வாழ்க்கை இந்த அழியா உண்மைக்கு உதாரணங்காட்டி விளங்குகிறது. அதே சமயம்

ஒவ்வொரு தனிமனிதனும் எதாவதொரு வழியில் இந்த சமுதாயத்திற்கு கட்டுப்பட்டவனே ஆகும். ஒரு எழுத்தாளன் தன்னைப்பற்றி தன் படைப்பில் ஒரு தனி மனிதனாக பாவித்து எழுதப்படுபவை, ஒருவித மாற்றமுமில்லாமல் அது சமுதாயத்தைப் பற்றி எடுத்துரைப்பவை ஆகும். ஏனென்றால் அச்சமுதாயம் தனி மனிதர்களால் ஆனதே ஆகும். மிகச் சிறந்த கற்பனை உலகில் தனிமையில் உலவித் திரிபவர்களின் இன்னிசையில் கூட மனித இனத்தின் சோக ராகத்தை கேட்கலாம். அதனால் ஒவ்வொரு பெரும் கலைப் படைப்பும், அது எந்த தனித்தன்மை கொண்டிருந்தாலும் அது கட்டாயம் சமுதாயத்தின் படைப்பாக கருதப்பட வேண்டும். கலை என்பது சமுதாயத் தன்மையும் அதற்கே உரிய தனித் தன்மையையும் பிரிதிபலிப்பதாக இருக்கும். எம்.பி.பால் எவ்வாறு, ஒன்றுடன் ஒன்று ஒத்த கருத்துடைய இலக்கியக் கொள்கையை உருவாக்கினார் என்பதை குறிப்பிட்டு ஆராய்வது பொருத்தமாகும்.

எழுத்தாளன் தனிமனிதனாக அவன் தன் எண்ணங்களை தனக்குரிய வழியில் வெளிப்படுத்துவதும் வாழ்க்கைபற்றிய தனக்குரிய ஒரு பார்வையை (Vision) உருவாக்கிக் கொண்டு இருப்பான். அவன் தன் ரசனைக்குத் தகுந்தவாறு விஷயங்களை (Subjects) தேர்ந்தெடுத்துக் கொள்கிறான், அல்லது அவனுடைய மனோபாவத்திற்கு ஏற்ப தன் கற்பனா சக்தியை சுண்டி எழுப்பக் கூடிய சம்பவங்களை அல்லது விஷயங்களை எடுத்தாள்கிறான். தன்னுடைய திறமையை, கவிதை, சிறுகதை அல்லது நாவல் போன்ற இலக்கிய வகைகளில் எதாவதொன்றை, காலத்திற்கு தகுந்தவாறு தேர்தெடுத்து உபயோகிப்பதை அவன் உணர்கிறான். மேலும் அவனுடைய ஆளுமை (personality) அணுகுமுறை, முடிவு செய்யும் விதம், கலை எல்லாவற்றிலும் முக்கியமாக கவனிக்க வேண்டியது அவனுடைய தனித்தன்மை, சுதந்திரத் தன்மை ஆகியவை ஆகும். எவரும் அவன் கற்பனை உலகில் கவிதையாக்குவதற்கு சிறகடித்து பறப்பதை தடை செய்ய முடியாது. எம்.பி. பாலின் இலக்கணப்படி, கற்பனையின் துணைக் கொண்டு கவிதையை படைக்கும் செயலை நுணுகி ஆராய்ந்தால் அது அக்கவிதையாக்க செயலானது ஒரு Romantic என்று எம்.பி.பால் புரிந்து கொண்டிருப்பதை நாம் நன்கு உணரலாம். இயற்கையிலும், வாழ்க்கையிலும் அநேக பொருள்கள் நம் பார்வையில் படுகின்றன; அநேக நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. அவைகள் கவிஞனின் கற்பனையை தூண்டி விடுகின்றன. கவிஞன் தன் கற்பனையை

வளரவிட்டு அப்பொருள்களில் அல்லது நிகழ்ச்சிகளில் உள்ள அழகுணர்ச்சிகளை நன்கு புரிந்து கொண்டு கவிதையாக படைக்கிறான். இவ்வித கவிதையாக்க முயற்ச்சியில் எடுத்தாளப் படும் பொருள் அல்லது நிகழ்ச்சி தெளிவாக விவரிக்கப்படுவதின் மூலமாக அப்பொருளின் அகத்தில் அல்லது அந்நிகழ்ச்சியில் தொக்கி நிற்கும் அழகுணர்ச்சியை மற்றவர்களுக்கு புரியும்படி விளக்கப் பட்டு, ஒரு முழுமை பெற்ற கவிதைப் படைப்பாக உருவெடுக்கிறது. கோலிரிட்ஜி (Coliridge) கற்பனையின் வெற்றிகரமான இவ்வித கவிதையாக்க செயலை செய்து முடிக்கிறார். ஜோசப் முண்டசேரி ***காவிய பீடிகா*** (Kavya petika) என்னும் புத்தகத்தில் வரைபடம் மூலமாக இச்செயலை விளக்குவதில் இருந்து இக்கவிதையாக்க செயல் உருவாவதை நாம் காணலாம். எம்.பி.பாலின் இலக்கியக் கொள்கையை அவருடைய அழகியல் கொள்கையுடன் இணைத்து இரண்டையும் ஒருவர் படிக்க நேர்ந்தால் அவர் எம்.பி.பாலின் கவிதையாக்க கொள்கையை ஒழுங்காக புரிந்து கொள்ளலாம். அழகியல் பற்றிய கட்டுரையில் பால் கூறுகிறார், 'அழகு என்பது வெளியில் காணும் புற அமைப்பிலும், அகத்தில் மறைந்து கிடைக்கும் அக அழகும், ஆக இவை இரண்டும் இரண்டர கலந்து, அதை அழகியல் உணர்வோடு நோக்குபவரின் கற்பனையில் பிறக்கும் **தீர்ப்பே** அழகு எனப்படும்'' என்கிறார். அத்தீர்ப்பானது மிக உயர்ந்த புனித நிலையில் உள்ள அவ்வழகு அப்பொருளில் அடைக்கலமாக இருக்கும்போது அது எவ்வாறு அருள் பெற்ற கவிஞனால் (Blessed people) முக்கிய நேரத்தில் (Blessed moments) இச்செயலை செய்ய முடியும் என்று பால் நன்கு தெளிவாக விளக்குகிறார். அவர் தன் கருத்துக்கு பெர்க்ஸ்ஸன் (Bergson) படைப்பை ஆதாரமாக கொள்கிறார். அடிப்படையில் அது பிளோட்டிஸ் (Ploties) என்பவரின் கொள்கையில் இருந்து பிறந்ததாகும். இக்கொள்கையின் குறிப்பிடத்தக்க கருத்து (aspects) என்னவென்றால், மாரிடென்னின் (Maritenin) உள்ளுணர்ச்சி படைப்பாக்க கொள்கை (Theory of creative institution) யுடன் ஒத்திருப்பதாகும். மாரிடெனும், தோமிஸ்ட் வேதாந்தியும், பெர்க்ஸனின் (Bergson) கொள்கைகள் தோமிஸ்டின் உள்ளுணர்வு அருள்பொழியும் நிகழ்ச்சியின் நம்பிக்கையை அடிப்படையாக உள்ள கொள்கையுடன் ஒத்துப் போவதை உணர்ந்தனர். ஊக்கப்படுத்து வதற்கான காரணம் அல்லது அழகை அணுஅணுவாக ஆராய்வதற்கு திறமையை முக்கியமாக கருதும் எம்.பி.பால் அவர் operation of

Grace யை ஒத்துக் கொள்ள முன் வரவில்லை. ஜேம்ஸ் ஜொய்ஸ் (James Joyce) தன்னுடைய Portrait of the Artist as a young man என்ற புத்தகத்தில் உள்ள epiphamy கொள்கை யையும் ஒப்புக்கொள்ள மறுக்கிறார். அவர் கீட்ஸ்சின் வரிகளை குறிப்பிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறார். கற்பனையில் படம் பிடித்து காட்டுபவை எல்லாம் அழகு என்பதல்லாம் உண்மையானதாகும் (what the imaginative sense as beauty in the truth) இந்த மேற்கத்திய எண்ணப்படி கருத்து, பிளாடோவின் எண்ணங் களில் இருந்து பிறந்தவையாக இருக்கலாம். Plotinus என்பவர் இக்கருத்தை மேலும் விரிவு படுத்தினார். கிருஸ்துவ வேதாந்திகளும், ஞானிகளும் இக்கருத்தை operation of Grace என்ற கிருஸ்துவ கொள்கையுடன் ஒன்றிணைத்தனர். பொதுவாக பகுத்தறிவாதி யாகவும் இயற்பொருள் வாதியாகவும் கருதப்பட்ட எம்.பி.பால் " அதிர்ஷ்டசாலிகள் ஒரு உயர்ந்த மனநிலையில் இருக்கும்போது அவர்களுக்கு கிட்டும் அதிருஷ்ட காட்சிகள் என்ற கருத்தை தன் கவிதையாக்க கொள்கைக்கும் அழகியலை விவரிப்பதற்கும் உகந்ததாக அவர் காணும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது. இந்த கருத்து அடிப்படையில் கிருஸ்துவ மதத்தை சேர்ந்தது. இதை ஒப்புக் கொள்ளாமல் மதச்சார்பற்ற Romantic க்காக இருக்கும் கற்பனைக் கொள்கை" என்று நிலைநாட்டுகிறார். இவ்விரு கொள்கைகளை வேறுபடுத்தும் எல்லைக்கோடு உணரமுடியாத அளவு மிக மெல்லியதாக காணப்படுகிறது. எழுத்தாளன் ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சியைபற்றி மிக ஆழ்ந்து சிந்திக்கும்போது அல்லது அதன் மையக்கருத்தை பற்றி மிக ஆழமாக சிந்திக்கும்போது ஒரு சில வினாடி நேரம்வரை அவனுக்கு கிட்டும் கடவுளின் அருள் தோற்றம் என்ற எழுத்தாளர்களின் கொள்கை இந்திய அழகியலாருக்கு ஒன்றும் வேறுபாடானது அல்ல. எம்.பி.பால் ஒருமுறை இக்கொள்கையை தனக்குரிய வழியில் அவரே, கோலிரிஜ் மற்றும் பெர்க்ஸ்ஸன் படைப்புகளில் இருந்து விளக்கி இருக்கிறார். சிறந்த ஆங்கில ரொமண்டிக் படைப்பாளர்கள் திட்டவட்டமாக அறிவித்தது போல, எம்.பி.பால் எல்லா கலைப்படைப்புகளும் சந்தேகமில்லாமல் தனி மனிதனின் அறிவுத் திறத்தால் உருவானதே என்ற முடிவுக்கு வருகிறார். அவர் ஒரு பொருளை அல்லது நிகழ்ச்சியை எவ்வாறு வர்ணிப்பது என்று வினாக்களை தொடுக்கிறார். அவர் இயற்கை வாதி மற்றும் நிழற்படம் போன்று வர்ணிப்பதை ஒதுக்கி தள்ளுகிறார். ஏனென்றால் மனித கற்பனையாவது, காமிரா

பொருளின் பிரதிபிம்பத்தை அல்லது நிழற்படத்தை கொடுப்பதை போன்று கொடுக்காமல் - மனித கற்பனையானது அப்பொருளுக்கு உயிர் ஊட்டி அப்பொருளுக்கு மறுபதிப்பாக உருவாக்குகிறது. ஒவ்வொரு அழகிய காட்சியும், பொருளும் கவிஞனின் உணர்ச்சிகளை தூண்டும் நரம்புக் கட்டுகளாகும். கவிஞனால் உருவாக்கப்பட்ட அழகிய படைப்பானது அதே போல் நரம்புக் கட்டுகளாக செயல்படும். ஏனென்றால் அதை கண்ணுரும், சுவைக்கும் வாசகன் அவைகளால் தூண்டப்பட்டு, தன் வாழ்க்கையில் அந்த மூல உணர்ச்சிகளை மறுபடியும் காண்கிறான். இந்த செய்கையானது வாசகனுக்கு பேரின்பத்தை கொடுக்கிறது. எம்.பி.பால் I.A. Richard படைப்பில் இருந்து தன் கருத்துக்கு தேவையானதை எடுத் திருப்பார் என்று கூறுவதற்கு எந்த சாட்சியமும் இல்லை. ஆனால் அவருடைய கொள்கைகள் பெரும்பான்மை யானவற்றில் இந்தியாவின் ரசக் கொள்கையையும் (Rasa) I.A. Richard இன் Synaesthesis கொள்கையுடனும் ஒத்துப் போகிறது. பால் தன்னுடைய கட்டுரையான சாகித்திய விசாரம் (Sahitya Vicharam) என்னும் கட்டுரையில் இலக்கியக் கருத்துக் களை தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

கவிதையாக்கத்தில் தனி மனிதனின் தனித்திறமையின் பங்கின் மீது அதிகப்படியாக நம்புபவர்கள் பெரும்பாலும் அந்த கலைப் படைப்பில் இந்த சமுதாயம் ஆற்றிய பங்கை குறைத்து மதிப்பிடு வார்கள். கவிஞன் என்பவன் மனிதர்களில் ஒரு அங்கத்தினன்; ஒரு சமுதாயப்படைப்பு அவன். தான் வாழும் சமுதாயத்தினால் தூண்டப் படுகிறான். எல்லாவித அனுபவங்களும் அவன் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், மிகவும் அந்தரங்கமான அனுபவங் களைக்கூட, அவன் மனித சமுதாயத்தில் மனிதனாக வாழ்வதன் காரணமாக பெறும் அனுபவங்களாகும். அவனுடைய ஒவ்வொறு செய்கைகளும் - அவனுடைய தனித் தன்மையை பிரதிபலிக்கும்; அவன் வாழும் சமுதாய - உணர்வுக் கடலில் முக்கி எடுக்கப்பட்டதாய் இருக்கும். ஒரு உணர்ச்சி மிக்க எழுத்தாளன் கூர்மையான சமுதாய உணர்வை பெற்றிருக்கக்கூடும். பெரும்பான்மையான ரொமெண்டிக் எழுத்தாளர்கள் இவ்வுணர்வுக்கு எதிர்மாறாக செயல்பட்டு சமுதாய நிகழ்ச்சிகளை பிரதி பலிப்பதிலிருந்து தப்பியோட முயற்ச்சிக் கின்றனர். Neo-classist எழுத்தாளர்கள், சமூக அமைப்பு - classical படைப்புகளில் உள்ள அரச, சமூக அமைப்புகளை புகழ் பாடுவதும், அதை பின்பற்றும் எழுத்தாளர்கள் தங்கள் கால சமுதாய

வாழ்க்கைபற்றி எந்த உணர்ச்சியும் அற்று இருக்கின்றனர். எம்.பி.பால் இவ்வாறு விலகிச் செல்லும் எழுத்தாளர்களையும், Neo-classisists களையும் சாடுகிறார். ஒரு சிறந்த ஆரோக்கியமான சமுதாய வளர்ச்சிக்கு துணைநிற்பவர் பரம்பரை பண்பாட்டு பழக்க வழக்கங்களுக்கு எதிரி அல்ல அவர். அப்பழக்க வழக்கங்கள் ஒரு ஆரோக்கியமான சமுதாய. வளர்ச்சிக்கு உதவி செய்பவைகளாக இருக்க வேண்டும். கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களை பின்பற்றுவதும், கோழைத்தனமாக உண்மையற்ற, பளப் பளப்பான கற்பனை உலகில் சிறகடித்து பறப்பவர்களுக்கு எல்லாவிதத்திலும் அவர்களுடைய கவிதையாக்கத் திறமை வளர்ந்து மலர்வது முடியாத காரியமாகும். பால், சமுதாய உண்மைகளோடு தனி மனிதனின் கற்பனைச் சக்தியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகிறார். ஒரு யுகத்திலும் கவிஞனின் அறிவு அதன் மெனியை நெருக்கும் அமைப்பு முறையை எதிர்த்து, அதில் அடங்கியுள்ள ஆரோக்கியமான குணங்களை விடுவித்து புதிய சமுதாயத்தை உயிர்பிப்பதற்கு அடிகோலுகின்றான். சமுதாய அமைப்பு முறையை எதிர்த்து உண்மையாக பாடுபட தயங்கும் ஒவ்வொரு எழுத் தாளுனும் அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான் என்பதாகும். இக்கருத்தை ஜோசப் முண்டச்சேரி, Christopher caurdwel இன் Illusions and reality என்ற படைப்பையும், இலக்கியம் பற்றிய தன்னுடைய விளக்க உரைக்கு மார்க்ஸிஸ்டுகளின் வியாக்கியானத்தையும் ஆழ்தறிந்து விளம்பரப் படுத்துகிறார். ஆனால் இறுமாப்பு, கர்வம் நிறைந்த கொள்கை கோட்பாடுகளை கொண்டு தன்னைக் கட்டுப்படுத்துவதை உண்மையாக எதிர்க்கிறார். முன்னேற்றம் என்பது அவசியமானது; அது எம்.பி.பாலுக்கு தன் மனிதனின் சுயத் தன்மை அல்லது சுதந்திர வேட்கை என்பதே ஆகும். ''இலக்கிய வடிவங்களின் அழகு என்ற தன் கூற்றை கால்டுவெலின் (Caurd well) ஒன்று அல்லது இரண்டு கொள்கைகளைக் கொண்டு நிலை நிறுத்துகிறார். எல்லா இலக்கிய வடிவங்களும் மதசார்பானவையே ஆகும் என்ற Caurd Well இன் கருத்தை தன் அழகியல் கொள்கைக்கு ஏற்ப மாற்றி அமைக்கிறார். அவருடைய விளக்க உரை சமுதாயத்தில் உள்ள பல்வேறு மனித பிரிவுகள் இருப்பதின் விளைவாக பிறந்தது அல்ல. அவ்வாறு இருந்தும் பல்வேறு இனங்கள் இருப்பதை அவர் எதிர்க்கவில்லை. என்றாலும், அவ்வித பல்வேறு வடிவங்களின் முக்கிய பணியானது செய்திகளை பரிமாற்றம் செய்துக் கொள்வதே ஆகும்.

மார்க்ஸிஸ்ட்டுகள் இலக்கிய படைப்புகளில் அழகிய வடிவத்தை ஒதுக்கி தள்ளிவிட்டு, சமுதாயப் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர். எவ்வளவுதான் முக்கிய விஷயமாக இருந்தாலும் அதை இலக்கியத்தில் எடுத்தாலும்போது, அவ்விஷயத்திற்கு ஒரு அழகிய கலை வடிவத்தை கொடுக்கவில்லை என்றால், அது சமுதாயத்தில் உள்ள எல்லா பிரிவினருக்கும் உடன்பாடான அழகிய கலைப் படைப்பாக கருதிப்பட மாட்டாது. அழகிய கலைவடிவமே கலைப் படைப்பை, குற்றமற்ற, முழுமை பெற்ற படைப்பாக்குகிறது. அவ் வடிவத்தை முதலில் கலைஞனின் திறமையினால் வடிவமைக்கப் பட்டாலும், அவ்வடிவம் வாசகனின் உணர்வுடன் இனக்க முள்ளதாக்கப்பட வேண்டும். அதாவது கவிஞன் எடுத்துச் சொல்லும் செய்தி நல்ல விளைவை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். கருத்தை தேர்ந்தெடுப்பதிலும், அதற்கு தகுந்த வடிவத்தை உருவாக்குவதிலும், எம்.பி.பாலின் கவிதையாக்க கொள்கையின்படி, சமுதாயம் முக்கிய பங்கு வகிக்கிறது. அழகிய கலைப் படைப்பை உருவாக்கும் செயலை விளக்கும் அவருடைய கொள்கையில் இம்மி அளவும் முரண்பாடோ, ஒவ்வாத நிலையோ இல்லை.

ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் அவனைச் சுற்றி ஒரு தனி உலகம் இருக்கும். அவ்வுலகத்திற்குள் தடையின்றி நுழைந்து பல்வேறு இலக்கிய பரிசோதனைகளில் அவன் ஈடுபடலாம். ஒரு விமர்சகன் கூற்றுபடி இவ்வாறு அவ்வுலகத்தில் ஓடி ஒளிவதை நியாயப்படுத்த முடியவில்லை. Mysticism மற்றும் சிலவகை Romanticism மார்டனிஸம் (Modernism) போன்றவைகள் எழுத்தாளர்கள் தங்கள் உலகத்தில் ஓடி ஒளிவதை, ஒரு குறிப்பிட்ட நிலைவரை நியாயமென நிரூபிப்பதை உணரலாம். ஆனால் மனித இனம் சமுதாயத்தில் செயலாற்றும்போது தன்னைப் பற்றி தானே நன்கு எடுத்துறைக்கும். எல்லா வழிகளிலும் ஆழ்ந்து சிந்தித்து அசைபோட்டு, முக்கிய அம்சங்களை தொகுப்பது ஆகிய எல்லாம் கடைசியில் மனித வேட்கையை ஊக்கப்படுத்தி, அது தன்னைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்து சமுதாயத்தில் நன்கு செயலாற்றும். அதனால் அரிஸ்டாடில் (Aristotle) அவருடைய நாடகம், மற்றும் கவிதையாக்க கொள்கைகளில் செயற்பாடுகளுக்கு (Action) முக்கியத்துவம் கொடுக்கிறார். செயற்பாடுகள் என்பது சமுதாயத்தில் தனி மனிதனின் வெளிப்பாடுகள் ஆகும். இந்த செயற்பாடுகளே,

வரலாற்று நிகழ்ச்சிகளையும், பரம்பரை பழக்க வழக்கங்களையும் ஒரு சீரான திசைக்கு இட்டுச் செல்கிறது. நற்குணங்களை பிரிதிபலிப்பதும், தூர தேச புண்ணிய தலங்களுக்கு பாதயாத்திரை செல்வதும் தேவையானது; துணிகரமான செயல்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. ஆனால் மனித இனம் தன் ஆரோக்கியமான நிலையில் தன் உயர்ந்த செயற்பாடுகளை தானே வெளிப்படுத்தும். அதனால் செயற்பாடுகளை மையமாக கொண்ட வாழ்க்கை ஒவ்வொரு பேரிலக்கியங்களிலும் உருவாக்கப்பட்டன. எம்.பி.பால் தன்னுடைய எழுத்தாள நண்பர்களை தங்கள் குறுகிய நோக்கத்தி லிருந்து வெளியே வந்து, வெளியுலக ஈடுபாட்டாளாராக விளங்கும் படியும், தாங்கள் இருக்கும் சமுதாயத்தில் இணைந்து அதற்கு புத்துணர்ச்சி கொடுத்து உயிர்பிக்கும்படி ஊக்கப்படுத்துகிறார். நாவல், சிறுகதை, நாடகம் மற்றும் கவிதைகளில் செயற்பாடுகள் நிறைந்திருக்க வேண்டும் என்று இயற்கையான விருப்பம் கொண்டிருந்தார். உயர்ந்த இலக்கியங்கள், உயர்ந்த செயற் பாடுகளை எடுத்தாளும் என்பது பாலின் கூற்றாகும். செயற்பாடுகள் நல்லொழுக்கத்தை காப்பதாக இருக்கும். ஆழ்ந்து யோசிப்பது ஒழுக்கமின்மையாக இருக்கலாம். ஆனால் செயற்பாடுகள் நல்ல அல்லது கெட்ட செயல்களில் ஈடுபடும். அதனால் அச்செய்கை ஒன்று நல்லொழுக்கமுள்ளதாக அல்லது ஒழுக்கமின்றி மாறாமல் ஒரே சீராக காணப்படும். அது செயற்பாடுகள் புகழ் பெற்ற நல் லொழுக்க விதியின் சட்டத்தின்படி (guided) ஆலோசனைப் படி செயலாற்றிக் கொண்டு செல்லும். ஆர்னால்ட் போன்று எம்.பி பாலும் எந்த ஒரு படைப்பும் நல்லொழுக்கத்தை எதிர்த்து எழுதப் பட்டால் அது சமுதாயத்தையே எதிர்ப்பதாகும் என்று கூறுகிறார் ஆனால் நல்லொழுக்கம் என்ற வார்த்தைக்கு மிக ஆழ்ந்த, பரந்த உண்மை கருத்துக்கள் கொண்டதாக விளக்கப்பட வேண்டும். நல் லொழுக்க விதி என்பது உண்மையின் கொள்கையேயன்றி வேறல்ல சிறந்த இலக்கியப் படைப்புகள் இவ்விதிக்கு ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். நேர்மை (true) கூட அழகாக இருக்கும் ஏனென்றால் நேர்மையில் முரண்பாடுகளோ, ஒவ்வாமை போன்றவைகளா இல்லை. எம்.பி.பாலுக்கு அழகும் -உண்மையும் கலையும் - நல்லொழுக்கமும், தனிமனிதனும் - சமுதாயமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாததாகும். மாறாக மேற் குறிப்பிட்டவைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து முழுமை பெற்ற வடிவமாக கலையிலும் இலக்கியத்திலும் காணப்படுகின்றன

கலையே மனித சமுதாயத்தை நேர்மையான வாழ்க்கையுடன் ஒன்றுபட செய்கிறது. ஆதலால், அவருடைய காலத்திற்கு ஏற்ப உருவாகி தெளிவாக்கப்பட்ட சீரான கலைக்கொள்கை, இன்றைய காலத் திற்கும் ஏற்றதாக இருக்கிறது. அவர் அக்கொள்கைகளை நன்கு அறிந்திருந்தது மட்டுமின்றி அதை தன் காலத்தில் வெளிவந்த படைப்புகளை மதிப்பீடு செய்வதற்கு அதை உபயோகித்திருப்பதை நாம் கண்கூடாக காணலாம். அதனால் ஜோசப் முண்டச்சேரி தன் நன்றிக் கடனை அவரிடம் வெளிப்படையாக கூறியதும், மற்றும் குட்டி கிருஷ்ணமாரர் அவரைபற்றி தன்னுடைய பாராட்டை வெளியிட்டதும் நமக்கு ஆச்சிரியமாக தோன்றவில்லை.

சாகித்திய விசாரம் (Sahitya Vicharam) என்னும் புத்தகத் தின் முன்னுரையில் பேராசிரியர் எஸ். குப்தன் நாயர் ''மலையாள இலக்கியத்தில் எம்.பி.பால் என்ற ஒரு விமர்சகனின் மதிப்பீட்டை ஒன்றைதான் முழுவதும் எவ்வித ஆட்சேபமில்லாமல் ஒப்புக் கொள்ள வேண்டியதாகிறது. வேறு விமர்சகர்கள் எம்.பி.பாலை போன்று பல்வேறு கருத்துக்களை ஒரு சில வார்த்தைகளில் தெளிவாக உரைப்பவர் இல்லை'' தன் மலையாள இலக்கிய வரலாற்று புத்தகத்தில், பேரா்சிரியர் என். கிருஷ்ண பிள்ளை ''இலக்கிய மதிப்பீட்டாளர்களில் மிக உயர்ந்த நிலையில் வைக்கப்பட வேண்டியவர் எம்.பி.பால் என்று புகழ் மாலை சூட்டுகிறார். அவர் கூறுகிறார் '' எம்.பி. பாலின் மதிப்பீடு முறையானது பாராபட்சமின்றி விமர்சிப்பவர் என்று அவர் கூறுகிறார். '' எம்.பி.பாலின் விமர்சனம் Judicial Criticism முறையானது. ஆனால் Judicial விமர்சனத் திற்கும், இலக்கிய விதிகளை இயந்திரகதியில் (Mechanical)காக பிரயோகித்து இலக்கியத்தில் உள்ள வேறுபாடுகளை சீர்தூக்கி பார்த்து விமர்சிப்பவர்களுக்கும், இலக்கிய விதிகளை தன் திறமைக் கேற்றவாறு திருத்தி, மாற்றி அமைத்து விமர்சனம் செய்யும் எம்.பி. பால் போன்ற எழுத்தாளர்களுக்கும் மிகப் பெரும் வேறுபாடு காணப்படுகிறது. எம்.பி.பால் தன் இலக்கியக் கொள்கைகளை பெருந்தன்மையோடு அழகுக் கவிதை மற்றும் கவிதையாக்க கொள்கையின் அடிப்படை விதிகளுக்கு ஊனம் ஏற்படாதவாறு பிரயோகிப்பார். கொடுமையான, சக்தி வாய்ந்த ஏகாதிபத்தியின் அடிமைதளையில் இருந்து விடுபட சுயேச்சையான நடையும், பரம்பரை பழக்க வழக்க பண்பாட்டு கொடுமைகளை எதிர்த்து, சுதந்தர வேட்கையால், உலகில் சிறந்த இலக்கியப் படைப்புகளை தொடர்ந்து படித்ததின் விளைவாக பெற்ற கவிதையாக்கத்தை

பாராபட்சமின்றி பாராட்டும் உணர்வும், பலவகை இலக்கிய விதி களையும் - தொழில் நுணுக்க, முறைபடுத்தப்பட்ட குழப்பங்களை தன்னகத்தே மறைந்து கிடைக்கும் கவிதையாக்க கொள்கையை நுணுகி பார்த்து விமர்சிக்கும் திறமையை பெற்றிருந்தார் எம்.பி.பால்'' என்று சரியாக கூறினார். என். கிருஷ்ணபிள்ளை மலை யாள இலக்கியத்தை முழுமையாக எடுத்துக் கொண்டு பார்க்கும் போது ''அபூர்வமான இலக்கிய மதிப்பீட்டாளர் எம்.பி.பால்'' என்று இறுமாப்போடு சொல்லத்தக்க வேறு ஒரு ஆள் இல்லை.

எம்.பி.பாலைப் பற்றி குறிப்பிடத்தக்க அம்சம் என்ன வென்றால் அவருடைய எண்ணங்கள், அவர் சொல்வது செய்வது எல்லாம் சேர்ந்து ஒன்றிணைந்து அவர் உறுதியான முழுமைப் பெற்ற மாமனிதராக விளங்கினார். அவருடைய எழுத்துக்கள், வற்றாத ஜீவநதியாக, தலைமுறை தலைமுறையான எழுத்தாளர் களுக்கு ஊக்கம் அளித்து வந்தன. எம்.பி.பால் உயிருள்ள இலக் கியங்கள் எப்பொழுதும் இறந்த காலத்தினால் அடைக்கப்பட மாட்டா (Trapped) அது வேறு ஒரு புதிய வடிவத்தில் (Broke New Ground) உருவெடுத்து, புதிய எல்லைக் கோட்டை நோக்கி வளர்ந்து இப்பூமியின் தொடுவானத்தை முட்டும். அவர் தன்னுடைய எழுத்தாளர் இனத்தை வழி நடத்தி சென்றார். அவருடைய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டு புகழ் கீரீடத்தை பெற்றார். எம்.பி. பாலை நவீன மலையாள இலக்கியத்தின் விடிவெள்ளி என்று பொருத்தமாக புகழ்ப்பட்டார்.

★★★

புத்தக பட்டியல்

எம்.பி. பாலின் மலையாள படைப்புகள்

1. நாவல் சாகித்தியம்
2. செருகதா பிரஸ்தானம்
3. கடிய கத்தி
4. சாகித்திய விசாரம்
5. காவிய தர்ஷன்
6. சௌந்தர்ய நீர்க்ஷனம்
7. லட்பன் (மௌலியரின் L' Avare மொழி பெயர்ப்பு)

* மேற்கண்ட நூல்கள் SPCS நிறுவனத்தின் வெளியீடு.

எம்.பி. பாலைப் பற்றிய மலையாள குறிப்புப் புத்தகங்கள்

எழுதியர்	நூலின் பெயர்	வெளியிட்ட நிறுவனம்
1. திருமதி.எம்.பி.பால்.	எம்.பி.பால்	எஸ்.பி.சி.எஸ்., கோட்டயம்.
2. ரோசி தாமஸ்	உறங்குன்ன சிம்மம்	டி.சி. புக்ஸ், கோட்டயம்
3. ரோசி தாமஸ்	இவான் எண்ட பிரிய சி.ஜே.	எஸ்.பி.சி.எஸ்., கோட்டயம்
4. என். கிருஷ்ண பிள்ளை	கைரளியுடெ கதே	எஸ்.பி.எஸ். கோட்டயம்
5. முனைவர் சுகுமார் அழிக்கோடு	மலையாள சாகித்திய விமர்சம்	வள்ளத்தோல் வித்தியா பீடம், சுகாபுரம்

6. முனைவர் கே.எம்.தரகன்	அதுநிக நாவல் தர்ஷனம்	எஸ்.பி.சி.எஸ்., கோட்டயம்
7. மொஹெமட் பஷீர்	பகவத் கீதையும் குரி முளகளும்	எஸ்.பி.எஸ்., கோட்டயம்
8. முண்டசேரி	முண்டசேரியுடெ ஆத்ம கதா	டி.சி.புக்ஸ், கோட்டயம்
9. குட்டி கிருஷ்ணமாரர்	பதினைந்து உபநியசங்கள்	நவகோள கோவாப்ரேடிவ் பப்ளிஷிங்ஸ் ஹவுஸ், கோழிக்கோடு
10. டாக்டர் எஸ்.கே. நாயர்	நான் கண்ட சாகித்திய காரன்மார்	எஸ்.கே.புக் டிப்போ, திருவனந்தபுரம்
11. சி. அச்சுதமேனோன்	ஸ்மரணயுடெ ஏடுகள்	பிரபாத் புக் ஹவுஸ், திருவனந்தபுரம்

ஆங்கில குறிப்புப் புத்தகங்கள்

1. பி.கே. பரமேஸ்வரன் நாயர்	மலையாள சாகித்திய சரித்திரம்	சாகித்திய அக்காதெமி, புது டெல்லி
2. டாக்டர் கே.எம். ஜியார்ஜி	இந்திய ஒப்பிலக் கியம் (Comparative Indian Literature)	கேரள சாகித்திய அக்காதெமி, திருச்சூர்

எம்.பி.பால்
வாழ்க்கை நிகழ்ச்சிகள்

1904 மே முதல் தேதி	-	பிறப்பு
1916	-	தாய் இழப்பு
1919	-	தந்தை இழப்பு
	-	இ.எஸ்.எல்.சி. தேர்வுபெறுதல்
1922	-	இண்டர்மீடியட் தேர்வு பெறுதல்
1925	-	பி.ஏ. இளங்கலை தேர்வு பெற்றல், திருச்சிராப்பள்ளியிலுள்ள செயிண்ட் ஜோசப் கல்லூரி, ஆங்கில பிரிவில் சேருதல்
1927	-	மோதிலால் நேருவுடன் சந்திப்பு
1928	-	திருச்சூரிலுள்ள செயிண்ட் தாமஸ் கல்லூரியில் சேருதல்
1929	-	முதுகலை தேர்வு (ஆங்கிலம்)
1930	-	செயின்ட் தாமஸ் கல்லூரியில் இருந்து இராஜினாமா
1933	-	சட்டம் பயில சென்னை செல்லல்
1934	-	செங்கனச் சேரியில் உள்ள எஸ்.பி. கல்லூரியில் ஆங்கிலப் பிரிவின் தலைவராக சேருதல்
1938	-	செங்கனச் சேரியில் தனிப் பயிற்ச்சிக் கல்லூரி ஆரம்பித்தல்
1940	-	தனிப்பயிற்ச்சி கல்லூரியை எர்ணாகுலத்திற்கு மாற்றுதல்
1942	-	தனிப்பயிற்சி கல்லூரியை கோட்டயத்திறகு மாற்றுதல்
1944	-	செங்கனாச்சேரியிலுள்ள எஸ்.பி. கல்லூரியில் முனைவராக சேருதல். கேரள முன்னேற்ற இலக்கிய இயக்கத்தை நிறுவுதல்

1945	-	எஸ்.பி.சி.எஸ். பதிவு செய்தல்
1946	-	மறுபடியும் செங்கனாச் சேரியில் உள்ள தனிப்பயிற்ச்சி கல்லூரியில் சேருதல்
1947	-	எஸ்.பி.சி.எ.ஸ். நிறுவனம் மறுபடியும் எம்.பி.பாலை தலைவராக கொண்டு செயல்பட தொடங்குதல்
1950	-	திருவனந்தபுரத்தில் உள்ள மார் இவானியஸ் கல்லூரியில் ஆங்கிலத்துறை முனைவராக சேருதல்
1952 ஜூலை 12	-	மறைவு

★★★

எம்.பி.பால் (1904 - 52) நவீன மலையாள இலக்கியத்தின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தார். உரைநடையின் தந்தையாக விளங்கிய அவர் பேச்சாலும் செயலாலும் ஒன்றிணைந்து ஒரு முழுமைப் பெற்ற மாமனிதராக விளங்கினார். அவரது இலக்கியப் பணி வற்றாத ஜீவநதி போன்று அவருடைய கால எழுத்தாளர் களுக்கும், வருங்கால எழுத்தாளர் தலைமுறையினருக்கும் ஊக்கத் தையும், உற்சாகத்தையும் கொடுத்து வருகிறது. உயிருள்ள இலக் கியம் என்றும் எப்பொழுதும் கடந்த கால நிகழ்ச்சிகளில் சிக்கிச் சிதையாமல் நிகழ்காலம் - மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்றவாறு தன் எல்லையை விரிவுப்படுத்திக் கொண்டு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்ற உண்மையை நிலை நாட்டினார்.

கே. எம். தரக்கன் புகழ்பெற்ற எழுத்தாளர். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் புகழ்பெற்று விளங்கிய இவர் பல இலக்கிய கல்வி நிறுவனங்களில் நெருங்கிய தொடர்புடையவர். கேரள சாகித்திய அகாதெமியின் துணைத்தலைவராக விளங்கியவர். இலக்கியத்திறனாய்விற்காக கேரள சாகித்திய அகாதெமி பரிசுப் பெற்றவர். **மலையாள மனோரம** என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்குகிற இவர் ஆங்கிலத்திலும், மலையா ளத்திலும் பல புத்தகங்களை எழுதியுள்ளார்.

நா. பாஸ்கரன் சாகித்திய அகாதெமியில் பதிப்புத்துரை உதவி யாளராக பணிபுரியும் இவர் இப்புத்தகத்தை தமிழாக்கம் செய் துள்ளார்.

M.P. Paul (*Tamil*) Rs. 25/-

ISBN - 81 - 260 - 0557 - 2

இருபத்திரண்டு மொழிகளில் புத்தகங்களை வெளியிடும் சாகித்திய அகாதெமி உலகத்திலேயே மிகப் பெரிய பதிப்பகம் ஆகும்.